நூற்றாண்டு விழா மலர்

யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்

1910 - 2010



J/Mylany Saiva Maha Vidyalayam

Centenary Souvenir

நூற்றாண்டு விழா மலர்

யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்

1910 - 2010

1910
கற்றாய்ந்தொழுகு
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்
சுன்னாகம்

வெளியீடு:
நூற்றாண்டு விழாக் குழு
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்
சுன்னாகம்

Our Founder

T.Kumaraswamy J.P.U.M

பாடசாலைக் கீதம்

1. முத்தமிழ் வித்தகர் நாற்கவி வாணர்கள்
   மெத்தகு நன்னகரம் - சுன்னை
   உய்த்தெழு நன்னகரம்
   சித்தர்கள் பத்தர்கள் முத்தர்கள் - வாழ்ந்து
   சிறந்திடும் நன்னகரம் புகழ்
   சிறந்திடும் நன்னகரம்

2. செந்தமிழ் ஆங்கிலம் செய்தெழில் பெற்றிட
   தெய்வ மயிலணியில் - எங்கள்
   தெய்வ மயிலணியில்
   எந்தை குமார சுவாமி எனும் வள்ளல்
   ஏற்றிய நல்விளக்கே - எமக்காய்
   ஏற்றிய நல்விளக்கே

3. புத்தம் புதியதோர் விஞ்ஞானம் கைத்தொழில்
   பொங்கும் கமத்தொழிலும் - உயர்வு
   தங்கும் பணம்தொழிலும்
   மெத்த வளரவே சித்திரம் தையல்
   மேவும் மனையியலும் - ஓங்கி
   மேவும் பலகலையும்

4. ஏழ்திசை யும்புகழ் மேவிய நாற்கவி
   எண்ணம் இலங்கிடவே - இதய
   எண்ணம் இலங்கிடவே
   ஊழிதோ றூழிய மாவித்தி யாலயம் - ஓங்க
   உழைத்திடுவோம் - மயிலணி
   ஓங்க உழைத்திடுவோம்

5. உண்மை உணருவோம் நன்மை புரிகுவோம்
   ஓங்கும் அறிவுடனே - மயிலணி
   ஓங்கும் அறிவுடனே
   எண்ண இனித்திடும் மாவித்தி யாலயம்
   வாழிய வாழியவே - என்றும்
   வாழிய வாழியவே

இயற்றி இசையமைத்தவர்:
கலாபூஷணம் திரு.சு.துரைசிங்கம்
(முன்னாள் அதிபர்,
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்)

எமது பாடசாலைக் கொடி



எமது பாடசாலைக் கொடியானது திரு.மா.குமாரஸ்வாமி அதிபராக இருந்த காலத்தில் (1956) அவரால் இக்கொடி உருவாக்கப்பட்டது. நீல நிறம் அன்பையும், மஞ்சள் நிறம் மங்களத்தையும் குறிக்கின்றது. இக்கொடி 91 CM உயரமும் 120 CM அகலமும் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் மத்தியில் பாடசாலைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

எமது பாடசாலை இலட்சினை

(சின்னம்)

எமது பாடசாலையின் சின்னம் 1956ஆம் ஆண்டளவில் எமது பாடசாலை அதிபராக இருந்த திரு.மா.குமாரஸ்வாமி அவர்களால் உருவாக்கப்பெற்றது. சின்னத்தின் நடுவில் உள்ள நூல் கல்வி ஞானத்தையும், குத்துவிளக்கு நல்லறிவு வளர்வதையும், பூரண கும்பம் கல்வியினால் கிடைக்கும் நிறைவான வாழ்க்கையையும், "கற்றாய்ந்தொழுகு" என்ற மகுட வாசகம் கற்க வேண்டியவற்றை ஐயந்திரிபறக் கற்று அதன்படி ஒழுக்க சீலர்களாக வாழவேண்டும் என்பதையும் காட்டி நிற்கின்றது.

யா/மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின்

தூரநோக்கு

மாணவர்களைக் கல்வியின் மூலம் தன்னம்பிக்கையும், கடின உழைப்பும் கொண்ட சிறந்த ஜனநாயகப் பிரஜைகளாக வளர்த்தெடுத்தல்

Vision

Up lifting students self confident and hard working democratic citizens through education

பணிக்கூற்று

வினைத்திறன் மிக்க கற்றலில் ஈடுபாடுகொண்ட மாணவர்களையும் விளைதிறன் மிக்க கற்றலைத்தூண்டும் ஆசிரியர்களையும் உண்மை ஆதரவு தரும் பெற்றோர்களையும் ஒருங்கிணைப்பதை உறுதிப்படுத்தல்

Mision

Ensuring the union of students involved in efficient education, efficient inspiring teachers and genuine supporting parents

Vision

Up lifting students self confident and hard working democratic citizens through education

Mission

Ensuring the union of students involved in efficient education, efficient inspiring teachers and genuine supporting parents

Our Principal



Mr.N.Sivanesan B.A, Dip.in.Ed (Merit), M.Ed, SLPS

எமது உப அதிபர்

திருமதி த.முருகையா B.A, Dip.in.Ed, Sc.Trd

எமது பகுதித் தலைவர்கள்

திருமதி பா.பத்மநாதன்
B.A, Dip.in.Ed, M.Ed, Sc.Trd

திருமதி வா.சச்சிதானந்தம்
B.A, Pr.Trd

எமது பாடசாலையின் ஆளணியினர்

எமது பாடசாலையின் ஆளணியினர்

01)	திரு.நா.சிவநேசன்	அதிபர்	B.A, Dip.in.Ed, M.Ed, SLPS
02)	திருமதி த.முருகையா	உப அதிபர்	B.A, Dip.in.Ed, Sc.(Trd), SLTS 2.I
03)	திருமதி மே.மரியதாஸ்	ஆசிரியர்	B.A, Dip.in.Ed, SLTS 1
04)	திருமதி பா.பத்மநாதன்	பகுதித்தலைவர்	M.Ed, B.A, Dip.in.Ed, SLTS 1
05)	திருமதி வா.சச்சிதானந்தம்	பகுதித்தலைவர்	B.A, Pr.Trd, SLTS 2.I
06)	திருமதி ம.சர்வேஸ்வர செவ்வேள்	ஆசிரியர்	B.A, Dip.in.Ed, SLTS 1
07)	திருமதி வி.தயானந்தம்	ஆசிரியர்	Eng.Trd, SLTS 3.I
08)	திருமதி இ.நந்தாகரன்	ஆசிரியர்	Pr.Trd, SLTS 2.II
09)	திரு. சோ.சயாபதிசர்மா	ஆசிரியர்	Pr.Trd, SLTS 3.I
10)	திரு.செ.திருவிளங்கம்	ஆசிரியர்	Mot.mech.Trd, SLTS 2.II
11)	திரு.இ.ஜங்கரன்	ஆசிரியர்	Agri.Trd, SLTS 3.I
12)	திருமதி சி.இராஜ்குமார்	ஆசிரியர்	Dance Trd, SLTS 2.I
13)	திருமதி இ.விஜயகுமார்	ஆசிரியர்	Maths Trd, SLTS 2.II
14)	திருமதி ப.கணேசராஜா	ஆசிரியர்	Dip.in.Music, SLTS 2.II
15)	திருமதி நி.ரமேஸ்	ஆசிரியர்	B.Com, SLTS 3.I
16)	திருமதி சு.சிவகுந்தன்	ஆசிரிய நூலகர்	B.A, SLTS 3.I
17)	செல்வி ம.தனேஸ்வரி	ஆசிரியர்	Pr.Trd, SLTS 2.II

கல்விசாரா உழியர்

திரு.ந.திருநாவுக்கரசு	காவலாளி

இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

மானுடம் தழைக்க மனித நேயம் தழைக்க மாண்புறு கல்வியினை மாசில்லாது அள்ளி வழங்கி கல்வியென்னும் பெருங்கடலில் பல கல்விமான்கள், புலமைசார் அறிஞர்கள், வாண்மை மிகு ஆசிரியர்கள், மருத்துவ பொறியியலாளர்கள், கவித்துவம் கொண்ட கலைஞர்கள், கலைத்துவம் மிளர்கின்ற கலைஞர்கள், பல்தொழில் சமூக வாஞ்சையுடையோர் போன்ற பல நல்முத்துக்களை உருவாக்கி அவர்களை நற்பிரஜைகளாகவும் சேவை மனப்பாங்குடையவர்களாகவும் வளர்த்து மேலோங்க வைத்த பெருமையுடன் எமது மயிலணி சைவ மகாவித்தியாலயம் இன்று நூற்றாண்டு நிறைவை கொண்டாடி மகிழ்கின்றது. எம் அன்னையின் நிறைவில் மகிழ்வுடன் பங்கு கொள்ளக்கிடைத்தமை எமக்கெல்லாம் கிடைத்த பெரும் பேறாகும்.

இந்நூற்றாண்டு நிறைவு விழாவில் உங்கள் கரங்களில் இந் நூற்றாண்டு விழா மலர் மயிலணி அன்னையின் சாதனைகளை மென்மையாகவும், இனிமையாகவும் இதமாகவும் அமுதத்துளிகளாக தருகின்றமை மனதிற்கு நிறைவைத்தருகின்றது.

இவ் அமுத மலரானது வித்தியாலயத்தின் வரலாற்றுத் தகவல்களோடு கல்வித் துறைசார் வல்லுநர்களின் படைப்புகள், ஆசிரியர்கள், மாணவர்களது ஆக்கங்கள், பழைய மாணவர்களது ஆக்கங்கள் அனைத்தையும் தாங்கி சுவை சேர்க்கின்றது. இவ் அமுதத்தின் குறை நிறைவுகளை பெருமனதுடன் சுட்டிக்காட்டினால் எதிர்காலப் பதிவுகளுக்கு பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நூற்றாண்டு விழாவிற்கு மலர் வெளியிட வேண்டும் என்ற முழு முனைப்போடு ஆக்கமும் ஊக்கமும் அளித்து உதவிய எங்கள் மதிப்பிற்குரிய அதிபர் அவர்களுக்கும் மலர்க்குழு சார்பில் நன்றி கூறுகின்றோம். இம்மலர் உரிய காலத்தில் பொலிவுடன் திகழ்வுற துணைபுரிந்த மலர்க்குழு உறுப்பினர்கள், உதவி நல்கிய ஏனைய ஆசிரியர்கள், படைப்புக்களைத் தந்துதவிய நல்லுள்ளங்கள், ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி வழங்கி வாழ்த்தியவர்கள் புகைப்படம் எடுத்து உதவிய "நிக்கொன்" போட்டோ அன் ஸ்ரூடியோ ஸ்தாபனத்தார்க்கும் மலரை அழகுற வடிவமைத்துத்தந்த சுன்னாகம், முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் இவ் அமுதமலர் சிறப்புற வெளிவர பல்வேறு வகையிலும் செயற்பட்டுத் தோளோடு தோள்நின்று உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

"காலத்தால் செய்த உதவி சிறிதாயினும்
ஞாலத்தில் மாணப் பெரிது"

திருமதி பா.பத்மநாதன்

பொருளடக்கம்

கல்விசார் பெருந்தகையீர்

யாழ்ப்பாணம் மயிலணி சைவ மகா வித்தியாலயம் இன்று தனது 100வது அகவை அடைந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தினைப் பேணுகின்ற வகையில் பாடசாலைகள் கல்விக்காக பணியாற்றி வருகின்றமை பெருமைக்குரியது. இவ்வரிசையில் இப்பாடசாலையும்கல்விப் பிரம்மியத்தைப் பேணிப்பணியாற்றி இன்று 100 ஆண்டுகள் தலை நிமிர்ந்து திற்பது பெருமைக்குரியது. பண்டிதர்களையும், புலவர்களையும், கல்வி மான்களையும் உருவாக்கிய பிரதேசத்தில் திரு.தி.குமாரசுவாமி என்பவரால் நிறுவப்பட்ட இப்பாடசாலை நிறைவான பெருங் கல்விச் சமுகத்தினை உருவாக்கிய பெருமைக்குரியது. சமயம், ஒழுக்கம், கல்வி என்பன இன்றியமையாதவை தாம் இன்புறுவதற்கு காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த அறிஞர் மென்மேலும் அக்கல்வியை விரும்புவர் இதனையே வள்ளுவர்

தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

என குறிப்பிட்டார். இப்பாடசாலை மேலும் பல சாதனைகளுடன் பல காலம் வாழவும் இப்பணியில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் பிரதம குருக்களின் நல்லாசிகள்

கற்க; கசடற கற்க என வள்ளுவப் பெருந்தகை குறள் மணியில் கல்விக்கு முதலிடம் கொடுத்துள்ளார். நூறாவது அகவையைப் பூர்த்திசெய்து தனக்கென்ற தனித்துவமான கல்விப் பாரம்பரியத்துடன் முன்னேறிச் செல்லும் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் நூறாண்டு மலர் வெளிவருவதையிட்டு அகமகிழ்வும் பெருமையும் அடைகின்றேன். மனிதவளத்தை உயர்நிலை அடையச்செய்வது கல்வியாகும். இக்கல்வியை பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் பேணிப்பாதுகாத்து தந்த வண்ணம் இருக்கின்றன. இதனால் நம் முன்னோர்கள் கல்விக்கு வித்தியாலயங்களையும் பக்திக்கு ஆலயங்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர்கள். கல்வி என்பது கற்றல், கற்பித்தல் பற்றிய தெளிவான இலக்குகளையும் நோக்குகளையும் கொண்டதாக அமையவேண்டும். கல்வியைக் கற்பிக்கும் குருவாக விளங்கும் ஆசிரியகுழாத்தை நன்கு மதித்தல் மாணவ சமுதாயத்தின் முக்கிய கடமையாகும்.

அன்று என்னையும் இந்த வித்தியலயத்தில்ஓர் மாணவனாக ஏற்று கல்வி அறிவு ஒளிபுகுத்தி இந்நூறாண்டு மலருக்கு ஆசி கூறவைத்துவிட்டது என்றால், என்னே இந்த வித்தியாலயத்தின் பெருமை என சிந்திக்க வைத்துவிட்டது. அந்த நாள் முதல் இந்த நாள் வரை தன்னலம் கருதாது சேவையாற்றிய, சேவையாற்றுகின்ற சகல அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் நல்லாசி கூறுவதோடு இம்மலரும் சிறப்புக்கட்டுரைகளுடன் மலர நல்லாசி வழங்கி மாணவ சமுதாயம் கல்வியறிவு மேலோங்கி வளர முத்தமிழ்த் தெய்வம் அன்னை ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன்.

"திருவும் கல்வியும் சீருடன் தழைத்தோங்குக"

இங்ஙனம்
சிவஸ்ரீ ச.சண்முகானந்தக் குருக்கள்
பிரதம குரு,
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில்.
மயிலணி,
சுன்னாகம்.



ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான பிரதமகுருவின் ஆசிச்செய்தி

தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெரியவர்கள் வரதபண்டிதர், குமாரசுவாமிப் புலவர் போன்ற அறிஞர்களையும், மனித வாழ்விற்கு சிறப்புக்கு மூலமாய் நிற்பது கல்வி எனும் "கேடு இல்விழுச்செல்வம் கல்வி" என்ற தெய்வீகப் புலவரின் வாக்கிற்கமையவும், கல்வியின் வளர்ச்சிப்பாதைக்கு பாடசாலைகள் அமைத்த தர்மசிந்தையுடைய பெரியவர்கள் நிறைந்த சுன்னாகம் பதியாகும். இங்கு சிவன், முருகன், விநாயகர், அம்பாள், ஐயனார் ஆலயங்கள் அருள் ஆட்சி புரிய சிறப்புடனும் செம்மையுடனும் வளர்ந்து வரும் "சுன்னை நகர் மயிலணி சைவ மகா வித்தியாலயம்" தனது நூறாவது அகவையில் (1910 – 2010) கால்பதித்துள்ளது என்றால் இவ்வித்தியாலயத்தை உருவாக்கிய தர்மசிந்தையுடைய அமரர் தி.குமாரசாமி அவர்களுக்கு உரித்தாகும். இவருடைய உயரிய சிந்தனையும் இங்கு கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் அனைவரினதும் விடாமுயற்சியும் இன்று இவ்வித்தியாலயம் நூற்றாண்டு காண்பதற்கு வழிகாட்டியுள்ளது. மாணவர்களின் பரீட்சைப்பெறுபேறு, இணைப்பாடச் செயற்பாடுகள், மேலும் சிறந்த பாதையில் இட்டுச் செல்ல இளம் துடிப்புள்ள இன்றைய அதிபர் திருவாளர் நா.சிவநேசனின் வழிகாட்டல் சிறப்பாகும். எமது ஆலயத்திற்கும் இப்பாடசாலைக்கும் உள்ள தொடர்பு அளப்பரியது. எமது ஆலய குஞ்சரநிதி மூலம் நீர்த்தாங்கியும், குழாய் நீர் விநியோகமும் செய்து கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடமுடியும். அந்த வகையில் இவ்வித்தியாலயம் மென்மேலும் சிறப்புறவும், மாணவர்கள், குருபக்தி, தமிழ்ப்பற்று, அறிவு மேன்மை, ஒழுக்கம் ஆகிய பண்பு மேலோங்கவும், ஆசிரியர்கள், அதிபர் பணி புகழ்பெற்றுப் பரவிடவும், இவ்வித்தியாலயம் மூலம் சுன்னாகம் பெருமையும் சிறப்பும் பெறவும் நூற்றாண்டு விழா சிறப்புறவும், நூற்றாண்டு மலர் தமிழ்மணம்பரப்பவும் வாழ்த்தி ஸ்ரீ சுவர்ணாம்பிகைபாகர் பொன்னம்பலவாணரான கதிரமலைவயம்பதியானை பிரார்த்தித்து குருவருளும், திருவருளும் கிடைக்க ஆசீர்வதிக்கின்றேன்.

"நற்றமிழ் வளர்க்கும் மயிலணி சைவ
வித்தியாலயம் வாழ்க, வாழ்க"

– சுபம் –

சிவஸ்ரீ.நா.சர்வேஸ்வரக்குருக்கள்
பிரதம குரு,
ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

பழமை மிக்க திருநகராம் சுன்னாகம் இத்திருநகரில் சைவச் சான்றோர்கள் வாழ்ந்த புண்ணியபதி மயிலணி. நாவலர் பெருமானின் காவியப்பாடசாலையை வளர்த்தெடுத்த சுன்னாகம் குமாரசாமிப்புலவர் உதித்த பதி மயிலணி பிராசீனப் பாடசாலை இயங்கிய வரலாற்றுத்திருவூர். இப்புண்ணிய பதியில் எழுந்த மயிலணி சைவ வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாக் குறித்து வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகிறேன். அருள்நிறைந்த முருகமூர்த்தி திருக்கோவில், விஸ்வநாதர் சிவன் கோவில் சூழலில் கொலுவிருக்கும் இப்பாடசாலை பிரசித்தமானது. பல அறிஞர்களைத் தோற்றுவித்த பாடசாலை. சைவத்தமிழ் விழாக்கள் தமிழ் ஆய்வு அரங்குகள் நடைபெற்ற அறிஞர் கூடமாக இப்பாடசாலை விளங்கிய சிறப்பைப் பலரும் பெருமையோடு கூறுவர். புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள் அணி செய்த பாடசாலை இப்பாடசாலையை நோக்கிப் பலர் ஐயம் தெளிவதற்கு கூடிய சிறப்பு இன்னும் பேசப்படுகின்றது. புகழ்பூத்த இப்பாடசாலையைக் கடந்த நூறு ஆண்டுகளாக புனிதமாகப் பேணிய ஸ்தாபர் குடும்பத்தவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் வாழ்த்துக்கும் நன்றிக்குமுரியவர்கள். நூற்றாண்டு விழாச் சிறக்க இன்று அரும்பாடுபடும் அதிபர் திரு.நா.சிவநேசன் அவர்களை மனதார வாழ்த்துகின்றேன். இப்பாடசாலை என்றும் சீரும் சிறப்புடன் திகழ என் இனிய ஆசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

ஆறு.திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து...

யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம் அதன் 100ஆம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் நூற்றாண்டு விழா மலரிற்கு எனது வாழ்த்தினை வழங்குவதில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் என்ற வகையில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

சைவப் பாடசாலைகளின் தோற்றத்திற்குரிய முக்கிய ஆண்டாக கி.பி 1910ஆம் ஆண்டு விளங்குகின்றது. மயிலணி கந்தசாமி கோயில் சூழலில் சைவ பாரம்பரிய முறையில் இவ் வித்தியாலயம் இருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இப் பாடசாலைக்குரிய மாணவர்களில் பெரும்பான்மையானோர் கல்வித் தேவையை வேண்டி நிற்கும் சமூகத்திற்குரியவராவர்.

சுற்றயலில் உள்ள பெரிய பாடசாலைகளிற்கு அணிசேர்க்கும் பாடசாலைகளாக சிறிய பாடசாலைகள் விளங்குகின்றன. இப்பாடசாலையின் மாணவர் தொகை சராசரி நிலையிலேயே இருந்து வருகின்ற போதிலும் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சையில் இப்பாடசாலை எதிர்பார்த்த சாதனையை எய்தியிருக்கின்றது.

திரு.நா.சிவநேசன் தலைமையில் ஆசிரியர் குழாம் ஒருமித்து நின்று இம் மாணவர்களின் கல்விச் சாதனை, ஆளுமை போன்றவற்றை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்புள்ளது.

இந் நூறாம் ஆண்டில் சில எய்துதற்குரிய செயற்திட்டங்கள் முன்வைத்து செயற்படுத்துவதுடன் பண்பளவு ரீதியான வளர்ச்சியுடனும் நவீன யுகத்திற்கான தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய அறிவுசால் மாணவ படையணியை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டு முன்னெடுப்புக்களை செய்ய வேண்டும் என எதிர்பார்த்து நிற்கின்றேன்.

இவ் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் சிறப்புற அமைய எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

"வாழ்க மயிலணி சைவ மகா வித்தியாலயம் என்றும் உயர்வுடன்"

இ.இளங்கோவன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்

வடமாகாணக் கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி

ஆன்றவிந்த சான்றோர்களையும் புலவர்களையும் வளர்த்தெடுத்த யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழா கொண்டாடுவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். இப் பாடசாலை நூறு வருடங்களாக ஆற்றி வரும் சேவை, இப்பாடசாலையை ஆரம்பித்து வைத்த சான்றோர்களின் தூர நோக்கு செயற்பாட்டினை வெளிப்படுத்துகின்றது. தன்னை வந்தடைந்த மாணவர்களை சைவப்பண்பு கலாசாரம் என்பன வேரூன்றி வளரக்கூடிய வகையில் உருவாக்கி சமூகத்திற்கு வழங்கும் அரும்பணியை, பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் காலத்துக்குக் காலம் பல தரப்பட்ட அதிபர்கள் தூண்களாக நின்று செயற்பட்டமையை நினைவு கூரும் வகையில் தற்போதைய நிருவாகிகள் எடுக்கும் "நூற்றாண்டு மலர்" வெளியிடும் செயற்பாடு பழமை போற்றும் பண்பையும், நன்றி மறவாத்தன்மையையும் எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்"

என்ற வாசகத்தின் வெளிப்பாடாக இன்று பல்வேறு ஆலயங்கள் சூழ நிமிர்ந்து நிற்கும் இப்பாடசாலை மேலும் பல சிறப்புக்களைப் பெற்று சேவையாற்ற இறைவனைப் பிரார்த்தித்து என் நல்லாசிகளை வழங்குகின்றேன்.

ப.விக்னேஸ்வரன்
வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

வலிகாமம் கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி

சைவப் பண்பாட்டுச் சூழலில் ஆலயங்கள் புடைசூழ கொலுவீற்றிருந்து சைவச் சிறார்களின் அறியாமை எனும் இருள் அகற்றும் நற்பணியில் நூற்றாண்டுகளைப் பூர்த்திசெய்து 21ஆம் நூற்றாண்டில் சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் புத்தூக்கத்துடன் வீறுநடைபோடுகின்ற யா/மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு மலருக்கு எனது நல்லாசிகளை நல்குவதில் மகிழ்வுறுகின்றேன்.

நூற்றாண்டு கல்விப்பணியால் பயன்பெற்ற பல்துறை ஆற்றல் மிக்க சான்றோர், மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் தத்தமது மாணவப் பருவ உணர்வலைகள் சங்கமமாகி நேர்த்திபெற்ற அனுபவங்களை ஒருமுறை இரைமீட்டிப் பார்ப்பதற்கும், தமது ஆளுமைக்கூறுகளில் அவற்றின் செல்வாக்குகளை ஞாபகப்படுத்திப் பெருமிதப்படுவதற்கும் இந்நிகழ்வு களமாகின்றது.

இப்பாடசாலையின் சமகாலச் சாதனைகள் மற்றும் அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆக்கங்களைத்தாங்கி நிறைவான நூற்றாண்டு மலராக மலர்ச்சியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

சு.சுந்தரசிவம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
நிர்வாகம்,
வலிகாமம் கல்வி வலயம்.



உடுவிற் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் கல்விப் பணியில் சிறந்தோங்கி இவ்வாண்டில் ஒரு நூற்றாண்டைத் தாண்டி வளர்ச்சிப் பாதையில் "நூற்றாண்டு அகவை" நிறைவையொட்டி வெளியிடப்படும் நூற்றாண்டுவிழா மலருக்கு வாழ்த்துரைச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாவலர் பெருமான் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச்சிவன் கோயிலில் செய்த முதற் பிரசங்கத்தில் சைவசமயத்தை வளர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கையானது சைவப் பிள்ளைகள் சைவப்பாடசாலைகளிலேயே கல்வி கற்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதே அவரது சிந்தனையாகும். நாவலர் பெருமானின் குறிக்கோள் சைவ மக்களின் உள்ளங்களில் ஊன்றிப் பதிந்தது. ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டார்கள் சைவப் பெரியார்கள் – அந்த உந்தலில் தர்மங்களில் சிறந்தது கல்விக் கண் திறத்தல் **'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலின் தக்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'** சிறந்த தர்மமாகும் என்பதை நன்குணர்ந்து செயற்பட்ட சான்றோரான சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் மைத்துனரும், மயிலணியில் வாழ்ந்த சைவப் பெரியாரும், சட்டத்தரணியுமான குமாரசுவாமி அவர்கள் 1910ஆம் ஆண்டில் சைவப்பிள்ளைகளுக்கென்று மயிலணியில் சைவப் பாடசாலை ஒன்றை நிறுவினார். அவர் செய்த நற்பணியினை இன்றும் சமூகத்தினர் பாராட்டுகின்றனர். அவ்வேளையில் முதல் அதிபராக பிரம்மஸ்ரீ இரத்தினேஸ்வரக்குருக்கள் அவர்கள் இருந்ததாகவும் கிட்டத்தட்ட 15 மாணவர்கள் கல்வி கற்றதாக முதியோர்கள் கூறியதாக செவிவழியாக அறிகின்றேன்.

தொடக்கத்தில் சிறு பாடசாலையாக அமைந்தாலும் பின்னர் கல்வியின் நோக்கத்தினையும் , ஊரவர்கள் ஊக்கத்தினால் நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதியப்பட்டு படிப்படியாக அரசாங் கத்தின் பெரும்பங்கு வகிக்கப்பட்டு அரசினர் பாடசாலையாக மாறியது. இப்பாடசாலையில் பல நல்லா சிரியர்களும், தலைமை ஆசிரியர்களும் பணி செய்து பாடசாலை மாணவர்கள் கல்வி வளர்ச்சியிலே ஏற்றம் பெறவும், சமுதாய வளர்ச்சியிலும், கிராம வளர்ச்சியிலும் பாடசாலைத் தலைமைத்துவம் முக்கியத் துவம் பெற்றதாயும் அறியக்கூடியதாயுள்ளது.

தற்போது 15வது அதிபராக திரு.நா.சிவநேசன் இப் பாடசாலையினைப் பொறுப்பேற்று அவ்வூர்ப் பெற்றோர்களின் பெரியோர்களின் ஆதரவைப் பெற்று, அவ்வூர் மாணவர்களின் குடும்பநிலையறிந்து உளநிலையறிந்து அதற்கேற்ப அவர்க ளை நெறிப்படுத்தி ஒழுக்கம், நன்னடத்தை, கீழ்ப்படிவு, கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தி நல்ல முறையில் இயங்குவது பாராட்டிற்குரியது.மாணவர்களினதும், கல்வியினதும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் கோட்டம், வலய மட்டத்தில் சிறப்பிடம் பெறுவதையும் காணலாம். இப் பாடசாலை வளர்ச்சியில் பக்க பலமாக இருந்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்களின் முயற்சிகளுக்கு பாராட்டுவதோடு தொடர்ந்து மேலும் மேலோங்கி வளரவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

செ.குபேரநாதன்
கோட்டக்கல்விப் பணிப்பளர்,
உடுவிற்கல்விக்கோட்டம்.

கோட்டக்கல்வி அலுவலகம் (உடுவில்)
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்
சுன்னாகம்.

வலி–தெற்கு பிரதேச செயலாளரின் ஆசிச்செய்தி

பழம்பெருமை வாய்ந்ததுதம் சிறப்புமிக்க பலரை உருவாக்கி நூற்றாண்டு கால வரலாற்றுச் சிறப்பைத் தன்னகத்தே கொண்டதுமான யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம் 1910ஆம் ஆண்டு உயர்திரு தி.குமாரசாமி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. சுன்னாகம் வாழ் மக்களின் உயர்விற்கு ஏணிப்படியாக சைவமும் தமிழும் வளர்த்த பெருமை மிகு பாடசாலையாக அன்று தொட்டு இன்றுவரை இப்பாடசாலை கல்வித்தரமும் கலையார்வமும் மிக்க இரண்டாந்தரப் பாடசாலையாக மிளிர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு மிக உந்துசக்தியாக அன்று தொட்டு இன்று வரை கடமையாற்றிவரும் அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்களின் பணியும், ஒத்துழைப்பும் போற்றப்படக் கூடியதொன்றே. அந்தவகையிலேயே இன்றைய தமிழ்த்தினம், ஆங்கிலதினம் மற்றும் ஏனைய கலை, கலாசார, பண்பாட்டு போட்டிகளில் வெற்றியீட்டி உடுவில் பிரதேசத்திற்கும் தமது பாடசாலைக்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

புகழ்பூத்த சைவமரபின் வழித்தோன்றல்களால் உருவாக்கப்பட்டு சைவமும் தமிழும் வளர்த்தது மட்டுமல்லாது சமூகத்தின் அதிசிறந்த மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சமய வல்லுநர்கள் போன்ற இன்னமும் பல உயர் பதவிவகிப்போரை ஆக்கித் தந்து தலைநிமிர்ந்து நூற்றாண்டுகால சிறந்த வரலாற்றைப் படைத்து நிற்கும் இப்பாடசாலை இன்னமும் பல்லாயிரம் ஆண்டுகள் புகழோடு தழைத்தோங்கி சைவமக்களின் கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, சமுக வளர்ச்சிக்கு மேன்மேலும் உறுதுணையாக என்றென்றும் நிலைத்து நிற்க வாழ்த்துகிறேன்

யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம் வாழி!

திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்
பிரதேச செயலாளர்,
வலி-தெற்கு,
உடுவில்.

இப்பாடசாலையின் மூத்த மாணவி திருமதி பரமேஸ்வரி சிதம்பரநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

நூற்றாண்டு விழாக்காணும் யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம் வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

சிட்டுக் குருவியாய் சிறகடித்துத் திரிந்து – நான்
கல்லூரி வளாகத்தில் காலடி வைத்து – இன்றுடன்
எண்பத்திமூன்று ஆண்டுகள் ஆகின்றன!

சைவமும் தமிழும் தழைத்தோங்கும்
சுன்னாகம் மயிலணிப் பகுதியிலே
மகா வித்தியாலயமாய் நின்று நிலைத்து
நூற்றாண்டு காணும் – வித்தியாலயமே
மூவேந்தர் வளர்த்த தமிழ்
முச்சங்கம் கண்ட தமிழ்
முத்தமிழாய் முகிழ்ந்த தமிழ்
உன்னை வாழ்த்திட தலை வணங்குகின்றது.
என்றென்றும் வாழ்கவே!

சாதனைப் பாதையிலே
சரித்திரம் பல கண்டு சாகாவரம் பெற்று
விண்ணவரும் மண்ணவரும்
வியந்திங்கு விண்டுவரும்
வித்தகராய் பாலகரை
விந்தையுடன் கல்வியூட்டி – உன் புகழை
விண்ணைத் தொட்டு மண்ணில் நிலைத்துநிற்கும்
என் கல்லூரியே வாழ்க!

அறிவினால் அன்பினால் அதியுயர் சேவையால்
வல்லவர் வாழ்த்தினால் நின்று நிலைத்து
பொன்னொளிவீசி சிகரமாய் நிலைத்து – பரிதிபோல்
பாரினிலே சீர்பெற்று விளங்குவாய் காண்!

கருத்திற்கினிய கல்வியாஞ் செல்வத்தால்
நூறாண்டுகள் நின்று நிலைத்து
இப்பு வியில் பயன்தரு கல்வி விதைத்து
நற்கவி வாணர்கள் செய்தொழில் பெற்றிங்கு

ஏழ்திசையும் புவிமேவியிங்கு
மன்றத்தால் மதிதொட்டு
நூலகம், கணனிக்கூடமென
சர்வதேச விழாக்கள் கொண்டாடி
பிறைநிலாப் போல் வளர்ந்து நிற்கும்
பயன் இயற்றி அறம் செழித்து
அனைவரும் வியக்கும் இனியவிழாக்காணும் – நீ
இம்மண்ணில் வாழ்க பல்லாண்டு!

அகவைகள் நூறு கண்டு
'அவனருளால் மிக உயர்ந்து
அறிவூட்டி அன்பூட்டி
அனைவருக்கும் ஞானக்கண் திறந்த
வித்தியாலயமே!
பூமியுள்ளவரை வானம் நிலைக்கும் வரை
பூமிதனில் உன்புகழ் நிலைத்திட.
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்
வாழிய! வாழிய! வாழியவே!

திருமதி பரமேஸ்வரி சிதம்பரநாதன்
(ஸ்தாபகரின் சகோதரி)
தில்லைகட்டி,
சுன்னாகம்.

Message from the Founder's Grandson

It give me great pride and pleasure in issuing a massage to my Alma Mater in connexion with the publication of a centenary magazine of Chunnakam Mylani Saiva Maha Vidyalayam. I am its old student and I take pride as I am the grand son of its founder.

The school was founded by the late Thillaiampalam Kumaraswamy, Proctor, Sc, Notary Public and a Justice of peace. His main ambition was to educate the rural youths in the Tamil, Saiva tradition and provide education for all Sir Pnnambalam Ramanathan too, requested him to open a new school and educate the rural masses especially in Saivaism. Literacy, Culture and skills live a life service and devotion

The founder sold his land of 70 Larchams called "Ambala Udaiya Valavu" for the construction of classrooms and office room. He put up the building in his own land. Besides his son Thillaiampalam and the land donated by his brother-in-low Myilvaganam Ponnampalam. He too was very helpful to the founder to manage the school. The founder was getting old he handed over the responsibility to the manager. Mr.S.Sangarapillai, Retired teacher of Mallakam late Mr.Muthukumaraswamippillai, Son-in-law of the founder managed the affairs, until the government nationalized the schools.

There are many principals and teachers who sacrified themselves in order to enhance the standard of the school, I expect the same tradition continues that even now I came to know through the present principal, Mr.N.Sivanesan is very keen in curricular and co.curricular activities of the school. I am happy that the tradition will be up held in the future as well.

Further more he has given accommodation to the Divisional Education Office, Uduvil, in the same school building and provided all facilities. It will a great zeal to run the school under the right of the officers and will promote better understanding between the Department of Education and the School.

The School community and will give momentum to march forward toward its future development.

May the almighty god bless them to provide the children better education to the future generations and preserve our tradition, culture and saiva religious customs.

May I thank those who provided a space to my humble message in their Valuable "Centenary Souvenir" of my Alma Mater

I Whish all success to the grand function of the publication of this magazine.

Kanderodai,
Chunnakam.
25.08.2010

K.Selvakumaran, M.A,
Sri Lanka Principal's Service Class-I
Retired Principal

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கோவில்கள் புடைசூழ பலமாடிக் கட்டிடங்களுடன் யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம் நிமிர்ந்து நிற்பது எங்களுடைய மயிலணிக் கிராமத்திற்கு ஓர் அழகைத் தருகின்றது. அருள் நிறைந்த மயிலணி முருகன் அருகில் உருவாகிய இப் பாடசாலை பின்பு பலரின் இடைவிடாத உழைப்பின் பயனாக ஒரு சிறப்பு மிகு பாடசாலையாக மிளிர்ந்துள்ளது.

இன்று பெற்றோர்கள் ஆசியநாம் இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடு வதற்காக கல்விச் சமூகத்தினர் அனைவரின் உதவியையும் நாடியுள்ளோம்.

இந்தவிழா பேதமற்ற ஒரு முற்போக்குச் சமூகத்தின் ஒன்று கூடல் விழாவாகச் சரித்திரம் படைக்கட்டும்.

இந்த நிலையை உருவாக்கிய அனைவரும் பாராட்டுக்குரியவர்களே. குறிப்பாகப் பாடசாலை அதிபர் திரு.நா.சிவநேசன் அவரின் முகாமைத்துவத்தின் கீழ்ப் பணிபுரியும் உப அதிபர் திருமதி தனவதி முருகையா அவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பணியாளர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் எல்லோருக்கும் இந்தப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறப்புற உழைத்த அனைவருக்கும் வெளிவரும் நூற்றாண்டுவிழா மலர் அறிவொளி வீசவும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி இந்திராணி சிவராசா
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/மயிலணி சைவ ம.வி.
சுன்னாகம்.

செழிப்புடன் வளர்க!

மயிலணி என்னும் சைவத் தமிழ் மணக்கும் பெயர் கொண்ட கிராமத்தின் சுற்றாடலில் வளர்ந்த நான் அக்கிராமத்தின் ஒரேயொரு சைவப் பாடசாலையாகிய மயிலணி சைவ மகா வித்தியாலயம் நூறாவது அகவையைக் கொண்டாடுவதினையிட்டு பெரு மகிழ்வு அடைகின்றேன். இங்கு கல்வி பயிலும் பாக்கியம் எனக்கு கிடைக்காவிட்டாலும் இதன் வளர்ச்சியைக் கடந்த 50 வருடங்களாகக் காணும் வாய்ப்பினைப் பெற்ற மகிழ்விலும் எனது ஒரு சகோதரரும் எனது சுற்றம் உளவினர்கள் பலரும் இங்கு ஆரம்பக்கல்வியினைப் பெற்று அவர்களில் பலர் வெளி நாடுகளில் புகழ் பூத்தவர்களாக விளங்கும் பூரிப்பிலும் மூழ்கி இவ்வாழ்த்து மடலை எழுதுகிறேன்.

இப்பாடசாலையானது சகலரினதும் ஒத்துழைப்பினையும் பெற்று மென்மேலும் செழிப்புடன் வளர எமது மனங்கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

சிவலிங்கம் உருத்திரலிங்கம்

B.Sc Eng.(Hons)., M.Sc (Const.)., C.Eng., F.I.E(SL)., Int'l P.Eng.(SL)
M.B.I.M., A.M.I.Struct.E (Lond).,M.I.Env.Specialist(SL)

பொறியியல் மதியுரைஞர்

வாழ்த்துச் செய்தி

சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலைத்தாய் தனது நூறாவதுஅகவையை இந்த ஆண்டு கொண்டாடுவதை அன்னையின் அடிதனில் 1937ஆம் ஆண்டு தை மாதம் அரிச்சுவட்டைத் தொடங்கிய நிகழ்வை பெருமையுடன் நினைவு கூர்ந்து மனம் பூரிக்கின்றேன். மேலும் இப்பாடசாலை ஸ்தாபகரின் குடும்பத்தவன் என்னும் பெருமையும் அடியேனுக்குண்டு. எமது மூதாதையரின் நிலத்தில் இப்பாடசாலைஆரம்பிக்கப்பட்டது.

தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்து அவற்றை வளர்ச்சியடையச்செய்யும் நோக்கோடு இப்பாடசாலை சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோவிலுடன் சேர்த்து நிர்வகிக்கப்பட்டது. பாரபட்சமின்றி சகலருக்கும் அக்காலம் தொடங்கியே கல்வி புகட்டிய பெருமை இப்பாடசாலையைச் சார்ந்தது. இங்கு சுன்னாகம் கிராமத்தைச் சேர்ந்த மாணவர் மட்டுமல்லாது அயற்கிராமங்களைச் சேர்ந்த மாணவச் செல்வங்களும் கல்விகற்று தமது வாழ்வில் முன்னேற்றகரமாக வாழ்ந்துள்ளனர்.

இங்கு புத்தகக் கல்வி மாத்திரமன்றி கைப்பணி, விவசாயம், உடற்பயிற்சி முதலியனவும் போதிக்கப்பட்டு அத்துறைகளிலும் மிளிர்ந்தது என்பதையும் மகிழ்வுடன் நினைவு கூருகின்றேன்.

சென்ற நூற்றாண்டில் சுன்னாகத்திற்கும் அயற்கிராமங்களிற்கும் ஆற்றிய பெரும் கைங்கரியத்தை மயிலணி சைவ வித்தியாசாலை எதிர்வரும் பல்லாண்டுகளிலும் நம்மக்களிற்கும் நிறைவேற்ற மயிலணி முருகப்பெருமானை வேண்டி பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறோம்.

ம.சத்தியபாலன்
ஸ்தாபகர் பரம்பரை,
மயிலணி, சுன்னாகம்.

நூற்றாண்டு மலர் ஆசிச்செய்தி

"தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா மனந்தரும் அன்பர் என்பவர்க்கே அபிராமி கடைக்கண்களே" என்பதற்கமைய அம்பிகையின் ஆலயத்தின் அருகினிலே ஆலயத்தில் ஒரு ஆலயமாக மயிலணி சைவ மகா வித்தியாலயம் அமைந்திருக்கின்றது.

இவ்வித்தியாலயம் பிறந்துவளர்ந்து தவழ்ந்து நடைபயின்று இன்று நூற்றாண்டை எட்டிவிட்ட இந்தநிலையில் ஆசியுரை வழங்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என்பது, "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" என்று மாணிக்கவாசகர் பாடினார். அதுபோன்றுதான் என்று நினைக்க வைத்திருக்கின்றது. நான் உனக்கு இவ்விடத்தில் கல்வியைத் தந்தேன் அதன் பயனாக எனக்கு நீ இன்று ஆசியுரை வழங்கு என்று கட்டளை இட்டது போன்று இருக்கின்றது. அதை எனது கடமையாகச் செய்யத்தூண்டுகோலாக அமைந்த பாடசாலைச் சமூகத்தினருக்கு எனது நன்றிகள்.

மயிலணியின் மகிமைக்கும் சைவத்திற்கும் தமிழுக்கும் கிடைத்த பெரும் பேறாக ஊரின் பெயரை ஆரம்பமாக்கி, அதிலே வித்தியாலயமாக திகழும் இப்பாடசாலை வீட்டுத்திண்ணைகளிலும் மயிலணி முருகன் ஆலய வளவிலும் ஆரம்பமாகி தனக்கென இடம் அமைத்து அதில் தளர்நடைபோட்டு இன்று பார்க்க அழகான கட்டடங்களுடன் நிமிர்ந்து காட்சியளிக்கின்றது.

தான் மட்டும் வளர்ந்ததல்லாமல் தன்னிடம் கற்றவர்களையும் கல்வித்துறைகளில் மட்டுமன்றி பல துறைகளிலும் தேர்ந்தவர்களாக வளர்த்த பெருமை இப்பாடசாலைக்கே உரியதாகும்.

இங்கு கற்ற மாணவர்களே ஆசிரியர்களாக கடமையாற்றினார்கள் என்றால் அதுவும் இப்பாடசாலையின் பெருமைதான் என்று எண்ண வேண்டும்.

இப்பாடசாலை வளர்ச்சிக்கு, நன்றாக இயங்குவதற்கு கடமையாற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கின்ற அதிபர்கள், ஆசிரியர்களும் காரணமானவர்கள்தான்

தாங்கள் கடமையாற்றும் இப்பாடசாலை இன்னும் மேன்மையடையவேண்டும் என்று ஊக்கத்துடனும் சிரமத்துடனும் அவர்கள் செயற்படுவதை நாம் கண்கூடாக காணக்கூடியதாக இருக்கின்றது.

இப்படியான இவ்வித்தியாலயம் இன்னும் பல மாணவர்களை உருவாக்கி அடுத்துவரும் ஆண்டுகளைக் கடந்து பல நூற்றாண்டுகளைக் காணவேண்டும். அதற்கு அருகில் காட்சியளிக்கும் தெய்வங்களின் துணை பரிபூரணமாகக் கிடைக்கவேண்டும்என்று பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மை கொள் இப்பாடசாலையின்புகழ்
ஓங்குக மயிலணி ஊருக்கு மட்டுமன்றி உலகெங்கும்"

டாக்டர் திருமதி ச.அருமைநாயகம்
சுன்னாகம்



நூற்றாண்டு மலர் வாழ்த்துச் செய்தி

யா/மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி இம்மலருக்கு வாழ்த்துரை எழுதுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1910ஆம் ஆண்டு சிறிய அளவிலே ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை கற்றல் வளங்களினால் உயர்வு பெற்று கல்விச் செயற்பாடுகளை சிறந்தமுறையில் முன்னெடுத்துச் செல்வது பாராட்டுக்குரியது. இப்பாடசாலை மயிலணி எனும் சிற்றூரிலுள்ள சிறார்களுக்கு மட்டுமல்லாது அயற்கிராமத்திலுள்ள சிறார்களுக்கும் சிறப்பான கல்வியை ஆற்றிவருவது பாராட்டுக்குரியது.

இப்பாடசாலை கல்விமான்கள் பலரை உருவாக்கிய பெருமையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பலவிதமான நெருக்கடிகளின் மத்தியிலும் இப்பாடசாலையானது அதிபர், ஆசிரியர்கள், ஏனைய ஊழியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் அர்ப்பணிப்புடன் தம்பணிகளை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதையிட்டு அகமகிழ்கின்றேன்.

இப்பாடசாலைச்சூழலில் நான்கு இந்து ஆலயங்கள் அமைந்துள்ளன. இச்சூழல் ஆன்மீகத்தை வழங்கும் இடமாகவும் உள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். மென்மேலும் இப்பாடசாலை ஓங்கி உயர்ந்து தன்புகழைப்பரப்பி நற்பிரஜைகளை உருவாக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனிடம் அருள்வேண்டி வாழ்த்துகிறேன்.

– நன்றி –

க.முருகுப்பிள்ளை
ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்

Message

I feel priveleged to send this massege of felicitation to the centenary number of our almamater, J/Mylani Saiva Maha Vidyalayam.

I Look back with pride and joy how our former teachers put SERVICE BEFORE SELF and made us what we are today. It was the untiring efforts of our great teachers that was instrumental in moulding the students entering this school into men of sterling qualities. The school has produced outstanding persons who have risen high in many professions. This achievement was possible primarily because OUR TEACHERS PRACTICED WHAT THEY PREACHED AND PREACHED WHAT THEY PRACTICED!

It is my hope and prayer that the present principal and staff leave no stane unturned in their efforts to regain their former glory by making the students and the community feel strongly that the SCHOOL TEACHERS ARE THE REAL GODFATHERS OF THE CHILDREN

I pray the Almighty for further progress of this educational institution which is so dear to my heart and the hearts of numerous old students.

Sethucavalar Vipulanantha
(Sooty Master)
Saraa Sethu Service
207, K.K.S Road,
Chunnakam.

எழுத்தறிவித்தவன் இறைவன்

யாழ் மண்ணிலே வரலாற்றுப் பெருமைமிக்க சிவபுண்ணிய தலங்கள் கொண்டதும். கல்விமான்கள், பாவலர்கள், பண்டிதர்கள் வாழ்ந்த கிராமம் சுன்னாகம். நீர்வளம், நிலவளம், நிறையப்பெற்ற கிராமத்திலே 1910ஆம் ஆண்டு தந்தைக்கு உபதேசம் செய்த முருகன் ஆலயத்தில் இப்பாடசாலை கால்கோள் போடப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர் பொன் இராமநாதன் வழிவந்த சைவக்கல்விமான்களால் மயிலணி என்னும் குறிச்சியில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் மயிலணி சைவ மகா வித்தியாலயம் என்ற பெயரையும் பெற்று சிறப்பாக பத்து தசாப்தங்களைக் கடந்து இன்று நூறாவது அகவையில் எமது பாடசாலை காலடி எடுத்து வைப்பதையிட்டுப் பூரிப்பும் பெருமையும் அடைகின்றேன். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் எனப் பலதரப்பட்ட கல்விமான்கள் இக்கல்விச்சாலையின் விருட்சங்களாக உலகளாவிய ரீதியில் பரந்துபட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் இன்னல்களைத் தாண்டித் தற்போதைய அதிபர் திரு.நா.சிவநேசன், பாடசாலைச் சமூகம் என்பவற்றின் முயற்சியால் பல்துறைகளிலும் பாடசாலை வளர்ச்சியடைவதை உவகையுடன் வரவேற்கின்றேன். கற்பகதருவாகிய நெடிய பனைமரம் போன்று பலகல்விமான்கள், நற்பிரஜைகளை உருவாக்கிப் பல்லாண்டு சிறப்புடன் வளர இறைவனை வேண்டுகின்றேன்.

"ஒருமைக்கண் தாம் கற்றகல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப்புடைத்து"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க இக்கல்விச்சாலை கல்வி, கலைகள் என்பவற்றில் சிறந்து விளங்கி புத்தூக்கம் பெற என் மனமார வாழ்த்துகிறேன்.

வாழ்க! வளர்க!

திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம்
B.A Spe. Dip.in.Edu(Dist) M.Ed.
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்,
மூத்த விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்,
யாழ் பிராந்தியம்.

மயிலணி வித்தியா அன்னையின் புகழ் ஓங்குக.

யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம் 100வது அகவையைக் கடந்து பெருவிருட்சமாகக் கல்வி உலகில் நிலைத்து நிற்கும் இவ் வேளையிலே இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உவகை அடைகின்றேன்.

இப்பாடசாலையில் கல்வியைப் பெற்ற பலர் இன்னும் எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் புகழ்பூத்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்களாகவும், நற்பிரஜைகளாகவும் வாழ்ந்து வருவது பாடசாலையின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகும்.

இப்பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அதிபரும், கடமையே கண்களாகக் கொண்டிருக்கும் ஆசிரிய பெருமக்களும் இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் சீரிய ஒழுக்கமும் இப்பாடசாலையின் பெருமைக்கு மேலும் வலுச்சேர்ப்பனவாகும்.

யா/மயிலணி சைவ மகா வித்தியாலயத்தினை என் வாழ்நாளில் பலமுறை ஆச்சரியத்துடன் பார்த்திருக்கின்றேன். இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளிலும், தமிழ்த்தினப் போட்டிகளிலும், சாரணியச் செயற்பாடுகளிலும், ஆர்வத்துடன் பங்குபற்றுவதோடு மட்டுமன்றிப் பல வெற்றிகளையும் தொடர்ந்து பெற்று வருவதேயாகும். மாணவர்களின் கல்வி விருத்திக்காகவும் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் விருத்திக்காகவும் நூற்றாண்டுமலர் வெளியீடு வெளிவரும் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

ந.துரைராசசிங்கம்
ஆசிரிய ஆலோசகர்,
வலயக் கல்வி அலுவலகம்,
வலிகாமம்.

வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் தலையாகிய யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ளது சுன்னாகம் என்னும் எழில்நிறை கிராமம். அதன் வடகீழ்த் திசையில் மயிலணி என்னும் சிறு கிராமம் அமைந்துள்ளது. ஆலயங்களும் சோலைகளும் நிறை சூழ்ந்த இவ்வழகிய கிராமத்தில் கல்விசார் அறிஞர்களும், கவிஞர்களும், சான்றோரும், பண்பாளரும் தம் கலாசார விழுமியங்களைப் பேணி வாழ்ந்து வந்துள்ளனர், வருகின்றனர்.

எமது நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்கள் கடந்த நூறு ஆண்டுகளிற்கு முன் தமிழ்ப் பிரதேசங்களில் பாடசாலைகளை அமைத்து சமயம் சார்பு கல்வியை புகட்டி வந்தனர். இதனால் சிலர் சமயம் மாறினர். அதனால் விழிப்படைந்த பல சைவப் பெரியார்கள் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை ஊர்தோறும் அமைத்து கல்விப் பணி செய்தனர்.

மயிலணி கிராமத்தில் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் மக்கள் அடிப்படைக்கல்வி அறிவு பெற பாடசாலை விதை இடப்பட்டது. குரு – சிஸ்ய முறையில் திண்ணைப் படிப்பாக இருந்த கல்விச்சாலை விரிவடைந்து பாடசாலையாக பரிணமித்தது. ஒரு சிலருக்கு மட்டும் கல்வியெனும் நிலையை மாற்றி எல்லோருக்கும் கல்வி எனும் எதிர்கால நோக்கை உய்த்துணர்ந்து பாடசாலைக்கு வித்திட்ட பெரியார் உயர்திரு.தி.குமாரசுவாமி நன்றிக்குரியவராவார். இப்பாடசாலை மயிலணி சைவ மகா வித்தியாலயமாக வளர்ந்து நூறு ஆண்டுகளை நிறைவு செய்து தலை நிமிர்ந்து நிற்கிறது.

இப்பாடசாலை கடந்த ஒரு நூற்றாண்டாகக் கல்விப் பணி செய்து ,பல ஆயிரம் மாணவச் செல்வங்களை அறிஞர்களாகவும், தொழில் நிபுணர்களாகவும், சான்றோர்களாகவும், பண்பாளர்களாகவும், உழைப்பாளர் களாகவும் உருவாக்கி சமூகத்திற்குத் தந்துள்ளது.

இன்று இப்பாடசாலை தனது நூற்றாண்டுவிழாவை, அறிவு, ஆற்றல்; மனிதநேயம் மிக்க மேன்மை தங்கிய திருவாளர் நா.சிவநேசன் அவர்களின் ஆழுமையில் கொண்டாடிக்கொண்டு இருக்கும் இவ்வேளையில் பாடசாலைச் சமூகத்தின் அயராதுழைப்பின் காரணமாக, பாடசாலை மேலும் ஓங்கி வளர்கின்றதைக் காணக்கூடியதாக உள்ளது. அவர்கள் பணி மேலும் தொடரவும் பாடசாலை மேலும் பல நூறு ஆண்டுகள் கல்விப் பணிபுரிய வாழ்த்துகிறேன் பல்லாண்டு வாழ்க! வளர்க!

"கற்ககசடற கற்க"
"கற்றாய்ந் தொழுகு"

சி.தர்மலிங்கம்
யாழ் மாவட்டச் செயலக
ஓய்வுநிலை உத்தியோகத்தர்

நூற்றாண்டு மலர் வாழ்த்துச் செய்தி

சுன்னாகத்திற்குப் பெருமைதரும் மயிலணியில் ஆலயங்கள் மட்டுமன்றி பாடசாலையும் சிறப்புப் பெற்றிருக்கின்றது. அப்பாடசாலை அன்று மயிலணி சைவ வித்தியாசாலை என்று இருந்து இன்று சைவ மகா வித்தியாலயமாக அமைந்திருக்கின்றது.

சிறிய கட்டிடங்களில் ஆரம்பமாகி இரு மாடிக் கட்டிடங்களுடன் நூற்றாண்டை அடைந்துவிட்ட இவ்வித்தியாலயம் இன்னும் பல கட்டிடங்கள் அடுத்து பல நூற்றாண்டுகள் காணவேண்டும்.

இங்கே கல்வி கற்ற மாணவர்கள் பலர் எஞ்சினியர்களாகி, டாக்டர்களாகி இன்னும் பல துறைகளிலும் சிறப்புப் பெற்றிருக்கின்றார்கள்.

விஞ்ஞானிகளாகவும் மேன்மை பெற்றிருக்கின்றார்கள் இந்த வகையில் சிறந்து விளங்கும் இப்பாடசாலையில் உயர்தரக் கல்வியை (A/L) மாணவர்கள் தொடர்ந்து கற்கவேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

சிறு துளி பெருவெள்ளம் என்பார்கள். அது போன்று ஒவ்வொரு சிறு உதவிகளும் பெரும் பங்குகளாக உதவி இப்பாடசாலைக்கு தேவையான விளையாட்டு மைதானம் அமைத்தல், மாணவர்கள் உயர்தரக் கல்வி கற்க வசதி அமைத்தல். தேவையான உபகரணங்கள் பெற்றுக்கொடுத்தல் போன்றவைகள் இங்கு கிடைக்கப்பெற்றால் இவ்வித்தியாலயம் இன்னும்சிறப்புப்பெறும்.

"கல்வி கொடுப்பது கண் கொடுப்பதற்கு சமன் என்பது ஆன்றோர் வாக்கு". அதன்படி எங்கள் அனைவரின் பிள்ளைகள் கல்வி கற்று மேன்மையடைய பாடசாலைகள் வளரவேண்டும்.

அந்த வகையில் மயிலணியில் அமைந்த இந்த வித்தியாலயம் இன்னும் நன்றாக வளர்ந்து நல்லபல மாணவர்களை உருவாக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்து கின்றோம்.

திரு.த.அ செல்வராசா
மயிலணி

திருமதி செந்தாமரைச்செல்வி சடாட்சரலிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

திறமை உள்ள கீழ்ப்படிவுள்ள மாணவியாகக் கணிக்கப்பட்டேன். 1954 S.S.C அரசாங்கப் பரீட்சையில் திறமையாகப் பாடங்களில் சித்தி பெற்று அகில இலங்கை மாணவர்களில் இந்து சமய பாடத்தில் முதலாவது புள்ளிகள் பெற்றமையால் தங்கப்பதக்கம் கிடைக்கப் பெற்று எனக்கும், பாடசாலை க்கும், ஆசிரியர்களுக்கும் பெருமை கிடைத்தது. 1950ல் ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டு பொதுப் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியராக அத்தாட்சிப் படுத்தப்பட்டு நான் படித்த யா/மயிலணி மகாவித்தியாலயத்தில் 1959.02.09இல் ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். எனது சேவைக்காலத்தில் அதிபர் ஆசிரியர்களுடன் மிக அன்பாகவும், அமைதியாகவும் ஒத்துழைத்து சேவையாற்றினேன்.

பாடசாலை சம்பந்தமான புற வேலைத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டு எனக்கும், பாடசாலைக்கும் மதிப்புத் தேடினேன். ஒன்றிணைந்த பாடத்திட்டங்களுக்கமைய ஆரம்பவகுப்புகளில் திறமையாக சேவை செய்தேன். தேவை காரணமாக 6 வருடங்கள் மனையியல் ஆசிரியராகக் கடமையாற்றி S.S.C , A/L வகுப்புக்களில் மிகத் திறமையான சித்திகளை மாணவர்கள் பெறுவதற்கு உதவி புரிந்தேன்.

27 வருடங்கள் யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் கடமையாற்றினேன். யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் சேவையாற்றிய காலங்களில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் யாவராலும் மதிக்கப்பெற்று அன்பு பாராட்டப் பெற்றேன். அதனால் யா/ மயிலணி சைவ மகாவித்தியாலய வளர்ச்சிக்கும், பெருமைக்கும் என்றும் உரித்துடைய ஓய்வு பெற்ற ஆசிரியையாகவும் மாணவியாகவும் உள்ளேன். உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின் தற்சமயம் பிள்ளைகளுடன் கனடா வில் வசிக்கிறேன்.

சேவைக்காலம் :- யா/மயிலணி சைவ மகாவித்தியாலயம் 02.09.1959- 02.08.1972 வரை

செந்தாமரைச்செல்வி சடாட்சரலிங்கம்
ஓய்வு பெற்ற ஆசிரியரும்
பழைய மாணவியும்

வாழ்த்துச் செய்தி

எனது கணவர் Dr. செல்லப்பா சண்முகநாதன். இந் நூற்றாண்டு மலரிற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெருமிதம் கொள்கின்றேன். **"கற்றாய்ந்தொழுகு"** என்பது ஸ்தாபகர் பாடசாலைக்கு வழங்கிய மகுடவாசகமாகும்.

ஸ்தாபகர் ஒரு சட்டத்தரணி. மிகவும் சாந்தமான சுபாவமுடையவர். பேச்சுக்குறைவு. மிகவும் நன்மையான அறிவுரைகளைச் சொல்பவர். அவரிற்கு இரண்டு பெண்பிள்ளைகளும், ஒரு ஆண்பிள்ளையும் இருந்தனர்.

கல்வி ஒருவரின் அறிவை வளர்க்கும், தன்னம்பிக்கையைக் கொடுக்கும், ஒழுக்க மேம்பாட்டிற்கு வழிகாட்டும், பிறருடன் பழகும் சந்தர்ப்பத்தை, பணம்சம்பாதிக்கும் சந்தர்ப்பத்தை, முன்னேற்றத்தைக் கொடுக்கும். அது மட்டுமல்லாமல் கல்வி கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

அடிப்படை மனித உரிமையான கல்வியை சிறார்களுக்குப் புகட்ட சட்டத்தரணி தி.குமாரசுவாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை நூற்றாண்டு விழா கொண்டாடுவது மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

மயிலணி சைவமகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற பலர் இன்று பல்துறை அறிஞர்களாக உலகெங்கும் மிளிர்வது கண்கூடு.

வாழிய மயிலணி சைவ மகாவித்தியாலயம்!
வளமலிந்தோங்கியே வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

திருமதி கமலாதேவி சண்முகநாதன்
(ஸ்தாபகரின் மருமகள்)
ஓய்வு நிலை ஆசிரியர்
யா/ வேம்படி மகளிர் கல்லூரி

நூற்றாண்டு விழாக்குழு

வீடுகளிற்குச் சென்று மக்களிடம் நூற்றாண்டுவிழா விழிப்புணர்வை ஏற்படுத்தி நிதி சேகரிக்க உதவியோர்

2005-2010ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதிவுகள்

27.09.2005 பரிசளிப்பு விழா

16.07.2006 பரிசளிப்பு விழா

29.06.2007 பரிசளிப்பு விழா

06.10.2009 ஆசிரியர் தினவிழா

14.06.2008 மண்டபத் திறப்புவிழா

14.06.2008 மண்டபத் திறப்புவிழா

15.09.2008 கல்விக் கண்காட்சி

15.09.2008 கல்விக் கண்காட்சி

2005-2010ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதிவுகள்

30.07.2008 பரிசளிப்பு விழா

12.01.2009 கால்கோள் விழா

03.02.2009 இல்ல மெய்வல்லுநர் போட்டி

01.10.2009 பரிசளிப்பு விழா

26.02.2010 இல்லமெய்வல்லுநர் போட்டி

26.02.2010 இல்ல மெய்வல்லுநர் போட்டி

2009ஆம் ஆண்டு கட்டாயக் கல்விக்குழுவினர்
இடைவிலகிய மாணவனொருவனைப் பாடசாலைக்கு அழைத்துவரல்

10.07.2009 கல்விச் சுற்றுலா

2005-2010ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதிவுகள்

2010 பெண்கள் சாரணிய அணி

2010 ஆரம்பப்பிரிவிற்கான பாண்ட் வார்த்தியக்குழு

2010 மாணவ தலைவர்கள்

மென்பந்து கிரிக்கட் அணி - 2010
கோட்டமட்டம் 3ஆம் இடம்

2010 ஆரம்பப்பிரிவு தாச்சி அணி-ஆண்கள்

2010 ஆரம்பப்பிரிவு தாச்சி அணி-பெண்கள்

2010, 13 வயதின் கீழ் ஆண்கள்
உதைபந்தாட்ட அணி

2010, 15 வயதின் கீழ் ஆண்கள்
உதைபந்தாட்ட அணி

2005-2010ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதிவுகள்

2010, 17 வயதின் கீழ் ஆண்கள்
உதைபந்தாட்ட அணி

2010, உடற்பயிற்சி அணி - இடைநிலைப் பிரிவு பெண்கள்
கோட்டமட்டம் 2ஆம் இடம், வலயமட்டம் 4ஆம் இடம்

2010, உடற்பயிற்சி அணி - இடைநிலைப் பிரிவு ஆண்கள்
கோட்டமட்டம் 1ஆம் இடம், வலயமட்டம் 3ஆம் இடம்
மாவட்ட மட்டத்தில் பங்குபற்றியது

2010 உடற்பயிற்சி அணி - ஆரம்பப்பிரிவு

2010, 15 வயதின்கீழ் பெண்கள் வலைப்பந்தாட்ட அணி

2010, 17 வயதின்கீழ் பெண்கள் வலைப்பந்தாட்ட அணி

2009 உடற்பயிற்சி அணி இடைநிலைப் பிரிவு பெண்கள்
கோட்டமட்டம் 2ஆம் இடம், வலயமட்டம் 6ஆம் இடம்

2009 உடற்பயிற்சி அணி இடைநிலைப் பிரிவு ஆண்கள்
கோட்டமட்டம் 1ஆம் இடம், வலயமட்டம் 3ஆம் இடம்

2005-2010ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதிவுகள்

முறைசாராக் கல்விப் பிரிவு - 2009
சிகை அலங்காரம்

முறைசாராக் கல்விப் பிரிவு - 2010
உடையமைத்தல் பயிற்சி

2010. டெங்கு ஒழிப்பு சிரமதானம் பாடசாலையின் 1km சுற்றாடல்

எமது பாடசாலையில் இயங்கும் உடுவிற் கல்விக் கோட்டம்

2010 பாடசாலையின் தோற்றம்

SITE PLAN
J/MYLANY SAIVA MAHA VIDYALAYAM
CHUNNAKAM.



பாடசாலையின் விபரம்

பாடசாலையின் பெயர்	: யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்
முகவரி	: சுன்னாகம்
குறியீட்டு இலக்கம்	: 1010004
தொகை மதிப்பீட்டு இலக்கம்	: 09172
பாடசாலைப் பரீட்சை எண்	: 11219
கிராம சேவையாளர் பிரிவு	: சுன்னாகம் வடக்கு J/195
பிரதேச செயலர் பிரிவு	: வலி-தெற்கு, உடுவில்
கோட்டம்	: உடுவிற் கல்விக் கோட்டம், சுன்னாகம்.
வலயம்	: வலிகாமம் கல்வி வலயம், மருதனார்மடம்.
மாவட்டம்	: யாழ்ப்பாணம்
மாகாணம்	: வடமாகாணம்
தொலைபேசி இலக்கம்	: 021-224 0593
பாடசாலை வகை	: வகை II
வகுப்புக்கள்	: தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை



பாடசாலை அதிபரின் உள்ளத்திலிருந்து

நூற்றாண்டு காலக் கல்வி வரலாற்றில் யா/மயிலணி சைவமகாவித்தியாலயம் தனது உயரிய உன்னதப் பணிகளை செவ்வனே நிறைவேற்றி, நூற்றாண்டுகால இவ்வறிவாலயத்தின் அதிபராக இருந்து பணியாற்றும் அடியேன் நூற்றாண்டு விழா மலரை வாழ்த்துவதற்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தை மயிலணி முருகன் தந்த கொடையாக எண்ணுகின்றேன்.

SWOT பகுப்பாய்வினுள் பாடசாலையை உட்படுத்தும் போது, பாடசாலையின் நோக்கத்தை அடைவதற்கான உடன்பாடான, முரண்பாடான காரணிகளைப் பட்டியற்படுத்தலாம்.

S - Strength –பலம்

01. ஆலயங்கள் நிறைந்த தெய்வீகச் சூழலில் பாடசாலை அமைந்திருத்தல்.
02. பாடசாலையில் விசுவாசமான ஆசிரியர் வளம்.
03. அடிப்படை வளங்களில் பெருமளவைப் பாடசாலை கொண்டிருத்தல்.
04. சுற்றாடலில் உள்ள மாணவர்கள் கல்வி பயிலுகின்றமை.
05. அயலவர்கள் பாடசாலையைப் பாதுகாத்தல்.
06. பழைய மாணவர்கள் உயர் நிலைகளில் காணப்படுதல்.
07. பாடசாலை நிர்வாகத்திற்கும், சமூகத்திற்கும் இடையில் சுமுகமான உறவு நிலவுதல்.
08. புலம்பெயர் நாடுகளில் வாழும் பழைய மாணவர்களில் ஒரு சிலர் பாட்சாலையை நேசித்து உதவிகளை வழங்குதல்
09. பாடசாலை நிர்வாகத்திற்கு 100% ஒத்துழைப்பினை வழங்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
10. ஓய்வு பெற்ற, மாற்றலாகிச் சென்ற அதிபர், ஆசிரியர்கள் பாடசாலையை நேசித்தல்.
11. காவலாளி ஒருவர் இருத்தல்.
12. நகரப் பாடசாலையாக இருத்தல்.
13. வலிதெற்கு பிரதேசசபை கழிவுகளை மாதம் இருமுறை அகற்றுதல்.
14. நவீன நூலகம், கணனிஅறை உள்ளமை.
15. கடந்த சில ஆண்டுகளாக நிலையான வைப்புகளிலிருந்து வட்டி வருமானமாக இரண்டாயிரம் ரூபா கிடைத்தல்

W - Weekness –பலவீனம்

01. 81 சதவீதமான மாணவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள்.
02. கட்டடப்பற்றாக்குறையும், 7 வகுப்புகளிற்கு பிரிக்கப்பட்ட வகுப்பறைகளும் இல்லாமை.
03. விளையாட்டு மைதானம் இல்லை.
04. நவீன விஞ்ஞான கூடம் இல்லை.
05. தரம் 3 வகுப்பிற்கென நிரந்தர ஆரம்பக்கல்வி ஆசிரியர் இன்மையும், இடைநிலைப் பிரிவிற்கென தமிழ் ஆசிரியர் இன்மையும்.
06. மாணவர்களின் பெற்றோர்களில் 75% ஆனோர் சாதாரண தொழிலாளர்கள்.
07. பொருத்தமற்ற பழைய கட்டடங்கள் திட்டமற்ற முறைகளில் அமைந்திருத்தல்
08. நூலகத்தில் 900தமிழ் நூல்களும், 400 ஆங்கில நூல்களும், 150 சிங்கள நூல்களுமாக மொத்தம் 1450 நூல்கள் மட்டும் உள்ளமை. இவை கூட்டப்பட வேண்டும்.

09. நவீன இலத்திரனியல் உபகரணப்பற்றாக்குறை.
உ+ம் :– தொலைக்காட்சி, போட்டோக்கொப்பி இயந்திரம், றோணியோ இயந்திரம்.

10. பாடசாலைக்கென கிடைக்கும் வருமானங்கள் புறக்கணிக்கத்தக்க விதத்தில் இருத்தல். இதனால் பொருளாதார நெருக்கடி நிறுவனத்தில் அதிகம்.

O - Opportunities –சந்தர்ப்பம்

01. விளையாட்டுத்துறையில் ஆர்வமான பாடசாலைச் சமூகம்.

02. இன்று பாடசாலைச் சமூகம் அதிபர் தலைமையில் பாடசாலை வளர்ச்சியையும், மாற்றத்தையும் நோக்கி அணி திரளுதல்

03. புலம்பெயர் நாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியுதவிகள்.

04. இந்த ஆண்டு நூற்றாண்டாக இருத்தல்.

05. உடுவிற் கல்விக்கோட்டம் எமது பாடசாலையில் இயங்குதல். இதனால் எளிதாக நிர்வாகச் செயற்பாடுகள் ஆற்றப்படவும், வளங்கள் பாடசாலையை நோக்கி வரவும் வாய்ப்பேற்பட்டுள்ளது. அத்துடன் கோட்டக்கல்விப் பணிப்பாளரது நேரடி மேலான கவனத்தின் கீழ்ப் பாடசாலை இயங்குதல்.

06. புலம்பெயர் நாடுகளில் வாழும் பழைய மாணவர்களும், நலன்விரும்பிகளும் உதவிகளை வழங்கி வருதல்.

07. நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவும், பாடசாலை வளர்ச்சிக்காகவும் பாடசாலைச்சமூகம் உதவிகளை வழங்கி வருதல்.

08. தரமான உள்ளீடுகள், உயர்மட்டக்கல்விச் செயற்பாடுகள், N.S.D.G ஆகியன மனிதவள மேம்பாட்டிற்காக அரச நிதியாகக் கிடைத்தல்.

09. பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் எமது பாடசாலைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை.

10. கல்வித்திணைக்களத்திற்கும், பாடசாலைக்குமிடையே நல்லுறவு நிலவுதல்.

T - Threat - சவால்கள்

01) மாணவர்கள் வரவு ஒழுங்கீனம்.

02) இடை விலகும் மாணவர்கள்.

03) மாணவர்களிடம் போக்குவரத்துச் சாதனம் மிகக்குறைவாக உள்ளமை.

04) அருகருகே போட்டியாக அமைந்துள்ள பல பாடசாலைகள்.

05) விசேட தேவையுடைய மாணவர்கள் எமது பாடசாலையில் கல்வி கற்று வருதல்.

06) தில்லையம்பலம் மண்டபம் விழும் நிலையிலிருத்தல்.

07) மழைகாலத்தில் பாடசாலை வளவினுள் வெள்ளம் தேங்குதல்.

பலமும் சந்தர்ப்பங்களும் மேலும் விரிவு படுத்தப்படுவதுடன், பலவீனங்களும், சவால்களும் இல்லாதொழிக்கப்படவும் பாடசாலைச் சமூகத்தினராகிய நாமனைவரும் ஒன்றிணைந்து தீவிரமாகப் போராட வேண்டியுள்ளது.

ஒரு குடும்பத்திலே ஒரு பிள்ளை சரியாகக் கல்வியிலே முன்னேறினால் போதும், அப்பிள்ளை மூலம் அவரது குடும்பம் இந்த நவீன உலகில் தன்னைத்தானாகவே நிலைநிறுத்திக் கொள்ளும். இதனை இப்பாடசாலை திறம் பட ஆற்றியுள்ளமையை இப் பிரதேச வளர்ச்சி எடுத்துரைக்கின்றது.

விளையாட்டுத்துறை இன்று பலரிற்கு வேலை வாய்ப்பினை வழங்கும் துறையாக மாறி வருகின்றது. இதன் மூலம் உயர் வருமானத்தையும், உயரிய சமூககௌரவத்தையும் விளையாட்டு வீரர்கள் பெறுவது கண்கூடு. இப்பாடசாலையின் மாணவர்கள், பழைய மாணவர்கள் தேசிய, சர்வதேச ரீதிகளில் விளையாட்டு நிகழ் வுகளில் பங்குபற்றி அரிய பல சாதனைகளை நிலைநிறுத்தி வருகின்றனர். விளையாட்டு மைதானம் ஒன் றைப் பாடசாலை அருகில் பெற்றுக் கொடுத்துதவுமாறு சமூகப் பெரியோர்களைக் கேட்டுக் கொள்கின் றேன்.

கற்றலுக்கான நவீன இலத்திரனியல் உபகரணங்கள், விளையாட்டு மைதானம், பாடங்களுக்கான தனியறைகள், ஆய்வு கூடங்கள், திறந்த வெளியரங்கு, உள்ளக விளையாட்டரங்குகள், நீச்சல்தடாகம், ஜிம்நாஸ்ரிக் அரங்கு ஆகியனவும் இப்பாடசாலையில் ஏற்படுத்தப் படவேண்டும்.

ஆரம்பத்தில் இப்பாடசாலையில் நான் கடமையேற்றபோது பாடசாலைச் சமூகத்திலிருந்து ஒரு வரையாவது எனக்கு உதவியாகப்பிடித்து ஒரு காரியத்தை நிறைவேற்ற முடியாத நிலை இருந்தது. ஆனால் இன்று நூற்றுக்கணக்கானோர் என்பின்னே நின்று இப்பாடசாலைக்கு உதவிகளை அள்ளி வழங்குகின்றனர். இத் தொகை ஆயிரக்கணக்காக மாற்றமுற வேண்டும். சமூகப் பெரியோர்கள் இதற்காகப் பாடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நூற்றாண்டு விழாக்குழுச் செயலாளர் திரு.செ.கிருபாரத்தினம், திருமதி த. முருகையா, திருமதி வா. சச்சிதானந்தம், திருமதி நி.ரமேஷ், திருமதி. இ. மேரிகெலன் ஆகிய ஆசிரியைகளும், மயிலணி சைவ மகாவித்தியாலயத்தைத் தனது உயிராகக் கருதும் பழைய மாணவன், தம்பி ச.தர்சனன் அவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருமதி இந்திராணி சிவராசா, ஓய்வு நிலை ஆசிரியர் திரு.க. முருகுப்பிள்ளை, ஸ்தாபகர் பரம்பரையைச் சேர்ந்த திரு.ம.சத்தியபாலன், திரு.இ.தர்மலிங்கம், திருமதி இ.தயாகனி ஆகியோரும் என்னுடன் வீடுவீடாகச் சென்று மக்களுக்கு நூற்றாண்டு விழா விழிப்புணர்வினை ஏற்படுத்தி வளங்களை இப் பாடசாலைக்குப் பெற்றுத் தந்துள்ளனர்.

"Education is the most powerful weapon which you can use to change the World" என்னும் நெல்சன் மண்டேலாவினது வாக்கியம் இப் பிரதேசத்திற்கு மிகப் பொருந்தும். இப் பிரதேச மக்கள் மிக நல்லவர்கள். ஆனால் தங்களது பாடசாலையான இப் பாடசாலை பற்றிய எண்ணத்தில் உறங்கிக்கொண்டிருக்கின்றார்கள். பிற கிராம, நகரப் பாடசாலைகளுக்கு உங்களது பிள்ளைகளை அனுப்பி அக்கிராம, நகரங்களை வளர்ச்சியடையச் செய்கின்றீர்கள். உங்களது பிள்ளைகளை தரம் 11 வரை இப் பாடசாலையிலே சேர்த்து கல்வி வழங்க வேண்டும். இது சாத்தியமானால் க.பொ.த (உ/த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும். இப் பாடசாலை யா/மயிலணி இந்துக்கல்லூரியாக வளர்ச்சியடையும், வளர்ச்சியடைய வேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

அன்பின்

நா.சிவநேசன்

அதிபர்,

யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்,

சுன்னாகம்.

பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்

ஈழத்திருநாட்டின் முடிமணியாய் விளங்குவது யாழ்ப்பாணக் குடாநாடு. குடாநாட்டில் நடுநாயகமாக பல்வகைச் சிறப்புக்களும் பொருந்தி சுன்னாகம் பதி விளங்குகிறது. இப்பதியை அணி செய்யும் விதத்தில் பல்வகை அறிஞர்களும் வித்துவான்களும் பண்டிதர்களும், புலவர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள். குமாரசுவாமிப் புலவர் என்று கூறும் போது சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் என்று தான் கூறுவதுண்டு. அத்தகைய பல பெரியவர்கள் தோன்றிப் புகழோடு வாழ்ந்து தமது கல்விச் சிறப்பால் வரலாற்றில் நிலைத்து நிற்கக் கூடிய அளவுக்கு இச் சுன்னாகம் பதியை அழகுபடுத்தியுள்ளார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவப் பாடசாலைகள் அமைப்பதன் அவசியம் உணரப்பட்டது. சேர் பொன்.இராமநாதன் அவர்கள் சைவப் பாடசாலைகள் அமைப்பதன் அவசியத்தை உணர்த்தி எல்லாக் கிராமங்களிலும் பகிரங்கக் கூட்டங்கள் நடக்கச் செய்தார். இத்தகைய பிரசாரக் கூட்டங்கள், சுன்னாகத்திலும் நடைபெற்றன. இக் காலத்தில் தான் சுன்னாகத்தில் வாழ்ந்த பல பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசித்து ஒரு சைவ வித்தியாசாலையை ஆரம்பிக்க முடிவு செய்தனர். இச் செயற்கரிய பணியை நிறைவேற்ற ஒரு நிர்வாக சபையினையும் அமைத்தனர். இச் சபையில் திருவாளர்கள் மு.வைத்தியநாதபிள்ளை, அ.குமாரசாமிப்பிள்ளை, சி.விசுவப்பா, இ.சுவாமிநாதவுடையார், ம.பொன்னம்பலம், சி.முத்துக்குமாரப்பிள்ளை, ம.செல்லப்பா, ஆ.வேதாரணியம்பிள்ளை, சு.சுவாமிநாதர், புரக்டர் தி.குமாரசுவாமி முதலியோர் அங்கம் வகித்தனர். இச்சபையின் காரியதரிசியாகக் கடமையாற்றியவர் புரக்டர் தி.குமாரசுவாமி அவர்கள். இவ்வாறு தோற்றம் பெற்ற எண்ண அலைகள் ஒருமித்து புரக்டர் தி.குமாரசுவாமி அவர்களால் செயல் வடிவம் பெற்று 1910 சௌமிய வருடம் பங்குனி மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மயிலேறும் முருகன் விரும்பி உறைந்திருக்கின்ற மயிலணிக் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் பதினைந்து மாணவருடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுக் கடமையாற்றியவர் உடுவில் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ இரத்தினேஸ்வர ஐயர் அவர்களாவார். இவர் வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெற்று வந்த காவிய வகுப்பில் சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் கீழ் கற்றுத்தேறியவர். ஆரம்பத்தில் இப்பாடசாலை திரு.சி.அப்பாச்சிப்பிள்ளைக்குச் சொந்தமான நிலத்தில் இருந்த கட்டடத்தில் நடைபெற்று வந்தது. ஆறு மாதங்களுக்குப் பின்னர் மயிலணிக்கந்தசுவாமி கோவிலுக்குரிய நிலத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இரு புதிய கொட்டகைகளில் நடத்தப்பட்டு வந்தது. இவ் வித்தியாசாலைக் கட்டட அமைப்பில் மிக்க ஊக்கமாகத் தனது சொந்த அலுவல் போல் நின்று கடமையாற்றியவர் திரு.மு.வைத்தியநாதபிள்ளை அவர்களே. இவ்வித்தியாசாலைக்கு வேண்டிய பாடப்புத்தகங்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் தளபாடங்கள் பெறுவதிலும் இவரே பொறுப்பெடுத்துச் செய்து வந்தார். அக்காலத்தில் தலைமை ஆசிரியருடன் திரு.த.முதலியாரவர்களும் திரு மு.தம்பு அவர்களும் உதவியாசிரியர்களாகக் கடமை புரிந்து வந்தனர்.

பின்னர் பாடசாலையை நல்ல முறையில் அமைத்து கல்வியைச் சிறந்த முறையில் வளர்த்தெடுக்க விரும்பிய வழக்கறிஞர் திரு.சி.குமாரசுவாமி அவர்கள் தனது காணியை மனமுவந்து வழங்கி அதிலே ஓர் நிரந்தரமான கட்டடத்தை அமைத்துப் பாடசாலையின் தாபக முகாமையாளராக விளங்கினார். தாபகர் அவர்களின் தன்னலமற்ற அரும் பெருஞ் சேவை காரணமாக சைவமும் தமிழும் ஒருங்கு சேர சமய அறிவும் தமிழ்ப் பண்பாட்டுடனும் கூடிய சிறந்த கல்வியை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடிந்தது. சிறந்த

தமிழறிவும், சமய ஈடுபாடும் உடைய தலைசிறந்த நல்லாசிரியர்களை நியமித்துப் போற்றுதற்கரிய ஒரு சிறந்த தாபனமாக உருவாக்கிய பெருமை தாபகர் திரு.தி.குமாரசாமிஅவர்களையே சாரும். அவர் நீண்ட காலம் பாடசாலையின் முகாமையாளராகப் பணியாற்றி வந்திருக்கின்றார். உடல் நலக் குறைவு காரணமாக முக்காமைத்துவப் பணியைச் செய்ய முடியாமல் இருந்தமையால் மல்லாகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.சங்கரப்பிள்ளை முகாமையாளராகக் கடமையாற்றினார். அவருக்குப் பின்னர் தாபகருடைய மருமகன் முத்துக்குமாரசாமிப்பிள்ளை முகாமையாளராகப் பணியாற்றினார். தாபகருடைய ஏக புதல்வன் திரு.தில்லையம்பலம் அவர்களாவார். அவரின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றும் முறையில் அவர் காலமானதும் பாடசாலையின் பிரதான மண்டபத்திற்கு தில்லையம்பலம் நினைவு மண்டபம் எனப் பெயர் சூட்டப்பட்டது. சட்டத்தரணி திரு.தி.குமாரசுவாமி அவர்களின் தன்னலமற்ற சேவையின் பயனாக உருவாகியதே இன்றைய பாடசாலையாகும்.

இவ்வித்தியாசாலையின் முதல் அதிபராகக் கடமையாற்றிய இரத்தினேஸ்வரஐயர் அவர்கள் மூன்று வருடங்களுக்கு மேல் சிறந்த முறையில் தமது பதவியை வகித்தார். பின்னர் ஏழாலையைச் சேர்ந்த திரு.நாகநாதர் அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவ்வித்தியாசாலை 1913ஆம் ஆண்டில் அரசினரின் உதவி நன்கொடைப் பணம் பெறும் வித்தியாசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. இவ்வித்தியாசாலையின் பரிபாலகராகக் கடமையாற்றும் பொறுப்பும் இவ் வித்தியாசாலையை நடத்தி வந்த நிர்வாகசபையின் காரியதரிசி திரு.சி.குமாரசுவாமி அவர்களையே சார்ந்தது.

இவ் வித்தியாசாலை அரசினரின் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டதும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ச்சி பெற்று வந்தது. பாலர் பகுதிப் பயிற்சி வகுப்பும் இக் காலத்தில் அமைக்கப்பட்டு அதற்கெனப் பிரத்தியேகமாகக் கட்டடமும் அமைக்கப்பட்டது. உயர் வகுப்புக்களும் நல்ல முறையில் நடத்தப்பட்டு வந்தன. 1914ம் வருட ஆரம்பத்தில் நீர்வேலி திரு.சி.ஆறுமுகம் அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் இவ் வித்தியாசாலை யாழ்ப்பாணத்தில் சிறந்த ஒரு கல்விக் கூடமாகப் பெயர் பெற்று விளங்கியது. கல்வியதிகாரிகள் சமுகமளிக்கும் போது இதன் சிறப்பைப் பாராட்டி வந்தமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

1917இல் தெல்லிப்பழை திரு.சி.செல்லத்துரை அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் இவ் வித்தியாசாலைக்குப் புதிய ஒரு சிறந்த நிலையான கட்டடம் அமைப்பது அவசியமாக இருந்தது. அதற்கிணங்க 1921ஆம் ஆண்டு புதிதாகவோர் நிலம் விலைக்குப் பெற்று புதிய கட்டடத்திற்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டது. தற்போது இவ் வித்தியாசாலை நடைபெற்றுவரும் இடம் அதுவாகும். தலைமையாசிரியராக இருந்த திரு.சி.செல்லத்துரை அவர்களின் இடமாற்றத்தின் பின்னர் உதவியாசிரியராக இருந்த திரு.சி.பொன்னம்பலம் அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இக் காலத்தில் இவ் வித்தியாசாலை பல துறைகளிலும் வளர்ச்சி கண்டது. மாணவர்கள் S.S.C பரீட்சைக்கு அனுப்பப்பட்டுச் சித்தியடைந்தும் வந்தனர்.

1941இல் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு.வ.நடராசா அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் பதவியேற்றதன் பின்னர் வித்தியாசாலை கல்வி மேம்பாட்டுக்குரிய வகையில் சகல துறைகளிலும் முன்னேறிச் செல்வதாயிற்று. வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் வருடா வருடம் திறம்பட நடைபெற்று வந்தன. ஏனைய இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் பங்குபற்றினர். இவர் பதினைந்து வருடங்கள் அதிபராக இருந்து சேவையாற்றினார்.

1956இல் இப்பாடசாலையில் ஆசிரியராக இருந்த திரு.மா.குமாரஸ்வாமி அவர்கள் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். இவரது பதவிக் காலத்தில் வித்தியாசாலை மிகச் சிறந்த வளர்ச்சியைக் கண்டது. தனக்கேயுரிய முறையில் அமைதியோடு கல்வி மேற்பாட்டுக்குரிய வகையில் சகல துறைகளிலும் சிறந்த முன்னேற்றம் அடைந்தது. பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாதிருந்த போதிலும் மயிலணிக் கந்தசுவாமி கோவில் வீதியில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் திறம்பட நடைபெற்று வந்தன. பாலர் பகுதி மாணவர்கள் கல்வி பயில்வதற்கெனப் பிரத்தியேகமான கட்டடம் ஒன்று சிறந்த முறையில் அமைக்கப்பட்டது. இவ் வித்தியாசாலையில் இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த ஒன்பதாம் பத்தாம் வகுப்புக்களை நிறுத்தி உயர்தர வித்தியாசாலைகளில் வைத்து நடத்த அரசினர் ஏற்பாடு செய்தனர். அக்காலத்தில் இவ்வித்தியாசாலையின் தலைமையாசிரியராக விளங்கிய திரு.மா.குமாரஸ்வாமி அவர்களும் உதவியாசிரியர்களும் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் இணைந்து அதனைத் தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ் அதிபரின் காலத்தில் மாணவர்கள் சகல போட்டிகளிலும் பங்கு பற்றிப் பரிசில்களும் பெற்றனர். குறிப்பாக சமய சங்கீத, தமிழறிவுப் போட்டிகள் யாவற்றிலும் மாணவர்கள் பங்கு பற்றினர். இவருடைய காலத்தில் வித்தியாசாலையின் வளர்ச்சி குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவில் சிறந்து விளங்கியது.

இத்தகைய சிறந்த சேவையாற்றிய திரு.மா.குமாரஸ்வாமி அவர்கள் ஓய்வு பெற்றதன் பின்னர் அங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.வே.சின்னையா அவர்கள் 1971இல் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். இவர் துடிப்பும் செயற்றிறனும் மிக்க ஒருவர். பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட ஒருவர். பாடசாலை சகல துறைகளிலும் முன்னேற்றமடைய அயராது உழைத்தவர். இவரது பதவிக் காலத்தில்தான் மாணவர்களுக்கான மலசலகூடங்கள் கட்டப்பட்டன. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டன.

அடுத்து 16.03.1973இல் திரு.வ.பொன்னம்பலம் அவர்கள் மூன்றாந்தர அதிபராக இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் அரசாங்கத்தின் புதிய பாடத்திட்டத்தின்படி தொழில்நுட்ப பாடநெறிகளுக்குக் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இவரது பதவிக்காலம் மிகக் குறுகியதாகக் காணப்பட்டது.

பின்னர் 15.01.1974இல் திரு.ப.சுப்பையா அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் பாடசாலையில் கலைவிழா சிறந்த முறையில் நடத்தப்பட்டது. இவரது காலத்தில் பாடசாலைக்கென ஒரு பாடசாலைக்கீதம் கவிஞர் திரு.சு.துரைசிங்கம் ஆசிரியர் அவர்களால் இயற்றப்பட்டது. 17.10.1974இல் மனையியல் விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கான கால்கோள் விழா இடம்பெற்றது. இவரது முயற்சியின் பயனாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் கல்வித் திணைக்களத்தினதும் ஒத்துழைப்புடன் மனையியல் விஞ்ஞான ஆய்வு கூடத்தேவை பூர்த்தி செய்யப்பட்டது. பாடசாலையின் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள ஆரம்ப வகுப்புக்கட்டடங்களும் இவரது காலத்திற்றான் கட்டப்பட்டன. விளையாட்டு மைதானம் இன்மை காரணமாக இடையில் தடைப்பட்டிருந்த பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 07.07.1978இல் மீண்டும் நடத்தப்பட்டது. இவர் காலத்தில் திரு.க.சின்னப்பா, பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த ஐயர் ஆகியோர் உப அதிபர்களாகக் கடமையாற்றினார்கள்.

இவரையடுத்து 09.01.1979இல் திரு.க.திருநாவுக்கரசு அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் பாடசாலை விலகியோருக்கான கல்வி வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. பாடசாலையில் சாரணர் இயக்கமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புதிய அதிபர் அலுவலகம் அமைக்கப்பட்டு பாடசாலையின் முன்பக்க மதில் கட்டப்பட்டுப் புதிய இரும்புக் கேற் போடப்பட்டது. கல்விப்

பொருட்காட்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவர் காலத்தில் க.பொ.த உயர்தர வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையில் க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்தவர்களுடன் வேறுமாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவருடைய காலத்தில் உப அதிபராகத் திரு.மா.மகாதேவா கடமையாற்றினார். திரு.க.திருநாவுக்கரசு அவர்களின் இடமாற்றத்தின் பின் கனிஷ்ட பிரிவு அதிபராக இருந்த திரு.க.செல்லத்துரை அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். திருமதி ஈ.பாலச்சந்திரன் உபஅதிபராகக் கடமையாற்றினார்.

இவரையடுத்து 03.07.1984இல் திரு.ஐ.மனோகரன் அவர்கள் பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் கடந்த சில வருடங்களாக நடைபெறாதிருந்த இல்ல விளையாட்டுப்போட்டி மீண்டும் நடைபெற்றது. பாடசாலை வாயிலில் உள்ள இரும்பினாற் செய்யப்பட்ட வளைவில் பாடசாலைப் பெயரையும் இலட்சினையையும் பொறித்தார். நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் சேதமடைந்த பாடசாலைப் பகுதிகளைத் திருத்தியமைத்தார். பாடசாலை வாயிலின் கிழக்கில் வகுப்பறை ஒன்றைக் கட்டுவித்தார். பவள விழாத் தொடர்பாகப் பல திட்டங்களைத் தீட்டியிருந்தார். நாட்டு நிலமை சீரற்று இருந்தமையாலும் பதவி உயர்வு பெற்றுச் சென்றமையாலும் பவள விழாவைத் திட்டமிட்டபடி நடத்த முடியாமல் போய்விட்டது. இவரது காலத்தில் உப அதிபராக இருந்த திருமதி ஈ.பாலச்சந்திரன் இளைப்பாறியதைத் தொடர்ந்து திரு.இ.நவரத்தினம் உப அதிபராகக் கடமையாற்றினார்.

திரு.ஐ.மனோகரனின் பின்னர் 17.05.1989இல் திரு.சு.துரைசிங்கம் அவர்கள் வித்தியாலயத்தின் அதிபர் பதவியை ஏற்றார். இவர் துடிப்பும் செயல்திறனும் மிக்க அதிபராவார். வித்தியாலயத்தை சகல துறைகளிலும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடன் செயற்பட்டவர். இவர் கடமையேற்று ஓராண்டுகாலம் பூர்த்தியாகும் முன்னர் மின் நீரிறைக்கும் இயந்திரத்தைப் பொருத்தி மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். பாலர் வகுப்புக் கட்டடத்திற்குச் சுவர் கட்டப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டது. அத்துடன் தகரக் கொட்டகைகள் மூலம் மேலும் தற்காலிக வகுப்பறைகள் அமைக்கப்பட்டன. ஆரம்ப வகுப்பு மாணவர்கள் பயனடையக்கூடிய விதத்தில் ஒன்றிணைந்த பாடத்திட்டத்திற்கு ஏற்ற முறையில் பாடசாலை சம்பந்தமான அழகான படங்கள் இவர் காலத்தில் வரையப்பட்டன. இன்னும் கட்புலன் மூலம் அறிவை வளர்க்கும் நோக்குடன். விஞ்ஞான மனையியல் ஆய்வு கூடங்களிலும் பாடத்துடன் தொடர்புடைய பல படங்கள் வரையப்பட்டன. புவியியல் அறிவை வளர்க்கும் நோக்குடன் உலகப்படமும் வரைந்து குறிக்கப்பட்டுள்ளது.

"வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்கும்" என்ற பொன்மொழிக்கிணங்க மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்த்தெடுக்கும் நோக்குடன் ஒவ்வொரு வகுப்புக்குமெனத் தனித்தனி அலுமாரிகள் தயாரிக்கப்பட்டுத் தனித்தனி நூலகங்கள் அதிபரின் வழிகாட்டலுடன் அமைக்கப்பட்டன. இத்துடன் பாடசாலைப் பொது நூலகமும் மாணவர் படித்துப் பயன்பெறத்தக்க வகையில் அமைந்திருந்தது. மாணவர்களின் உள்ளார்ந்த ஆக்கத்திறனை வெளிக்கொணரும் வகையில் தமிழ் மன்றத்தினரால் "அணி" என்ற பருவ இதழ் வெளியீடு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது மட்டுமன்றி இவ் அதிபரின் காலத்தில் 'சுன்னாகம் குமாரசாமிப் புலவர்' என்ற நூலும் தமிழ் மன்றத்தினரால் வெளியிடப்பட்டது. சமூகக்கல்வி மன்றத்தால் "சமூகக்கல்விப் படப் பயிற்சி நூலும்" இவரது பதவிக் காலத்தில் வெளியிடப்பட்டது. மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்குடன் காலை மாலை வேளைகளில் பரிகாரக் கற்பித்தல் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வந்தன. யாழ் மாவட்ட முன்னணிப் பாடசாலைகளுடன் போட்டியிடும் அளவிற்குப் பாடசாலையின் விளையாட்டுத்துறை வளர்ச்சியடைந்தது. வருடா வருடம் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. வருடந்தோறும் நவராத்திரி விழா, சமயக்குரவர்

தினங்கள் பரிசளிப்பு விழா போன்ற பல விழாக்கள் சிறப்பாக நடத்தப்பட்டு வந்தன. சாரணர் இயக்கம், வழிகாட்டிகள் இயக்கம் முதலியன சிறந்த முறையில் இயங்கி வந்தன.

இவ் அதிபரின் காலத்தில் பவள விழாக்கொண்டாடுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன நாட்டின் குழப்பநிலை காரணமாக அதனைச் செய்து முடிக்க முடியாமல் போனாலும் சில நிகழ்வுகள் நடைபெற்றன. இவ் அதிபரின் காலத்தில் 05.03.1995இல் சமூகக்கல்வி மன்றத்தால் வெளியிடப்பட்ட "யா/சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயக் கதை" என்ற நூல் மிகச்சிறப்புவாய்ந்த ஒன்றாகும். வித்தியாலயத்தின் வரலாற்றைத் தேடியறிந்து அதனை ஒரு நூல் வடிவில் தொகுக்க சமூகக்கல்வி மன்றத்துக்கு வழிகாட்டிய பெருமை திரு.சு.துரைசிங்கம் அவர்களையே சாரும். 03.07.1998இல் பாடசாலையில் நூலகக் கண்காட்சி ஒன்றும் நடத்தப்பட்டது. மேடையை அழகுபடுத்தும் வகையில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இரண்டு மாடிக் கட்டடத்தின் முதலாவது மாடிக் கட்டடம் 19.03.1999இல் வலி–தெற்கு பிரதேச சபைத் தலைவர் திரு.மா.செல்வராசா சமாதான நீதவான் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது.

இவ் அதிபரின் காலத்தில் திரு.இ.நவரத்தினம் அவர்கள் உப அதிபராகக் கடமையாற்றினார். அவரது ஓய்வின் பின்னர் திரு.செ.ஞானச்சந்திரன் அவர்கள் உப அதிபர் பதவியை ஏற்றுச் செயற்பட்டார். இவ் அதிபரின் காலத்தில் பாடசாலை சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இவர் 1999இல் ஓய்வு பெற்றார்.

இவரது ஓய்வின் பின்னர் திரு.த.சற்குணசர்மா அவர்கள் அதிபர் பதவியை ஏற்றார். பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்வதில் துடிப்புடன் செயற்பட்டார். அதனை நிறைவேற்றியும் வைத்தார். மாணவர்களுக்கு நீர் வழங்கலைச் சிறப்பாகச் செய்வதற்கு நீர்த்தாங்கி ஒன்றை அமைக்க வேண்டுமென நினைத்ததைச் செயற்படுத்தவும் முனைந்தார்.ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானப் பிரதம குரு திரு.நா சர்வேஸ்வரக்குருக்கள் மூலம் அவர்களின் தாயார் நினைவாக ஒரு நீர்த்தாங்கியை அமைப்பித்தார். அந் நீர்த்தாங்கி 20.08.2000இல் அத்திவாரமிடப்பட்டு 28.09.2000இல் நீர் வழங்கல் ஆரம்பித்து வைக்க ப்பட்டது. இதற்கான மின்மோட்டர் திரு.செ. திருவிளங்கம் ஆசிரியராலும், நீர் விநியோகத்துக்கான குழாய் கள் பொருத்தும் வேலை திருமதி வா. சச்சிதானந்தம் ஆசிரியராலும் ஏனைய ஆசிரியர்களின் உதவியினா லும் செய்து முடிக்கப்பட்டது. அதிபரின் இப்பணி பாராட்டிற்குரியது. இன்னும் மாணவர்களுக்கு தேவை யான கழிப்பறைகள் G.T.Z அனுசரணையுடன் ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் அமைக்கப்பட்டன. 10.072003இல் கட்டி முடிக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டன. 65' X 25' இரண்டாம் மாடிக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுத் திறப்பு விழாவும் நடைபெற்றது. 31.01.2004இல் பாடசாலைப் பெயர் வளைவு செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. 25' X 40' நூலகக் கீழ்த்தளம் இவருடைய காலத்தில் கட்டி முடிக்கப் பட்டது. இன்னும் பல தேவைகள் இவருடைய காலத்தில் நிறைவு செய்யப்பட்டன.தரம் 5இல் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றனர். ஏனைய துறைகளிலும் மாணவர்கள் பங்குபற்றி வெற்றி பெற்றனர். இவருடைய சேவைக்கசாலத்தில் உப அதிபராக திரு. செ.ஞானச்சந்திரன் கடமையாற்றினார். திரு.தசற்குணசர்மா அவர்கள் 2005இல் ஓய்வு பெற்றார்.

அடுத்து 08.07.2005இல் திரு.நா.சிவநேசன் அவர்கள் அதிபர் பதவியை ஏற்றார். இவர் இளமையும் துடிப்பும் மிக்க ஒருவர். மற்றைய பாடசாலைகளுடன் போட்டியிடும் அளவிற்குச் சகல வழிகளிலும் பாடசாலையை முன்னேற்ற வேண்டுமென்ற ஆர்வமுடையவராகக் காணப்பட்டார். பெரிய பாடசாலைகளுடன் ஒப்பிடும் அளவிற்குக் கவினுறு நிலையில் தற்போது பாடசாலை காட்சியளித்துக் கொண்டிருப்பதற்கு இவ் அதிபரின் முயற்சியே காரணமாகும். 90 அடி நீளமான பூம்பாத்திகள்

அமைக்கப்பட்டு பூத்துக் குலுங்கும் மரங்களைக் கொண்டு அழகுடனும், பொலிவுடனும் தற்போது வித்தியாலயம் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது என்றால் அப்பெருமை அதிபர் திரு.நா.சிவநேசன் அவர்களையே சாரும்.

இவ்வதிபர் பதவியேற்றதன் பின்னர் பல வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. 05.12.2005இல் அதிபர் அலுவலகம், தரம்01 வகுப்பறை போன்றன அழகுபடுத்தப்பட்டுள்ளன. விஞ்ஞான, மனையியல், ஆய்வு கூடத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வேலைகள் 01.06.2006இல் மேற்கொள்ளப்பட்டன. 01.08.2007இல் 40'×25' மேற்குப்புற முதலாம் மாடி கட்டி முடிக்கப்பட்டது. 02.04.2007இல் பரீட்சைக்குழு, அதிபர், ஆசிரியர்கள் அன்பளிப்புகள் மூலம் அதிபர் அலுவலகத்திற்கு சீற் அடிக்கப்பட்டுள்ளது. 05.06.2007இல் நிலம் போடப்படாமல் இருந்த சமையல் அறைக்கு வசதிகள் சேவைகள் கட்டண மூலம் நிலம் போடப்பட்டுள்ளது. 01.10.2007இல் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் 20'×140' விவேகானந்தர் மண்டபத்திற்கு நிலம்போடல், பழுதான வலை மாற்றுதல், வர்ணம் பூசுதல், 80'×25' இரு மாடிகளுக்கும் வர்ணம்பூசுதல், வலையடித்தல், அலுவலகத்திற்கு நிலம் போட்டு வர்ணம் பூசுதல், பாடசாலை மதில், பூம்பாத்தி, பூச்சாடி ஆகியவற்றிற்கு நிறம் தீட்டல், 40'×20' கட்டிடம் இடித்தழிக்கப்பட்டு பள்ளமான இடங்களுக்கு மண் நிரப்புதல், 140' நீளமான பகுதிக்கு முட்கம்பி அடிக்கப்பட்டமை, பிரதான மேல்மாடி கேவல் சுவர்களுக்கு பிராணிகள் நுழையாது வலை அடித்தமை, மேல்மாடியின் கீழ்ப்பகுதிக்கு கதவு போட்டமை போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தளபாட சிறு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2008இல் 40' ×25' முதலாம் மாடி திருத்தம் படியமைப்பு போன்றன மேற்கொள்ளப்பட்டன.

முன்னைய அதிபரின் காலத்தில் கட்டப்பட்டிருந்த நூலகம் 09.09.2005இல் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.செ.குபேரநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நூலகத்திற்கு மேல் மாடிக் கட்டிடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு 04.06.2008இல் வலயக் கல்விப் பணிப்பாளர் உயர் திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ் வித்தியாலயத்தின் அதிபர் ஆசிரியர்களின் முயற்சியால் 15.09.2008இல் சிறந்ததொரு கல்விக் கண்காட்சியும் மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.இ.தமிழ்மாறன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். இவ் அதிபரின் முயற்சியால் வாகனத்தரிப்பிடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் புவியியல் அறிவை வர்க்கும் நோக்குடன் 65' X 25' மேல்மாடியின் கீழ்த்தளத்தில் 2006ஆம் ஆண்டு 30000 ரூபா செலவில் உலகின் பௌதிகச்சூழல், பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றை உள்ளடக்கி 7 கண்டங்களுக்குமான 11 தேசப்படங்கள் வரையப்பட்டன.

இவ் அதிபர் பதவியேற்றவுடன் சில வருடங்களாக நடைபெறாதிருந்த பரிசளிப்பு விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வருடாவருடம் பரிசளிப்பு விழா நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இல்ல மெய்வல்லுநர் போட்டிகளும் வருடாவருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பல்வேறு விளையாட்டு அணிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வலைப்பந்து பெண்கள் அணி, கிரிக்கெற் ஆண், பெண் அணிகள், கபடி, தாச்சி அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கோட்டமட்ட, வலய மட்ட, மாவட்டமட்டப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றிப் பரிசில்களும் பெற்றுள்ளனர். கால்கோள்விழா, நவராத்திரி விழா போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

முன்னைய ஆசிரியர் திரு.பல்குணன் லாலாஅவர்கள் உதவிய 300, 00 ரூபா நன்கொடையைக் கொண்டு விவேகானந்தர் மண்டபக் கரையோரமாக நடைபாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நவீன

கற்றல்–கற்பித்தல் சாதனங்கள் மூலம் மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் நோக்கில் O.H.P , கணனி முதலியன பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது அரசநிதியான 251,000 ரூபா செலவில் கணனிக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு மாணவர்களுக்கு கணனி அறிவு புகட்டப்படுகிறது. பாடசாலையின் பழைய மாணவியும், முன்னாள் ஆசிரியையுமான கனடாவில் வசிக்கும் திருமதி செ.சடாட்சரலிங்கம் அவர்களினால் நவீன கணனி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. கணனி அறையினை ஆரம்பத்தில் அமைத்துத் தந்துதவியவர் இவரே. இவ்வதிபரின் காலத்தில் கல்வித் துறையிலும் குறிப்பிடத்தக் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. புலமைப்பரிசில், க.பொ.த சா/தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். தமிழ்த்தினப் போட்டி, கட்டுரைப்போட்டிகளில் கோட்டமட்ட, வலயமட்ட, மாவட்டமட்ட பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

இவ் அதிபரின் காலத்தில் 2008ல் யூனியர்பான்ட் அணி முதன்முதலில் உருவாக்கப்பட்டது. திருமதி வாசுகி சச்சிதானந்தம் ஆசிரியரின் முன் முயற்சியினால் இவ் உபகரணங்கள் நலன்விரும்பிகளிடமிருந் தும், பெற்றோரிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களிடமிருந்தும் பெறப்பட்ட ன. திருமதி வாசுகி சச்சிதானந்தம் ஆசிரியர் அவர்கள் முன்முயற்சியாக ரூபா 5000 பெறுமதியான உபகரணங்களை வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்கது.

படிப்படியாக இடைநிலைப்பிரிவிற்கான பான்ட் வார்த்திய அணிகள் உருவாக்கப்பட்டு இன்று பூரண அணிகளாக வளர்ந்து நிற்கின்றன. திருமதி ச.குலேந்திரராஜா ஆசிரியை 20000 ரூபா பெறுமதியான பேஸ்றம், திருமதி க.பரமசாமி உப அதிபர் 10000 ரூபா பெறுமதியான றம்பெற் ஒன்றும் அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் அதிபர் பதவியேற்ற காலத்தில் உப அதிபராக திரு.செ.ஞானச்சந்திரன் கடமையாற்றினார். ஓரிரு மாதங்களில் அவர் மாற்றலாகிச் செல்ல நீண்டகாலம் சேவையாற்றிய திருமதி க. பரமசாமி ஆசிரியர் அவர்கள் உப அதிபர் பதவியை ஏற்றார். இவர் பிறரதுநலனிலும், மாணவர்களின் நலனிலும் மிகுந்த அக்கறை உடையவர். இவர் தனது சேவைக்காலத்தில் சிறப்பாகக் கடமையாற்றி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். 26.03.2010இல் இவர் ஓய்வு பெற்றாலும் மீள் நியமனம் பெற்று 06.07.2010வரை கடமையாற்றினார். அதன் பின்னர் 07.07.2010வரை கடமையாற்றினார். அதன் பின்னர் 07.07.2010இல் பகுதித்தலைவராக இருந்த திருமதி த. முருகையா அவர்கள் உபஅதிபர் பதவியை ஏற்றுள்ளார்.

வெளிவாரி மதிப்பீடென்பது பாடசாலையின் சகலதுறைகளும் கல்வித்திணைக்களதுறை சார் அறிஞர்களால்மதிப்பிடப்படுவதாகும். இவ்வதிபரின் காலத்தில் வலிகாமம் வலயக்கல்வித் திணைக்களத்தால் 2008.07.07இல் நடைபெற்ற வெளிவாரி மதிப்பீட்டில் 76 புள்ளிகளையும், 23.06.2009இல் நடைபெற்ற வெளிவாரி மதிப்பீட்டில் 74 புள்ளிகளையும் இப் பாடாலை பெற்றுக் கொண்டது. இது பாடசாலை இன்று பல்வேறு துறைகளிலும் மிக உயர்ந்த அடைவு மட்டத்தில் உள்ளமையைக் காட்டுகின்றது என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நூற்றாண்டுவிழா 26.09.2010 அன்று காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெற்றது. 180 பக்கங்களைக் கொண்ட நூற்றாண்டு மலர் வெளியிடப்பெற்றது.

திருமதி க.பரமசாமி B.A, Dip.in.Ed. (Merit)
ஓய்வுநிலை உப அதிபர்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்

யா/மயிலணி சைவ மகாவித்தியாலய
அதிபர்கள் அணி

01)	பிரம ஸ்ரீ. இரத்தினேஸ்வரக்குருக்கள்	1910	-	1913 வரை
02)	திரு.சி.நாகநாதர்	1913	-	1914 வரை
03)	திரு.சி.ஆறுமுகம்	1914	-	1917 வரை
04)	திரு.சி.செல்லத்துரை	1917	-	1931 வரை
05)	திரு.பொ.பொன்னம்பலம்	1931	-	1941 வரை
06)	திரு.வ. நடராசா	1941	-	1956 வரை
07)	திரு.மா.குமாரஸ்வாமி	1956	-	1970 வரை
08)	திரு.வே.சின்னையா	1970	-	1973 வரை
09)	திரு.வ.பொன்னம்பலம்	1973	-	1974 வரை
10)	திரு.ப.சுப்பையா	1974	-	1978 வரை
11)	திரு.க.திருநாவுக்கரசு	1979	-	1984 வரை
12)	திரு.ஐ. மனோகரன்	1984	-	1989 வரை
13)	திரு.சு. துரைசிங்கம்	1989	-	1999 வரை
14)	திரு.த.சற்குணசர்மா	1999	-	2005 வரை
15)	திரு.நா.சிவநேசன்	2005	-	இன்றுவரை

"இறைவன் என்ற ஒரே பொது மையத்திலிருந்து
தோன்றியவர்களே நாம் அனைவரும்
எனவே இறைவனிடம் இருந்து தோன்றி விளங்கும்
ஒவ்வோர் உயிரும் அது எவ்வளவு உயர்ந்ததானாலும்,
தாழ்ந்ததானாலும் முடிவில் எல்லா உயிர்களுக்கும்
தந்தையான இறைவனை அடைந்துதான் தீரவேண்டும்.

யாரிடமிருந்து எல்லாம் தோன்றுகின்றனவோ,
யாருக்குள் யாவும் வாழ்கின்றனவோ,
முடிவில் யாவும் அடைகின்றனவோ
அவரே கடவுள்"

சுவாமி விவேகானந்தர்

Result Analysis

Performance at G.C.E O/L Examination 2004 - 2009

Year	2004			2005			2006			2007			2008			2009		
	Boys	Girls	Total	Boys	Girls	Total	Boys	Girls	Total	Boys	Girls	Total	Boys	Girls	Total	Boys	Girls	Total
தோற்றியோர்	05	11	16	10	21	31	13	12	25	14	18	32	19	17	36	25	08	33
சித்தியடைந்தவர்	-	01	01	02	06	08	02	02	04	03	02	05	03	04	07	01	02	03
சித்தி வீதம்	-	9.8	5.2	2.0	28.57	25.8	15.0	17.0	16.0	21.0	11.0	16.0	16.0	23.5	19.4	4.0	25.0	9.0



Result Analysis

Performance at Scholarship Examination 2005 - 2009

Year	2005			2006			2007			2008			2009		
	Boys	Girls	Total	Boys	Girls	Total	Boys	Girls	Total	Boys	Girls	Total	Boys	Girls	Total
தோற்றியோர்	07	19	26	06	06	12	07	11	19	05	04	09	14	06	21
சித்தியடைந்தவர்	-	01	01	02	-	02	01	01	02	01	-	01	01	01	02
சித்தி வீதம்	-	5.2	3.8	33.0	-	17.0	14.0	9.0	10.5	11.0	-	11.0	7.1	16.6	10



பாடசாலைகளை வினைத்திறனுடையதாக்கல்
–சில பரிசீலனைகள்–

பேராசிரியர் மா. சின்னத்தம்பி
கல்வியியல் பேராசிரியர்
தலைவர் - சட்டத்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பாடசாலைகள் பற்றிய எண்ணங்கள் இன்று பெருமளவுக்கு மனநிறைவு தருவதாயில்லை. பாடசாலைகள் ஒரு முறை சார்ந்த கற்றல் ஏற்பாடுகளுக்கு உதவும் நிறுவனங்களில் முதன்மையானதாகக் கருதப்பட்டு வருகின்றது. எல்லா நாடுகளிலும் சமூக நலன்களை முன்னேற்றுவதற்காக நிறுவப்பட்டுள்ள பல்வேறு சமூக நிறுவனங்களில் முக்கியமானதாக பாடசாலைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனாலும் பாடசாலைகள் கல்வி வழங்குதலில் ஒப்புயர்வற்ற பங்கினை வகிப்பதாக எல்லோரும் இன்று ஏற்றுக் கொள்வதில்லை.

பாடசாலைகள் வினைத்திறனுடன் செயற்படுவதில்லை என்ற கருத்து பரவலாக இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பாடசாலைகள் அரசினால் அதன் நிதிச் செலவில் நடாத்தப்படுகின்ற எல்லாச் சமூகத்தின் குழந்தைகளுக்குமான நிறுவனங்கள் என்ற பொதுவான கருத்து உண்டு. தனியார் பாடசாலைகளும் தொழிற்பட்டாலும் கூட பாடசாலைகள் என்றதும் அவை மனதில் வருவதில்லை.

இத்தகைய அரச பாடசாலைகள் இன்று பெருமளவிற்கு வினைத்திறனின்றியே தொழிற்படுகின்றன. அவை ஆசிரியர்கள் தொடர்பான விடயங்களுக்கும் அரசின் பல்வேறு தேவைகளுக்கும் முதன்மையளிக்கும் நிறுவனங்களாகவே செயற்படுகின்றன. அதாவது மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் அவை காட்டும் ஈடுபாடு அல்லது வினைத்திறன் படிப்படியாக வீழ்ச்சியடைந்தே வருகின்றது. பல சமயங்களில் ஒரு பதிலீட்டு நிறுவனமாக மாத்திரமே செயற்படுவதாகவும் குறை கூறப்படுகின்றது. பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பும் தகுதி பெறுவதற்காகவே மாணவர்கள் பாடசாலையில் சேருகின்றனரோ என்ற சந்தேகமும் பலரிடம் காணப்படுகின்றது.

வளர்முக நாடுகள் பலவற்றிலும் இதே நிலை தான் காணப்படுகின்றது. பொய்ட் (Boyd:1991) என்பவரது அவதானிப்பு, மற்றும் ஆய்வின் படி பாடசாலைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த வளங்களும் பூரணமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. ஐக்கிய அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் இதே நிலைமைகளே காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பாடசாலைகள் பிள்ளைகளின் ஒழுக்கம், ஒழுங்கு என்பவற்றை வளர்த்து அறிவையும், திறன்களையும் தன்னம்பிக்கையையும் வளர்ப்பதில் அதிக அக்கறை கொள்ள வேண்டும். சமூகரீதியாக பேதங்களை அகற்றி நல்லிணக்கத்தை வளர்க்க வேண்டும். பிள்ளைகளின் உடல் நலன்களைப் பேணுவதிலும் உளவியல் நலப்பாடுகளை உறுதி செய்வதிலும் ஈடுபாடு கொள்ளுதலும் வேண்டும். பெற்றோரால் பிள்ளைகளுக்கு வழங்க முடியாத அறிவையும், தன்னம்பிக்கையையும், ஒழுக்க நடத்தையையும், பொருளாதார வலிமையையும் பாடசாலைகள் வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே பாடசாலைகளைச் சமுதாயச் சொத்துக்களாக – தேசிய வளங்களாகப் பராமரித்து வருகின்றனர். ஆனால் மாணவர் நோக்கில் இத்தகைய எதிர்பார்க்கைகள் நிறைவேற்றுவதிலிருந்து அவை விலகிச் செல்வதாக பாடசாலைகள் பற்றிய குற்றச்சாட்டு – உணர்வு வலுவடைந்து வருகின்றது.

இத்தகைய பாதகமான போக்கு வளர்வதற்கு பின்னணியாகவுள்ள காரணிகளை இனங்காண வேண்டி உள்ளது.

- பாடசாலைகளுக்கு வெளியேயுள்ள காரணிகள் பாடசாலைகளில் மாணவர் கற்றலை மேற் கொள்வதைத் தடை செய்து வருகின்றன. பிள்ளைகளின் நலவியல் (Health), வீட்டுவசதி, ஊட்டம், பெற்றோர் உளப்பாங்கு, குடும்ப வருமானநிலை போன்றன பாதகமாகச் செயற்படும் போது பாடசாலைகளின் வளங்களைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு மாணவர் முயல்வதில்லை. சிலர் பள்ளி நாட்களில் பெரும்பாலான நாட்களுக்கு பாடசாலைக்கு வருவதில்லை, எல்லா மாணவரும் முழுமையாகப் பாடசாலைக்கு வர முடிவதில்லை, பிள்ளைகளைப் பெற்றோர் பள்ளிக்குச் செல்வதற்கென விடுவதில்லை, உதவிகள் வழங்குவதில்லை, முழுமையான ஊக்குவிப்புக்களை வழங்குவதில்லை, இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தம், இடப்பெயர்வு, குடும்பங்களின் சிதைவு என்பவற்றால் இந்நிலை மேலும் மோசமடைந்து வருகின்றது.

- பாடசாலைகளில் இடப்படுகின்ற வளங்கள் நிறைவாகப் பயன்படுத்தப்படுவதில்லை. பாடசாலை நாட்கள் 180 முதல் 200 வரை தான் காணப்படுகின்றன. ஒரு பள்ளி நாளில் சராசரியாக 6 மணித்தியாலங்களே பாடசாலை வளங்கள் பயன் படுத்தப்படுகின்றன. பள்ளிகளின் வகுப்பறைகள், நூலகம், ஆய்வு கூடங்கள், பிரார்த்தனை மண்டபங்கள் போன்ற அனைத்துப் பௌதீக வளங்களும் முழுமையான வகையில் – பொருளாதார எண்ணக்கரு அடிப்படையில் பயன்படுத்தப்படுவதில்லை.

- பாடசாலைகளின் தொழிற்பாடுகளில் கவன ஈர்ப்பு ஒளி குவிப்புக்குள் மாணவர்கள் இல்லை, கோட்பாடுகளின் படி மாணவர்களே பாடசாலைகளின் மையவிசைச் சக்கரங்கள். ஆனால் நடை முறைச் செயற்பாடுகள் கற்கின்ற மாணவர்களுக்குரிய முன்னுரிமையை வழங்குவதேயில்லை. பாடசாலை நிறுவன ஏற்பாடுகள், சுற்று நிருபங்கள், ஆசிரியர் தொழில் முறை நிறைவேற்றங்கள் என்பனவே பாடசாலைத் தொழிற்பாடுகளில் முக்கியத்துவம் பெற்று விட்டன. மெல்ல மெல்ல மாணவர் பற்றிய அம்சம் முதன்மை அற்றதாகிவருகின்றது.

பங்குடமை ஏற்பாடு (Partnership Programme)

உளவியல் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட அரச பாடசாலை வளங்கள் நிறை பயன்பாடின்றி இருக்கும் நிலையில் வாரமொன்றுக்கு சராசரியாக 18 மணித்தியாலங்கள் வரை எந்த வித உளவியல், உடலியல் நலன்களையும் கவனிக்காத– கவனிப்பதற்குரிய வசதிகளற்ற கல்வி நிறுவனங்களில் பிள்ளைகள் இதே கல்வித் தேவைக்காகக் குவிவதைக் காண முடிகிறது. பாடசாலைகள் கற்பிக்கும் அதே பாடத்திட்டத்தையே அவையும் கற்பிக்கின்றன. பெற்றோர் சம்மதத்துடனும் பிள்ளைகளின் விருப்பத்துடனும் அங்கும் கற்றல் பணி நிகழ்கின்றது.

பாடசாலையின் பதிலீடுகளாக – பல சமயங்களில் பாடசாலை முறையை நலினப்படுத்தும் நிறுவனங்களாக – சமாந்தரமான கல்வி ஏற்பாடாக தனியார் கல்வி நிலைய அமைப்பு செயற்படுகின்றது. அங்கும் திறமை மிக்க ஆசிரியர்கள் உள்ளனர். பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்படுகின்றன. பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. மாணவர் அவற்றை விரும்புகின்றனர். பெற்றோர் அதனை நம்புகின்றனர். அவையும் தவிர்க்க முடியாத உப அமைப்புகளாக (Sub System) வளர்ந்து வலிமை பெற்றுத் திகழ்கின்றன.

ஒரு புறம் சமுதாய ரீதியில் உருவாக்கப்பட்ட பாடசாலை வளங்கள் குறைப்பயன் பாட்டுடன் (Under Utilization) கிடக்கின்றன. மறுபுறம் அதே சமுதாயப் பிள்ளைகளின் உடலியல் உளவியல் அம்சங்களைப் புறக்கணித்து – அல்லது அதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏதுமின்றி – தனியே பாடத்திட்டத்தை அவசர அவசரமாக கற்பிக்கும் தனியார் கல்வி நிலைய முறைமை வளர்ந்து இயங்குகின்றது.

அரச பாடசாலைகளின் பௌதீக வளங்களையும் உத்தமமான உளவியற் சூழலையும் தனியார் கல்வி நிலைய ஆசிரியரின் திறமைகளையும் ஏன் ஒருங்கிணைக்கக் கூடாது?பங்குடமை ஏற்பாடு (Partnership

Programme) ஒன்று பற்றி ஏன் சிந்திக்கக் கூடாது? ஒரே வேலையை ஏன் இரட்டிக்க வேண்டும்? குடியேற்ற நாடாயிருந்த காலப் பகுதியின் சட்ட திட்டங்களை அதே வடிவத்தில் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமா? அரை நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, பண்பாட்டு, தொழில்நுட்ப மாற்றங்களைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப பாடசாலை விதிமுறைகளை மறு பரசீலனை செய்தாலென்ன? மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் சமூகங்களே தம் பிள்ளைகளுக்கான உத்தம நலன்களை உறுதி செய்ய முடியும்.

பாடசாலைகளின் நேர அட்டவணை, பாடசாலை வளங்களின் பயன்பாடு, ஆசிரிய நியமன விதிமுறை தொடர்பாகப் புதிய அணுகு முறை தேவை. அப்போது தான் பாடசாலைகள் உண்மையான பங்களிப்பை சமுதாயத்திற்கு வழங்க முடியும்.

அதே சமயம் தனியார் கல்வி நிலைய ஆசிரியருக்கான கற்பித்தல் பயிற்சி பொதுப்பாடத் திட்ட நடைமுறையினை வலியுறுத்தல், பாடசாலை முறையுடன் முரண்படாத தேர்வு ஏற்பாடுகள், முகாமைத்துவம் தொடர்பான பொதுவான வழிகாட்டல் ஏற்பாடுகள் என்பன பற்றியும் சிந்தித்தல் வேண்டும். பிள்ளைகளின் சுகாதார, உடலியல், உளவியல் நலப்பாதுகாப்பு பற்றியும் அவற்றிற்கு வழிகாட்டு நெறிகள் தேவை.

தனியார் கல்வி நிறுவனங்களைப் பகைவர்களாக நோக்காது பங்காளர்களாகத் தரமுயர்த்த வேண்டும். கல்வி சார் வளங்களையும் பணிகளையும் தக்கவாறு பகிர்ந்து கொள்ள வேண்டும். இதற்கான பங்குடமை நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். 1990களில் ஜேர்மனியில் அரச– தனியார் கூட்டுத் திட்டங்கள் அறிமுகமாகி வெற்றியளித்ததை இங்கு குறிப்பிடலாம்.

யுத்த கால நெருக்கடிகளின் போது அரச பாடசாலைகளுக்கான அடைக்கலம் தரும் நிலையங்களாகத் தனியார் கல்வி நிலையங்கள் செயற்பட்டமையையும், பங்காளராக கைகோர்த்துச் செயற்பட்டமையையும் நினைவு கூர்வது புதிய சிந்தனைக்கு ஊக்கமளிப்பதாக அமையும்.

பாடசாலைகளை முழுமையான பயன்படு நிலையங்களாக்க இத்தகைய புதிய அணுகு முறைகள் கட்டாயம் பரிசீலணை செய்யப் பட ல் வேண்டும்.

அரசின் கல்வி நோக்கங்களையும் தனியார் துறை நிர்வாக முகாமைத்துவ திறன்களையும் ஒருங்கிணைப்பது அவசியமாகிறது. இதற்கு ஒழுங்கு முறையான செயற்றிட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

1. அரச துறை பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் காணப்படும் பலமான அம்சங்கள், விடயங்கள் இனங்காணப்படல் வேண்டும்.

2. இவற்றை – இரு (அரச – தனியார்) துறைகளையும் ஒருங்கிணைத்து செயற்படுத்துவதற்குரிய தனியான நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

3. இரண்டு துறைகளும் தனித்தனியாக இயங்க முடியும். ஆனால் பலவீனமான பகுதிகள் இனங் காணப்பட்டு நிரப்பப்படல் வேண்டும். அரச துறையின் பலமான அம்சம் தனியார் கல்வி நிறுவனங்களின் பலவீனங்களை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படல் வேண்டும். இதில் பின்வருவன முக்கியமானவை

   (அ) தனியார் கல்வி நிலைய போதனாசிரியர்களுக்கு கற்பித்தல் மற்றும் உளவியல் ஆசிரியத்துவம் தொடர்பான குறுங்கால பயிற்சி ஏற்பாடு தேவை. அதில் பங்கு பற்றி தகுதிச் சான்றிதழ் பெற வேண்டும். எத்துறையிலிருப்போரும் கற்பித்தலில் ஈடுபடலாம். ஆனால் அவர்கள் இத்தகைய தகுதிச் சான்றிதழை கட்டாயம் பெற வேண்டும்.

   (ஆ) இதே போல் பாடத்திட்டங்கள், மதிப்பீட்டு முறைகள் என்பன மாறும் போது சேவைக்கால பயிற்சி வகுப்புக்களில் அவர்கள் கட்டாயம் பங்கு பற்ற வேண்டும். அவர்களுக்குரியதான

சிறப்பான சேவைக்காலப் பயிற்சி ஏற்பாடுகளை மேற் கொள்ள முடியும். இதற்குரிய பயிற்சிக்கான செலவுகளை அவ்வாசிரியர்களே பொறுப்பேற்க வேண்டும்.

(இ) பொதுப் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை கற்பிப்பதற்கான பாடத்திட்ட ஏற்பாடு தேவை. மாதாந்தம் தவணை தோறும் பாட அலகுகள் உரியவாறு ஒழுங்கு முறையில் கற்பிக்கப்படுவதை உறுதி ப்படுத்த வேண்டும். பாடசாலை முறைமையை நலினப்படுத்தாத வகையிலும் ஒரு பணியை இரட்டிப்புச் செய்யாமலும் உரிய காலத்துக்குள் பாடங்களைக் கற்பித்து முடிப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் இவ் ஏற்பாடு தேவை.

4. இந்த இணக்கப்பாட்டை உருவாக்கவும் கண்காணிக்கவும் ஒரு இணைப்புச் சபை மாவட்டந்தோறும் செயற்படல் வேண்டும். இதில் அரச பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், கல்வித்துறை நிபுணர்கள் இடம் பெற முடியும். ஒரு காலத்தில் அரச பாடசாலைகள் உரிய வேளையில் பாடங்களை நிறைவாகக் கற்பித்து முடிப்பதில்லை. இதனால் தனியார் கல்வி நிறுவனங்களை நாடுவதாகக் கூறப்பட்டது. இன்று அங்கும் – தனியார் கல்வி நிறுவனங்களிலும் கூட பரீட்சைக்குத் தயாராகும் வகையில் உரிய காலத்தில் பாடங்கள் கற்பித்து முடிக்கப்படாத நிலை வளர்ந்துவருகிறது. மாணவர்கள் எப் பகுதியிலும் திருப்தி அடைய முடியாத நிலை வளர்ந்துவருகின்றது. இதற்கு தீர்வு காணப்படல் வேண்டும்.

5. பாடசாலை நேர அட்டவணைகள் மாணவர்க்குரிய உளவியல் தேவைகள், அவர்களுக்கான ஓய்வு என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையிலேயே உருவாக்கப்பட்டன.

இன்று மாணவர்கள் பாடம் கேட்பதற்குச் செலவிடும் நேரம் – மனித மணித்தியாலங்கள் மிக அதிகம். பாடசாலையிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் செலவிடும் பாடங் கேட்பதற்கான நேரம் மிகவும் நீண்டு செல்கிறது. பரீட்சை நெருங்க நெருங்க இரு துறையினரும் போட்டி போட்டு பிள்ளைகளின் – தாமாக கற்பதற்குரிய நேரத்தைக் கொள்ளையடித்து விடுகின்றனர்.

பிள்ளைகளிடமும் பெற்றோரிடமும் களைப்பு, பரபரப்பு(tension) மனப்பயம், விரக்தி போன்றன அதிகரிப்பதைக் காண முடிகிறது. உணவு உண்ணுதல், ஓய்வாக இருத்தல், நீண்ட நேரம் தாமாக வகுப்பில் படித்ததை கற்று நினைவில் இருத்துதல் என்பவற்றிற்கு உரிய வாய்ப்புக்கள் இல்லாமலே போய் விடுகின்றன. மாணவர்களுக்கு இரு துறையினரும் நன்மை தான் செய்கின்றோமா? என்ற கேள்வி வலுப் பெற்று வருகிறது.

அவர்களைத் தாமாகக் கற்க – அதிக நேரம் கற்க நாம் அனுமதிக்க வேண்டும். இதற்கான மாணவர் நேர முகாமைத்துவ ஏற்பாடு ஒன்றை இரு சாராரும் இணக்கப் பாட்டினடிப்படையில் நிச்சயம் செய்தாக வேண்டும்.

6. துணைச் சாதனங்களை – தனியார் கல்வி நிறுவனங்கள் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துதல். தேசப்படம், மாதிரிகள், அட்டவணைகள், செய்முறை என்பவற்றை தனியார் கல்வி நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல் தேவை. அதற்கான உதவிகள் அரச பாடசாலைகளினால் வழங்கப்பட ல் வேண்டும். உதவியும் ஒத்துழைப்பும் போதியளவு வழங்கப் படல் வேண்டும்.

7. கட்டிடங்களையும் தளபாடங்களையும் தனியார் கல்வி நிறுவனங்கள் வார இறுதியில் பயன்படுத்துதல், அதற்கான கட்டணங்களை அறவிடுதல் பற்றியும் தெளிவான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்கலாம்.

8. ஆசிரியர்களைத் தனியார் கல்வி நிறுவனங்களில் இருந்து பாடசாலைகள் பெறுதல். பாடசாலை நேர அட்டவணைக்குள் மேலதிக பாடம் கற்பித்தல் தொடர்பாகவும் உரிய உடன்பாடும், ஏற்பாடும் தேவை.

9. ஒரே நிறுவனத்தில் – பாடசாலையில் மாத்திரம் கூட்டாக பரீட்சைகள் நடாத்துதல், மாணவர் பாடசாலை நெருக்கத்தை வளர்த்தல் அவசியமாகிறது.

குழப்பமற்ற வகையில் மாணவருக்கு மன அழுத்தம் மற்றும் பரபரப்பை ஏற்படுத்தாது பரீட்சைகளை நடாத்துதல் வேண்டும் . இவை யாவற்றிற்கும் தெளிவான ஏற்பாடு தேவை.

மாணவர் மீதான கவனம்

பாடசாலைகளென்பவை நிறுவன ஏற்பாடுகள், ஆளுகைக் கட்டமைப்பு, கலைத்திட்டம், பௌதீக வசதிகள், ஆசிரியர்கள் போன்ற காரணிகளில் அதீத கவனம் செலுத்தும் நிறுவனங்களாகி விட்டன.

மாணவர்களைப் பாடசாலைகளின் மைய விசைகளாக நேர்மையுடன் ஏற்றுக் கொள்ளாதவரை பாடசாலைகள் வினைத்திறன் கொண்டனவாக – மாணவர்களுக்குரிய ஈர்ப்பு நிலையங்களாக மாற்ற மடையவே முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

குட்லட்(Goodlad, 1984) நாப் (Knapp, 1990) ஷீல்ட் (Shields, 1990) போன்றோரின் கருத்துப்படி மாணவர்கள் வெற்றுக் கொள்கலன்கள்; அவர்கள் ஆசிரியர்கள் கற்பிப்பதனால் நிரப்பப்படக் கூடியவர்கள்; அவர்கள் சுயமாகக் கற்க எத்தனித்தால் பிரச்சினைகளையே எதிர் கொள்ள வேண்டி ஏற்படும் என விளக்கினர். சுய சிந்தனை, சுய ஊக்கம், சுய தேடல் என்பன மாணவனுக்கு அவசியமில்லாதன என்ற கருத்தையே அவை வலியுறுத்தின. இது பழமை வாதமாகும்.

பெரும்பாலான மாணவர்கள் தாம் ஏன் பாடசாலை செல்கின்றோம் என்பது பற்றி எவ்வித தெளிவும் எண்ணமும் குறிக்கோளும் கொண்டிருப்பதில்லை. அவை பற்றிய தெளிவான உணர்வுகளை மாணவர் பெற வேண்டும் என்பதில் பாடசாலை முறை ஈடுபாடு நிறைந்த பணி இலக்குகளையும் கொண்டிருப்பதில்லை. மாணவர்கள் தொடர்பான பாடசாலைகளின் நிலைப்பாடு தற்போது பின்வருமாறு காணப்படுகின்றது.

- பாடசாலைகள் பற்றி சீர்திருத்தங்கள் பாடசாலை நிர்வாகம் மற்றும் ஆசிரியர் பற்றியதாகவே காணப்படுகின்றது. மாணவர் பற்றியல்ல.

- பாடசாலை முகாமைத்துவம் பற்றிய நூல்கள் ஆசிரியர், பெற்றோர் பற்றிக் கூறுமளவுக்கு மாணவர் மீது கவனம் செலுத்துவதில்லை.

- ஆசிரியர்களையும் பாடசாலை முகாமையாளர்களையும் வலுவுடையோராக்குவதில் செலுத்தப்படும் கவனம் மாணவர்கள் மீது செலுத்தப்படுவதில்லை. லெவின்(Levin,1994)ஃபலன் (Fallan, 1991) போன்ற ஆய்வாளர்கள் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

- கல்விச் சீர்திருத்தங்கள், ஆசிரியர்களது பயிற்சி, மதிப்பீடு பற்றிக் குறிப்பிடுமளவிற்கு மாணவரது செயற்பாடு பற்றிக் கவனம் செலுத்துவதில்லை.

- கல்வித்துறை ஆய்வுகளிற் பெரும்பாலானவை ஆசிரியர்களது கற்பித்தல் பற்றிக் கவனம் செலுத்திய அளவுக்கு மாணவர் பற்றியோ அவர்களது கற்றற் செயற்பாடுகள் பற்றியோ கவனம் செலுத்துவதில்லை.

பொதுவாக பாடசாலைத் தொழிற்பாட்டில் மாணவர்களை மையப்படுத்திய ஆய்வுகளோ, செயற்பாடுகளோ அதிகம் இல்லை என்று எரிக்ஷன்(Erickson, 1992),சூல்ட்ஸ்(Schultz, 1992) போன்றோர் வற்புறுத்தியுள்ளனர்.

பாடசாலைகள் பெருமளவிற்குமாணவர்களது திறன்களை விருத்தி செய்ய முன் வரவில்லை. மாணவர்களை வலுவூட்டும் செயற்றிட்டங்களில் அதிக ஈடுபாடு காட்டியதில்லை. அவர்களது விருப்பத் தெரிவுகளுக்குரிய தர்க்க நியாயங்களை ஈடுபாட்டுடன் செவி மடுப்பதில்லை. பாடசாலை பற்றியும், பாடசாலைக் கல்வி பற்றியும் தெளிவான எண்ணங்களை உருவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்ததில்லை; செயற்படுத்தியதில்லை. அதற்கெனப் பாடசாலை வளங்களை அதிகம் ஒதுக்கியதுமில்லை.

பாடசாலை நிர்வாகமும், ஆசிரியரும் மாணவர்கள் தம் கல்வியில் திசை தப்பிப் போகாதிருப்பதற்கு உதவக் கூடியதாக போதியளவு வழி காட்டியதில்லை. பாடசாலைக் கல்வியில் வெற்றி பெற்ற வசதி மிக்க மாணவர்களில் வெற்றியில் உரிமை கொண்டாடியது போல் தோல்வியடைந்த மாணவர்களின் தோல்விக்கு பொறுப்பேற்க முன் வருவதில்லை; அப் பொறுப்பை அதிக ஈடுபாட்டுடன் ஏற்பதுமில்லை.

இத்தகைய மாணவரிலிருந்து விலகிச் செயற்படும் பாடசாலை முறைமை வலுப் பெற்றதால் மாணவருக்கு பாடசாலை அவசியமான வாழ்வு மையமாகச் செயற்படமுடியவில்லை.

புதிய திசையில் கவனம்

பாடசாலைகள் மாணவர்களை ஈர்க்கும் நிறுவனங்களாகவும் அவர்களுக்கு வாழ்வு பற்றியும் கல்வி பற்றியும் நம்பிக்கையளிக்கும் நிலையங்களாகவும் செயற்படவேண்டுமானால் பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. க.பொ.த. உயர்தர வகுப்பு தொடங்க முன் க.பொத. (சாதாரண) பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் அவர்களது பெற்றோர் அல்லது மூத்த சகோதரர்களையும் அழைத்து கல்வி வாய்ப்புப் பற்றியும் கற்கைநெறித் தெரிவு பற்றியும் தெளிவாக விளக்க வேண்டும்.

   க. பொ. த .(உயர்தர) வகுப்பு தொடங்குவதற்கு முதல் ஒரு வாரம் அத்தகைய வகுப்புக்களைத் தொடங்கும் அனைத்துப் பாடசாலைகளும் கல்வி வாய்ப்புக்கள், தடைகள் மாற்று வாய்ப்புக்கள் பற்றி விளக்க வேண்டும். பின்வருவன பற்றி தெளிவு பெற உதவ வேண்டும்.

   * பல்கலைக்கழக உள்வாரி மாணவராதல்
   * வெளிவாரிப் பட்டம் பெறல்
   * திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலல்
   * உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் இணைதல்
   * கல்வியியற் கல்லூரியில் சேர்தல்
   * வாண்மைக் கல்வியில் இணைதல்
   * அரச தொழில்களைத் தேடல்
   * தனியார் நிறுவன தொழில் தேடும் வழி முறைகள்
   * சுய தொழில் முயற்சி வாய்ப்புகளும் வழி முறைகளும்

போன்ற பல்வேறு வாய்ப்புக்கள் பற்றியும் தெளிவாக விளக்க வேண்டும். எத்தகைய வாழ்வுத் தொழிலுக்கு எத்தகைய கற்கை நெறியை– எத்தகைய பாடத் தொகுப்பைத் தெரிவு செய்வது உகந்ததென விளக்க வேண்டும். இதற்கென வழிகாட்டு வாரம் ஒன்றை கவனமாகத்திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இதற்குரிய வள அணியினரை தொழில் நிறுவனங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் போன்றவற்றிலிருந்து தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

தெளிவான **வழிகாட்டும் கைநூல்** ஒன்றைத் தயாரித்து வழங்க வேண்டும். மாணவர் தனியாகவும் அணியாகவும் தெளிவு பெற உதவுதல்வேண்டும்.

இது பாடசாலைகளின் பிரதான பணி இலக்குகளில் முதன்மையானதாக இடம் பெற வேண்டும். அப்போது தான் பாடசாலைகள் மாணவரின் மன விரக்தியை அகற்ற முடியும்; மிகையான கற்றலைக் குறைக்க உதவ முடியும். பாடசாலை வளங்களை உத்தமமாகப் பயன்படுத்த முடியும். தேவையானோருக்கு மாத்திரம் பொருத்தமாகப் பாடசாலைகளை மாற்றியமைக்க முடியும். பாடசாலையை வினைத் திறனாக்குவதற்கு மாணவர் மற்றும் பெற்றோர் கூட்டத்தினர் கல்வி வள விரயத்தையும், மன விரக்தியையும் குறைப்பதில் உதவக் கூடிய செயற்றிட்டங்களை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும்.

கற்பித்தலை விடவும் கற்பித்தல் கற்றலின் பயனை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

2. பாடசாலைகள் தமது அமைவிடப் பிரதேசத்தில் இயங்கும் பெரிய பண்ணைகள், வியாபார தொழில் நிறுவனங்கள், சேவை நிலையங்கள், கைத்தொழில் நிலையங்கள் போன்றவற்றுடன் இணைந்து கூட்டுத் தொழில், பயிற்சித் திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்ற வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களிடம் உரிய உதவிகளைப் பெறுதல் வேண்டும்.

மாலை வேளை, பகுதி நேர வேலை மற்றும் பயிற்சி, வார இறுதி வேலை மற்றும் பயிற்சி என்பவற்றை வழங்க வேண்டும். பொருத்தமான வழிகாட்டல் நேர அட்டவணை, வேதனக் கொடுப்பனவு என்பவற்றையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.வேலை அனுபவங்களுக்கூடாகக் கற்றல் என்பதை பெற்றோர் அனுமதி மற்றும் ஒத்துழைப்புடன் வழங்க வேண்டும்.

கிராமிய மட்டங்களுக்கு வேறான, நகரங்களுக்கு வேறான செயற்றிட்டங்களை வடிவமைக்க வேண்டும். மகளிருக்கான கல்வி– தொழில் பயிற்சித் திட்டங்களை தனித்த மாதிரியில் தயாரிக்கலாம்.

கல்விக்கும் – தொழிலுக்கும் தொடர்பு வேண்டும். அவை பற்றிய நேர் மனப் பாங்கை விருத்தி செய்வதில் பாடசாலைகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

முடிவுரை

இத்தகைய முன் மொழிகள் அனைத்தும் பாடசாலைகளை மீண்டும் இன்றியமையாத நிறுவனங்களாக மாற்றும்; குலைந்து செல்லும் பாடசாலைச் சமநிலையை மீண்டும் உருவாக்க உதவும். எண்ணங்களைச் செயல்களாக மாற்றுவோம். அறிவைப் பயன் விளைவுகளுக்கு உள்ளீடாக மாற்றுவோம்.

இவை அனைத்தையும் இன்றிலிருந்து பரிசீலிப்போம்; உடனடியாகவே செயற்படுத்த முயல்வோம்; அது தான் பாடசாலைகளைப் பாதுகாக்க ஒரேயொரு வழி; அதுவே சிறந்த வழி.

References :

Verspoor Adrian 1989, **Improving the Quality of Education in Developing Countries.**

- The World Bank 1999, **Education Sector Strategy**, The IBRD, Washington D.C

- Beeby, C.E, 1966 , **The Quality of Education in Developing Countries.**, Harward University Press Cambridge, Masachusetts.

- Weyers E.Helmut 1998, **Putting Education Back on its Feet**, Development and Cooperation(D+C) DSE, Frankfurt.

-Ambach, abETTINA 1998, **Culture and Education in the South Africa,** Development and Cooperation(D+C) DSE, Frankfurt.

-Mclvor,Chris 2001, **Education all-Some Critical Reflections,** Cooperation(D+C) DSE, Frankfurt.

-Stiglitz, Joseph 2000, **Scan Globally,Reinvent Locally,** Development and Cooperation Cooperation (D+C) DSE, Frankfurt.

-Coleman, James 1967,**Equal Schools or Eqal Students?,** Readings on the School in Society, Prentice-Hall, INC, London.

-Zenebe, Mulumebet 1999, **The Problems of High Schools Drop outs in Addis Ababa Administrative Regionog Ethiopia** Education, Science and Documentation Centre (ZED), Bonn, Germany.

Everard, K.B and Geoffrey Moris, 1996, **Effective School Management**, Paul Chapman Publishing Ltd, London.

காற்றுக்கு எதிராகப் போராடிய பிறகே
பட்டங்கள் உயரச் சென்று பறக்கின்றன
கஸ்டங்களை எதிர்த்துப் போராடுகிறவர்கள்
பட்டங்களைப் போல வாழ்வில் உயர்வார்கள்.

– வின்ஸடன் சர்ச்சில் –

பாடசாலை முறையில் விரிவடைந்து வரும் பாடசாலை மேம்பாட்டுத்திட்டம்

பேராசிரியர் சோ.சந்திரசேகரன்
கல்வியியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்.

2006 ஆம் ஆண்டில் இலங்கைப் பாடசாலை முறைமையில் அறிமுகம் செய்யப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் (பா.மே.திட்டம்) தற்போது 5, 223 பாடசாலைகளில் நடை முறைப்படுத்தப் பட்டு வருகின்றது. 2006ல் முதல் கட்டத்தில் 1, 490 பாடசாலைகளில் மட்டுமே அறிமுகம் செய்யப்பட்ட இத் திட்டம் படிப்படியாக விரிவு கண்டு வருகின்றது. வட மாகாணத்தில் 218 பாடசாலைகளிலும் கிழக்கில் 183 பாடசாலை களிலும், ஹட்டன் வலயத்தில் 140 பாடசாலைகளிலும் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சர்வதேச ரீதியாக பாடசாலை மட்ட முகாமைத்துவம் என அழைக்கப்படும் இத் திட்டத்திற்கு உலக வங்கியின் முழுமையான அனுசரணை உண்டு. உலக வங்கிக் கல்வியாளர்களின் அரசியல், பொருளாதார சிந்தனையில் அரசாங்க துறைப் பணிகளிற்கு அதிக இடமில்லை. தனியார் துறையின் பங்கேற்பு, அதிகாரப் பரவலாக்கம் என்பன அவர்களுடைய சிந்தனைக்குப் பிடித்தமான அம்சங்கள். பாடசாலைகள் மத்திய அரசு அல்லது மாகாண அரசு என்பவற்றின் பொறுப்பிலிருப்பதால் பாடசாலைகள் முன்னேற்றங் காண முடியாது. இவ்விரண்டு அரசுகளுமே பாடசாலைக்குத் தொலைவில் இருப்பன. உள்ளூர் பாடசாலைகளின் அடிப்படை விடயங்கள், பிரச்சினைகள், தேவைகள் மற்றும் அவற்றின் பின்புலம் என்பவற்றை இவ் அரச அதிகாரிகளுக்குத் தெரியாது. அவர்கள் ஏராளமான பாடசாலைகளைக் கவனிக்க வேண்டியவர்கள். சகல பாடசாலைகள் பற்றி நுணுக்கமாக அறிந்து அவற்றின் மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுப்பது அவர்களால் முடியாததொன்று. அதற்கான நிர்வாக அமைப்பு அவர்களிடம் போதியளவு இல்லை. வளங்களை அரசுகள் வழங்குவதால் பாடசாலை மேம்பாடு தொடர்பான சகல அதிகாரங்களும் அவர்களிடம் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. மறுபுறம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் எனப் பாடசாலை சம்பந்தப் பட்டோர் அரச நிர்வாகிகளை விடப் பாடசாலைகளைப் பற்றியும், அங்கு பயிலும் பிள்ளைகளின் கல்வித் தேவைகளைப் பற்றியும் நன்கு அறிந்தவர்கள். எனவே பாடசாலை மேம்பாட்டுத் திட்டங்களை வரைவதற்கான அடிப்படை அறிவு அவர்களிடம் உண்டு. அவர்களுக்குப் பாடசாலை நிர்வாகம், திட்டமிடல் பற்றிய உரிய பயிற்சிகளை வழங்கி அவர்களைக் கொண்ட முகாமைத்துவ சபைகளை ஏற்படுத்துவது அதிக பயன் தருவது என்ற முறையில் பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் பற்றிச் சிந்தனை செய்கின்றது.

இன்று இலங்கைப் பாடசாலைகளில் மாணவர் சேர்வு திருப்திகரமாக உள்ளது. 1970களில் பாடசாலை செல்லாத பிள்ளைகள், இடையில் விலகும் பிள்ளைகள் என்பன கல்வி முறையில் பிரச்சினைகளாக இருந்தன. இன்று இவை பெரிய பிரச்சினைகள் அல்ல. ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் பாடசாலை சேர்வு வீதம் மிகவும் சாதகமாக உள்ளது. 5–14 வயதுப் பிள்ளைகளில் குறைந்த பட்சம் 75– 80% பிள்ளைகள் பாடசாலையில் சேர்ந்து பயிலுகின்றனர். இவ் விடயங்களில் பிரச்சினைகள் குறைந்து விட்டன. தற்போது கல்வித் தராதரங்களை மேம்படுத்துவதே பிரதான பிரச்சினை என்பது கல்விக் கொள்கை வகுப்போரின் கருத்து. நற்பிரஜைகளை உருவாக்குதல், பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் தேர்ச்சியை மேம்படுத்துதல் போன்ற விடயங்களில் அக்கறை செலுத்தப்பட வேண்டும். பொருளாதார முறையில் தனியார் துறையின் பங்கு அதிகரித்துவருவதோடு 35% வேலை வாய்ப்புக்கள் அத் துறையிலேயே காணப்படுகின்றன. இதனால் அத் துறையினர் வேண்டுகின்ற திறன்களையும் பாடசாலைக் கல்வி கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறான திறன்கள் குறைந்து காணப்படுமிடத்து பாடசாலைக் கல்வியின் தராதரம் கேள்விக்கிடமாக்கப் படுகின்றது. கல்விக் கொள்கை உருவாக்கத்தில் தனியார் துறையினரின் ஆலோசனைகளைக் கல்விக் கொள்கை வகுப்போர் கேட்கும் நிலையை இன்று உருவாக்கியுள்ளது.

இப் பின்புலத்தில் பாடசாலைக் கல்வியின் தராதரங்களை மேம்படுத்தப் பல கொள்கைகள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றில் பிரதானமானதொன்று பாடசாலை மேம்பாட்டுத் திட்டமாகும். 2006 ல் அறிமுகம் செய்யப்பட்ட இத் திட்டத்தின் நோக்கங்களாவன:

* சகல மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்குவது
* பாடசாலையைச் சூழவுள்ள சமூகத்தின் கல்வி அபிலாஷைகளைக் கருத்திற் கொண்டு நிறைவு செய்வது
* பாடசாலைகளின் உள்ளகச் செயற்பாடுகளில் நெகிழ்ச்சியை ஏற்படுத்துவது
* பாடசாலைகளுக்குக் கிடைக்கக் கூடிய வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவது
* பாடசாலைகளின் முகாமைத்துவ அமைப்புக்களில் திட்டவட்டமான மாற்றங்களை ஏற்படுத்திப் பாடசாலைக் கலாசாரத்தில் ஒரு பிரதான மாற்றத்தை ஏற்படுத்துவது பிரதானமாக சூழவுள்ள சமூகம் பாடசாலையில் ஒரு புதிய ஈடுபாட்டையும் அக்கறையையும் கொள்ளச் செய்வது
* பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்பணியை பாடசாலை களிடம் ஒப்படைப்பது (devolve)
* பாடசாலைப் பணியில் பெற்றோர்கள், சமுதாயத்தின் பங்களிப்பை அதிகரிப்பது
* பாடசாலைகளின் கவனத்தை மாணவர்களின் கற்றலை நோக்கித் திருப்புவது

> பாடசாலை மட்ட முகாமைத்துவம் என்பது பெற்றோர்களுக்கும் சமுதாயத்திற்கும் தீர்மானங்களை மேற் கொள்ளும் அதிகாரத்தைப் பன்முகப்படுத்தி பாடசாலைகளின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துவது உள்ளூர்க் கல்வித் தேவைகளைக் கருத்திற் கொண்டு செயற்படுவது மாணவர்களின் கல்வித் தேர்ச்சியை மேம்படுத்தும் குறிக்கோளுடன் இயங்குவது
>
> - O ECD - 2004

பாடசாலை மட்ட முகாமைத்துவ முறையின் பண்புகளாவன :

* பாடசாலைகளில் அடிப்படையான மாற்றத்தைக் காண்பதற்கான ஒரு உபாயமாக பாடசாலை மட்ட முகாமைத்துவம் முன் வைக்கப்படுகின்றது.
* பாடசாலை மட்டத்திற்கு வழங்கப்படும் அதிகாரமும் சுயாதீனமும் பாடசாலையிலிருந்து நன்மை பெறும் பிரிவினரின் உரிமை உணர்வினை அதிகரித்து பாடசாலைகளை சிறப்பாக இயங்கச் செய்வதில் அவர்களுடைய ஈடுபாட்டை அதிகரிக்கின்றது.
* பாடசாலை மட்ட முகாமைத்துவச் சிந்தனையானது பயனாளிகள் சனநாயகப்பாங்கான பங்கேற்புமுறைகளில் பணியாற்றி கற்போருக்கான தராதரமான கல்வியை வழங்கிட உறுதி செய்கின்றது.
* பாடசாலை அதிபர்கள் முழுப்பொறுப்பையும் ஏற்காது சிரேஷ்ட ஆசிரியர்களைக் கொண்ட முகாமைத்துவ குழுக்களின் துணையுடன் பணியாற்றுவார்.
* பாடசாலைகள் கூடிய வெளிப்படைத் தன்மையுடன் இயங்க வேண்டும். இதனால் ஊழல் களுக்கான வாய்ப்புகள் குறையும்.

இலங்கையில் 5, 222 பாடசாலைகளில் செயற்பட்டு வரும் இத் திட்டம் பற்றி ஆராய்ந்த உலக வங்கிக் கல்வியாளர் சில முக்கிய கருத்துக்களைத் தெரிவித்தனர்

* பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தினால் எதிர் பார்க்கப்படும் மாற்றங்களை நடை முறையில் குறுங்காலத்தில் பெற்றுக் கொள்ள அதிக முயற்சிகள் தேவை
* பல்வேறு பாடசாலைகளில் இத் திட்டம் பற்றிய விளக்கமும் நடைமுறையும் வேறுபடுகின்றன.
* பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கான அமைப்புக்கள் பாடசாலைகளில் ஏற்படுத்தப் பட்டாலும்,

அவை செயற்றிட்டத்தின் நோக்கங்களைத் திறம்பட நிறைவேற்றுவதாகக் கூற முடியாது.

* இதற்குக் காரணம் செயற்றிட்டத்தின் நோக்கங்களில் அக்கறையும் ஈடுபாடும் இல்லாமையாகும்.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் (2003) கருத்தின் படி இத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதில் இருந்த இடையூறுகளாவன

* இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துவதற்குப் பொதுவாகவே காட்டப்படும் எதிர்ப்பு
* அதிபர்கள் தமது பொறுப்புக்களை மற்றவர்களிடமும் ஒப்படைப்பதில் காட்டப்பட்ட தயக்கம்
* பாடசாலைகளின் இரண்டாங்கட்டத் தலைவர்கள் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளப் பின் வாங்கியமை
* அரசியல்வாதிகள் மற்றும் சக்தி வாய்ந்த குழுக்களின் தலையீடு
* பல பாடசாலைகளிலும் வகுப்பறைகளிலும் மாணவர் தொகை அதிகமாகக் காணப்பட்டமை
* சில பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுக்கும், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே ஏற்பட்ட போட்டிகள் தடையாக அமைந்தன.
* பாடசாலை அதிபரையும், ஆசிரியர்களையும் மட்டும் கொண்டியங்கிய முகாமைத்துவக் குழுக்கள் அதிக பிரச்சினையின்றி இயங்கியதாகத் தெரிகின்றது.

எவ்வாறாயினும் பல வளர்ச்சியடைந்த நாடுகளில் (OECD நாடுகளில்) அதிகளவு சுயாதீனம், பொறுப்பைப் பாடசாலைகளுக்கு ஒப்படைத்தல், உள்ளூர் தேவைகளைக் கருத்திற் கொண்டு செயற்படல், மாணவர் செயலாற்றல்களை மேம்படுத்தும் நோக்குடன் இவ் வழி முறைகளைக் கையாளுதல் – இவை யாவும் அண்மைக் காலப் போக்குகளாக உள்ளன. சர்வதேச மதிப்பீட்டுப் பரீட்சைகளில் சிறப்பாகச் சித்தி பெறும் நாடுகளில் பாடசாலைகள் கூடிய சுயாதீனத்துடன் இயங்குவதாகத் தெரிகின்றது. பாடசாலை சுயாதீனத்திற்கும் மாணவர் செயலாற்றலுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இன்று அதிகளவிலான வளர்முக நாடுகள் பாடசாலை மட்ட முகாமைத்துவ முறையை அறிமுகம் செய்து வருகின்றன.அதிபர்களும் ஆசிரியர்களும் வலுவூட்டப்பட்டு, ஊக்கத்துடன் பணியாற்ற வேண்டப்படுகின்றனர். இதனால் அவர்களுடைய பாடசாலை தொடர்பான உரிமை உணர்வு மேலோங்க முடிகின்றது. பாடசாலைப் பேரவைகள் அமைக்கப்பட்டு பெற்றோர்களின் பங்களிப்புக்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. உலக வங்கியின் கல்விச் செயற்றிட்டங்களில் (157) 11 சதவீதமானவை (17 செயற்றிட்டங்கள்) இவ் வகையைச் சார்ந்தவை. உலக வங்கியின் கல்வி நிதியில் 23 சதவீதம் (174 கோடி டொலர்) இச் செயற்றிட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்றது.

உலக வங்கியின் பாடசாலை மட்ட முகாமைத்துவ செயற்றிட்டங்கள் பெரும்பாலும் இலத்தீன், அமெரிக்க மற்றும் தென்னாசிய நாடுகளிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆர்ஜென்ரீனா, வங்காளதேசம், குவாதமாலா, ஹொன்டிராஸ், இந்தியா, மெக்சிக்கோ, இலங்கை ஆகிய நாடுகள் இவற்றில் பிரதானமானவை. இவை தவிர லெபனான், பிலிப்பைன்ஸ், சேர்பியா ஆகிய நாடுகளிலும் பாடசாலைமட்ட முகாமைத்துவ ஏற்பாடுகளை உலக வங்கி ஊக்குவித்து வருகின்றது.

உலக வங்கியின் ஆய்வுகளின் படி நாடுகள் வெவ்வேறு காரணங்களுக்காக வெவ்வேறு பாணியிலான பாடசாலைமட்ட முகாமைத்துவ முறைகளை அறிமுகம் செய்து வருகின்றன. உலக நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் சித்தாந்தங்களுக்கேற்ப பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் நோக்கங்களும் வேறுபடுகின்றன. இடதுசாரித் தன்மையுடைய நாடுகள் பாடசாலை முகாமைத்துவத்தில் சமூகப் பங்களிப்பை பிரதான நோக்கமாகக் கொள்கின்றன. வலதுசாரி அரசியல் பாங்குடைய நாடுகள் சனநாயகம், பன்முகப்படுத்தப் பட்ட நிர்வாகம் முதலிய அம்சங்களுக்கு அதிக இடம் அளிக்கின்றன. இடதுசாரி நாடுகளில் மத்திய அதிகார பீடத்துக்கு உட்பட்டதாக அதன் கட்டுப்பாட்டின் கீழ் அதிகார ஒப்படைப்பை வலியுறுத்துகின்றன. வலதுசாரி நாடுகளில் இவ்வம்சம் சற்று நெகிழ்வுடன் பேணப்படுகின்றது.

இலக்கிய வடிவங்களும் நிரப்பப்படாத இடைவெளிகளும்

பேராசிரியர் சபா ஜெயராசா

இலக்கியம் எது? இலக்கியம் அல்லாதது எது? என்பதற்குத் திட்டவட்டமான பிரிகோடு இட முடியாத நிலையில் இலக்கியப்படைப்பு "இனங்காணலுக்கு" (RECOGNITION)உரியதேயன்றி வரையறைக் கட்டுமானத்திற்கு அப்பாற்பட்டது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. கவிதைகள் என்று சொல்லப்படுபவற்றுள் சில கலைப்பண்பை இழந்து நிற்றலையும் விஞ்ஞான எழுத்தாக்கம் என்று சொல்லப்படுபவை சில வேளைகளிலே கலைப் பண்பை உட் பொதிந்து நிற்றலையும் காண முடிகிறது. அழகியல் தொடர்பான பிரச்சினைகள் இவ்வாறான முரண்பாடான தளங்களிலிருந்து மேலெழுகின்றன.

சீனர்கள் மிகப் பெரிய நாடக மரபைக் கொண்டவர்கள் பெருந் தொகையான நாடகங்களை உலகப் பரப்புக் கு வழங்கியவர்கள். அவர்களுடைய கண்ணோட்டத்தில் ஒரு சில நாடகங்களைத் தவிர ஏனையவை கலையாக்கம் குன்றியவை என்றே கருதுகின்றார்கள். ஆனால் தமிழ் மரபில் அனைத்துத் தொல் நாடகங்களும் கலைச் செறிவு கொண்டவை என்ற பெரு நோக்கும் "பழமையானவை, சிறந்தவை" என்ற தரிசனம் நீடித்த வண்ணமுள்ளது. கலை மதிப்பீட்டிலே பண்பாட்டுக் காரணிகள் உட் பொதிந்திருத்தலைத் தமிழ் மரபு வெளிப்படுத்துகின்றது.

கலையாக்கம் என்பதை வரையறை செய்வதிலே கிரேக்கர்களுடைய சிந்தனைகள் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. இலக்கியம் பொய்மையின் வடிவமாக இருப்பதினால் அதனை மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடாதென வலியுறுத்திய பிளேட்டோ தாம் வகுத்த "ஏழு தாராண்மைக் கலைகள்" என்ற பாகுபாட்டிலே வரலாற்றுப் பாடத்தையும் உள்ளடக்கினார். அவரது கண்ணோட்டத்திலே வரலாறு என்பது கலைச் செறிவு கொண்டது என்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டது. மேலும் பிளேட்டோ எழுதிய பெரும் தத்துவ உரையாடல் அனைத்தும் இலக்கியம் என்ற பாகுபாட்டினுள்ளே கொண்டு வரப்படுதல் இலக்கிய ஆக்கம் அல்லது கலையாக்கம் என்பது பற்றிய கட்டுக்கோப்பான வரையறைகளைச் செய்வதிலே இடர்பாடுகளை ஏற்படுத்தியுள்ளன.

உலக எழுத்தாக்க வளர்ச்சிகள் இந்த இடர்ப்பாட்டை மேலும் மேலும் விரிவாக்கின. தன் வரலாற்று ஆக்கங்கள், கடிதங்கள், நாட்குறிப்புக்கள் முதலியவற்றையும் இலக்கிய வடிவத்தினுள்ளே கொண்டு வருதல் கலையின் சிக்கலாகும் இயல்பினை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இவ்வாறான நிலையிலே மேலும் பல உட்புகல் நிலை தோற்றம் பெற்றது. வாதாடலை(ORATORY) அல்லது கருத்தேற்றம் செய்வதற்கு மொழியை வாகாகப் பயன்படுத்தும் செயலை ஒரு கலைச் செயலாகவும், கலைப்படைப்பாகவும் உட்புகுத்தியமை மேலும் உட் கிளறல்களைத் தோற்றுவித்துள்ளது. ரோமர்கள் கவிதை என்ற கலைப் படைப்புக்குக் கொடுத்த அதே முக்கியத்துவத்தை வாதாடல் அமைப்புக்கும் வழங்கினார்கள். தமிழ் மரபிலே நாவலர் காலத்திலிருந்து பிரசங்கம் ஒரு கலை என்ற அங்கீகாரத்தைப் பெற்றது. தமிழ் மரபிலே ஏற்றம் பெற்ற பிறிதொரு நிகழ்ச்சி உரையாசிரியர்களின் உரைத்தொகுதிகளையும் இலக்கியம் என்ற வடிவத்தில் உள்ளடக்க முயன்றமையாகும்.

சமூக வளர்ச்சியும் கல்வி வளர்ச்சியும் தொடர்பாடலில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களும் மேலும் பல ஆக்கங்களை கலை மற்றும் இலக்கியம் என்ற சட்டகத்தில் உட்புகுத்தத் தொடங்கியுள்ளன. இதழ்களில் வெளிவரும் ஆசிரியரியம்பல் (EDITORIAL) மற்றும் **இதழ்க்கீலம்** (Column) முதலியவற்றையும் இலக்கியம் என்பதனுள் அடக்கும் செயற்பாடுகளும் முன்னிறுத்தப்படுகின்றன.

இலக்கியம் என்பதை வரையறை செய்வதற்குரிய இரண்டு கோட்பாடுகள் நெடுங்காலமாக வழக்கில் உள்ளன. அவையாவன:

(1) வெளித்துலங்கற் கோட்பாடு
(EXPRESSIVE)

(2) கட்டுமானக் கோட்பாடு
(CONSTRUCTIVE THEORY)

என்ற வெளித்துலங்கல் அல்லது எடுத்துரைத்தல் என் சிறப்பை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் என்ற அடையாளத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தும், கட்டுமான நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு அடையாளப்படுத்தல் வேண்டும் என்ற முன் மொழிவும் முரண்பட்ட கோணங்களிலே வளர்ச்சி கொள்ளலாயின. கலையாக்கத்தின் தொழில்நுட்பப் பண்புகள் மீது கட்டுமான நோக்கு அதீத கவனம் செலுத்தலாயிற்று.

இந் நிலையில் இலக்கியம் என்பதை வரையறுப்பதற்கு "**இலக்கிய மொழி**" என்ற மாற்று அணுகுமுறை முன்னெடுக்கப்பட்டது. இலக்கியம் தனித்துவமான அனுபவத்தைத் தர வேண்டுமாயின் மொழி ஊடகமே குறிப்பிட்ட அனுபவத்தைக் கையளிப்பதால் மொழியாட்சியை அடிப்படையாகக் கொண்டு இலக்கியத்தின் அழகியற் பெறுமானத்தைத் தீர்மானிக்க முடியும் என்ற கருத்து மேலோங்கியது. இலக்கிய மொழியைப் பொது மொழியிலிருந்து வேறுபடுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இலக்கிய மொழி நுட்பமாகவும், அழகுச் சிக்கல் விளைவுகளை உருவாக்க வல்லதாகவும் பல்வேறு பொருள் கோடல்களுக்கு இட்டுச் செல்வதாயும் இருத்தல் வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டது. இதனை மொழி " மயங்கியைபு" (AMBIGUITY) என்ற எண்ணக் கருவினால் மேலைப் புலத்திறனாய்வாளர் குறிப்பிட்டனர். வில்லியம் எம்சன் என்பார் இந்த எண்ணக்கரு பற்றிய விரிவான விளக்கங்களை 1930 ஆம் ஆண்டிலே முன் வைத்தார்.

அரிஸ்ரோட்டில் நாடக அழகியலுக்குத் தந்த வாய்ப்பாட்டு வடிவத்தை ஏனைய இலக்கிய வடிவங் களுக்கும் பொதுமையாக்கி விட முடியும் என்ற கருத்தை நவ அரிஸ்ரோட்டலியல் வாதிகள் முன் மொழிகின்றனர். அவை:

(அ) அளிக்கை
(ஆ) வளர்ச்சி
(இ) சிக்கலாகும் தன்மை
(ஈ) நெருக்கீடு
(உ) நெருக்கீட்டுக்கான தீர்வு

ஆனால் நாடக அழகியலுக்குரிய சிறப்பார்ந்த பரிமாணமாகிய நேரம், இடம், வினைப்பாடு ஆகியவற்றின் கூர்ந்த இணைப்பை அந்த வாய்ப்பாடு கவனத்துக்கு எடுக்காது விட்டமை குறிப்பிடத்தக்கது.

இலக்கிய ஆக்கமும் அதன் அழகியற் பரிமாணங்களும் எடுத்தாளப்படும் குறியீடுகளாலும் "**தொன்மங்கள் சார்ந்த விளைவுகளை**" (MYTHICAL EFFECTS) உள்ளடக்குதலாலும் மேலெழுகின்றன என்ற கருத்தின் வலுயுறுத்தல் கார்ல்யுங்கினுடைய தொன்மம் பற்றிய ஆய்வுகளை அடியொற்றி எழுச்சி கொள்ளலாயின. மனிதரது கூட்டு நனவிலி மனத்தின் திரட்டுக்களாக தொன்மங்கள் அமைவதை அவர் உளப் பகுப்புக் கண்ணோட்டத்தில் விளக்கினார். தமிழ் இலக்கியப் பரப்பிலே தொன்மங்களின் எழுத்தாள்கை நீண்ட காலமாக இடம் பெற்று வருதல் குறிப்பிடத்தக்கது.

சமூக இயல்பை நேரடியாகத் தெறித்துக் காட்டும் ஆவணப்படுத்தல் இலக்கியக் கவிப்பினுள் அடங்க மாட்டாது. அக உணர்வுகளும், மனவெழுச்சிகளும், உளவியல் மிதத்தலும், அருவ நிலையான நெருடல்களும் மன விசும்பிலே அகநிலை நகர்வுகளை ஏற்படுத்தித் தருதலும் "**இலக்கியமாக்கலை**" (LITERARYNESS) முன்னெடுத்துச் செல்லும். ஆனால் அதீத இலக்கிய மயமாக்கற் செயற்பாடுகள் இலக்கிய வரலாற்றுக் காலங்களிலே முன்னெடுக்கப்பட் மையைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. அவன்காட் (AVANT GARDE) என்னும் **விசும்பு முன்னோடி** எழுத்தாக்கங்கள் அதீத இலக்கியமயமாக்கற் செயற்பாடுகளை முன்னெடுத்தன.

ஆங்கில இலக்கிய மரபிலே பத்தொன்பதாம் நூற்றாண்டில் கலைச்சரத்துக்குள் சரண்புகுந்தவர்களாக ஒஸ்கார் வைல்டு மற்றும் வால்டர் பீட்டர் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களின் உரை நடை **சிங்காரச் சோடிப்பு** (FLOWERY PROSE) எனப்பட்டது. கலை கலைக்குள்ளே மட்டும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும் என்ற முன் மொழிவு அதன் வழியாக முன்னெடுக்கப் படவேண்டிய உயரிய கருத்தியல் தரிசனத்தை முடமாக்கி விடுகின்றது. கலையாக்க முயற்சியில் கருத்தைக் கை விடலும் இலக்கியமாக்கப்படலைப் பாதிப்படையச் செய்து விடும். உயர்ந்த கருத்தியல் சாரா இலக்கியங்கள் வெற்றொலிப்புக்களாகி விடுகின்றன.

இலக்கியம் என்பது கலை ஆனால் அதனை ஆக்குதல் என்பது ஒரு **நுண்வினை**(CRAFT) ஒவ்வோர் இலக்கிய வடிவமும் அவற்றுக்குரிய நுண் வினையை உண்டாக்கியுள்ளது. ஆரம்ப காலங்களிலே அந்த நுண் வினைச்செயல் செய்யுளுக்கும் நாடக ஆக்கத்திற்கும் உரியவையாகக் கொள்ளப்பட்டன. நாடக வளர்ச்சியில் கதையை வளர்த்துச் செல்வதற்கு முரண்விசை அல்லது முரண்பாத்திரத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. இச் சந்தர்ப்பத்திலே முன்னரே தீர்மானிக்கப்பட்ட அமைப்பு (PREDETERMIND) பற்றிய பிரச்சினை மேலெழுந்தது. எடுத்துக் காட்டாக உற்றெழும் கவிதை அனுபவத்தை ஏற்கனவே வரையப்பட்ட யாப்புக் கட்டமைப்புக்குள் முடக்கி விடுவதா அல்லது மீறிச் செல்வதா என்ற பிரச்சினை எழுந்தது.அவ்வாறான மீறலிலே ஐரோப்பிய இலக்கிய வரலாற்றிலே "ரொமான்டிசம்" என்ற **கற்பனை உற்றெழலியலைத்** தோற்றுவித்தது. இவ்வாதம் வடிவம் இல்லாமையின் (FORMLESSNESS) மகிழ்நிலை ஆரவாரத்தைத் தூண்டியது. வில்லியம் பிளேக் மற்றும் வால்ட் விட்மன் ஆகியோர் தமக்கே உரிய வடிவங்களை ஆக்கிக் கொண்டனர். தமிழ் மரபில் **எழுத்து** இது உணர்வு பூர்வமாக இது மேலெழுந்தது.

சமூக வளர்ச்சியின் போது சமூக அடுக்கமைவின் அடிமட்டங்களுக்குரிய இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்களாகின. அவற்றிலிருந்து வளர்ச்சி கொண்டு மாறுபட்டு நிற்பவை எழுகுழாத்து (ELITE) இலக்கியங்களாகும். நிலமானிய சமூகத்தில் நாட்டார் இலக்கியங்களே வெகுசன(POPULAR) இலக்கி யங்களாக இருந்தன. அவை சமூகத்தின் அடி நிலை மக்களிடத்திலிருந்து முகிழ்ந்தெழுந்தன. ஆனால் தற்போது வெகுசன இலக்கியத்தை எழுகுழாத்தினரே உருவாக்கிப் பரவ விடுகின்றனர். வெகுசனக் கலை இலக் கியங்களை ஆழ்ந்து ஊடுருவி நோக்கும் போது சமூகத் தளமும் தனி மனித இருப்புமே மீள் பரிசீலனைகளை நோக்கி மேலெழுகின்றன.

இலக்கிய ஆக்கம் ஓர் உற்பத்திப் பொருளாக மட்டுமன்றி இலாபமீட்டும் **பண்டமாகவும்** (COMMODITY) பின்னைய முதலாளிய வளர்ச்சியிலே எழுச்சி கொண்டு வருகின்றது. கோளமயமாக்கலும் சம காலத்தில் நிகழ்ந்து வரும் எண்ம (DIGITA) ப் புரட்சியும் இலக்கிய உற்பத்தியில் மேலும் செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றன. கோளமயமாக்கலிலும் எண்மப் புரட்சியிலும் பெரும் முதலாளியம் பின்ணணியிலிருப்பதைத் திரிவுபடுத்திக்காட்டும் இலக்கிய ஆக்கங்களும், திறனாய்வு முயற்சிகளும் மேலோங்கி வருதலை மனங் கொள்ள வேண்டியுள்ளது. ஒற்றைப் பரிமாண அழகியலையும் பொழுது போக்குச் சுவையையும் வலியுறுத்தும் திறனாய்வாளர் அவற்றின் உள்ளீடான நோக்கற் பின்ணணியைக் குறிப்பிடத் தவறி விடுகின்றனர்– அந்நிலையில் இலக்கியக் கருத்தியலைப் பிரித்தறியும் தேவை விரைந்து மேலெழுகின்றது.

இலங்கையில் சிறுவர் வறுமை
Children Poverty in Sri lanka

பேராசிரியர் க.தேவராசா
பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
யாழ்பல்கலைக்கழகம்.

1.0 அறிமுகம்

குறைவிருத்தி நாடுகளில் வறுமை என்பது பெரும் பொருளாதாரப் பிரச்சினையாக உருப்பெற்றிருப்பதனை எல்லோரும் அறிவர். இதன் அடிப்படையில் மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான இலங்கையிலும் வறுமை என்பதுபொருளாதாரத்தை உலுக்கி விடும் காரணியாக அமைந்திருக்கிறது. அதில் பெரிதும் தாக்கமுள்ள காரணியாக வலுப் பெற்றிருப்பதே சிறுவர் வறுமை என்பதாகும். சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெவ் புள்ளி விபரத் திணைக்களம் மேற் கொண்ட ஆய்வுகளில் சிறுவர் வறுமை என்பது இலங்கையைப் பாதிக்கின்ற காரணியாக இனங் காணப்பட்டுள்ளது. சிறுவர் வறுமை என்பது அவர்களின் ஆற்றல்கள் நலன்கள், எதிர்கால விருத்திகள் என்பவற்றின் மீது தாக்கம் செலுத்தும் காரணியாக அமைந் திருக்கிறது. இது குடும்பத்தினரது வருமானத்துடன் தொடர்புள்ள காரணிகளுடனும் வருமானத்துடன் தொடர்பில்லாத காரணிகளுடனும் தொடர்புபட்டுள்ளது என்பதை வெளிப்படையாக பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சிறுவர் கிடைக்காத அடிப்படைத் தேவைகளான உணவு, சுத்தமான நீர், கல்வி, சுகாதாரம் போன்ற காரணிகள் சிறுவர் வறுமைக்கான அடிப்படைக் காரணிகளாகும். சிறுவர் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள சமூக ஆதரவு, சமூக அந்தஸ்து, குழு அங்கத்துவம் பொருளாதார அந்தஸ்து கலாசார அங்கீகாரம் என்பன சிறுவர் வறுமையின் இன்னொரு நிலையாகும். இதற்கு மேலதிகமாக சிறுவர் துஷ்பிரயோகம், வயது, பால் அடிப்படையிலான தடைகள் பயமுறுத்தல்கள் என்பனவும் சிறுவர் வறுமையின் கூறுகளாகக் கொள்ளப்படுகின்றன. மொத்தத்தில் சிறுவர்களை சுதந்திரமான சமூகமென இனங்கண்டு அவர்களை கட்டுப்பாடற்ற நிலையில் வாழ அனுமதிக்காத எல்லா நிலைகளும் சிறுவர் வறுமையென இனங்காணப்படும்.

2.0 சிறுவர் வறுமைக்கான காரணிகள்

சிறுவர் வறுமை ஒரு நாட்டில் இருக்கும் வரை அந்நாடு வளர்ச்சி பெற்ற நாடாக மாற்றம் பெறாது என்பதை உலக நாடுகள் அனுபவத்தில் கண்டுள்ளன. இதனால் வறுமை நிலையைப் போக்குவதற்கான நடவடிக்ககைகளை கையாள்வதற்கு முன்னர் இந்த வறுமை நிலை எக்காரணங்களால் ஏற்பட்டது என்பதை இனங் காணுதல் அவசியமாகின்றது. பின்வருவன சிறுவர் வறுமைக்கு காரணங்களாகும்.

2.1 உணவுப்பற்றாக்குறை

சிறுவர்கள் வாழுகின்ற குடும்ப நிலையானது அவர்களுக்கு போதுமான உணவு கிடைப்பதனைத் தடை செய்கின்றது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் குழந்தைகளின் போஷாக்கிற்குத் தேவையான உணவை வழங்க முடிவதில்லை.பிள்ளைகளின் ஆரோக்கிய நிலையின் தாக்கம் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பிள்ளையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆரோக்கியக் குறைவானது சிறுவர்களின் ஆற்றல்களைப் பயன்படுத்தும் வல்லமையைக் குறைத்து அவர்களை உற்சாகமற்றவர்களாக மாற்றிவிடும். ஆரோக்கியக் குறைவால் பாதிக்கப்பட்ட பிள்ளையால் அதன் உச்ச அளவு ஆற்றலை விருத்தி செய்ய முடியாமல் போவதுடன் தொடர்ச்சியாக அடுத்த தலைமுறையிலும் நீடித்துச் செல்லும் பாதிப்பைக் கொண்டு வரும். இலங்கையில் போஷாக்குக் குறைவான 5 வயதுக்கும் குறைந்த பிள்ளைகளில் 1/3 பங்கினர் நிறை குறைந்திருப்பதற்கு காரணமாயிற்று என உத்தியோக பூர்வ ஆய்வுகள் காட்டுகின்றன. தாயின் போஷாக்குக் குறைவானது இலங்கையில் பிறக்கும் சிசுக்களில் 19 வீதத்தினர் இறந்து போவதற்கு காரணமாக உள்ளதெனவும் ஆய்வுகள் வெளிக்காட்டி நிற்கின்றன. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டே அரசாங்கம்

உலகஉணவுத் திட்ட அமைப்புடன் தானும் இணைந்து மதிய உணவுத் திட்டத்தைப் பயன்படுத்தி பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அத்துடன் வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுத் திட்டதையும் செயற்படுத்திவருகின்றது.

2.2 சுகாதாரம்

சிறுர்களுக்கு நல்ல வைத்திய வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதும் சிறுவர் வறுமையைப் போக்குவதற்கான வழிமுறையாகும். மருத்துவ வசதியின்மை தொற்று நோய்கள் பரவுவதற்கும் குழந்தைகளின் மரணத்திற்கும் காரணமாகி விடும். இதன் காரணமாகவே இலங்கை அரசாங்கம் இலவச சுகாதார வசதியைப் பின்பற்றி வருகின்றது. ஆய்வுகளின் படி இலங்கை அரசின் மருத்துவ சேவையின் சிறப்பினால் சிசு மரண வீதமும் தாய் இறப்பு வீதமும் ஏனைய குறைவிருத்தி நாடுகளை விட இழிவு நிலையில் இருக்கின்றது. அத்துடன் வலுக் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைவதற்கு சிறப்பான சுகாதார சேவையே காரணமாகும். கிராமப்புறங்களில் சுகாதார சேவைகளின் பற்றாக்குறை சிறுவர் வறுமையை அதிகரிப்பதற்கும் அவர்கள் பாதிப்புறுவதற்கும் காரணமாக உள்ளன. இதனால் கிராமப் புறங்களிலேயே ஊனமுற்ற குழந்தைகளும் கேட்டல், பார்த்தல் குறைவான பிள்ளைகளும் உளநலம் குறைந்த பிள்ளைகளும் காணப்படுகின்றனர். குழந்தைகளில் வறுமை காரணமாக அமையக் கூடிய இந்நிலையைப் போக்கவே நடமாடும் மருத்துவ சேவைகள் கிடைப்பதன் ஊடாக குழந்தைகளின் வறுமை இழிவு நிலைக்கு கொண்டு வரப்பட முடியும்.

2.3 கல்வி

இலங்கையில் இலவசக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக அதிகமான மக்கள் கல்வித் தேர்ச்சியைக் கொண்ட நாடாக இலங்கை திகழ்கின்றது. இருந்த போதும் வறுமை காரணமாக பாடசாலைக்கு செல்லாத அல்லது இடை விலகலினைக் கொண்ட பெரும்பான்மையானவர்கள் இலங்கையில் இருப்பதனை ஆய்வுகள் காட்டுகின்றன. யுனிசெவ் நிறுவனத்தின் கருத்துப்படி 80000 பேரிலிருந்து ஏழு இலட்சம் பேர் வரை பாடசாலைக்கு செல்லாத மாணவர்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.அதே நேரம் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலையில் சேர்வதாக புள்ளி விபரங்கள் காட்டிய போதும் உலக வங்கியின் கருத்துப் படி 9ம் ஆண்டுக்கிடையில் 20% க்கும் கிட்டிய கிராமப்புற மாணவர்கள் இடைவிலகியிருப்பதாக கூறப்பட்டுள்ளது.இந்த இடைவிலகல் உயர்வான வீதமாக இருப்பதற்கு காரணம் சிறுவர் வறுமையேயாகும். குறிப்பாக அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், பஸ்கட்டணம், உணவுப்பற்றாக்குறை போன்றன பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களாக உள்ளன.

இலங்கையில் இலவசக்கல்வி முறை நடைமுறையிலிருந்ததனால் 90% மான பிள்ளைகள் ஆரம்பக்கல்வியை முடிக்கின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் உயர் கல்வியைப் பூர்த்தி செய்பவர்கள் 20% மாகவே உள்ளனர். அரசாங்கம் கல்வி தொடர்பான அபிவிருத்திக்கென இலவசக்கல்வி மட்டுமன்றி இலவச சீருடை, இலவச பாடப்புத்தகம் என்பனவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருதல் மாணவர் வறுமையைத் தீர்க்கும் நடவடிக்கைகளாக உள்ளன. எனவே தான் சிறுவர் வறுமையானது இலங்கையில் கல்வித்துறையில் பெருமளவான பாதிப்பை ஏற்படுத்தவில்லையெனக் குறிப்பிடலாம்.

2.4 குடிநீர் விநியோகம்

சிறுவர் வறுமையானது சுத்தமான குடிநீரைப் பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சுத்தமான குடி நீர் பெறப்பட முடியாமை பாதுகாப்பற்ற குடிநீரைப் பருகும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதுடன் பல தொற்று நோய்கள் பரவுவதற்கும் ஏதுவாக உள்ளது. குறிப்பாக நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி என்பன சுத்தமான குடிநீரைப் பெற முடியாத காரணத்தினால் சிறுவரைப் பாதிப்பனவாக உள்ளன. சிறுவர் வறுமையானது பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்குத் தடையாக அமைந்திருக்கின்றது என்பதனால் இலங்கை அரசானது பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் குழாய் மூலமான குடிநீர்

விநியோகத்திற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசின் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது சர்வதேச அமைப்புக்களின் நிதியுதவியுடன் சுத்தமான குடிநீர் பெற முடியாத பிரதேசங்களுக்குத் தூர இடங்களிலிருந்து சுத்தமான நீரைக் குழாய் மூலம் விநியோகம் செய்கின்ற பெரும் பணியை மேற் கொண்டு வருகின்றது. இது சிறுவர் வறுமையின் ஓர் அங்கமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையாக மாறி சிறுவர்கள் சுத்தமான நீரைப் பருக வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

2.5 சிறுவர் உழைப்பு

சிறுவர் வறுமையானது சிறுவர்களை ஊழியப்படையில் சேர்வதற்கு தூண்டும் காரணியாக உள்ளது.பொருளாதார ரீதியில் அதிகம் பயனளிக்காத அதே நேரம் உறுதியாக வருமானத்தைப் பெற்றுக் கொடுக்காத வேலைகளுக்கு சிறுவர்கள் அமர்த்தப்படுவது ஊழியப்படையில் சேர்ந்து கொண்டாலும் கூட சிறுவர்களைத் தொடர்ந்தும் வறுமை நிலையிலேயே வைத்துக் கொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. சிறுவர்கள் எப்பொழுதும் குடும்பத்தின் வறுமை நிலை நீக்க ஆர்வமாக இருப்பதனால் அவர்கள் சேர்ந்து கொள்ளும் வேலை தொழிலாளர் சுரண்டலுக்கு வழி வகுப்பது எனத் தெரிந்து கொண்டாலும் , அவ் வேலையை ஆற்றுவதற்கு சிறுவர்கள் முன் வருவதனைக் காணமுடியும்.

சிறுவர் உழைப்பிலே கல்வி மறுக்கப்படுவது மட்டுமன்றி அவர்களுக்கு வேலையில் ஓய்வு கிடைப்பதில்லை. மோசமான வேலைச் சூழலில் பணியாற்ற வேண்டி இருப்பதுடன் தொழில் கொள்வோரின் கொடூரச் செயல்களுக்கும் இடமளிக்க வேண்டியவர்களாகின்றனர். குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்கள் தமது வேலைத் தளத்திலே உடல், உள விருத்திக்கான எவ்வித ஊக்குவிப்புக்களையும் பெற்றுக் கொள்வதில்லை. இலங்கையில் சிறுவர்களை முழுநேர ஊழியர்களாக வேலையில் அமர்த்திக் கொள்வதனால் உடல் ஆரோக்கியத்தை சிறுவயதிலேயே இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இலங்கையில் இடம் பெற்ற ஆய்வுகளின்படி சிறுவர் உழைப்பாளிகளில் 60% வீதத்திற்கு மேற்பட்டோர் விவசாயத் துறையுடனேயே சம்பந்தப்பட்டுள்ளனர். வயல்கள், தோட்டங்கள் என்பவற்றில் பணியாற்ற கிராமப்புறங்கள், நகர்ப்புறங்களின் சேரிகள் தோட்டத்துறை என்பவற்றில் இருந்து வறிய சிறுவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இவ்வாறு சிறுவர் உழைப்பாளிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்ட வறிய சிறுவர்கள் தமது வேலையூடாக எவ்வித முன்னேற்றத்தையும் பெற்றுக் கொள்வதில்லை. இதன் காரணமாகவே இலங்கைப் பாராளுமன்றம் 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட எவரையும் உழைப்பாளிகளாக வைத்துக் கொள்ள வேண்டாமென சட்டத்தை இயற்றி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது. சிறுவர் உரிமை மாநாடுகளை நடாத்தி சிறுவர்களை வேலைக்கமர்த்த வேண்டாமென விழிப்புணர்வை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் சிறுவர் வறுமை யின் அங்கமெனக் கொள்ளப்படும் சிறுவர் உழைப்பைத் தடை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

2.6 சிறுவர் துஷ்பிரயோகம்

வறுமையின் பிரதான பாதிப்புக்களில் ஒன்றாக சிறுவர் துஷ்பிரயோகம் அமைந்துள்ளது. பாலியல் சுரண்டலிலிருந்து பிள்ளையின் உயிரைப் பறிக்கும் பிள்ளைகளின் கடத்தல் வரை இத் துஷ்பிரயோகம் அமைந்திருக்கும். இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் கணிசமானதொரு பிரச்சினையென ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனைத் தடுப்பதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும் போதும் பல்வேறு வடிவங்களில்நடைபெறும் சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இவை சம்பந்தமாக சில முறைப்பாடுகள் கிடைத்த போதும் பல முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டவர்கள் மூலம் செய்யப்படாத காரணத்தால் சிறுவர் துஷ்பிரயோகத்தைப் பல வறிய சிறுவர்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது. இலங்கையின் உல்லாசப் பயணத்துறையுடன் தொடர்புடையதாக சிறுவர் துஷ்பிரயோகம் மாற்றப் பட்டிருப்பதனால் கரையோரப் பிரதேசங்களில் வெட்கம், அவமானம் என்பவற்றுக்கு மேலதிகமாக சிறுவர் துஷ்பிரயோகத்தை ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது சிறுவர் வறுமையுடன்

நெருங்கிய தொடர்புடைய காரணியாக சிறுவர் துஷ்பிரயோகம் அமைய வாய்ப்பாக மாறியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த அல்லது தடுக்க இலங்கையின் காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க முன் வந்த போதும் இது சம்பந்தமான முறைப்பாடுகளைச் செய்ய பொதுமக்கள் பின் நிற்பதானால் சிறுவர் துஷ்பிரயோகத்தை முழுமையாகத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

3.0 உள்நாட்டுப் போரும் சிறுவர் வறுமையும்

உள்நாட்டில் கடந்த 30 வருடங்கள் நடைபெற்று வந்த போர் சிறுவர் வறுமையை ஏற்படுத்திய முக்கிய காரணியாகும். போராளிகள் குடும்பம், சமூகம் என்ற நிலையைக் கடந்து இன உணர்வைத் தூண்டும் நடவடிக்கையாக இருந்தமையால் பெரும்பாலும் வறிய சிறுவர்கள் போரினால் ஈர்க்கப்பட்டு போராளிகளாக மாறும் சூழல் ஏற்பட்டது. வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணப்பட்ட போர்ச் சூழலானது சிறுவர் போரளிகள் என்ற ஒரு பகுதியினரைத் தோற்றுவித்து விட்டது. போர்ப் பிரதேசங்களில் வாழ்ந்த பெரும் எண்ணிக்கையான வறிய சிறுவர்களே போராட்டத்தில் இணைந்து கொண்டவர்களாகவும் இருந்தனர். குடும்பத்தில் நிலவிய வறுமை தள்ளு விசையாக மாறி சிறுவர் போராளிகளாக மாறும் நிலையைத் தோற்றுவித்தது. சிறுவர்கள் தமது வறுமைக்குக் காரணம் இனரீதியான நடவடிக்கையே என உணரத் தொடங்கியமை எவரது உந்துதலும் இல்லாமலேயே அவர்களைப் போராட்டத்தில் இணைய வைத்தது.

நாட்டில் நீண்ட காலம் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தம் போர்ப்பிரதேச மக்களின் வாழ்வாதாரங்களை அழித்து அவர்களை ஏழைகளாக்கி விட்டது. இதன் ஊடாக ஏற்பட்ட சிறுவர் வறுமை இன உணர்வைத் தூண்டி வறுமையைப் போக்க சுதந்திரமான நாடொன்று அவசியமென்ற உணர்வைத் தோற்றுவித்த சிறுவர் போராளிகளின் இணைவுக்கு காரணமாகி விட்டது. சிறிவர் வறுமை போராளிகளாக மாறுவதற்கு காரணமாகி விட்ட அதே நேரம் போராட்டம் முடிவுக்கக் கொண்டு வரப்பட்ட பின்னரும் கூட சிறுவர் வறுமையைக் குறைக்கவில்லை. போரினால் இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கை நிலையை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் தொடர்ந்தும் சிறுவர் வறுமை நீக்கப்படாத நிலையிலேயே உள்ளது. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வடக்குக் கிழக்கப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லையெனில் சிறுவர் வறுமை மேலும் வளர்ந்து செல்வதாகவே அமைய முடியும்.

4.0 சிறுவர் வறுமையும் நிறுவனம் சார் நடவடிக்கையும்

சிறுவர் வறுமையைச்சமாளிப்பதற்கு அவர்களைப் பராமரிக்கும் நிறுவனங்களின் உதவியை அரசாங்கம் நாடியுள்ளது. சமய அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சமூக சேவை அமைச்சுடன் இணைந்து சிறுவர் வறுமையை நீக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வறுமையுள்ள குடும்பங்களில் வாழ்கின்ற நிலையைப் போக்க முற்படும் அதேநேரம் போரினால் நிறுவனம் சார் நடவடிக்கைக்கு உட்படுதல் வேண்டும். நிறுவனரீதியாக சிறுவர் வறுமையை போக்க நடவடிக்கை எடுத்தால் மட்டுமே சிறுவர் வறுமை நிரந்தரமாக நீக்கப்பட முடியும்.

நிறுவன ரீதியான நடவடிக்கையே திட்டமிட்ட முறையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதியைத் திரட்டி அதிலிருந்தும் கட்டமைக்கப்பட்ட முறையில் சிறுவர் வறுமையை போக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வழி வகுக்கும். சைவச்சிறுவர் இல்லங்கள், இரட்சனிய சேனை, பௌத்த விகாரைகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற சிறுவர் வறுமையை போக்குவதற்கு வசதியாக வறிய சிறுவர்களைப் பராமரித்து வருகின்றன. இத்தகைய நிறுவன மையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் வறிய சிறுவர்களின் வாழ்வை முழுமையாகவே மாற்றியமைத்து பொருத்தமான சூழலில் வறுமையின் பாதிப்பின்றி கல்வியில் முன்னேறும் சூழலைச் சிறுவருக்குக் கொண்டுவரும்.

5.0 முடிவுரை

சிறுவர் வறுமையை நீக்குவதற்கு எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் நீண்ட காலத்திற்கான நாட்டின் வளர்ச்சிக்குரிய அடித்தளம் என்பதை எவரும் மறுக்க முடியாது. பிள்ளைகளின் உடல், உள ஆரோக்கியத்தின் மேம்பாடு, பிள்ளைகளின் அடிப்படைக்கல்வி, ஒழுக்க ரீதியான மேம்பாடு, அரசின் விசுவாசத்தன்மை, நாட்டுப்பற்று என்பன மேலோங்கி வருவதற்கு அடிப்படையாக அமையும் என்பதே வறுமையைப் போக்குவதற்கு வழி வகையாகும். சிறுவர் வறுமையைப் போக்க உதவக்கூடிய சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப கல்வியறிவும் ஒழுக்கமும் கொண்ட மக்களை உருவாக்கும் என்ற நம்பிக்கையும் சிறுவர் வறுமையைப் போக்க பாடுபடுவோமாக.

புறாவும் எறும்பும்

எறும்பு ஒன்று தண்ணீரில் விழுந்து தத்தளித்தது. அருகில் மரத்தின் மேல் இருந்த புறா ஒன்று இதைக் கவனித்தது. எறும்பிற்கு உதவி செய்ய நினைத்தது. ஒரு பெரிய இலையைத் தனது அலகால் பறித்து எறும்பின் அருகில் விழும்படி செய்தது. எறும்பு அந்த இலையின் மீது ஏறிக் கரை ஒதுங்கித் தப்பியது.

சிறிது நேரம் சென்ற பின் அவ்விடம் வேடன் ஒருவன் வந்தான். அவன் அப்புறாவைக் கண்டான். புறாவை அடிக்கத் தனது வில்லையும் அம்பையும் எடுத்துக் குறி பார்த்தான். அதனைக் கண்டதும் எறும்பு கலங்கிற்று. வேகமாகச் சென்று வேடனது காலில் கடித்தது. எறும்புக் கடியின் வலி பொறுக்காமல் வேடனது குறி தவறியது. சத்தம் கேட்ட புறாவும் தப்பிப் பறந்து சென்றது.

தன்வினை தனக்கே கேடானது

கண்ணன் ஒரு விவசாயி. அவன் ஆடுகள் பலவற்றை வளர்த்து வந்தான். ஒரு நரி அவனது ஆட்டு மந்தைக்குள் அடிக்கடி புகுந்து ஆடுகளைப் பிடித்துத் தின்று வந்தது. **அந்த நரியை எப்படியும் ஒரு நாளைக்குப் பிடித்தே தீருவேன். அதற்கு நல்ல பாடம் புகட்டுவேன்** என்று கூறிவந்தான் விவசாயி.

அவன் கூறியதுபோல ஒருநாள் அந்த நரியைப் பிடித்து விட்டான். ஆத்திரத்தில் அதனை நன்கு அடித்தான். பின்னர் அதன் வாலில் மண்ணெண்ணெயில் நனைத்த துணி ஒன்றைச் சுற்றித் தீ வைத்து அதனைத் துரத்தி விட்டான். தீப் பிடித்ததும் அந்த நரி விவசாயியின் வயலுக்குள் புகுந்தது. வயலின் நாலா பக்கங்களிலும் ஓடியது. வயலில் புரண்டு புரண்டு ஓடியது. ஐயோ! பாவம், வயலில் அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர்களில் தீப்பற்றிக் கொண்டது. வயல் முழுவதும் தீ பரவியது. பயிர்கள் முழுவதும் தீயில் எரிந்து சாம்பலாயின. நரி ஏதோ ஒரு வகையில் தன்னைக் காப்பாற்றிக் கொண்டது.

நரியைத் தண்டிக்க முற்பட்ட விவசாயி ஈற்றில் தனக்கே நட்டத்தைத் தெடிக் கொண்டான்.

சிறந்த வழிகாட்டலும் வெளிக் கொணரும் திறன்களுமே வெற்றி இலக்கின் படிக்கட்டுகள்

கலாநிதி .கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல் துறை,
பணிப்பாளர், தொழில் வழிகாட்டல்அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வாருங்கள் எமது இனிய உறவுகளே!

வாழ்க்கை என்பது வாழ்ந்து பார்ப்பதற்கே. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒரு படிப்பினையும் அதனுடனிணைந்த வரலாறும் இருக்கும். எமக்குக் கிடைத்த இவ்வரிய வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க வேண்டும். வெறுமனே வாழ்ந்து விட்டுப் போவதில் எதுவித உப்புச்சப்பும் இல்லை. தானும் வாழ்ந்து மற்றவரையும் வாழவைக்கும் வாழ்க்கை என்றுமே உயரியது. வாழ்ந்து மடிந்து பின் சாம்பலாகினும் வாழ்ந்த வாழ்க்கை வரலாறாக வேண்டும். இதற்கு நிறைய உழைப்புத் தேவை. மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் உழைப்பே வரலாறு. நூறு ஆண்டுகளைஎட்டி நிற்பதற்கு காரணம் இங்கே பலர் உழைத்ததன் பெறுமதி தெருகின்றது. இந்தப் பூவுலகில் நாம் அவதரித்த நாளிலிருந்தே எமது வாழ்க்கையை நிர்ணயஞ் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் நாம் முனைப்புடன் ஈடுபட முனைகின்றோம். அதனால் இந்த அவதாரத்தினுள் பல விடயங்கள் பலவாகப் பொதிந்திருக்கின்றன. தாயின் கருவறையிலிருந்து வெளி வந்த உடனேயே குழந்தை அழுகின்றது.எதனால் என்று பார்க்கின்றீர்களா? தாயின் கருவறையின் சுகம் வெளியில் இல்லை என்பதனாலேயே. ஆனால் இறுதியில் தான் மரணித்து பிறரை அழ வைக்கின்றது. எதனால் கெரியுமா? கூடியிருந்து அனுபவித்த சுகம் அவர் மரணித்ததால் இல்லாமல் போய்விடுகின்றதே என்பதனாலேயே. இந்த பிறப்புக்கும் இறப்புக்குமிடையில் ஒருவருடைய வாழ்க்கை எப்படியெல்லாம் அமையும் என்பதற்கு எதிர்வு கூற ஆதாரம் ஏதுமில்லை. ஆனால் அந்த வாழ்க்கை இப்படித்தான் அமைய வேண்டும் எனப் பலர் நினைப்பதுண்டு. அந்த வாழ்க்கையை வாழ்ந்தே பார்த்திட நினைப்பார்கள் இன்னும் சிலர். குறிப்பிட்ட கொள்கைப் பற்றுடையவர்கள் நீள ஒருகோடு கீறி அதை வாழ்க்கையின் வழிகாட்டியாக்கி அதில் நடந்து மற்றையவரையும் முடிந்தால் நடந்து வா என்பார்கள்.

இவ்வாறாக எமது வாழ்க்கையை ஆரம்பத்திலிருந்தே திட்டமிட ஒவ்வொருவருக்கும் அனுபவமுடையவரின் உதவி நிச்சயமாகத் தேவைப்படுகின்றது. அனுபவமுடையவர் என்பது வாழ்ந்து அனுபவித்தவர்கள் எனப் பொதுமைக்கருத்தைக் குறித்துக் காட்டினும் அந்தந்த விடயங்களில் அனுபவப்பட்டவர்களையே முன்னிறுத்திச் சுட்டிக்காட்டுவதாகக் கொள்ளலாம்.

வழிகாட்டலின் முக்கியத்துவம்

பிறப்புக்கு வழிகாட்டியவன் இறைவன். அதனை செயலில் காட்டியவன் மனிதன். ஆணும் பெண்ணும் சேர்ந்தாலேயே இன்னொன்றின் பிறப்பு என இறைவன் இயற்கையைப் பணித்தான். அது கூட தேவையில்லை என்கிறான் விஞ்ஞான மனிதன். பதிய(Cloning) முறையில் இது சாத்தியம் என்கிறான். இதில் கூட மாற்றம் வரும் என்கிறான் இனி வரும் விஞ்ஞானி. எது எப்படியோ பிறப்பு அல்லது ஜனனம் என்கின்ற ஒன்று உண்டு. பிறந்த பின்பு வாழப் போகும் வாழ்க்கைக்கு அவசியமாக ஒரு வழிகாட்டல் அவசியம். சரியான வழிகாட்டல் கிடைக்காத குழந்தைகள் திசை மாறி சமூகத்தினால் அங்கீகரிக்கப்படாதவர்களாக இருக்கின்றார்கள். இங்கே குறிப்பிடுகின்ற வழிகாட்டலென்பது ஒரு குழந்தையின் வளர்ச்சிப் பருவத்துடன் தொடர்பு பட்டது. தாயின் கருவறையிலிருந்து கண்களை அகலத் திறந்து வெளியுலகத்தைப் பார்க்கத் தொடங்கியதிலிருந்து இறுதியாகக் கண்ணை மூடும் வரை ஒருவருடைய வாழ்க்கையில் அவரை வழிகாட்டியவர்களும் அவரால் வழி காட்டப்பட்டவர்களுமாகப் பலர் வந்து போவார்கள். இப்படியாக சிந்திப்போமானால் எமது பிறப்புக்கு வழிகாட்டியவன் இறைவன் தானே. ஆரம்பம் அவனது அறை தானே அதில் செய்து காட்டிய அணுகுமுறை விந்தை தானே. அணுகு முறையை அணு(வின்) முறையாக இயற்கையாகக் கொடுத்த முதல் விஞ்ஞானி இறைவன். அந்த இறையருள் கிட்டிய பாடசாலையாக மயிலணி மிளிர்கின்றது.

எந்தையும் தாயும்

கருவறையிலிருந்து வெளியுலகினுள் கண்திறந்து பார்க்கும் மழலைக்கு முதல் வழிகாட்டி அந்தக் கருவறைக்கு சொந்தக்காரரான தாய் ஒருவரே. தாய்மையடைந்தபோதே கருவறையிலிருந்த சிசுவுக்கு வழிகாட்டத் தொடங்கி விடுவார். நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல புத்தகங்களை வாசிப்பது, இன்சொல் கேட்பது, பேசுவது, இனிய சங்கீதம், பாடல்களைக் கேட்பது, சத்தான உணவை உண்பது இவை அனைத்தையும் தனது தொப்புள் கொடி மூலம் தன்னுள் இருக்கும் சிசுவை வளர்த்தெடுத்து வழிகாட்டுவது போன்று பேறு ஏது? பிறந்த பின் ஒரு தாதியைப்போல பால் குடிக்க, சிரிக்க, அழ, தவழ, எழுந்து நடக்க என அனைத்தையும் வழிகாட்டுவதும் தாய்க்குரிய, தாய்மைக்குரிய சிறப்பியல்பே. இது மனிதருக்கு மட்டுமல்ல விலங்குகளிலும் காணுகின்ற விடயம்.அதனால் தானே குழந்தைப்பேறு பெற்றவர்களை பெற்றோர் என அழைக்கின்றோம். பெற்றோர்களின் வழிகாட்டலில் (Parental Care) தாய்க்குப் பின்பு இரண்டாவதாகவே தந்தை இணைந்து கொள்ளுவார். தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமுமில்லை என்று தானே அறிந்து இருக்கின்றோம். இன்னொரு வகையில் கோயிலும் மந்திரமும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காகவே என பொருளாகின்றது அல்லவா. இங்கே பிறப்பிற்கு வழிகாட்டிய இறைவன் கோயிலில் எழுந்தருளி மந்திரத்தை உச்சரிக்க வைத்து வாழ்க்கையில் வழி காட்டுகின்றான். அனைத்து மதங்களும் இதைத்தானே சொல்கின்றன. ஆனால் மதத்திற்கு மதம் வந்தால் காட்டுகின்ற வழியும் தப்பாகின்றது அல்லவா?

இப்படியொரு விசித்திரமான கேள்வியொன்றுண்டு. பெற்றோரா, இறைவனா பெரியவர்கள் என சிறியவர்கள் சிலேடையாக வினவுவார்கள். அதற்கு இறைவனே விடை தந்திருக்கின்றான். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று கூறி அதற்கும் மேலாக மதா, பிதா, குரு, தெய்வம் வழிமுறையையும் காட்டியிருக்கின்றான். இறைவன் வடிவில் மாதாவும், பிதாவும் இன்னும் குருவும் இருக்கின்றனர் என்பதையும் இன்னும் இறைவனுக்கு ஒப்பானவர்களாக இருக்க வேண்டும் என்பதனையும் இது சுட்டி நிற்கின்றதல்லவா! ஒரு குடும்பத்தில் முதன்மை வழிகாட்டியாக தாயும் தந்தையும் இருக்கும் போது மட்டுமே பிள்ளைகள் அவர்களை தினமும் பார்த்து பின்பற்ற அதுபோல் தாமும் நடக்க முயற்சி செய்வார்கள். மாறாக பிள்ளைகளை குடும்பத்தில் சரியாக வழிநடத்தாது பாடசாலைக்கு அவர்களை அனுப்பி விட்டு பாடசாலை அவர்களைப் பார்த்துக் கொள்ளட்டும் என்றால் எப்படி? ஆரம்பம் எப்போதும் சரியான வழிகாட்டலுடன் ஆரம்பிக்க வேண்டும்.

பாடசாலையிலும் ஆசான்கள் மதிக்கப்படுபவர்களாக இருத்தல் வேண்டும். இது அவரவர் நடை, உடை, பாவனை மற்றும் செயலில் இன்னும் செயற்றிறனில் தங்கியிருக்கின்றது.பாடசாலை ஒரு புனிதமான இடம். பல மதத்தினுடைய பிள்ளைகள், ஆசிரியர்கள் ஒரு தலைமையின் கீழ் எந்தவித வேறுபாடுமின்றி ஒன்றிணையும் இடம். ஒழுக்கத்தை, சமத்துவத்தை, சகோதரத்துவத்தை இன்னும் பல கலைகளையும் கற்றுக் கொடுக்கும் இடம்.மாணவச் செல்வங்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களை அரவணைக்கும் ஒரு புனிதமான ஆலயம். சரியான வழிகாட்டல், குடும்ப உறவுகளுக்குப் பின்பு இங்கே தான் ஆரம்பமாகின்றது. மேலும் தொடர்கின்றது எனலாம். பாடசாலைகள் அரசியல் வயப்படும் கூடாரமாக மாறக்கூடாது. வயதுக்கும், தகுதிக்கும், திறமைக்கும் இன்னும் பொறுமைக்கும் மதிப்புக் கொடுக்கும் ஆலயமாக மிளிர வேண்டும். கூட்டுறவு என்ன என்பதை ஒவ்வொரு பிள்ளையும் கற்றுத் தேறும் ஒரு கலைகளின் கூடமது.வாய்ப்புக்கள் ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிள்ளையிடமும் ஏதோ ஒரு திறமை நிச்சயமாக உண்டு. அதனைச் சரிவர இனங் காணவேண்டியது ஆசிரியர்களது முதன்மையான பணி. பெற்றோருக்கு அடுத்ததாகப் பிள்ளைகள் வாழ்க்கைக்கு அவர்கள் வழிகாட்டுபவர்களாக அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் இருக்கிறார்கள். மேலும் சரியான வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பும் கூட.

வழிகாட்டுதலிலும் திறமைகளை வளர்த்தலிலும் பாடசாலைகளின் பங்கு

பாடசாலைகள் குழந்தைப் பருவத்திலிருந்து தேவையான கல்வியை மட்டும் போதிக்கும் இடமாக இருப்பதில்லை. மாறாகத் தான் கற்ற கல்வியை அறிவுக்கண்களுக்குள் அசை போட்டு அதனைப் பரீட்சித்துப் பார்க்கவும், பயன்பாட்டை அனுபவத்தினூடாக அறியவும் வாய்ப்புக் கொடுக்கும் ஒரு தொழிற்சாலை என்றால் மிகையாகாது. ஆனால் இப்போது இந்தத் தொழிற்சாலையில் அனைத்தும் இயந்திர மயமாகிவிட்டன.

இயந்திரனுக்கும் மனிதனுக்கும் வேற்றுமையென்பது உணர்வொன்றே தவிர வேறொன்றுமில்லை. ஆறறிவு என்பது உணர்ச்சியின் வெளிப்பாடு. பாடசாலைகள் இயந்திர மயமாக்கலுக்குள் சிக்கிக் கொண்டதால் அதிபர்– ஆசிரியர் –மாணவர்– பெற்றோர் உறவுகளில் விரிசல்கள் ஏற்படுகின்றன. சிறப்பாகக் கல்வி கற்கும் பிள்ளைகளைத் தட்டிக்கொடுப்பது போல இடர்ப்படும் மாணவர்களைக் கவனித்து அவர்களை வழிநடத்தும் பொறுப்பும் பாடசாலைக்கு உண்டு. இங்கே தான் பாடசாலையின் வழிகாட்டல் முக்கியத்துவம் பெறுகின்றது. எவ்வளவு மாணவர்கள் திறமைச்சித்தி பெறுகின்றார்கள் என்பதற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் எவ்வளவு மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதிலும் கொடுக்கப்பட வேண்டும். வழிகாட்டல் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படல் வேண்டும். வசதி, வயது, சாதி, விருப்பு, பார்த்து வழிகாட்டலில் வேறுபாடு காட்டக் கூடாது. ஒவ்வொரு மாணவனிலும் அவனது வளர்ச்சிக்கான பாதையை சிறந்த வழிகாட்டலைப் பாடசாலை வழங்கத் தயக்கங் காட்டக் கூடாது.

ஆசிரியர்களது தலையாய பணி

என் கடன் பணி செய்து கிடப்பதே என்பது வேத வாக்கு. ஆசிரியர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் நாங்கள். குருத்துவப்பணி என்பது ஒருவருடைய வாழ்க்கையில் கிடைத்தற்கரியது. இங்கே இறைவன் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் வழிகாட்டக் குருவாகின்றான். எழுத்தறிவித்ததால் ஆசிரியன் இறைவனாகின்றான். வணக்கத்திற்குரியதாகிறான். ஆசிரியத்தொழில் ஒரு சமூகப்பணி. அர்ப்பணிப்புடன் இதய சுத்தியுடன் இடம் பெற வேண்டும். தாய் தந்தையருக்கு அடுத்ததாக வணக்கத்திற்கும், மதிப்பிற்குமுரிய தொழில் இது. ஆசிரியர்கள் எனப்படுவோர் அறிவுக்களஞ்சியமாகத் திகழ வேண்டும். அறிவை அள்ளிக் கொடுக்கும் அட்சய பாத்திரங்கள், பொறுமையின் சிகரங்கள், சுயகட்டுப்பாட்டை இப்படி என வாழ்ந்து காட்டும் ஞானிகளுக்கு ஒப்பானவர்கள்.வாழத் துடிக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் அறிவையும் அனுபவத்தையும் குழைத்து கலவையாக அவர் விரும்பும் வகையில் அள்ளிக்கொடுக்கும் புத்திஜீவிகள். ஆனால் இப்போதெல்லாம் ஆசிரியத்தொழில் வர்த்தகமாக மாற்றங்கண்டு கொண்டுள்ளது. படித்த பட்டத்திற்கு பாடசாலையில் கற்பிப்பதாகவும் காசுக்காகத் தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்பிப்பதாகவும் ஒருவர் தன்னை ஆசிரியர் என இனங்காட்டி குறிப்பிட்டார். கல்வியை காசுக்காகக் கற்கும் நிலைக்கும் காசிருந்தால் கல்வி என்ற நிலைக்கும் கல்வி வந்து நிற்கின்றது. எமது நாட்டில் இலவசப் பாடத்திட்டம் எனும் செயன் முறைக்கூடாக அனைத்து மாணவர்களுக்கும் கல்வியறிவு கொடுக்கும் திட்டம் ஓரளவிற்கு வெற்றி பெற்றிருப்பினும் அது முழுமையான தான் கொண்ட நோக்கை அணுக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் காசுக்காக அலையும் குருத்துவம் தன்னிலை மறந்து தலைகீழ் தெரியாது பயணிப்பதால் இந்த நிலை.

அனைத்திற்கும் ஆசிரியர்கள் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். இது ஒன்றே இந்தப் புனிதமான தொழிலுக்குரிய சிறப்பு. ஆசிரியருக்கு அவர் கற்பிக்கும் ஒவ்வொரு மாணவ, மாணவியர் பற்றியும் அவனிடமுள்ள ஆற்றல் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். அவர்களுக்குள் பொதிந்திருக்கும் ஆற்றலை அல்லது திறனை இனங்கண்டு தட்டியெழுப்பும் அதே வேளையில் இன்னும் திறமையான மென்திறன்களை வளர்த்துக்கொள்ள வாய்ப்பும் கொடுக்கப்பட வேண்டும்.

பாடசாலை வழிகாட்டல்

பாடசாலை வாழ்க்கையென்பது ஒருவருடைய வாழ்க்கையின் அத்திவாரம் எனலாம். இந்த அத்தி வாரத்திற்கு இடப்படும் கற்களாகக் கற்றறிவும் அதனைச் சேர்த்து ஒட்ட வைக்க சீமெந்து போன்ற பட்டறிவும் தேவையல்லவா? கற்றறிவு வன்திறன்களெனில் பட்டறிவு அதைத்தான் அனுபவம் என இன்னொரு விதமாக அழைக்கின்றோமே, அது மென்திறன் என அழைக்கலாம். கற்றறிவை வைத்துக்கொண்டு எந்தவிதப் பிரயோசனமுமில்லை. கற்றறிவுக்கிணையாக பட்டறிவையும் எவர் ஒருவர் கொண்டிருக்கின்றாரோ அவரே, வாழ்க்கையில், தொழிலில், கல்வியில் சிறந்து விளங்க முடிகிறது. ஆக மொத்தத்தில் கற்றறிவான வன்திறனையும் பட்டறிவான மென்திறனையும் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் அள்ளிக் கொடுக்கும்

அட்சய பாத்திரமாகப் பாடசாலைகள் இருக்கின்றன. இன்னொரு பக்கத்தில் நீங்கள் கேட்க விரும்புவதையும் உணர முடிகிறது.

திறனனைத்தையும் அள்ளிக் கொடுப்பதென்றால் பானையிலிருந்தாலே அள்ளும் அகப்பையில் வரும் என்கிறீர்களா? உண்மைதான் உங்கள் கருத்துக்கு மறுதலிப்பு ஏது? பாடசாலை என்னும் அட்சய பாத்திரத்தில் திறன்களனைத்தையும் கிடைக்க வழி செய்தல் வேண்டும். பாடசாலையிலுள்ள கற்றலுக்கான சூழல், கற்றலுக்கான வளங்கள் அறிவையும் அனுபவத்தையும் அள்ளி வழங்க ஆசிரியத் திலகங்கள், அன்புக்கும் நட்புக்குமான மாணவ நண்பர்கள் அந்தப் பாடசாலையின் தாங்கும் தூண்களான பழைய மாணவர்கள், பெற்றோர்கள் இப்படியனைத்துமே ஒருங்கிணைந்திருக்க வேண்டும்.

அந்த வகையில் மயிலணி அனைத்தையும் சிறப்பாக கொண்டிருந்தமையினால் இன்று நூற்றாண்டினை நோக்கி பல இடர்களைக் கடந்து துன்ப துயரங்களிலிருந்து மீண்டு வெற்றி நடை போடுகின்றாள். இத்துணை சிறப்புக்கும் மயிலணி ஒரு வரலாற்றுச் சின்னம்.

கீழ்த்தர வகுப்பிலிருந்து ஒவ்வொரு பிள்ளையும் அங்கே கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களினால் கற்பிக்கப்பட வேண்டும். இது ஒரு பாடசாலையில் கல்விகற்கும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் பொருந்தும். மாறாக விரைவில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவ மாணவியரை மட்டும் தேர்ந்து அவர்களுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதை சிறிய வகுப்பிலிருக்கும் போது தவிர்க்க வேண்டும். முகமன் பார்ப்பதாக பெற்றோர்கள் அவ்வப்போது விசனப்படுவதற்கு பாடசாலைகள் ஆளாகக் கூடாது. நன்கு திட்டமிட்ட செயற்பாட்டின் கீழ்ப் பாடசாலையிலுள்ள ஆசிரிய வளத்தை ஒன்று திரட்டி அங்கே கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவ மாணவியரையும் நேரடிக்கண்காணிப்பின் கீழ்க் கொண்டு வரவேண்டும். தனியொருவரையோ அல்லது குறிப்பிட்ட மாணவர்களையோ புகழ்வதும் வாய்ப்புக்களைக் கொடுப்பதும் மாணவரிடையே நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக பெறாமை என்னும் தீயை வளர்த்து விட்டு விடும்.

வாழ்க்கைக்கான வழிகாட்டலில் வாழும் பிள்ளைகள்

பாடசாலைக் கல்வியிலிருந்தே ஒவ்வொரு மாணவனுக்கும் வாழ்க்கைக்கான வழிகள் காட்டப்பட வேண்டும். என்ன என்ன பாடங்களில் அக்கறை செலுத்தினால் எவ்வாறான பெறுபேறுகளுடன் எந்த மேற்படிப்போ தொழிலோ செய்யலாம் என்பதனை கற்றுக் கொடுக்கும் ஆசான்கள் தெரிவிக்கத் தவறக்கூடாது.பொதுவாக இதனை ஆசிரியர்கள் செய்வது குறைவு என்பது குறையாகவே உள்ளது. தாம் கற்பிக்கும் பாடத்தின் முக்கியத்துவம் பற்றியும் இதனால் ஒவ்வொரு மாணவனின் வாழ்க்கைக்கு ஏற்படும் பிரயோசனம் பற்றியும் கற்பிக்கும் போதே மாணவர்களுக்கு வழங்குதல் நல்லது. இது மென் மேலும் மாணவரிடையே ஆர்வத்தை ஏற்படுத்தி அந்தப் பாடங்களில் அதிக கவனமெடுக்கவும் விருப்பத்திற்குரிய பாடமாகவும் அமைய உதவும். ஆசிரியர்களின் அரவணைப்பில் வாழும் பிள்ளைகளை அவர் குணமறிந்து வழி காட்ட வேண்டிய பொறுப்பு அனைத்து ஆசிரியர்களுக்குமுண்டு.

ஐந்தாம் ஆண்டுப்பரீட்சை - அநாவசியமான பலப்பரீட்சை

ஐந்தாம் ஆண்டுப் பரீட்சையின் பெறுபேறுகளை வைத்துக்கொண்டு பாடசாலையையோ, கற்பித்த ஆசிரியரையோ குறை கூறுதல் தவிர்க்கப்பட வேண்டும். இந்தப்பரீட்சையில் மாணவச் செல்வங்களை பலிக்கடா ஆக்கிக் கிட்டத்தட்ட மேதாவித்தனத்தையோ, சுய கௌரவத்தையோ வெளிப்படுத்தும் பரீட்சையாக அல்லவா பெரும்பாலும் அமைந்து விடுகின்றது.ஒரு பிள்ளையின் அறிவாற்றல் திறனை அளந்தறிந்து அதற்கேற்ப அவரைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தல் வேண்டும். பரீட்சை என்றொரு சுமையை அவர்களிடம் இள வயதிலேயே சுமத்துவது ஏற்புடையதல்ல. பிள்ளையின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிவிட வாய்ப்புக் கொடுக்க வேண்டுமே தவிர பிள்ளையை பகடைக்காயாக வைத்து பேரம் பேசக்கூடாது. ஆரம்பத்தில் சிறிது சிறிதாக அரவணைப்பில் வளர்ந்த பிள்ளையை மெல்ல மெல்லமாகவே அவர் விரும்பும் சூழலுக்கு

இயைவாக்கிக் கொள்ள வேண்டும். மாறாக பெற்றோர்களிடையே தற்புகழ்ச்சியும், போட்டியும் குறிப்பிட்ட சில ஆசிரியர்களினதும் புகழ்ச்சிக்காகக் குழந்தைகளை ஆடுகளத்தில் பலியாக இறக்குவது போன்றதொரு நிகழ்வாகவே புலமைப்பரிசில் பரீட்சையைக் காணக்கூடியதாக உள்ளது. இன்னும் ஆழ்ந்து பார்த்தால் குழந்தைகளை மனவுளைச்சலுக்குள் உள்வாங்கும் நிகழ்வாகவும் அமைகின்றது.

ஆறிலிருந்து க.பொ.த சாதாரணம் வரை.....

ஆறாம் வகுப்பிலிருந்து க.பொ.த சாதாரண தரம் வரை பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கும் போது எந்தெந்த பாடங்களில் கரிசனை செலுத்த வேண்டும் என்பதை ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கலாம். க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம்மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் அதிக கவனமெடுக்க வேண்டும். ஆங்கிலம் திறமைச்சித்தியுடையவருக்குப் பல பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளுக்கு விண்ணப்பிக்கமுடியும். ஐந்தாம் ஆண்டு பரீட்சைக்குப் பின் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை ஒரு சவாலுக்குரியது.

க.பொ.த சாதாரண தரத்திலிருந்து

ஒவ்வொரு மாணவனுக்கும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை முக்கியமானது. இந்தத் தரத்தில் பெறும் சித்திகள் மாணவனது கல்விப்புலமைக்கான முதல் அங்கீகாரம். இந்தப் பரீட்சை முடிவுகள் மாணவர்களது உணர்வுகளைத் தட்டியெழுப்பித் திசை திருப்பும் நிலையுமாகும். மாணவப்பருவம் வாலிபப் பருவத்தினது உபாதைக்குள் சிக்கித் துவண்டெழும் நிலையுமாகும். தற்துணிவுடன் மாணவர்களிணைந்து இயங்க முடிவெடுக்கும் நிலையாகும். பிறர் சொற் கேட்டல், ஆலோசனைகளுக்கு செவிமடுத்தல் என்பன கசப்பானதாகத் தோன்றும் பருவம். உண்மையில் ஆணும் பெண்ணுமாக பருவமடையும் பருவம் இதுதானே. இந்தப் பருவத்தில் பெற்றோர் சொல் கேட்பது என்பது இவர்களுக்கு அவசியமற்றதாகவே தோன்றும். இந்தப் பருவத்தில் பாலியல் உணர்வுகள் தூண்டப்படுவதனால் பெற்றோரும் ஆசிரியர்களும் மிகுந்த பொறுமையுடன் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும். மாணவனது மனோநிலையறிந்து அவர்களுக்குத் தேவையானதை அவர்கள் விரும்பும் வகையில் எடுத்துச் சொல்லுதல் நல்லது. கண்டிப்புடனான அன்பு இவர்களின் தேடலுக்கு தீனி போடுவதாக அமைகின்றது.

க.பொ.த உயர்தரம் உயரத்தில் வைக்க வேண்டும்.

வாழ்க்கைப் படிகளுள் மிக முக்கியமான கல்வி சார் நிலையாக க.பொ.த உயர்தரத்தைக் கொள்ளலாம். பலருடைய வாழ்க்கையின் திருப்பு முனையாக அமையும் நிலையும் இதுதான். மாணவனொருவனது விருப்புடனான கல்வி நிலைக்குச் செல்வதற்கான அறிவுப்பாலமாக இந்த நிலை அமைகின்றது. க.பொ.த உயர்தரத்தில் எந்தெந்தப் பாடத்தைத் தெரிவு செய்துகொள்வதில் பெற்றோரும் ஆசிரியரும் இணைந்து வழிகாட்டும் பருவம் இது. குறிப்பாகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்குப் பாடத்தெரிவு பற்றியும், பல்கலைக்கழகங்களிலுள்ள பட்டப்படிப்புக்கான பாட அலகுகள் பற்றியும் தெளிவான விளக்கம் இருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து வெளியாகும் பல்கலைக்கழகக் கற்றல் தொடர்பான கையேட்டில் அனைத்து விடயங்களும் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இக் கையேட்டினை முழுவதுமாக அலசி ஆராய்ந்தால் ஒவ்வொரு மாணவனுக்குமான வழியைத் தேடிப்பிடித்து வழி காட்டி விடலாம். பல்வேறு புதிய பாட அலகுகளைத் தெரிவு செய்யும் போது பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் வாய்ப்பு அதிகமாகவே இருக்கும். இந்த வழிமுறையை ஆசிரியர்கள் முழுமையாகப் பயன்படுத்துவதாகவே தெரியவில்லை. பல இடங்களில் மாணவர்கள் எந்தப் பாடத் தெரிவு எனக் குழம்பி இருக்கின்ற வாய்ப்புக்களையும் சரியாகப் பயன்படுத்தாது விடுவதை அறிய முடிகிறது.

ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களுக்கான சிறந்த வழிகாட்டிகள். அந்தப் பக்குவமான தன்மைக்கு ஆசிரியர்களும் வர வேண்டும்.

ஒரு பாடத்தை கற்பிப்பவருக்கு அந்த பாடத்தினூடாக மாணவருக்கு வழிகாட்டுதல்கள் எவை எனத் தெரிய வேண்டும்.

ஒரு மாணவருக்கு ஆசிரியர் சிறந்த வழிகாட்டிகளாக இருப்பதே அவர் பெற்ற பெரும் பாக்கியம் என்பார்கள். அன்பான கண்டிப்புள்ள நேர்வழியில் தளம்பாது நிற்கின்ற ஆசிரியர்கள் ஒரு சிலரே. இவர்களை மாணவர்கள் தமது மரியாதைக்குரியவராக, முன்னேற்றத்தின் மாதிரிகளாக (Role Model) உருவகித்து வாழத் தலைப்படுவார்கள். ஆசிரியர்கள் என்றால் இப்படியல்லவா இருத்தல் வேண்டும் என்பார்கள். இன்னொன்றும் சொல்வார்கள். குட்டு வாங்கினாலும் மோதிரக்கையினால் வாங்க வேண்டும் என்பார்கள்.

ஒரு பாடத்தைக் கற்பிக்க விரும்பும் ஆசிரியரொருவர் அந்தப் பாடத்தைக் கற்பதனால் என்ன பயன் என்பது பற்றியும் அந்தப் பாடத்தின் மூலமாக என்ன என்ன புலமைப்பரிசில்கள் மற்றும் தொழிலைப் பெறமுடியும் என்பது பற்றியும் அறிந்திருப்பதுடன் மாணவர்களுக்கும் தெரியப்படுத்துவது அவசியம். தான் கற்பிக்கும் பாட அலகு பற்றி மேலே குறிப்பிட்ட விடயங்களை ஆசிரியர் ஒருவர் விளக்க முடியாதிருப்பின் அந்தப் பாட அலகை அவரிடம் கற்றுக்கொள்வதில் எதுவிதமான பிரயோசனமுமில்லை.

இங்கேயும் ஆசிரியருடைய பணி மகத்தானது. மாணவனின் மனநிலையறிந்து அவனைப்பக்குவப் படுத்தி அதிலிருந்து மாணவனின் முன்னேற்றத்திற்கான பாதையை அதனுடன் இணைந்து வடிவமைப்பது ஆகும். நல்ல ஆசான்களிடம் கற்ற மாணவர்களுடைய வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் சிறப்பாகவும் அமையப்பெற்றதற்கு இதுவே காரணமாக நிறையவே உதாரணங்களுண்டு.

தொழில் வழிகாட்டல் - பாடசாலையில் ஆரம்பம்

வாழ்க்கைக்கான வழிகாட்டலில் பாடசாலையினது பங்கு அளப்பரியது. மாணவப்பருவத்தில் குழந்தையொன்று வீட்டில் பெற்றோருடனும் பாடசாலையில் ஆசிரியருடனும் செலவழிக்கும் நேரத்தை கணக்கிட்டுப் பார்த்தால் அதிகளவிலான நேரம் பாடசாலையிலே அங்கே ஆசிரியருடைய அரவணைப்பிலே என்பது புரியும். வாழ்க்கையைப் பற்றிய பல விடயங்களைப் பற்றி மெல்ல மெல்ல அறியத் துடிக்கும் பால்ய வயதில், பாலியல் எண்ணங்கள் தலைதூக்கும் வயதில் இன்னும் எதிர்ப்பாலாரைப் பார்த்து வெட்கப்படும் வயதில் தனது குடும்ப உறவு முறை, பாடசாலையிலுள்ள அதிபர்– ஆசிரியர், ஆசிரியர்–ஆசிரியர், மற்றும் அதிபர்+ஆசிரியர் = மாணவ+ மாணவியர் ஆகிய உறவு முறைகளைப் பற்றி அறிய விருப்பப்படுவர். இந்த இடத்திலேயே பெற்றோரும், ஆசிரியர்களும் கவனமெடுத்தல் அவசியம். பெற்றோருடைய அரவணைப்பும் ஆசிரியர்களது கண்டிப்பும் தேவையென்றே தோன்றும். இதற்காகப் பெற்றோர் ஆசிரியர்களிடமிருந்து சுயகட்டுப்பாட்டை (Self disciplined) பிள்ளை கற்றுக்கொள்ள முனையும். இங்கே சுய கட்டுப்பாடு என்பது இன்னொருவருடைய அறிவுறுத்தலின்றிசுயமாகவே தமக்குள்ளே அறிவுறுத்தல்களைக் கொண்டிருந்து அதன்பால் நடப்பதேயாகும். தற்கால மாணவ மாணவியருக்கு சுயகட்டுப்பாடு பற்றி தெளிவு படுத்துவது அவசியம் தேவையானதும் மிகவும் பொருத்தமானதுமாகும்.

வாழ்க்கைக்கான வழிகாட்டலிலிருந்து தொழிலுக்கான வழிகாட்டல் (Career Guidance) பாடசாலை யிலேயே ஆரம்பமாகிறது. எமது நாட்டைப் பொறுத்த வரையில் ஆகக்கூடியது 20 சதவிகிதமான மாணவர்களுக்கே பல்கலைக்கழக உயர்கல்விக்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. மீதி 80 சதவிகிதத்தினரும் ஏனைய தொழில் கல்வி முறையிலும் இதில் பலர் மேற்கொண்டு படிக்க முடியாமலும் போகின்றது. இந்த பெரும்பான்மையான, மேற்கொண்டு கற்க வழியில்லாத மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பு முறைகள் பற்றிய வழிகாட்டல்கள் பாடசாலையிலேயே அவசியம் வழங்கப்பட வேண்டும். சிறந்த ஒரு தொழிலதிபராக இவர்களும் ஆகி விட வாய்ப்புண்டல்லவா! வாய்ப்புகள் சரியாகக் கிடைத்தால் வழி தானாகவே திறக்கும்.

க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் ஒருவர் பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியவில்லையாயின் அவர் கற்ற பாடங்களுக்கிணைவான தொழிலை நாட முயல்வது தவிர்க்க முடியாதது. ஆயினும் அந்த மாணவர்க்காக தொழில் வாய்ப்பு ஏற்படுத்த முடியுமென்றால் அது போன்றதொரு சேவை, அர்ப்பணிப்பு எமது

ஆசிரிய சேவைக்கே உரித்தானது. ஆசிரிய பணி மகத்துவமானது, மேன்மை மிக்கது, சேவை மனப்பாங்குடையது. அன்பு மிக்கது, ஆளுமை கொண்டது. எங்களால் மாணவனொருவனை சிறந்த முறையில் வழிகாட்ட முடிந்ததென்றால் அதுவே நாம் கொண்ட குருத்துவப் பணியின் மகிமை. மெழுகுதிரி போல எங்களை உருக்கி இன்னொருவர் வாழ ஒளியேற்றும் செயல் இது. பிறரின் மகிழ்ச்சியில் இறைவனைக் காண்பதற்கு ஒப்பானது.

தொழிலுக்கான வழிகாட்டலுக்கு மென்திறன்கள் அவசியமானது.

தொழிலுக்கான வழிகாட்டலில் பாடசாலையிலுஞ் சரி பல்கலைக்கழகமாயுனுஞ் சரி அதிலே மென்திறன்களின் பங்கு அத்தியாவசியமானது.மென்திறன்களை அதிகம் பெற்றவருக்கு அதிக வாய்ப்புக்களுண்டு. இதைப் பற்றிக் கீழே விரிவாக ஆராய்வோம். பாடசாலையிலிருந்து வருடா வருடம் வெளியேறும் மாணவர்களுக்கு அவர்களுக்குத் தேவையான மென் திறன்களனைத்தையும் கொண்டிருப்பவராக மாற்றியமைத்தால் அதுவே அவர்களது சிறப்புக்கு முன்னுதாரணமாகும். ஒருவரது வாழ்வு சிறக்க தொழில் வாய்ப்புகள் அதிகரிக்க மென்திறன்கள் அவசியம். அப்படியாயின் இந்த மென் திறன்கள் யாவை? எப்படி வேறு பிரித்தறிவது? க.பொ.த உயர்தரத்திலிருந்து மென்திறன்களை விருத்தி செய்த மாணவனாக வெளியேறினால் அந்த மாணவனுக்குரிய வாய்ப்புகள் தொழில் ரீதியாக நிறையவே இருக்கும். அவனுடைய இனி வாழும் வாய்ப்பிற்கு வழித்துணையாக, வழிகாட்டும் வெளிச்சமாக மென்திறன்கள் அமையும். ஆக மொத்தத்தில் மென்திறனின்றேல் வாழும் வாழ்க்கைக்கும் அவர் செய்யப்போகும் தொழிலுக்கும் மதிப்பென்பது இருக்காது. மகிழ்ச்சியும் இருக்காது.

பல்கலைக்கழக வாழ்க்கை - வித்தியாசமானது

மொத்தமாக நான்கு வருடங்கள் வாழும் பல்கலைக்கழக பட்டப்படிப்பு வாழ்க்கை பாடசாலையினின்றும் வித்தியாசமானது. பாடசாலையை விட கூடிய சுதந்திரமுடையது. மாணவர்களிணைந்து குழுச்செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான முழுமையான வாய்ப்புகளைக் கொண்டது. இங்கே ஒருவர் பெற்றுக் கொள்ளும் கற்றறிவினால் அவரது வாழ்க்கைக்கோ அன்றி தொழிலுக்கோ முழுமையான பயனேதுமிருக்காது. ஆனால் இந்த நான்கு வருட பல்கலைக்கழக வாழ்க்கையில் அவர் பெற்றுக்கொள்ளும் பட்டறிவு அனுபவத்தினூடான கற்றறிவாகும். கற்றதை செயற்படுத்திக்காட்டும் நிலையை பட்டறிவினுள் உள்ளடக்கிக் கொள்ளலாம். வெறுமனே தோற்றங்களையும் விதிகளையும் இன்னும் கோட்பாடுகளையும் கொண்டு மாணவர்களது மூளையை நிரப்பி விட்டால்அந்த மூளையினால் மென்திறன்களை நுகர்ந்து பார்க்கக்கூட முடியாது. ஆதலினால் பல்கலைக்கழக கற்றல் செயற்பாட்டில் மென்திறன்களை இயன்றளவு விருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட வேண்டும் என உலக வங்கியும் அறிவித்திருக்கிறது.

வேலை கொள்வோரின் கருத்துக்களும் எதிர்பார்ப்புக்களும்

பல்கலைக்கழக பட்டதாரியாக வெளியேறும் ஒருவருக்கு வேலை வாய்ப்பானது மிகவும் அரிதாகவே இருக்கும் இக் கால கட்டத்திலே அவருக்கான சிறந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் ஊடகமாக மென்திறன்கள் இருக்கின்றன என அறியலாம். பயிற்சியின் மூலமாக திரும்பத் திரும்ப செய்யும் நடைமுறையினூடாக மென்திறன்களை விருத்தி செய்தல் சாத்தியமாகின்றது. இன்னும் மென்திறன்களை பாட அலகினுள் புகுத்தி அதனைப் பாடத்திட்டத்தினூடாக செயற்படுத்தும் வகையில் இக்கருத்திட்டம் கருக் கொண்டுள்ளது. பொதுவாகவே இவ்வாறான நிகழ்வுகளில் பாடத்திட்டத்திற்கான கருத்துச் சிறப்புடன் மென்திறன் உள்ளக நடைமுறையாயிருக்கும். பட்டதாரியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் ஒருவருக்கு வன்திறன் எனப்படும் அவர் கற்றுத் தேர்ந்த பாடங்களுடன் மென்திறன்களும் அவசியம் இருத்தல் வேண்டும்.ஆதலால் தற்போது மென்திறன்களை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பதிலே அதிக அக்கறை செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

வேலை கொள்பவரிடத்திலே ஒருவருடைய மென்திறன் விருத்தி பற்றிய நிறைந்த எதிர்பார்ப்பு இருக்கின்றது. வெறுமனே பட்டப்படிப்பு கற்றறிந்த பாடங்களுக்கூடாக மட்டுமே பயணிக்கக் கூடாதெனவும் இயன்றளவு மென்திறன்களை விருத்தி செய்து உள் வாங்கியிருக்க வேண்டுமெனவும் எதிர்பார்ப்பு இருக்கின்றது

வன்திறனும் மென்திறனும்

திறமைகள் ஒருவரிடம் எந்தளவிற்கு இருக்கின்றனவோ அவை நிச்சயமாக அவருடைய வாழ்க்கைக்கு, மேற்படிப்புக்கு குறிப்பாக தொழில் செய்வதற்குப் பெரிதும் உதவிடும். திறன்கள் அடிப்படையில் இரண்டு வகை எனலாம்.

1) வன்திறன் (Hard Skills)
2) மென்திறன் (Soft Skills)

வன் திறனென்பது கற்றறிந்த பாடங்களிலுள்ள கோட்பாடுகள், விதிகள் எனப் பார்த்தோம். இவற்றை மட்டும் வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. இவற்றைப் பயன்படுத்திப் பார்க்கத் தெரிந்திருக்க வேண்டும். திரும்பத் திரும்ப செய்து பார்க்கும் பயிற்சி ஒன்றிலேயே தங்கியிருத்தலை மென்திறன் என வரையறுக்கலாம். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல, தண்டவாளத்தினது இரு கோடுகள் போல ஒருவருடைய வாழ்க்கைக்கு இரண்டுமே அவசியமானதாகும். வன்திறனைப் பற்றி அதிகளவிலான விளக்கம் அவசியமில்லை எனினும் இது அளவிடக்கூடியது ஆனால் மென்திறனை அளவிடுவது கடினம். மென்திறனென்பது ஒருவருடைய நடத்தை (Behaviour) எண்ணங்கள் அல்லது நினைப்பு (Attitude) மற்றும் ஆளுமை (Personality) என்பவற்றில் தங்கியுள்ளது. இன்னும் விரிவாகப் பார்த்தால்மென்திறனென்பது ஒருவரின் உள்ளக்கிடக்கையை அறிந்து கொள்வது எனலாம். ஒருவருடைய விவேகம் அவர் செய்யும் செயல்களிலேயே முழுக்க முழுக்கத் தங்கியிருக்கிறது அல்லவா? இதற்கு மென்திறனுடைய ஆளுமை அதிகளவிலேயே தேவைப்படுகின்றது. வன்திறனை கற்றலினால் விருத்தி செய்து கொண்டு போகலாம். ஆனால் மென்திறனைப் பட்டறிவினால், அனுபவத்தினால் இன்னும் செய்து, பழகிப் பார்த்து மட்டுமே விருத்தி செய்ய முடியும்.

ஆசிரியர் என்பவர் வன்திறனையும் மென்திறனையும் உள் வாங்கிய பெருமைக்குரியவர்

ஒரு சிறந்த ஆசிரியர் என எப்படி அழைக்கின்றோம். அவரிடம் நிறையவே கல்வியறிவு, புலமை, ஆளுமை கவர்ச்சி இவையனைத்தையும் கொண்டிருப்பதாலன்றோ. தான் கற்றுத் தேர்ந்ததை, இன்னும் புதுவிடயங் களை மாணவர்களுக்கு அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் தனது ஆளுமையைப் பயன்படுத்தி இலகுவாக, இயைபாக விளங்கப்படுத்துதல் எனலாம். இதில் அனுபவத்தின் பங்களிப்பு அளப்பரியது. தலைசிறந்த புலமையாளர் எனும் போது அவருக்குள்ளே உள்ள ஆளுமை, அவருடைய நடத்தை மற்றும் அவர் கொண்டிருக்கும் நல்ல எண்ணங்கள் இவையனைத்தினதும் சேர்க்கை எனவே பொருள்படுகின்றது. அங்ஙனமாயின் இப்படியொரு கேள்வியை உங்கள் பால் நீங்களே கேட்டுப் பார்க்கலாமா?

நான் ஒரு சிறந்த ஆசிரியனா?
நான் ஒரு சிறந்த துறைத் தலைவனா?
நான் ஒரு சிறந்த அதிபரா?

இப்படியான வினாக்களை ஒவ்வொருவரும் தம்மை நோக்கிக் கேட்டுப்பார்த்தால் இதற்கான விடை யைத் தேடியறிந்து கொள்ளலாம். இன்னும் தங்களைப்பற்றியதொரு அளவீடு (Self Assessment) அவசியம் ஒவ்வொருவரிடமும் காலத்திற்குக் காலம் இருத்தல் மிக முக்கியம். அளவீடு செய்து தான் பாருங்களேன்.

நீங்கள் யார்? அல்லது நான் யார்?

கேட்கும் கேள்வி என்னவோ சுருக்கமானதும் மிக எளிமையானதுமாகத் தெரிந்தாலும் இதற்கான விடையைக் கண்டு பிடிப்பது இலகுவானது அல்ல. இது ஒரு நேர்முகத்தேர்விலே பொதுவாக வினவப்படும் வினாக்களில்ஒன்று என்றாலும் இதற்குள்ளே பொதிந்திருக்கின்ற விடயங்கள் பெரியவை. என்ன விடையைத் தேடியெடுத்து விட்டீர்களா? நீங்கள் கண்டு பிடித்த விடையைக் கூறினால் அது உங்களை உருவகப்படுத்துமா? வாருங்கள் நீங்கள் உங்களைப் பற்றி அறிய வழியொன்று உண்டு.

இதனை ஆங்கிலத்தில் SWOT ANALYSIS என்பார்கள். S- Strength என்பது (பலம்), W- weakness (பலவீனம்), O-Opportunities (வாய்ப்புகள்) மற்றும் T- Threat (சவால்கள்) என பொருள்படும். ஒவ்வொருவரும் அவர் மாணவராக, ஆசிரியராக, அதிபராக இன்னும் எந்த வகை தொழில் செய்பவராக இருந்தாலும் அந்த தொழிலில் கல்வியில் முன்னேறுவதற்கு SWOT உதவும்.

உங்களுக்கு நீங்களே வழிகாட்டி! எப்படி?

உங்களுடைய பலம் என்ன? பலவீனங்கள் எவை? உங்கள் முன்னுள்ள வாய்ப்புக்கள் எவை? வாருங்கள் எழுதிப் பார்ப்போம். ஒரு வெற்றுத்தாளை நான்காக மடியுங்கள் இப்போது அதன் ஒரு பக்கத்தில் நான்கு பெட்டிகள் மடித்ததால் வந்திருக்கின்றதல்லவா! கீழே தரப்பட்டது போன்று எழுதுங்கள். வழமையாக காகிதமொன்றின் இடதுபக்க மேல் மூலையொன்றிலிருந்து எழுதும் பழக்கமுடையதால் அந்த பெட்டியை **பலம்** என தலைப்பிடலாம். வலது பக்க மேல் மூலைக்கு பலவீனம் எனவும், கீழே இடப்பக்கத்தை வாய்ப்புக்கள் எனவும், இறுதியும் வலப்பக்க கீழ்ப்பெட்டியை சவால்களெனவும் எழுதுங்கள். இப்பொழுது இந்த பெட்டியை நிரப்புங்கள். நீங்கள்யார்? உங்களைப் பற்றி விமர்சிக்க விழையும் நீங்கள் நான்கு பெட்டிகளையும் நிரப்புவதில் இன்னும் சங்கடப்படுவதாகவே தெரிகிறது. உங்களைப்பற்றி உங்களுக்கே தெரியவில்லை எனில் மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்? உங்களைப்பற்றிய விடயங்களை இரகசியமானதாக வைத்திருங்கள். இன்னொருவருடன் கலந்துரையாடி நீங்களே உங்களைப்பற்றி அளவிடாதீர்கள். ஏனெனில் உங்களது பலவீனம் அவர்களுக்கு பலம். உங்களது பலம் இன்னொருவருக்கு பலவீனம். அங்ஙனமேயானால் எக்காரணங் கொண்டும் உங்களது பலத்தில் குறை வரலாகாது. மாறாக பலவீனத்தைப் பலமாக்குங்கள். நன்றாகப் பாருங்கள்! கூர்ந்து கவனித்துப்பாருங்கள்! உங்களது **பலவீனம்** இதனுள்ளே **பலம்** ஒளிந்திருக்கின்றது. பலவீனத்தை இனங் கண்டு பலமாக மாற்றுங்கள். வாய்ப்புக்களை பயன்படுத்தி பலத்தை பலமடையச் செய்யுங்கள். சவால்கள் இடந் தெரியாது ஓடி விடும். கீழுள்ள விளக்கவுரு 1 அதனை விளக்குகின்றது.



விளக்கவுரு 1 SWOT(ANALYSIS) பகுப்பாய்வு.

இந்த SWOT பகுப்பாய்வை ஒரு வருடம் கழித்து மீண்டும் செய்து பாருங்கள்! பலத்தை இன்னும் அதிகரிக்க முடிந்ததா? கிடைத்த வாய்ப்புக்களனைத்தையும் சரியாகப் பயன்படுத்தினீர்களா? அதுவே உங்களது பலம்! பலம் கூடினால் பலசாலி என்று பொருள். அதனுடன் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இதை இப்படி பாடல் வரிகளாக்கியிருக்கிறார்கள்.

உன்னை அறிந்தால் நீ உன்னையறிந்தால்
உலகத்தில் போராடலாம்.
(உன் நிலை) தாழ்ந்தாலும், உயர்ந்தாலும்
தலை வணாங்காது நீ வாழலாம்.....

உங்களைப் பற்றி நீங்கள் விமர்சித்ததை, அளவீடு செய்ததை திரும்ப ஒரு தடவை வாசித்துப் பாருங்கள். அனைத்து வன்திறனையும், மென்திறனையும் வரிசைப்படுத்தியிருக்கிறீர்களா!இல்லையா? மென்திறன்கள் எவை என இன்னுமா புரியவில்லை வாருங்கள் பார்ப்போம்.

மென்திறன்கள் அடிப்படையில் இரண்டு வகைகள்!

1. தங்களுக்கிடையிலானது (Interpersonal)
2. தனக்குள்ளானது (Intrapersonal)

I. **தங்களுக்கிடையிலானது:** (Interpersonal)

இருவர் அல்லது அதற்கு மேலானவர்களுக்கிடையிலான உறவு சார்ந்த திறனைக் குறிக்கும். இதிலடங்கும் திறன்களனைத்தும் ஒன்று இன்னொன்றுடனான தொடர்பு (Interactive) சம்பந்தமானது. இந்தத் திறன்கள் ஒருவருடைய வாழ்க்கைக்கும், தொழில் தேடலுக்கும் பின் அதன் விருத்திக்கும் மிகவும் அவசியமானவை. ஆசிரியர் ஒருவருக்குத் தேவையான மென்திறன்கள் இவை. எந்த விதமான மென்திறன்களையும் விருத்தி செய்யாது வெறுமனே பரீட்சைப் பெறுபேறுகளில் மாத்திரம் நம்பிக்கை வைத்து தொழில் தேடுவதிலோ அல்லது சிறப்பாக கிடைத்த தொழிலை செய்து முடித்தலிலோ வெற்றி பெற முடியாது. இதனைப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகள், தொழில் நாடி நிற்போர் இன்னும் கிடைத்த தொழிலை சிறப்புற, மகிழ்வாக செய்ய விரும்பும் அனைவரும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். இந்த பிரிவின் கீழாக பல மென்திறன்களை வரிசைப்படுத்தலாம்.

1. தொடர்பாடல் (Communication)
2. உறவு முறையை உருவாக்குதல் (Relationship Building)
3. இயைவாக்கமடையுந் திறன் (Adaptability)
4. கூட்டாக அல்லது குழுவாக வேலை செய்தல் (Team Work)
5. நட்புத்தன்மை (Friendliness)
6. ஆடையணிதல் (Attire)
7. நேர்த்தியாயிருத்தல் (Grooming)

II. **தனக்குள்ளானது** (Intrapersonal Skills)

இந்த வகையினுள் உள்ளடக்கப்படும் மென்திறன்கள் தனிப்பட்ட ஒருவருடைய விருத்தி சார்ந்தவை. ஒவ்வொருவரும் தன்னுடைய மேன்மையைக் கருத்தில் கொண்டு அதிலுள்ள மென்திறன்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இந்தப் பிரிவிலுள்ள மென்திறன்களாக பின்வரும் உதாரணங்களை நிரற்படுத்தலாம்.

1. திட்டமிடுதல் அல்லது ஒழுங்கமைத்தல் (Planning and Organizing)
2. முன் முயற்சி செய்தல் (Taking Initiative)
3. இடரினும் தாங்குதல் (Stress tolerance)
4. புத்தாக்கத்திறன் (Innovation) அல்லது புதுமை பற்றிய எண்ணங்கள் (Creation thinking)
5. நேர முகாமைத்துவம் (Time Management)
6. கற்றலுக்கான ஆர்வம் (Willingness to Learn)
7. ஊக்கமுடையதாக வெளிக்காட்டுதல் (Showing enthusiasm)

மேலே குறிப்பிட்டுள்ள மென்திறன்களனைத்தும் தனிப்பட்ட ஒருவருடைய ஆளுமை, அவருடைய செயற்பாடு இவையனைத்தையும் நெறிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன அல்லவா. இவையனைத்தையும் முழுமையாக எவரிடம் காண முடிகிறதோ அவரிடம் உள்ள சிறப்புக் குணங்களாக, திறமைகளாக இனங் காணப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுவார். ஒரு நேர்முகப்பரீட்சையாயின் அவருக்குரிய வெற்றி வாய்ப்பும், தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவராயின் அவர் செய்யும் தொழிலின் விவேகமும், சிறப்பும் இலகுவாக இனங்காணப்பட்டு விடும்.

இத்தகைய மென்திறன்களை மாணவர்கள் பயின்று கொள்வதற்கான வாய்ப்பு பாடசாலையிலிருந்து வழங்கப்படுதல் சிறந்தது. வாய்ப்புகள் பல இருப்பினும் மாணவர்கள் அதில் ஈடுபட்டு மென்திறன்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு முழுமை பெறாது இருக்கின்றது. இதனாலேயே இவ்வாறான மென்திறன்களைப் பாட அலகுகளுக்குள்ளேயே உள் வாங்கி பாடத்தை கற்கும் போது அதனுடன் சேர்த்து மென்திறன்களையும் பயின்று, பயிற்சி செய்ய ஏதுவாகும். இந்த நடைமுறை பல்கலைக்கழகத்திலிருந்து பாடசாலை வரை கருக் கொண்டுள்ளது.

இனி மேலே வரிசைப்படுத்திய மென்திறன்கள் பற்றி சற்று விரிவாக ஆராய்வோம்.

1. தொடர்பாடல் (Communication)

அனைத்து மென்திறன்களிலும் முன்னிலையில் இருக்க வேண்டியது தொடர்பாடல் எனும் மென்திறன்.சிறந்த தொடர்பாடல் ஒருவரை அனைவருக்குள்ளும் இனங்காண உதவும். சிறந்த தொடர்பாடலுக்குரியவர் குழுவாக செயற்பட முடியும், உறவு முறைகளை உருவாக்கிடவும், விருத்தி செய்யவும் முடியும். தொடர்பாடல் முறையை இருவேறு பிரிவுகளாக பிரிக்கலாம்.

அ) எழுத்து மூல தொடர்பாடல் (Written Communication)

ஆ) வாய்மூல தொடர்பாடல் (Oral Communication)

இரண்டுமே மிகவும் அவசியமானவை. எழுத்து மூல, வாய்மூல தொடர்பாடலில் மும்மொழி களிலும் நாம் எத்துணை பாண்டித்தியம் பெற்றிருக்கின்றோமோஅதுவே எமது பலம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எமக்கிருக்கும் மொழி ஆளுமை (Language Command) எம்மைத் தினந்தோறும் வெற்றியின் படிக்கட்டுகளில் ஏற்றிச் செல்லும். குறிப்பாக ஆங்கில மொழியில்எமக்கிருக்கும் ஆளுமை பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கவும், சிறப்புத் தேர்ச்சி பெறவும் எம்மை வழிநடத்தியே செல்லும். மொழிகளிலுள்ள ஆளுமை பயிற்சியின் மூலமே வரும். **சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்** என்பதன் பொருளும் அதுதானே. தாய் மொழியில் எந்தளவிற்கு எங்களிடம் ஆளுமை உண்டு? எனக்குக் கிடைத்த வாய்ப்புகளனைத்தையும் சரியாகப் பயன்படுத்தியதால் இன்று இக்கட்டுரை மூலமாக எழுதும் இக்கைகள் உங்களனைவரையும் சந்தித்திருக்கின்றன. வாருங்கள் இளையவர்களே! உங்களுக்கான விடிவு காலம் அதோ தெரிகிறது. நாமெல்லோரும் சாதனை படைத்திட பல வழிகள் உண்டு. அதிலொரு வழியிது எழுத்து, பேச்சுத்துறை. எக்கால கட்டத்திலும் சோர்ந்து போய்விடாதீர்கள்.

ஆங்கில மொழியில் சரளமாக உரையாட, எழுத அந்த மொழியறிவு அவசியம் வேண்டும். அதிலும் ஆராய்ச்சிக்கட்டுரை எழுதுபவர்களுக்கு குறிப்பாக விஞ்ஞானி ஆகத் துடிப்பவர்களுக்கு விஞ்ஞான மொழி யறிவு (Scientific Language Command) அவசியந்தேவை. சிறந்த ஒரு ஆய்வாளன் அதனை ஏனையோர் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் எழுதினாலேயே அல்லது விளங்கப்படுத்தினாலேயே அவரது கண்டுபிடிப்பு மற்றையவருக்கு விளங்கும். இதனை இப்படிக் கூறுவார்கள். "A good researcher should be a good presenter"

பல்வேறு மொழிகளில் சரளமாக உரையாட பயிற்சி ஒன்றே தேவை. ஆங்கில மொழியிலாயின் ஆங்கில மொழிமூல பத்திரிகைகளை வாசியுங்கள். வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான். வானொலி, தொலைக்காட்சியில் வரும்BBC மற்றும் Voice of America, Discovery Channel போன்ற பயனுள்ள

சனல்களூடாகவும் கிரகித்தலையும், பேச்சு உச்சரிப்பையும் விருத்தி செய்து கொள்ளலாம். இன்னும் 20 பேர் கொண்ட சிறிய கழகமமைத்து அதனூடாக அனைவரும் பயிற்சி செய்யலாம். WWW.to astmasterint ernational.org எனும் இணையத் தளத்திலிருந்து ஆங்கிலத்தில் சிறந்த உரையாடலுக்கான பயிற்சியையும், தலைமைத்துவத்திற்கான பயிற்சியையும் பெற வாய்ப்புகளுண்டு. யாழ்ப்பாணத்தில் Jaffna toastmasters எனும் கழகம் உருவாக்கப்பட்டு பலர் இதிலிணைந்து தமது பேச்சாற்றலை குறுகிய காலத்தினுள்ளேயே விருத்தி செய்துள்ளனர். இன்னும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் மாணவருக்கானGavel Club இனை உருவாக்கி ஆங்கிலத்தில் அவர்களது பேச்சாற்றலை விருத்தி செய்யலாம். அடிமேல் அடி அடித்தால் தானே அம்மியும் நகரும்.

வாய்மூல தொடர்பாடல், தொலைபேசிகளினது பாவனையையும் பயன்பாட்டினையும் சிறப்பாகப் பெற உதவும். பேச்சுத் திறனுள்ளவர் இந்த உலகத்தின் எந்த மூலையிலும் வாழ்ந்து காட்டலாம் என்றார்களே அது இது தான்.

அண்மைக் காலமாக நடந்து முடிந்த நேர்முகத்தேர்விலே வாய்மூல தொடர்பாடல்Verbal Communnication க்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்ததனையும் அநேகமாக பட்டதாரி மாணவமாணவியர் இவ்வாறான தொடர்பாடலில் குறிப்பாக ஆங்கில மொழி உரையாடல் மூலமான தொடர்பாடலில் சித்தியடையவில்லை எனும் குறைபாடு காணப்பட்டது. எனவே தான் இவ்வாறான பட்டதாரிகள் கற்றுத் தேர்ந்த பீடங்களில் இவ்வாறான தொடர்பாடலுக்கு வாய்ப்புக்கள் அதிகமாகவே வழங்கப்படல் வேண்டும். வாருங்கள் எம்மினிய உறவுகளே! இனிவரும் எங்கள் சந்ததி தொடர்பாடலில் சிறப்புற எங்களாலான உதவியை செய்வோமா?

ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதுவதற்கு உதவ என வளர்முக நாடுகளிலுள்ள ஆய்வாளர்களுக்கென www.authoraid.info மற்றும் www.inasp.info ஆகிய இணையத்தளங்களும் இலவசமான பாடங்களை தருவதனையும் கவனத்திற் கொள்க

2. **உறவு முறையை உருவாக்குதல்**

நான் என்ற அகங்காரத்திலிருந்து நாம் எனும் கூட்டுறவு வாழ்க்கைக்குள் பயணிப்பதனால் உறவு முறையை உருவாக்க முடியும். வீட்டிலே நாம் கொண்டிருக்கும் சிறந்த உறவு முறை போல பாடசாலையில், பல்கலைக்கழகத்தில் சகமாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடனும் இன்னும் பணிபுரியும் சக உத்தியோகத்தினருடனும் சுமுகமான உறவைப் பேணுதல் என்பதாகும். முரண்பாடுகளைத் தவிர்த்து நல்ல உறவினைக் கட்டியெழுப்புதல் இங்கு கவனத்திற் கொள்ளத் தக்கது.

3.**இயைவாக்கமடையும் திறன்** (Adaptability)

நாம் வாழும் இடத்திற்கேற்ப எம்மை இயைவாக்கிக் கொள்ள பழகுதல் வேண்டும். வசதி வாய்ப்பு என்பது நாம் எதிர்பார்த்திருக்கும் அளவில் இல்லாத போது எம்மைச் சுதாகரித்துக் கொண்டு இருக்கின்ற வசதிக்கேற்ப எம்மை மாற்றி இயைவாக்கும் திறனுடையவர் வாழ்க்கையில் எப்போதுமே வசந்தம் வீசும். கல்வி கற்குமிடமாயினுஞ் சரி இருப்பதை வைத்து சிறப்பாக செயற்பட எம்மை நாமே இயைவாக்கிக் கொள்ள முடியுமா? ஆ ம் என்றால் இங்கே உங்களுக்கான வெற்றிக்கனி கனிந்திருக்கும்.

4.**குழுவாக வேலை செய்தல்** (Team Work)

தனித்து வாழுதல், தனிமை என்பவற்றை தவிர்த்து குழுவாகப் பணிபுரிதலில் புரிந்துணர்வும், ஊக்கமும் நிறைந்திருக்கும். இதனைப் பாடசாலைகளில் அதிகளவில் செயற்படுத்துவதைக் காண முடிகிறது. ஒருவருடைய எண்ணத்தை இன்னொருவர் பகிர்ந்து புரிந்து கொள்வதன் மூலமும் ஒவ்வொருவருக்கென வேலையைப் பகிர்ந்து (Division of Labour) கொள்வதனையும் குழுவான வேலையாற்றல் மூலமாக சிறப்பாக வெளிக்கொணரலாம். ஒருவரது திறனை இன்னொருவர் மதிப்பதும் புரிந்துணர்வும் இதன் மூலமாக

வெளிப்படும். இங்கே விட்டுக் கொடுத்து பணியாற்றுதல் என்பது முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இந்த பழக்கத்தைப் பாடசாலையில் சிறப்புற கற்றால் பின்னர் அது அவரின் மேற்படிப்பில், செய்யும் தொழிலில் இன்னும் வாழும் வாழ்க்கைக்கு வரஞ் சேர்த்திடும். ஒரு நல்ல சமூகக் கட்டமைப்புக்குள் வாழ்வதற்கான அங்கீகாரத்தையும் தந்திடும். தேனீக்கள், கறையான்கள் இவை சிறிய பூச்சிகளானாலும் அவற்றிடமிருந்து சமூகக் கட்டமைப்பை நாங்கள் படிக்க இடமுண்டு.

5. **நட்புத்தன்மை** (Friendliness)

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் முக்கியமான உறவு முறையாக நட்புத்தன்மை அமைகின்றது. நட்புணர்வுடன் வாழும் வாழ்க்கையே குடும்பத்தில், கல்வி கற்கும் கல்விச் சாலைகளில் இன்னும் தொழில் புரியும் இடத்தில் மகிழ்ச்சியை அள்ளித் தரும். மனம் தினமும் குதூகலித்திருக்க நட்புத்தன்மை, நட்புறவு இனிதே பேணப்படவேண்டும். குடும்பத்தில் உள்ள உறவு முறைமைக்குள் வயது வேறுபாடின்றி இருப்பினும் நட்புணர்வு மேலோங்கியிருந்தால் புரிந்துணர்வு முழுமையாகவே வெளிப்படும், செயற்படும். நிறைவான வாழ்க்கையின் அத்திவாரமாக நட்புணர்வு இருக்கும் என்பதனால் நட்புத்தன்மையை வளர்த்தெடுக்கும் செயற்பாடுகளுக்கு பாடசாலையில், குடும்பத்தில் ஊக்கமளிப்பது நல்லது. குரோதங்களையும் பழிவாங்கும் தன்மையையும் இளையவர் மனங்களில் விதைக்கக் கூடாது. பல்லின மக்களைக் கொண்ட இத்திருநாடு நட்புத்தன்மையை முழுமையாக உள் வாங்கும்போது மட்டுமே சுபீட்சமான ஒரு நாடாக மிளிருமல்லவா! வாருங்கள் முடிந்தவரை நல்ல நண்பர்களாக வாழப் பழகுவோம்.

6.**ஆடையணிதல்** (Attire)

இது அனைவரையும் சரிசமமாகப் பார்ப்பதற்கும், ஒழுக்க சீலராக வளர்த்தெடுப்பதற்கும் அவசியம் தேவையான மென்திறனாகும். பாடசாலைக்கென சீருடை இருப்பது அனைத்து மாணவ மாணவியரையும் ஒரு குடையின் கீழ் முன்னிறுத்தி அனைவரும் சரிசமம் என எடுத்துரைக்க வழி செய்யும். ஆடையணிதல் தீய மனதின் கவர்ச்சியான வெளிப்பாடானால் அது ஒரு நிறுவனத்தைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க உதவாது. எளிமையான உடை **கந்தையானாலும் கசக்கிக்கட்டு** என்ற பழமொழிக்கிணங்க சுத்தமான உடையணிதல் எனப் பொருளாகின்றதல்லவா. நல்ல மனம் போல வாழ்க்கை அது போல அதன் வெளிப்பாடாக உடைத்தெரிவும் அதனை அணிதலும் இருக்க வேண்டும்.

7.**நேர்த்தியாயிருத்தல்**

சுத்தமானதாக, ஒழுக்கமானதாக இருத்தலை நேர்த்திக்கு உதாரணமாக்கலாம். ஒரு வகையில் திட்டமிட்டு வாழும் வாழ்க்கையினூடாக நேர்த்தியான வாழ்க்கையை நெறிப்படுத்தலாம். ஆசிரியர் நேர்த்தியானவராக இருந்தால் மாணவர்களை அவ்வழிக்கு இட்டுச் செல்லலாம். எதற்குமொரு வழிகாட்டி அவசியம் அல்லவா?

II. **தனக்குள்ளான மென்திறன்கள்**

இவை தனிப்பட்ட ஒருவருடைய ஆளுமையை, நடத்தையை நல்ல எண்ணங்களை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.தனக்குரிய எதிர்காலத்தை, தனது கல்விக்குரிய பின் புலத்தை வாழ்க்கையை தீர்மானிப்பதற்கான திட்டமிடலில் இது ஆரம்பிக்கிறது. அன்றைய தினம் அடுத்த நாள் நிகழ்வுகளைத் திட்டமிட்டு செயற்படுத்த ஆரம்பித்தாலே தனது வாழ்க்கைக்குரிய திட்டமிடலை மேற்கொள்ள முடியும்.

எந்த வேலையாயினும் சரி முன்முயற்சி எடுத்தல் , அதனைச் செய்து பார்க்க விரும்புதல் ஒருவருடைய தொழிற்றிறனை மேம்படுத்த உதவும். புதிய எண்ணங்கள், ஒன்றை அலசி ஆராயும் தன்மை என்பன ஒருவருடைய புத்துணர்வைத் தூண்டி விடும் உபாயங்கள். நல்ல கனவு, நல்லதையே நினைத்தல் இவை மனதுக்கும் உடலுக்கும் உறுதியைத் தரும். அதிலும் தன்னம்பிக்கையை வளர்ப்பதில் பெரிதும் பங்கு வகிக்கும்.

நேர முகாமைத்துவம் அவசியமாகத் தேவைப்படுகின்ற மென்திறன்களிலொன்று. இழந்த நேரத்தைத் திரும்பப் பெற்று விட முடியாது. வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையிலும் அதற்கான நேரத்தை ஒதுக்கியே வாழுதல் நல்லது. ஒரு தினத்தினது, ஒரு கிழமைக்குரிய, ஒரு மாதத்திற்குரிய இன்னும் ஒரு வருடத்திற்கான நிகழ்வுகளை நேர அட்டவணைப்படுத்தினால் செய்யுந் தொழிலும், வாழும் வாழ்க்கையும் மேன்மையுறும். எல்லாம் நேரஞ் சரியாக இருந்தால் இது தானாக நடக்கும் என்பார்களே. கற்றலில் உள்ள ஆர்வம் அதற்கான ஊக்கம் இவையனைத்தும் நேரத்தோடும் இணைத்துப் பார்க்கப் பட வேண்டியன. ஆசிரியர்கள் நேரத்தைச் சரிவர கடைப்பிடிப்பதால் மாணவர்களையும் அதன்படி ஒழுக வைக்கலாம். சொல்வது சுலபம். ஆனால் செய்வது கடினம் என்கிறீர்களா?முயன்று பாருங்கள்! இயலாதது என்று எதுவுமேயில்லை.

கவிப் பேரரசு கண்ணதாசனின் கவிதைகளை இரவல் வாங்கி அதில் எனக்குள்ளிருந்த எண்ணங்களையும் சிறிதளவில் சேர்த்துக் கலந்தெடுத்த கவிதை இது. கவிதையாக உருக் கொண்டு கதையாகி விட்டது.

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான் !
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப்படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
குடும்பம் என்பது யாதெனக் கேட்டேன்
குலவிப் பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது என்னெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
நூற்றாண்டு என்பது யாதெனக் கேட்டேன்
மயிலணி சைவமகாவித்தியாலயம் என்றான் இறைவன்!
பாடசாலை என்பது யாதெனக் கேட்டேன்
மயிலணியைக் காட்டி அது போலவென்றான்!
அனுபவத்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி(நூற்றாண்டு)
அனுபவம் என்பதே நான் தான் என்றான்!

பாடசாலை என்பது ஆலயத்திற்கொப்பானது என முன்பு குறிப்பிட்டது ஞாபகத்திற்கு வருகின்றதல்லவா! மயிலணியின் இருப்பிடமும் பல ஆலயங்கள் . அங்கே வரமருளும் தெய்வங்களுடன் அறிவருளும் ஆசிரிய பெருந்தகைகளுமுண்டு. மயிலணியில் வன்திறன்களும், மென்திறன்களுமிணைந்ததால் மயிலணி இன்று சரித்திரமாகிய ஒரு வரலாற்றுச் சின்னம். சூழலியலாரின் பார்வையில் மயிலணி ஒரு ஆல மரம். நூறு வருடங்களாகிறது இந்த மரத்தின் விதை சுன்னாகம் மண்ணில் விழுந்து. விழுந்த விதை வீரியமான விதையானதால் முளைத்து மரமாகிக் கிளைகளை அகல விரித்து இடர்கள் பலவற்றை தாண்டித் தானும்

வாழ்ந்து அதன்நிழலில் வந்தமர்ந்தவர்கள் அனைவருக்கும் வாழ்வளித்து உயர்ந்து நிமிர்ந்து நிற்கிறது. பலர் வாழ்ந்த வீடு இது என்பதால் இன்று நூற்றாண்டு நிகழ்வுக்கு சொந்தக்காரராகி விட்டது. வாழ்ந்து சரித்திரமாகி விட்டது. அதன் சரித்திரத்தில் இன்னும் வீறு கொண்டு எழுதத் துடிக்கும் இக்கைகளுக்கு புத்துணர்ச்சி கிடைத்ததுடன் அதன் புகழ் பாடக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தை எண்ணி மன உவகையடைகின்றேன். இம் மண்ணின் மக்களுக்காகவே மயிலணி வாழ்ந்தாள், வாழுகின்றாள், வாழப்போகின்றாள். அவளது வாழ்க்கை அனைவருக்கும் சிறந்ததொரு வழிகாட்டி. அவளின் நிழலில் எனக்குக் கிடைத்த இந்த சிறிய எழுத்துச் சுகத்திற்காக அதனது அதிபர் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றிகள்!

வாருங்கள் எனதருமை உறவுகளே! மயிலணியின் வாழ்க்கையை உதாரணமாக்கி சிதைந்து நலிந்து போன ஏனைய பாடசாலைகளையும் வாழ்ந்து பார் என்போமா? மயிலணி எங்களூர்க் கல்விச் சாலைகளுக்கும்,பல்கலைக்கழகத்திற்குமேஓர்முன்னுதாரணம். வாழ்ந்த வாழ்க்கையின் வரலாறு எங்கள் ஒவ்வொருவருக்கும் அறிந்து பின்பற்றும் வழித்துணையாகி எமக்கான வழிகாட்டியாகி ஒளிர்ந்து கொண்டேயிருக்கும் – வானில் என்றுமே ஓர் விடிவெள்ளியாக

வாழ்க நின் புகழ், வளர்க நின் தொண்டு!

மேலே செல்லுங்கள்

சளைக்காத மனம்!
சளைக்காத மனத்தைப் போல
வேறு சக்தியில்லை திறமை மட்டும் போதாது.
திறமையிருந்தும் தோற்றுப் போனவர்கள் ஏராளம்
புத்திசாலித்தனம் மட்டும் போதாது
"பலன் காணாத மேதை" என்பது பழமொழி
படிப்பு மட்டும் போதாது படித்தும்
பாதை தவறியவர்களால்
இவ்வுலகம் நிரம்பியிருக்கிது.
சளைக்காத மனமும் உறுதியும் தான்
வெற்றியைத் தேடித்தரும் சாதனங்கள்

– கால்வின் கூலிட்ஜ் –

ஆக்கத்திறனை மேம்படுத்தும் கற்பித்தல்

கலாநிதி மா.கருணாநிதி
கல்விப்பீடம், கொழும்புப்பல்கலைக்கழகம்

மாணவர்களின் ஆக்கத்திறன் சார்ந்த உள்ளார்ந்த வளத்தை விருத்தி செய்தல் ஆக்கத்திறனை மேம்படுத்தும் கற்பித்தலின் முக்கிய நோக்கமாகும். ஆக்கத்திறனை விருத்தி செய்யும் நோக்குடைய ஆசிரியர்கள் மரபுவழிக் கற்பித்தலில் கூடுதலான நேரம் செலவு செய்ய விரும்ப மாட்டார்கள். மாணவர்களுக்கு ஆர்வந் தரக்கூடிய பிரச்சினைகளை முன்வைத்து அவற்றுக்கும் பல்வேறு வகையான தீர்வுகளைக் காணுமாறு ஊக்குவிப்பார்கள். பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கத்தூண்டும் பொழுது பொருத்தமான தீர்வுகளைக் காண்பதற்கேற்ற சவால்களை எதிர் கொள்ளத் தயாராக இருப்பார்கள். அவ்வாறான சூழமைவில் மாணவர்கள் தமது ஆற்றலையும் தமக்குக் கிடைக்கும் வளங்களையும் சிறந்த முறையில் பயன்படுத்த முயற்சிப்பர். இத்தருணத்தில் ஆசிரியர், மாணவரின் ஆர்வத்தினைத் தூண்டி குறித்த சவால்களை எதிர் கொள்ளத் தக்க வகையில் வசதிப்படுத்தும் பொழுது மாணவரது சிந்தனை வளப்படுத்தப்படுவது மட்டுமன்றி ஆக்கத்திறனை மேம்படுத்தும் கற்பித்தல் நிகழ்வதற்கும் வாய்ப்புகள் உண்டாகின்றன. மேலும் வகுப்பறையில் கற்றல்– கற்பித்தலுக்கான கவிவு நிலையிலும் மாற்றங்கள் நிகழ்வதோடு மாணவர்களே தமது ஆசிரியர்களாகவும் மாறுவர்.

இலங்கையின் முறைசார் கல்வியில் புதிய கலைத் திட்டத்தின் அறிமுகத்துடன் செயற்பாடுகளுடன் கூடிய தேர்ச்சிமையக்கற்பித்தலானது உண்மை வாழ்க்கை அனுபவங்களை பாடவிடயங்களுடன் இணைத்துக் கற்பித்தலை வலியுறுத்திவருகின்றன. கட்டுருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5ம் முறையானது முறைசார் அறிவிலும் பார்க்க அறிவைப் பெறும் வழிமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. மாணவர்கள் அறிவைப்பெறும் செயல்முறைகளை வாங்கிக் கொள்ள வேண்டும். அதற்குப் பொருந்தும் வகையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் வழங்கப்படுதல் வேண்டும். அவை வகுப்பறையில் நிலை மாற்றம் பெறுதல் வேண்டும் என்பது இன்றைய எதிர்பார்ப்பாகும்.

கற்பித்தல் ஒரு ஆக்கத்திறனுடன் கூடிய செயற்பாடு என்கையில் ஆசிரியர் மற்றும் மாணவர் மத்தியில் உரிய முறையில் சிந்தனை விரிவாக்கம் உருவாவதற்கு வகுப்பறையில் இடமளிக்கும் போது தான் புதிய கலைத்திட்டத்தின் குறிக்கோள் வெற்றி பெறும். இலங்கையின் கல்வி முறைமையில் தராதர மேம்பாடு என்ற விடயம் ஒவ்வொரு கலைத்திட்டச்சீர்திருத்தத்திலும் முன்வைக்கப்படும் விடயமாகும். அதற்கான வழிமுறைகளும் கொள்கையளவில் சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகின்றன. ஆயினும் அவற்றை நடைமுறைப் படுத்துவதில் வகுப்பறைகள் எவ்வளவு தூரம் வெற்றி காண்கின்றன என்பது முக்கிய வினாவாகும். வகுப்பறைகளில் மாணவரின் ஆக்கத்திறனை விரிவுபடுத்தும் வழிமுறைகள் கற்பித்தல் செயற்பாடுகளில் பின்பற்றப்படாவிட்டால் கற்றலும் கற்பித்தலும் சோதனையை இலக்காகக் கொண்ட செயலாகவே மாறும்.

இக் கட்டுரையானது ஆக்கத்திறனை மேம்படுத்தும் கற்பித்தலைமேற்கொண்டு மாணவரை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்ற விடயம் பற்றி விரிவாக ஆராய்கின்றது.

* ஆக்கத்திறனை மேம்படுத்தும் கற்பித்தல்

ஆக்கத்திறனை மேம்படுத்தும் கற்பித்தலானது பிரச்சினை தீர்ப்பதற்கான கற்பித்தலாகவும், புதிய சிந்தனைகளைப் பிறப்பிக்கும் கற்பித்தலாகவும் அவ்வாறான ஆற்றல்களை மேலும் மேம்படுத்தும் கற்பித்தலாகவும் அமைகிறது. ஒரு பாடத்தில் இடம்பெறுகிற சகல விடயங்களையும் இலகுபடுத்த முற்படுவது ஆக்கத்திறனுக்கான கற்பித்தலாக அமையாது. வகுப்பறையில் கற்பிக்கப்படுகின்ற அனைத்து விடயங்களும் மிகத்தெளிவாக இருக்க வேண்டும் எனும் நோக்கில் எல்லாவற்றையும் இலகுபடுத்த வேண்டுமென ஆசிரியர்கள் பலர் கருதுகின்றனர். இத்தகைய அணுகுமுறை மாணவர்களுடன் அறிவைப்பகிர்வதற்கும்

கற்பிக்கும் விடயங்களை விளங்கிக் கொள்ளவும் உதவலாமாயினும் மாணவரின் சிந்தனையாற்றலைத் தூண்டுதல் மற்றும் ஆக்கத்திறனுக்கான நியதிகளை உருவாக்குவதில் தவறி விடுகின்றன. சிந்தனைக்குத் தடையாகவுள்ள காரணிகள் நீக்கப்படும் போது ஆக்கத்திறன் ஊக்குவிக்கப்படுகின்றது. மாணவரிடத்தில் ஆக்கத்திறன் செயற்பாடுகள் இடம் பெற்றாலும் அதற்குத் தடைகள் இருக்குமானால் அவை முழுமையாக வெளிப்படுவதில்லை. வகுப்பறையில் ஆசிரியரின் வசதிப்படுத்துகை மாணவரின் முழுமையான இயலுமை யைத் தூண்டவும் வெளிக்கொணரவும் ஏற்றவாறு அமைதல் வேண்டும்.

*** ஆக்கத்திறன் விருத்திக்குஉதவாத கற்பித்தல்**

பெரும்பாலான வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளில் ஆக்கத்திறன் விருத்திக்கு உதவாத விடயங்கள் பலஇடம் பெறுகின்றன. மரபு வழிக்கற்பித்தலில் நீண்ட காலமாக அழுத்தங் கொடுக்கப்பட்ட விடயமான மனனஞ் செய்தல், மீண்டும் மீண்டும் சொல்ல, செய்ய பழக்குதல் என்னும் விடயங்கள் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் கற்பித்தலாக அமைவதில்லை. உளவியலாளரின் கருத்துப்படி மனனஞ் செய்து ஒப்புவிக்கும் ஆற்றலும் ஆக்கத்திறன் சார்ந்தது என முன்வைக்கப்பட்டாலும் அந்த ஆக்கத் திறனானது படி நிலையில் தாழ்ந்ததாகவே கொள்ளப்படும். வழமையான செயற்பாடுகளுக்கு பயனுள்ள வழி முறையாக மனனஞ் செய்தல் அமையுமாயினும் ஒரு பிரச்சினை தொடர்பான புதிய அணுகுமுறை அல்லது குறித்த சந்தர்ப்பம் நோக்கிய பயனுள்ள பார்வை என்பதைத்தடை செய்துவிடுகிறது. மனனஞ் செய்வித்தல் மூலம் பல்வேறு விடயங்களையும் இறுக்கமான முறையில் இணைத்துக்கொள்ள உதவுமெனினும், குறித்த விடயத்தினின்றும் விலகிச்செல்ல இடமளிப்பதில்லை. ஆக்கத்திறனைப்பொறுத்தவரையில் புதிய தொடர்புகள் மற்றும் இணைப்புக்களை உருவாக்குவதில் இன்றியமையாதது. ஆக்கத்திறனை மேம்படுத்தும் ஆசிரியர் மனனஞ் செய்து ஒப்புவிக்கும் செயற்பாட்டினைக் கட்டாயப்படுத்தமாட்டார்.

ஆக்கத்திறனை மேம்படுத்தும் கற்பித்தல் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு அமைவதில்லை. மாணவர்கள் தமது நாளாந்த, வாராந்த, மாதாந்த மற்றும் பொதுப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப் பெறவேண்டும் என்பதனை மறுப்பதற்கில்லை. ஆயினும் ஆக்கத்திறன் வெளிப்பாட்டிற்குரிய குறிகாட்டியாக உயர்புள்ளிகள் அமையுமெனக் கூறுவதற்கில்லை. பாடநூல்களிலே கூறப்பட்டவற்றை நன்கு கற்று, கிரகித்தல் அவற்றை உள்ளவாறே மீண்டும் கூறுதல் உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவலாமாயினும் அவை சுயமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றனவா என்பது கேள்விக்குரிய விடயமாகும் பரீட்சைகளுக்கு ஆயத்தஞ் செய்யும் நோக்கில் எமது கல்வி முறையில் இடம் பெற்று வரும் முறையற்ற செயல்கள் தொடர்பான விமர்சனங்களை நாமெல்லோரும் அறிவோம்.

சமகால வகுப்பறைக் கற்பித்தலில் நியமஞ்சார்ந்த அணுகு முறைகளுக்குரிய முக்கியத்துவம் குறைக்கப்படுதல் வேண்டும் என பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது. பதிலாக நியதி சார் (Criteria) விடயங்களை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தலானது மாணவர் மத்தியில் போட்டியை உருவாக்காமல் கற்கின்ற விடயங்களில் தேர்ச்சியை வலியுறுத்துகின்றது. வகுப்பறையில் போட்டிச்சூழலை உருவாக்குதல் ஒரு வகையில் நன்மை எனக் கருதப்பட்டாலும் அவை மாணவர்களை ஒப்பிடுவதற்கே பயன்படுகின்றன. மாணவர்கள் புறவயமான தராதரங்களைப் பூர்த்தி செய்ய முற்படும் போது தனித் தன்மையும் சுய ஆற்றலும் (Originatily) இழக்கப்படுகின்றன. போட்டிச்சூழல் தனியார் கல்வி நிலையங்களை நோக்கி மாணவர்களை அசையச் செய்கின்றன. ஆக்கத் திறனுடைய மாணவர்கள் விடயத்தெளிவு என்ற ஒரு காரணத்திற்காகவன்றி எல்லா விடயங்களுக்கும் தனியார் கல்வி நிலையங்களை நாடமாட்டார்.

ஆக்கத்திறனுள்ள மாணவரின் இன்னொரு பண்பாக அவர்கள் வகுப்பறையில் ஆசிரியர் சொல்வதுடன் மற்றும் பாடநூல்களிலே இடம்பெறும் விடயங்களுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. மறுபுறத்திலே ஆக்கத்திறனுள்ள ஆசிரியரும் தாம் கற்பிக்கும் விடயம் தொடர்பாக சிந்தனையை அகலப்படுத்தும் வினாக்கள் கேட்டல், பிரதிபலிப்புகளுக்கு இடமளித்தல் மற்றும் புதிய விடயங்களை கூற முற்படுதல் என்பவற்றால் தமது கற்பித்தல் உபாயங்களையும் பொருத்தமான முறையில் மாற்றிக கொள்வர். இன்றைய மாணவர்மைய

அணுகு முறையில் மாணவர் சுயமாகக்கற்கவும், தமது கற்றலை தாமே முகாமை செய்யக் கூடியவராகவும் மாறுதல் வேண்டும். இந்த அணுகு முறையின் கீழ்ப் புதிய சிந்தனைகள் பிறப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. மாணவர் மையக் கற்றல் கற்பித்தல் அணுகுமுறை வலியுறுத்தப்படும் இன்றைய சூழலில் எத்தனை ஆசிரியர்கள் புதிய செயல்நெறிக்கு ஏற்றவராகத் தம்மை ஆயத்தஞ் செய்கின்றனர்? அன்றாட வாழ்க்கைச் சூழலில் மாணவர்கள் செயற்படும் கோலங்கள் ஆக்கத் திறனாய்வுத் தன்மையில் புலப்படுத்துகிறது.

பாடத்திட்டத்தில் கூறப்பட்டவாறு நெகிழ்ச்சி இயல்பு முறையில் விடயங்களை நடைமுறைப்படுத்துவதும் மாணவரின் ஆக்கத்திறன் கட்டுப்படுத்தப்படுவதற்கு இன்னொரு முக்கிய காரணமாகும். மாணவர்களின் தேடும் ஆர்வம், புதிய தகவல்களை அறியமுற்படுதல், விரிவாக்கம் பெறும் போது பாடவிடயங்களுடன் வரையறுக்கப் பட்ட மற்றும் செயற்பாடுகளுக்கு அப்பால் செல்ல வேண்டிய தேவை ஆசிரியருக்கு எழலாம். பாடநூல்கள் மற்றும் அறிவுரைப்பு வழிகாட்டிகளுடன் தம்மை மட்டுப்படுத்தும்போது வகுப்பறையில் ஆசிரியரின் ஆதிக்கம் மேலோங்குகிறது. கற்றல் தடைப்படுகிறது. ஆக்கத்திறனுடைய கற்பித்தல் சூழலில் ஆசிரியர் – மாணவர் இடைத்தாக்கம் பூரணமான பங்கேற்பு, சிநேக பூர்வமான கருத்துப்பரிமாற்றம், பதட்டமற்ற சூழல் இடம்பெறல் முக்கியமானது.

ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகுப்பறை

ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகுப்பறைச்சூழல் கற்றல்– கற்பித்தலுக்குச் சாதகமான சூழலை போதியளவில் கொண்டிருத்தல் வேண்டுமென (NCERT, 1993) எடுத்துக்காட்டியுள்ளது.

1. மாணவர் சுதந்திரமாக சிந்தித்தல், மற்றும் கருத்துக்களை அச்சமின்றிக் கூறவும் உள்ள வாய்ப்பு.
2. போட்டியின்றி மகிழ்ச்சிகரமான சூழல்.
3. சுய கற்றலுக்குத் தூண்டும் வகையில் ஆசிரியர் தொழிற்படுதல்.
4. கற்றல் தொடர்பாக மேலதிக முயற்சிகளை எடுக்கத் தூண்டுதலளித்தல்.
5. கற்கும் விடயங்கள் தொடர்பாக மாணவர்கள் பதிற்குறிகள் தெரிவிக்கும் போது அதற்கு மதிப்பளித்தல்.
6. வழமைக்கு மாறாக மாணவரின் பதிற்குறிகள் காணப்படும்போது ஆசிரியரும் சக மாணவரும் அதனை ஊக்குவித்தல்.
7. ஆக்கபூர்வமான விமர்சனங்களை வழங்குதல்.
8. மாணவர்கள் வெவ்வேறு கருத்துக்களை முன்வைக்கும் போது சகிப்புத் தன்மை பேணுதல்.
9. மாணவர்கள் விடும் தவறுகளைக் குறைக்க வழி காட்டுதல்.
10. மாணவர்கள் தாமாக முன்வந்து செயற்படும் விதத்தில் உளவியல் பாதுகாப்பை வழங்குதல். இதன்மூலம் ஏனையவர்கள் என்ன சொல்வார்கள் மற்றும் தோல்வி ஆகியவற்றால் தோன்றும் அச்சங்களை நீக்குதல்.
11. ஆபத்துக்களை எதிர் கொள்ள ஆயத்தஞ் செய்தல், தம்மால் இயன்றவற்றைச் செய்ய ஊக்குவித்தல்.
12. ஆசிரியர் ஆதிக்கம் குறைந்த, நெகிழ்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்களும் அதற்குப் பொருந்தும் கற்பித்தல் முறைகள், மற்றும் உபாயங்களைக் கொண்டு பாடந் திட்டமிடல்.

வகுப்பறைச் சூழலைப் பொறுத்த வரையில் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்குரிய நடத்தைகளுடன் செயற்பாடுகள் இணைக்கப்படுவதில்லை. வகுப்பறை ஒழுக்கம் பேணும் கட்டுப்பாடுகள், செயற்பாடுகள் சார்ந்து பின்பற்ப்படுவதால் புறம்பான கட்டுப்பாடுகள் மற்றும் வசதிகளை உருவாக்க வேண்டிய தேவை இல்லை. மாணவர்கள் சரியான அல்லது பொருத்தமான விடையைச் சொல்வதற்கு அளவுக்கதிகமான விதிகள் வழங்கப்படுவதில்லை. அதே வேளையில் மாணவர்கள் தெரிவிக்கும் விடைகள் மற்றும் கருத்துக்களில் தவறுகள் ஏற்படுமானால் பங்கேற்பு முறையினால் அவற்றைத் திருத்தியமைக்க வழிகாட்டுதல் நிலவும். மேற்கூறிய விடயங்கள்யாவும் ஆதிக்கமற்ற சூழலின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

ஆக்கத்திறனைமேம்படுத்தும் கற்பித்தல் முறைகளும், உபாயங்களும் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு (Objective based) அமையுமாதலால், அவற்றை அறிதல் ஆசிரியருக்கு நன்மை

தரும். இதுபற்றி விரிவான முறையில் நோக்குவதானால் ஆசிரியர் பயன்படுத்தும் உபாயங்கள் மாணவரின் ஆக்கத்திறன் சிந்தனை, பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், ஆற்றொழுக்கு, நெகிழ்ச்சித் தன்மை, சுயஆற்றல் விபரித்தல், அழகியல் சார் விளக்கம், புதிய விடயங்களைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் போன்றவற்றை விருத்தி செய்வதாக அமையும். இவ்விடயங்கள்யாவும் அறிக்கை சார்பரிமாணங்கள், மனவெழுச்சிசார்பரிமாணங்கள் என இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கப்படுகின்றன.

ஆக்கத்திறனுக்குரிய ஆற்றல்கள் இணைந்த தொடர்புடையவை. ஓர் ஆற்றலை விருத்தி செய்வதற்குரிய கற்பித்தல் உபாயத்தைத் தெரிவு செய்யும் போது அதனோடு இணைந்த வகையில் இன்னொரு ஆற்றலும் சேர்ந்து விருத்தியடையும் என்பதனை மனதிற் கொள்ள வேண்டும். இவ்வாறு இணைந்த வகையில் கற்பித்தல் ஆசிரியரின் பணிகளை இலகு படுத்தும். கற்பித்தலுக்கான ஆயத்தங்கள் மிக நுணுக்கமாக அமைதல் வேண்டும். ஓர் உபாயத்தைத் தெரிவு செய்யும் போது தாம் கற்பிக்கும் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் சிலவகையான உள்ளடக்கங்களுக்கு கூடுதலாகப் பொருந்தும் உபாயங்கள் சில உள்ளன. அறிகை மற்றும் மனவெழுச்சிசார் குறிக்கோள்களை அடைந்து கொள்ள பின்வரும் உபாயங்களைப் பின்பற்றலாம். அவை ஆற்றொழுக்கம், நெகிழ்ச்சியும் சுய ஆற்றல், விபரித்தல் இடைவெளிகளையும் குறைபாடுகளையும் நிவிர்த்தி செய்தல், சாராம்சத்தைக் குறிப்பிடுதல் முன்முடிவுகளுக்கு வருதலைத்தடுத்தல், தொகுத்துக் கூறுவதற்குச் சொல்லிக் கொடுத்தல் என்பனவாகும்.

மாணவரின் மனப்பாங்கு சார்ந்த பரிமாணங்களை விருத்தி செய்ய பயன்படும் உபாயங்களாக தேடியறிதல், ஆபத்துக்களை எதிர்கொள்ளத் தயாராதல், தன்னம்பிக்கை, கற்பனையாற்றல், மனக்கண் முன் கொண்டு வருதல், புலனுணர்வு, அனுபவங்களுக்கு இடமளித்தல், சிக்கலான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல் முதலியவற்றைக் கூறலாம்.

புத்தாக்கம் மிகுந்தவர்களாகச் செயற்படும் ஆசிரியர்கள் ஆக்கத்திறனுக்கான பண்புகளை விருத்தி செய்யும் வகையில் புதிய மற்றும் வினைத்திறன் மிக்க உபாயங்களைத் தெரிவு செய்து பயன்படுத்த முற்படுவர். ஆக்கத்திறன் மேம்பாட்டிற்கு ஓர் ஆசிரியர் மேலேயுள்ள உபாயங்களுடன் மட்டும் நின்று விட வேண்டியதில்லை. ஏனைய உபாயங்களையும் பயன்படுத்தி மாணவர்களை விழிப்புணர்வும், சிந்தனையாற்றலும் கொண்ட வர்களாக உருவாக்க விழைதல் வேண்டும்.

தேடிச் சோறு நிதந் தின்று – பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்
வாடித் துன்ப மிக உழன்று – பிறர்
வாடப் பல செயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி – கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின் மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போலே – நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ

- பாரதி -

School Net - An Important use of Information and Communication Technology

Dr S Mahesan B.Sc(Jaffna), M.Sc.(Cardiff), Ph.D.(Wales), MBCS, CITP
Head/Computer Unit
Senior Lecturer, Gr.I
Department of Computer Science
University of Jaffna, Sri Lanka.

In this era of Information and Communication Technology, among many applications of ICT, its utilisation to enhance the quality of education in the secondary schools has a vital role. The SchoolNet has already taken the steps on this by ways for connecting the secondary schools nationwide in a network and for providing services to schools to maintain their websites and learning management services. More than 1200 schools are connected in addition to other centres and administrative offices. We shall see about SchoolNet in a bit more details.

We live in the era of impacts of technological revolution after coming through two major revolutions: "Industrial Revolution" and "Green Revolution". The Industrial Revolution was a period from the 18th to the 19th century where major changes in agriculture, manufacturing, mining, transport and technology had a profound effect on the socioeconomic and cultural conditions starting in the United Kingdom , then subsequently spreading over the world. We could say the Green Revolution refers to a series of research, development, and technology transfer initiatives, occurring between 1943 and the late 1970s, that increased industrialised agriculture production. In this era of technological revolution, we are influenced by three popular technologies, namely, nanotechnology, biotechnology and information and communication technology. Nanotechnology is the study of the controlling of matter on an atomic and molecular scale. It generally deals with structures sized between 1 to 100 nanometer in one or more dimensions, and involves developing materials or devices within that size. One nanometer is one billionth of a meter ($1nm = 10^{-9}m$). The transistors in the modern microprocessors have scales in nanometers (e.g. the size of a transistor is found to be as small as 65nm or even 35nm. In fact, today's computers can be called nanocomputers instead of microcomputers.) The reason for having high capacity storage in devices like memory sticks or flash drives is nanotechnology. Biotechnology involves the use of living organisms and bioprocesses in engineering, technology, medicine etc. This, nowadays, include genetic engineering as well as cell culture and tissue culture, encompassing a wide range of procedures for modifying living organisms for human needs such as domestication of animals, cultivation of plants and improvements to these through breeding programmes that employ artificial selection and hybridisation. Information and Communication technology can be considered as the amalgamation of two technologies: Computer technology and Communication Technology. These technologies have grown in their own paces for many decades almost independently until three decades ago, and merging into a new technology which is termed "Information and Communication Technology". This technology has shrunk the world to a village. We, knowingly or not knowingly, have been experiencing the impacts of these technologies. Satellite TV, mobile phone, and the Internet are examples that everyone, from a child to an adult, from an illiterate to a literate, would know about.

We can say The Internet is the world's biggest wide area network which would possibly cover many other wide are networks, metropolitan area networks and local area networks. While people argue the pros and cons about the use of the Internet, the use of the Internet is growing rapidly. From entertainment to business to education to research development - the use of the Internet is immense. How far, we, Sri Lankan, make use of it is a good question.

The universities and certain other institutions are connected in a network called LEARN (Lanka Education and Research Network) and they maintain their websites and mailing system with domain name extension

".ac.lk". For example, University of Jaffna has the website "www.jfn.ac.lk" and that of University of Peradeniya is "www.pdn.ac.lk".

In 2006, the Ministry of Education with Asian development bank funded secondary education modernisation project (SEMP) has taken the initiative to establish a wide-area network (WAN) connecting most of the senior secondary schools & other related organisations. This network is referred to as SchoolNet. The Network Operation Centre (NOC) of SchoolNet is currently located at University of Moratuwa. This is nation-wide infrastructure that brings all organisations related to School Education System online. It can be thought of as a platform for Next Generation Learning. At present about 1200 schools, 100 computer resource centres, 17 national colleges, and 8 provincial are connected in addition to Ministry of Education, National Institute of Education, Provincial Education office, Zonal Education offices, and the Project Management offices of the SEMP. The LEARN is also connected to the SchoolNet - in fact, they are in agreement to share the resources and expenditure in order for the efficient utilisation of connectivity to the outside world through the Sri Lanka Telecom.

The SchoolNet provides services in two broad categories:
1. Provision of Network Connectivity, Management and Safe Internet Access
2. Services offered for Learning and Teaching Activities

Under the service of category 1, schools can get connected to the Internet via the SchoolNet. They can also maintain their websites with the SchoolNet. The domain extension is "sch.lk". A formal request has to be made for "website name" with the extension "sch.lk", by letter to the Director, Centre for Information Technology at University of Moratuwa.

Under category 2, the facilities for learning and teaching can be obtained. It provides a Learning Management Server (LMS) to host learning and materials for different course units. With this system a teacher can prepare lessons and exercises in his/her subjects and upload to the system so that others who have access to the site can make use of those lessons. This way, students as well as teachers can improve their knowledge, can obtain new exercises and can easily learn other subjects by sharing the materials (in the digital form) among the teachers and students regionally or nationwide.

A software called "MOODLE", which is a free software and can be obtained in the Internet, can be used for LMS. In fact, the SchoolNet uses the same as their Learning Management Server. In addition to the primary online LMS, LMS for each province has been setup and networking feature among these LMS has been activated with the objective of providing separate LMS space for schools in that province. All schools are encouraged to make use of this facility.

The primary site for the LMS is "moodle.schoolnet.lk" which describe about Moodle. This serves as an example of a lesson for a subject and at the same it gives Moodle training, use of mother tongue and many other related topics.

Moodle-LMS has facilities not only for organising learning materials and exercises and evaluation, but also provides forums for discussing matters in the subjects. This discussion shall be among students, among staff, and among staff & students. This may be on-line (by Chat) as well as off-line by leaving messages and questions or by sending e-mail for others responses.

An important thing about LMS is that Lessons can be prepared in mother-tongue. Unicode encoding system makes it easy with many advantages. if we use the standard ASCII encoding with Tamil (or Sinhala) fonts such as "Bamini" or "Naganathini" etc., it would cause problems not only in viewing but also in handling the documents in the LMS.

The ASCII , American Standard Information Interchange, has been the standard encoding system that the computer uses to manipulate the input and output texts. This assigns unique numbers (ASCII codes) for 255

characters including numbers, English (Roman) alphabet (small and capital), arithmetic operators and some other symbols. These numbers are used for handling those characters in the computer. As far as English and a few European languages (such as German and French) are concerned, there is not much of difference between the ASCII encoding and the Unicode encoding.

The unicode encompasses almost all writing languages currently in use in the world. It gives unique numbers (unicode) to different characters in those languages. One hundred and twenty eight numbers from 2944 to 3071 are allocated for Tamil characters. At present only 72 numbers are assigned with characters. The characters includes 12-vowels, 18-consonants (without the "kutru"), 13-tamil numbers, 10-glyphs such as "arrive", "visor", single-"kombu" etc. For example, 2949 for அ (... - "aana"), 2965 for க (• - "kana"), 2996 for ழ (´-"lzaanaa"). Other letters are composed of base characters and glyphs designed for the language. The user does not have to worry about it, the unicode encoding will take care of it.

The Unicode encoding is becoming the standard encoding system. The Operating Systems including Microsoft Windows-7, Linux such as Ubuntu-10.04, and Mac OS X are readily unicode enabled - that is, they are handling unicode by default. For Microsoft Windows XP it has to be enabled. Enabling can be done within a few minutes with operating system disc. Also needed is a few Tamil fonts supporting unicode standards. Windows 7 and Windows XP have a font called "Latha". Windows 7 has "Vijaya" and "MS Arial Unicode" in addition to "Latha". The Ubuntu Linux has "Lohit Tamil" and Mac OS X has "InaiMathi" by default. There are many more unicode fonts available free of charge on the Internet.

Writing documents or preparing materials using Unicode is nowadays not difficult at all with a proper tool/ keyboard driver. A good unicode text editor called "Azhagi" available for MS Windows to type many Indian languages including Tamil. It can be obtained from free of charge from http://www.azhagi.com/ . Toolkits available through SchoolNet can also be used to type Tamil as well as Sinhala. They are available for MS Windows as well as for Linux operating systems. The Linux operating system such as Ubuntu-10.04 has its own driver for typing Tamil in unicode. Enabling this driver is easily done by choosing from a menu. The same thing is true for Mac OS X too. The Keyboard layout can be TamilNet-99 Keyboard or Renganthan keyboard. The Tamil Nadu in South India has made TamilNet-99 as the standard Tamil Keyboard. The Renganathan keyboard is the one having the layout somewhat similar to that of the Bamini font layout. Other method, some seem to be against it, is the transliteration method - for example, when you type "kaNani", it will appear in Tamil as

கணனி

This method is easy for us to type words in other languages such as Sinhala. A tool is available at "ucsc.cmb.ac.lk/ltrl/services/feconverter/t1.html" to type in Sinhala by transliteration method.

In order to utilise the facilities , first of all the skills of the staff should be developed to handle the computer for documenting the courses in mother tongue/English and to use the Moodle - learning management server to store the lessons, and to share the knowledge. This can be achieved by organising a two-day workshop or seminar at zonal-division levels. One or two eminent teachers from each school can be trained as trainers so that they can train other teachers. Once the staff get the enthusiasm and confidence the by joining in the SchoolNet, the objective of enhancing the secondary education can be easily achieved. This way, the Internet facilities or the facilities of Information and Communication Technology would be fruitfully utilised for the betterment of the children and thus the society.

The Great end of life is not knowledge but action

- Thomas H.Huxley -

Good things, When Short, are twice as good

- Gracian -

பாடசாலைகளில் திண்மக் கழிவுகளின் முகாமைத்துவம்
- ஒரு நோக்கு -

திரு.M.பிரபாகரன்
முதுநிலை விரிவுரையாளர்,
விவசாய உயிரியல்துறை,
யாழ்பல்கலைக்கழகம்.

சூழலில் தேங்கும் திண்மக்கழிவுகள் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்படுதல் இன்றியமை யாததாகும். ஏனெனில் சூழலில் இவ்வாறாக தேங்கும் திண்மக்கழிவுகளால் பல்வேறுபட்ட சூழலியல் பிரச்சி னைகள் உருவாகின்றன. முறையற்ற திண்மக்கழிவுகளின் முகாமைத்துவம் மூலமாக நீர், நிலம் மற்றும் வளி மாசுபடுவது மட்டுமன்றி மனிதனின் உடற் சுகத்திற்கும் தீங்கு விளைவிக்கின்றது. திண்மக்கழிவுகள் சூழலில் தேங்குவதால் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் நுண்ணங்கிகளின் பெருக்கம் அதிகரிப்பதுடன் பல்வேறு பட்ட தீங்கு விளைவிக்கக் கூடிய வாயுக்களும் சூழலுக்கு விடுவிக்கப்படும். ஆகவே மனிதனின் அன்றாட வாழ்வின் மூலம் உருவாக்கப்படும் திண்மக்கழிவுகள் உரிய முறையில் சேகரிக்கப்பட்டு அதன் பின்னர் உரிய முறையில் முகாமைப்படுத்தப்படவேண்டும்.

1. திறந்த வெளியில் கொட்டுதல் / புதைத்தல் (Open Dumping)
2. மீள் சுழற்சி (Recycling)
3. சுகாதாரமாக மண்ணில் நிரவுதல் (Sanitary hand fill)
4. எரித்தல் (Incineration)
5. கூட்டுப் பசளையாக்கல் (Composting)

மேற் கூறப்பட்ட முறைகளில் பாடசாலைகளைப் பொறுத்த வரையில் கூட்டுப் பசளையாக்கலானது சூழலுடன் இசைவு பட்ட (Ew-friendly) ஒரு கழிவு முகாமைத்துவ முறையாகும். பாடசாலைகளில் இருந்து உருவாகும் பல்வேறுபட்ட உக்கக் கூடிய கழிவுகள் உரிய முறையில் சேகரிக்கப்பட்டு பின்னர் அவை கூட்டுப் பசளைகளை உருவாக்குவதற்கு பயன்படுத்த முடியும். ஒரு பாடசாலையானது கருதப்படுமிடத்து அதன் சுற்றுப்புறங்களிலிருந்து உருவாகும் தாவர கழிவுகள், உணவு உருவாக்கும் பகுதியில் இருந்து உருவாகும் குசினிக் கழிவுகள்(Kitchen) மற்றும் தேவையற்ற கடதாசிகள் ஆகியவை கூட்டுப் பசளையாக்கத்திற்கு உபயோகிக்க முடியும்.

கூட்டுப்பசளை மூலம் பயிர்ச்செய்கை மேற் கொள்ளப்படுதல் தற்காலத்தில் மிகவும் இன்றியமை யாததாகும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் தற்பொழுது விவசாயச் செய்கையானது பெருமளவு விவசாய இரசாயனங்களின் உதவியுடனேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. விளைவைக் கூட்டுவதற்காக நாம் பல்வேறுப்பட்ட அசேதன வளமாக்கிகளையும், பீடை கொல்லிகளையும் பாவிக்கின்றோம். இவ்வாறு செய்யப்படும் விவசாய இரசாயனங்கள் சூழலுக்கு பல்வேறுபட்ட கேடுகளை விளைவிக்கின்றன. ஆகவே மனிதனின் ஆரோக்கியத்தையும் சூழலையும் பாதுகாப்பதற்கு சேதன விவசாயம் மிகவும் சாலச் சிறந்தது. சேதனவிவசாயத்தின் ஒரு முக்கிய கூறாக கூட்டுப் பசளை காணப்படுகின்றது.எனவேகூட்டுப் பசளை உருவாக்கும் முறைபற்றிச் சற்று நோக்குவோம்.

திண்மக் கழிவுகள் பல்வேறுபட்ட வகையான நுண்ணங்கிகளின் தொழிற்பாடு காரணமாக பயிர்ப் போசணை நிரம்பிய ஊடகமாக மாற்றப்படும். இவ் ஊடகமானது கூட்டுப் பசளை எனப்படும். கூட்டுப்பசளையை நாம் மண்ணிற்கு பாவிப்பதன் மூலம் பின்வரும் நன்மைகள் கிட்டும்.

1. மண் மாசடைதல் தடுக்கப்படும்.
2. மண் நீர் பற்றும் திறன் கூடும்.
3. மண் காற்றோட்டம் கூடும்.

4. மண் நுண்ணங்கிகள் பெருக்கமடையும்.
5. மண் இழையமைப்பு விருத்தியடையும்.
6. வேர் பயிர்களின் வளர்ச்சி தூண்டப்படும்.
7. நீண்ட காலத்திற்கு மண்ணின் போசனை வளம் பேணப்படும்.

இவ்வாறான பயன் தர வல்ல கூட்டுப்பசளையானது பின்வரும் மூன்று பிரதான முறைகள் மூலம் தயாரிக்கப்படும்.

1. குழி முறை
2. குவியல் முறை
3. வின்சோ முறை

* உக்கக் கூடிய சேதனக் கழிவுகளை குழிகளில் இடுவதன் மூலம் அல்லது பல குவியல்களாக குவிப்பதன் மூலம் உரிய முறையில் நுண்ணங்கி தொழிற்பாட்டிற்கு தேவையான நீர் மற்றும் காற்றோட்டத்தை ஏற்படுத்தி சேதனப் பசளையான கூட்டுப்பசளையை இலகுவாகப் பெற முடியும்.

இவ்வாறு பெறப்படும் கூட்டுப்பசளை சேதன விவசாயத்திற்கு மிகவும் சாலச் சிறந்தது. உக்கக் கூடிய சேதனக்கழிவுகளை ஒரு பெரிய குழிதோண்டி அதனுள் படைபடையாக இட்டு 5 நாள் இடைவெளியில் போதியளவு ஈரமாக்கி நாம் நுண்ணங்கித் தொழிற்பாட்டை கூட்ட முடியும். நீர் விசிறும் போது கழிவுகளை மேலும் கீழுமாகப் புரட்டுவது மிகவும் நல்லது. இக் குழிகளினுள் காற்றோட்டத்தைத் தூண்டுவதற்காக துளையிடப்பட்ட பிளாஸ்ரிக் குழாய்களை புதைக்க முடியும்.

எனவே பாடசாலை மட்டத்தில் உருவாகும் இவ்வாறான உக்கக் கூடிய சேதனக் கழிவுகளை இலகுவான முறையில் கூட்டுப் பசளையாக மாற்றி சேதன விவசாயத்தை யாழ் மாவட்டத்தில் திறம்பட நடைமுறைப் படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு சிறிய தோட்டத்தை நிறுவி அதற்கு இவ்வாறு உக்கக் கூடிய கழிவுகளில் இருந்து உருவாகும் சேதனப் பசளைகளைப் பாவித்து அதன் மூலம் இயற்கையான காய் கனிகளை எமது வளரும் சமூகம் நுகர்வதை உறுதி செய்ய முடியும். ஆகவே ஒவ்வொரு பாடசாலைகளிலும் கூட்டுப்பசளையும் சேதனத் தோட்டமும் என்ற கொள்கை வலுப் பெற்றால் சூழலும் இளைய சமூகமும் நிச்சயம் தீங்குகளில் இருந்து விலக்குப் பெறும்.

Some Short Cuts Keys

New	→	Press Ctrl + N	Task Pane	→	Press Ctrl + F1
Open	→	Press Ctrl + O	Page Number	→	Press Alt + Shift + P
Save	→	Press Ctrl + S	Time Number	→	Press Alt + Shift +T
Print	→	Press Ctrl + P	Date Number	→	Press Alt + Shift +D
Undo	→	Press Ctrl + Z	Repeat	→	Press Ctrl + Shift + F
Redo	→	Press Ctrl + Shift + Z	Window	→	Press Ctrl + W
Cut	→	Press Ctrl + X	L. Alignment	→	Press Ctrl + L
Copy	→	Press Ctrl + C	R. Alignment	→	Press Ctrl + R
Paste	→	Press Ctrl + V	C. Alignment	→	Press Ctrl + E
Replace	→	Press Ctrl + H	Jusfify	→	Press Ctrl + J
Go to	→	Press Ctrl + G	Under Line	→	Press Ctrl + U
Tool Box	→	Press Ctrl + T	Italic	→	Press Ctrl + I
Select All	→	Press Ctrl + A			

டெங்குக் காய்ச்சல்

வைத்தியக்கலாநிதிஅ.ஜெயக்குமரன்
வைத்திய அதிகாரி ஆதாரவைத்தியசாலை, தெல்லிப்பளை
சுகாதார வைத்திய அதிகாரி (பதில், உடுவில்)

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

இந்த வாக்கிற்கமைய வாழ நோய்கள் எம் உடலைத் தாக்காது பாதுகாப்பாக இருக்க வேண்டும். எத்தனையோ நோய்கள் நம்மைத் தாக்கலாம். அந்த வகையில் டெங்குக் காய்ச்சலும் ஒரு வைரஸ் நோயாக பலரைத் துன்புறுத்துகின்றது.

1. இந்த நோய் எப்படி ஏற்படுகின்றது?

2. டெங்கு காய்ச்சல் என்றால் என்ன?

இந்த நோய் ஒடிஸ் அஜிப் (Aedes aegypli) ஒடிஸ் எல்போ பிக்டஸ்(Aedes albpicutas) என்னும் நுளம்பு கடிப்பதனால் பரவும் ஒரு வைரஸ் நோயாகும். இந் நுளம்பு பகல் வேளைகளில் அதாவது காலை 6.00– 9.00 மாலை 3.00– 6.00 மணிக்கு மனிதனைக் கடிக்கும்.

இது டெங்கு காய்ச்சலாகவோ டெங்கு அதிர்ச்சி நிலையாகவோ மாறலாம்.

இந்தக் காய்ச்சலை எப்படிக் கண்டு பிடிப்பது? திடீரென காய்ச்சல் ஏற்படும். உடல் வெப்பநிலை 39°C – 40°C வரை உயர்வாக இருக்கும்.

கடுமையான தலையிடி, கண்களில், பின்பகுதியில் நோவு, மூட்டுக்களில் வலி, உடல்வலி, வாந்தி போன்ற அறிகுறிகள் இருக்கும். காய்ச்சல் 5– 7 தினங்கள் வரை காணப்படும். சிலருக்கு குருதிப் பெருக்கு நிலை ஏற்படும்.

இந்த நேயை உண்டாக்கும் வைரஸ் குருதிக்கலங்களில் ஏற்படும் இரத்தக்கசிவு சிறிய விதத்தில் சிக்கல்களை ஏற்படுத்தலாம். சில சமயங்களில் **மரணத்தையும்** ஏற்படுத்தலாம்.

காய்ச்சல் தோன்றி 3 தொடக்கம் 5 நாட்களின் பின் இரத்தப் பெருக்கு ஏற்படலாம். காய்ச்சலும் அடிக்கடி குறையலாம். இதை குணமடைந்ததாக நம்பக்கூடாது. இது ஒரு பயங்கரமான காலப்பகுதியாகும்.

- தோலின் அடியில் சிவப்பு நிற அடையாளங்கள்
- கண்கள் சிவப்பு நிறமாதல்
- மூக்கு, முரசு என்பவற்றில் இருந்து இரத்தக் கசிவு
- வாந்தி, வயிற்று நோ, அதிக தாகம்
- வெளிறிய மற்றும் குளிரான தோல்

என்பன நோயாளியில் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட வேண் டும்.

ஆரம்பத்தில் இனங்காணப்பட்டு தகுந்த சிகிச்சை, கவனிப்பு மேற்கொள்ளப்படுமானால் பெரும் பான்மையான உயிரிழப்புக்களைத் தடுக்கலாம்.

சிகிச்சை பெற்று குணமடைந்த பின்னரும் நோய் அறிகுறி தென்படுகின்றனவா என்பதை அவதானிக்க வேண்டும். நோயாளிக்கு கண்டிப்பாக ஓய்வு தேவைப்படும். பகல், இரவு வேளைகளிலும் நுளம்பு வலை பாவிக்க வேண்டும். நிறைய திரவங்கள், திரவ உணவுகள் கொடுக்க வேண்டும். நீராகாரத்தைக் கூட்ட (ORS) ஜீவனி கரைத்துக் கொடுத்து பரசிற்றமோல் என்னும் மாத்திரையை வைத்தியரின் ஆலோசனைப் படி கொடுக்க வேண்டும். காய்ச்சல் கண்டவுடன் **அஸ்பிரின், டிஸ்பிரின், புரூவன், டைக்குளோபெனிக் சோடியம் போன்றவைகளைப் பாவிக்கக்கூடாது.**

இப்படியாக மக்களுக்கு தொல்லை கொடுக்கும் நோயை, நோயை உருவாக்கும் நுளம்பை அந் நுளம்பு பெருகும் இடங்களை நாங்கள் அழிக்க வேண்டும்.

நீர் தேங்கும் இடங்களில் நுளம்பு உற்பத்தியாவதால் அது உருவாகும் சூழலிலுள்ள சிரட்டைகள், கோம்பைகள், பாத்திரங்கள், போத்தல்கள், பேணிகள், பூச்சாடிகள், மட்டைகள், ரயர்கள் போன்றவற்றை அகற்ற வேண்டும்.

சுற்றாடலில் நுளம்புகள் தங்காதவாறு பற்றைகளை வெட்டி குப்பை கூளங்களை எரித்து சுற்றாடலையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

காலையிலும் மாலையிலும் இந்நுளம்பு மனிதர்களைக் கடிப்பதனால் அந் நேரங்களில் புகை போடல், நுளம்புச்சுருள் கொளுத்துதல், நுளம்பு விரட்டி எண்ணெய் என்பன பூசுதல் என்பவற்றைச் செய்தல் வேண்டும்.

பகல் நேரங்களில் கடிக்கும் டெங்குநோயை உருவாக்கும் நுளம்பின் முட்டை இலகுவில் ஒட்டிக் கொள்ளும். முட்டையில் இருந்து நுளம்பு உருவாக ஒரு வார காலமாகும். ஒரு நுளம்பு ஒரு முறைக்கு 100 தொடக்கம் 200 முட்டைகள் இடும். அப்புறப்படுத்தப்படாவிட்டால் வரண்ட இடங்களில் 6–12 மாதம் வரை கரு முட்டை இறக்காமல் இருக்கும். சுத்தமான நீர்த்தேக்கங்களில் முட்டைகள் இட்டாலும் அந்நீர் கிடைக்காமல் விட்டால் அசுத்தமான நீரிலும் கூடுதலாக முட்டைகளை இட்டுப் பெருகும்.

இந்நோயை, நுளம்பினால் ஏற்படும் டெங்குக் காய்ச்சலை முற்றாக ஒழிப்பதற்கு கிழமைக்கு ஒருமுறை உங்கள் இல்லம், பாடசாலை, காரியாலயம், அதன் சுற்றாடல்கள் போன்றவைகளில் டெங்கு நுளம்பு உருவாகும் இடங்களை சுத்தம் செய்து இந் நோயை முற்றாக ஒழித்து எம்மை, எம் மக்களைக் காப்பாற்ற நாங்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.

தற்கால உலக அதிசயங்கள்

தாஜ்மஹால்	– இந்தியாபிரமிட்
பிரமிட்	– எகிப்து
சாய்ந்த கோபுரம்	– இத்தாலி
நயாகரா வீழ்ச்சி	– வட அமெரிக்கா
பெருஞ்சுவர்	– சீனா
சுதந்திரச்சிலை	– அமெரிக்கா
தொங்கு தோட்டம்	– பபிலோனியா

எண்ணித் துணிக

பேசுவதற்கு முன் செவி கொடுங்கள்
எழுதுவதற்கு முன் சிந்தியுங்கள்
குறை கூறுவதற்கு முன் பொறுத்திருங்கள்
பிரார்த்தனை செய்யுமுன் மன்னியுங்கள்
எதையும் கைவிடுமுன் முயலுங்கள்
மரணத்துக்கு முன் மற்றவர்க்கு உதவுங்கள்

அதிகளவு உற்பத்தியாகும் நாடுகள்

வெள்ளி	– மலேசியா	செம்பு	– ஐக்கிய அமெரிக்கா
நாகம்	– பெல்ஜியம்	ஈயம்	– ஐக்கிய அமெரிக்கா
கரும்பு	– கியூபா	பொன்	– தென்னாபிரிக்கா
நெல்	– சீனா	இரும்பு	– சோவியத் ரஷ்யா
கோப்பி	– பிறேசில்	கோதுமை	– ஐக்கிய அமெரிக்கா

The nesessity for a content - based syllabus in English Language Teaching in Sri Lanka

Mrs.K.Sivaji B.A.(Hons),M.A.in English,PGD in Ed, Dip in ELT
Lecturer in English
E.L.T.C
University of Jaffna.

Over the last decades a number of different types of syllabi have been used in the English Language Teaching field. Hutchinson and Waters define syllabus as a "document which says what will be learnt". These types of syllabi can be subdivided into three broader classes such as

a) Content or Product based syllabus
b) Skill based syllabus
c) Method or Process based syllabus

What is a content based syllabus?

When the teacher of ESL(English As a Second Language) focuses on teaching the students the academic conventions associated with their subject and its content it is belived Called Content - based teaching. There by the content - based ESL Syllabus teaches English and its Components Using Contents From the Core Curriculum. It is that when acadmic content areas are integrated with language instruction, the learning will be more effective. These contents can be used for discussions and class activities to enhance vocabulary, discourse style, Syntax and various language skills.

'Content based ESL' is an umbrella term and which there are many approaches. Some of the approaches are content based English as a Second Language(CESL) Sheltered content Instruction (SI), Content based English Language Teaching (CELT), Content and Language Integrated Learning (CLIL) and Cognitive Acadmic Language Learning Apporach (CALLA). **CESL-** In this model curriculum is structured around themes taken from various subject areas. Though the goal is language teaching, the objectives are determined by content.

SI- It extends the time students have for language support. It gives the ESL "students a jump start" on the content of their subject areas. In this model, students would participate in the course with grade level objectives. These objectives are delivered through modified techniques of instructions.

CELT& CLIL- We cannot compartmentalize these two models but in small scale there are distinction.

CALLA- This particular model intends to prepare studentsfor studying in the English medium. Transitional instruction is given to students who have already achieved acadmic lanugage skills in first language. This model is considered to be suitable for students entering secondary education through second language. In this model topics related to the lives of the students are selected. The two main characteristics of this model are (1) excessive contextual support and (2) reduced language demands. Academic language is developed as it emerges from the content and it relates to the 4 skills.

The necessity for a content based syllabus.

When analysing the reasons why a content based syllabus is necessary, we can point out two main reasons.

1. Researchers have found out that in young children cognitive development and language development go hand in hand. In content based English Language learning both are integrated. As a result the children become equally good in both English language which is the language of

wider communication and in their main stream. Countries like U.S, Canada and U.K faced the problem of getting equal academic achievements among linguistically and ethnically different groups as they differ in their English proficiency level.

2. The other reason is that the language learning becomes more effective when it is associated with meaning ful social and academic contents. Merely learning English Language in isolation has been proved by researchers to be unsatisfactory.

Implementing content based syllabus in Sri Lanka.

It has been the pratice for several years in Sri Lanka that the ESL syllabus for schools was designed for context where all the subjects in the syllabus are taught in the mother tongue. But today there is a thrust towards English, the language of power, as the medium of instruction. The cognitive and Acadmic Language proficiency should be improved when introducing a particular language as a medium. Conversational Proficiency can be acquired easily. But achieving the required level of CALP is more important when introducing a different medium of Educaton. To such a development, the ESL syllabus which is in practice would be of not much use. There fore it is necessary to change the syllabus catering the CALP. The content based language learning is the ideal syllabus tobuild up the CALP.

The second language learning which is one of Sri Lanka's urgent and demanding needs as a developing country is made successful when we use the language as a means of acquiring information rather than merely a language itself. When introducing such a syllabus in our schools, our students will be highly motivated. Motivation definitely plays a crucial role particularly in the primary and secondary level. Another advantage in content based learning is that the learners' needs are better reflected. Thus it seems to prepare ESLa students to academic studies or for mainstreaming. The quick access to content of academic learning and teaching is thereby made possible and such process helps to realize such learning and teaching. This is indeed what Sri Lanka needs as a developing country. In Sri Lankan Context the content-based syllabus is an essential need in the schools where students have to study in English medium. It becomes necessary, for the students who enter Universities and follow their courses in English medium.

In content-based syllabus the language is viewed as a combination of different skills. Skills are generally integarted in authentic world. When introducing content based syllabus, students might read and take notes, listen and write summary or respond orally to things they have read or written. Grammar too inthis context is viewed as a component of other skills. It is a fact that in many of the Sri Lankan schools, equal emphasis is not given to all the skills. Research show that dueto various reasons many of the ESL learners in Sri Lanka are not equally proficient in all the language skills. In content based learning there will be enough exposure to integrated skills. Because the topics are selected, provide coherence and continuity and focus on the use of language in connected discourse rather than isolated fragments. But only thing is the teacher should identify relevant linguistic and grammatical focuses to associate with the topic. The linguistic features create cohesion within speech events such as meetings and disussions and text types such as letters, reports and essays.

Another advantage is that the language is used for purposes such as acsdemic, vocational, social or recreational types. It gives direction and meaning to texts as well as discourse. Therefore the ESL learners realize the purpose of the language samples they learn and become engaged in attaining the purpose. This is in fact a necessity when Sri Lankan students are considered. It is a fact that in Sri Lanka most of the students are unaware of the purpose of their learning. During the school days students merely follow what is Given in their books. But in the developed Countries the purpose is felt and realized even at the primary

level. Students freely choose what interests them. For such thinking and creatively content-based learning is a necessary tool.

Barriers in implementing

In many schools in Sri Lanka there are shortages for Teachers of English. It is also a question as to whether all the teachers would be able to contribute towards this approch, which demands sound knowledge in subject matter. Another barrier in implementing such a syllabus in Sri Lanka is that schools are not equally modernized to cater the background for such amodernized to cater the background for such a modernized approach. As the content based learning needs a lot of material preparation and designing, a lot of efforts to be taken by the teachers of English. It needs team work, co-ordination and supervision. Therefore with the shortage of teachers we cannot expect a succesful venture.

In Universities where ESP (English for Specific Purposes) is promoted content-based language teaching is in practice. But those attempts too are not completely immersed into content-based language teaching. But in Universities the restriction is less in handling such a model when compared to schools. But in schools too, implementation becomes successful if the resources, personnel, time and easy access to relevant contents are increased.

Reference

1. Clegg, John (2004)-Article- "Education through medium of English"
2. Cumaranatunge, L.(2004) "Article-ESL and Science Learning"
3. Jordan, R.R, (1998)- "English for Academic purpose"
4. Met,(1994) - Article on "Teaching content throgh a Second Language"
5. Richards, Jack. C&Rodgers,S.Theodore (1995) - "Approaches and methods in Language Teaching" - CUP.

A Man of course never wants weapon
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

All not saints that go to church
வெழுத்ததெல்லாம் பால் அல்ல;
கறுத்ததெல்லாம் தண்ணீர் அல்ல.

Appearances are deceitful
பசுமாடு கறுப்பென்றாலும் பாலும் கறுப்பாக இருக்குமா?

A dog's life hunger and ease
நாய்க்கு வேலையும் இல்லை நிற்க நேரமும் இல்லை

Agree with thinner adversary than go to law
சாட்சிக்காரன் காலில் விழுவதை விட
சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்.

நீரிழிவு நோய் வராமல் சித்த வைத்தியத்தில் சித்தர்கள் கைக்கொண்ட வைத்திய முறைகள்

Dr.S.கிருபாரத்தினம்
(பொருளாளர், ஆயுள்வேத பாதுகாப்புச்சபை
வலி-தெற்கு, உடுவில்)

உணவினை மருந்து போல் உண்ண வேண்டும் அதற்கு திருக்குறள்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

இதன் பொருள் முன்பு உண்ட உணவு செரித்ததை (சமிபாடு) அறிந்து உண்பவனுக்கு மருந்து என வேறொரு பொருள் வேண்டியது இல்லை.

"இழி வறிந் துண்பான் கண் இன்பம் போல்
நிற்கும் கழி பேர் இரையான் கண்றோய்"

அளவோடு உண்பவன் இடத்தில் இன்பம் இருப்பது போல அளவின்றி உண்பவனிடத்தில் நோய்கள் குடியிருக்கும்.

"காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் உன்னில்
கோலை ஊன்றி குலுங்கி நடப்பவர்
குமரனாகி குலாவரதுப்பனே"

என்ற பழமொழி ஏற்ப வயது குறைந்தவர்களுக்கு உண்டாகும் நீரிழிவு நோய்க்கு இன்சுலின் தேவைப்படுகிறது. 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படும் நீரிழிவு நோய்க்கு மருந்து வில்லைகளை உட்கொண்டு உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதாலும் குறைத்துக் கொள்ளலாம். இதற்கு, தியானம், உடற்பயிற்சி மூலம், மகிழ்ச்சியைத் தாம் பிற இடத்தில் இருந்தோ வேறு இடத்தில் இருந்தோ பெற வேண்டியது இல்லை. எமக்கு உள்ள நிலைப்பாட்டில் இருந்து பெற்றுக் கொண்டால் நோயின்றி வாழ பாக்கியம் கிட்டும்.

நேரத்துக்கு ஏற்ற உணவை உண்ண வேண்டும்.

சுத்தமான நீர் பருக வேண்டும்.

- இனிப்பு பதார்த்தம், மாப்பதார்த்தம் ஆகிய வற்றை முடிந்தவரை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இயற்கையான உணவுகளை உண்பதால் எமது தேகத்தைப் பொன்போல பாதுகாத்துக்கொள்ளலாம். கீரை வகைகள், பொன்னாங்காணி, வல்லாரை, அறக்கீரை, முடக்கொத்தான், தூதுவளை, கறிமுருங்கை இலை, சிறுகுறிஞ்சா, மொசுமொசுக்கை போன்ற கீரை வகைகளை மதியம், இரவு நேரங்களில் உண்ண வேண்டும். அத்துடன் கண்டங்கத்தரி, வட்டுக்கத்தரி, சுண்டங்காய், முள்ளங்கி, மற்றும் பருப்புவகை ஆகியவற்றை சேர்த்துச் சாப்பிட்டு வர வேண்டும்.

குரக்கன், சாமை, வரகு, கறுப்பு சாமை, தினை போன்ற உணவுகளையும், பனங்கிழங்கு சம்பந்தப்பட்ட ஒடியற்பிட்டு, ஒடியல் கூழ் ஆகியவற்றை வாரத்தில் 3முறை சாப்பிட்டுவர வேண்டும்.

குடிக்கும் பானவகை

★ சீரகம் ஊற விட்டு தண்ணீர் குடிக்க வேண்டும்.
★ மாதுளைச்சாறு
★ வில்வம் பழச்சாறு
★ தோடம்பழச்சாறு
★ விளாம்பழச்சாறு

இவற்றை மதியம் குடிக்க வேண்டும்.

பழவகையில்

★ பப்பாசிப்பழம்
★ வாழைப்பழம்
★ விளாம்பழம்
★ முந்திரிகைப்பழம்
★ பனம்பழம் ஒரு

இவற்றில் ஒரு பழத்தை ஒரு நாளைக்கு ஒரு பழம் தவறாது உண்ண வேண்டும்.

உறங்கும் முறை (படுக்கை)

01) இரவு 10 மணிக்கு உறங்க வேண்டும்.
02) காலை 5 மணிக்கு முன்னர் எழுதல் வேண்டும்
03) எழுந்தவுடன் குளிர்ந்த நீரைப் பருக வேண்டும்
04) தேக அப்பியாசம் (உடற்பயிற்சி) செய்தல் வேண்டும்
05) தோட்ட வேலை செய்தல் வேண்டும்
06) வீட்டில் வேலை செய்தல் வேண்டும்
07) தினமும் இரண்டு மைல் நடக்க வேண்டும்
08) சுத்தமான ஆடைகளை நீரில் அலசி அணிய வேண்டும்
09) கால், கை, நகம் வாரத்தில் ஒருமுறை வெட்ட வேண்டும்
10) அறுணாக் கொடி கட்டாயம் கட்ட வேண்டும்
11) நல்ல சுத்தமான காற்றோட்டமான இடத்தில் இருத்தல் வேண்டும்
12) மனதுக்கு வேதனை தரும் நாடகம், படம், கதைகள், ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும்

மேற்குறிப்பிட்ட முறையில் வாழ்வாராயின் அவர்களிடமிருந்து நீரிழிவு நோய் (சலரோகம்) இரத்தக் கொதிப்பு ஆகிய நோய்கள் வராது வாழலாம் என பாம்பாட்டிச் சித்தர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நீரிழிவு நோய்க்கான அறிகுறி

★ தண்ணீர்த்தாகம் அதிகமாக எடுத்தல்
★ அதிக தடவை சிறுநீர் வெளியேறல்
★ அதிக வியர்வை வெளியேறுதல்
★ எவ்வளவு உணவு உண்டாலும் எடை குறையும்.
★ புண் (காலில்) ஏற்பட்டால் அதை அசட்டையாக இருந்தால் நீரிழிவு நோய் உள்ளவர்கள் கால்களை இழக்க நேரிடும்
★ கை, கால்களில் விறைப்பு ஏற்படும்
★ நீரிழிவு நோய் உண்டாவதால் உடம்பில் எல்லா உறுப்புகளும் பாதிக்கப்படும்.

இதற்கு மருந்து

★ மதுமேக சூறனம்
★ மதுமேக ஆசவம்
★ அமுது சர்க்கரை
★ தேற்றாங் கொட்டை
★ லேவியம் காலை, மாலை சாப்பிட வேண்டும்.

இந் நோய்க்குரிய குடிநீர்வகை

★ அத்திப்பட்டை
★ நாவற் பட்டை
★ ஆவரசம் பட்டை
★ கொண்றைப் பட்டை
★ கடல் றாஞ்சிப் பட்டை

இதனை 4 மடங்கு நீரில் கொதிக்க வைத்து ஒரு பங்கு வரை வற்றக் காய்ச்சி காலையில் இக் கசாயத்தைக் குடிக்க வேண்டும். (ஒரு தேக்கரண்டி 10 நாளைக்குக் குடிக்க வேண்டும்)

சிறுவரே நாட்டின் மரபுரிமையாளர்

திரு.பா.பாலச்சந்திரன்
ஓய்வுநிலை அதிபர் SLPS 2.I
(மயிலணி, சுன்னாகம்)

- இச்சிறுகதைக்கு (சிறுவரே நாட்டின் மரபுரிமையாளர்) மாகாண மட்டத்தில் பரிசு கிடைத்தது
- இதைவிட மேலும் இரண்டு சிறுகதைகளுக்கு பரிசுகள் கிடைத்துள்ளன.
- தமிழ்க்கவிதை, பாடலாக்கம், சிறுகதை, ஆங்கில கவிதை, பாடலாக்கம் என்பவற்றுக்கு பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பல விருதுகள் கிடைத்துள்ளன. கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

காலை ஒன்றுகூடல் முடிவுற்றதும் விளையாட்டு மைதானத்தில் நடந்துவந்துகொண்டிருந்தேன். ஒரு மாணவன் ஓடிவந்து, "சேர்! உங்களை அதிபர் வரும்படி சொல்லச் சொன்னார்" என்றான். என்ன விடயமாக இருக்கும் என்ற ஒருவிதமான எதிர்பார்ப்புடன் அதிபரின் காரியாலயத்தை அடைந்தேன் "வாரும் சிவகுமார்" என்று அதிபர் அன்புடன் அழைத்து, "நீர் முறைசாராக் கல்விப் பணிப்பாளர் தயாளனுக்கு உறவினரா?" என்றார் "ஓம் சேர்" என்று நான் விடை கூறியதும்,

"எனக்கு இது தெரியாது, அவரை நேற்று பணிமனையில் சந்தித்து உரையாடினேன், அப்போதுதான் அவர் உம்மைப்பற்றி விசாரித்தார், நீர் மருமகன் முறை என்று கூறினார். நான் அவரை சிறுவர் பாதுகாப்பும் உரிமையும் பற்றி சம்பந்தப்பட்ட பெற்றாருக்கு உரையாற்ற வரும்படி அழைத்தேன். அதற்குத் தான், ஏழாம் திகதி சனி வருவதாக கூறினார்" என்றார்.

எனக்கு அவர் உறவினர் என்றாலும் மரியாதையின் நிமித்தம் அதிகம் கதைப்பது கிடையாது, ஆனால் அவரின் வரலாறு எல்லாம் எனக்கு நன்றாக தெரியும். அவருடைய தந்தையார் மிகவும் கட்டுப்பாடுள்ள ஒரு தமிழ் ஆசிரியர். அவரைப் பொறுத்தவரை அவர் ஒரு மகா அலெக்சாண்டர்தான். கடவுள் ஒருவருக்குத் தான் அவர் மரியாதை புரிவார். மிகவும் ஒரு பழமைவாதி. பிடித்ததோ இல்லையோ அவர் கூறுவதை மனைவி மக்கள் செய்யவேண்டும். பிள்ளைகளின் கல்யாண விடயத்திலும் கூட இதே கொள்கைதான்.

அவருடைய துவிச்சக்கரவண்டியைத் துடைத்து தூசுபடாமல் போர்த்து விடுவார். பிள்ளைகள் தொடக்கூடாது. தயாளன் கூட பதினெட்டு வயதில்தான் துவிச்சக்கர வண்டி ஓடிப்பழகியவர். அதுவும் அவருக்குத் தெரியாமல் பாடசாலையில் நண்பர்கள் பழக்கிவிட்டார்கள். மிகவும் அடக்குமுறை. பிள்ளைகளின் விடயத்தையே இரகசியமாகத்தான் மனைவியுடன் கதைப்பார். அவருடன் இருந்து பிள்ளைகள் சாப்பிடுவது கிடையாது.

பெயார்பிறாண்ட் பால்மா விற்பனைக்கு வந்தபோது அது கரடிப்பால் என்று கூறி கடைக்காரனுடன் வாக்குவாதப்பட்டவர் என்றால் அவரின் குணத்திற்கு வேறு எடுத்துக்காட்டு வேண்டுமா? அவர் எடுத்து கொடுக்கும் சேட், காற்சட்டை தான் மகன் போடவேண்டும் பிள்ளையின் விருப்பம் பற்றி யோசிக்காதவர்.

இதனால் தயாளன் கவனமாகப் படித்து இருபது வயதில் ஆங்கில ஆசிரியர் பரீட்சை எடுத்து சித்தியடைந்து ஆசிரியராகி இருபத்துநான்கு வயதில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக வெளிவந்துள்ளார். அவருக்கு உளவியல் அதிலும் சிறுவர் உளவியல் மிகவும் பிடித்ததொன்று அதை B.A பட்டத்திற்கு ஒரு பாடமாக எடுத்து இந்திய பல்கலைக்கழகமொன்றில் M.A பட்டமும் எடுத்துவிட்டார். நேர் சிந்தனைத்துறையிலும் ஆர்வமுள்ளவர். அவரது "சிறுவர் உள்ளம்", "சிறுவர் உலகம்" போன்ற புத்தகங்களையும், கட்டுரைகளையும், உரைகளையும் கேட்ட கல்விப்பணிப்பாளர் இவருக்கு சிறுவர் சம்பந்தப்பட்ட பகுதியை கொடுத்துவிட்டார். அவரும் மிகவும் மனநிறைவுடன் அதை செய்து வந்தார்.

தான் சிறு வயதில் பட்ட இடர்பாடுகள் இல்லாது சிறுவர் வாழவேண்டும் என்பதே அவருடைய வாழ்க்கையின் "தூரநோக்கு" அதற்கான செயற்பாடுகளே " பணிக்கூற்று ", இவருடைய விவாகத்தில் இருந்து தந்தையார் இவருடன் தேவையற்ற விடயங்களில் தலையிடுவது இல்லை. அந்தளவிற்கு தந்தையாருக்குச் சாத்விகமான முறையில் புத்தி புகட்டினார்.

இத்துறையில் தயாளன் சில சமயங்களில் சில பெற்றாருடன் பகைக்கவும் நேர்ந்துது. ஒரு சமயம் ஒரு குடிகார தந்தை பொல்லுத்தூக்கிய சம்பவமும் உண்டு. பிள்ளை ஒன்றை தந்தை கொலை செய்ததைக் கேள்விப்பட்டு, அந்த மரணச்சடங்கிற்குச் சென்று அன்று முழவதும் அழுதுகொண்டு இருந்தவர்.

இத்துறையில் தன்னை முழுதாக உள்ளத்தையும், உடலையும் அர்ப்பணித்த ஒரு புண்ணியம் நிறைந்த உத்தியோகத்தர். அவர் தனது பிள்ளைகளுடன் பழகும் முறையும், வளர்க்கும் முறையும் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரி. ஐந்து வயது வரை இராசாமாதிரியும், பதினாறு வயது வரை சேவகன் போன்றும், பின்பு தோழன் போன்று பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்று கூறுவோரை அவருக்குப் பிடியாது. என்றுமே நண்பர் போல் புத்திமதிகூறி விவாதித்து சரி எது எனக் காரணம் காட்டி வளர்க்க வேண்டும் என்பார். தண்டணை அவருக்கு எதிரி, பரிசுதான் நண்பன்.

எமது பாடசாலைக்கு வரும் சிறுவர்கள் பலதரப்பட்ட நிலைமைகளில் உள்ள குடும்பத்தைச் சார்ந்தவர்கள். கல்விக்காக தம்மை அற்பணித்த பெற்றாரும் உள்ளனர். கல்வி எதற்கு என்று நினைக்கும் முப்பது வீதப் பெற்றோரும் உள்ளனர். அவர்களின் சிறுவர் உரிமை மீறல்கள் சொல்லும் தரமன்று. இவைகளை உணர்ந்து எமது பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனைக்குமான ஆசிரியை சாந்தினி அவர்கள் அதிபரிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் தெரிவுசெய்யப்பட்ட பெற்றோர்க்கு அக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

சில பெற்றார் பிள்ளைகளை சிறு வேலைக்கு அனுப்புவார்கள். சிலர் பொய், களவு என்பனவற்றில் ஈடுபடுத்துகின்றனர். சிலர் தமது வீட்டில் குழந்தைப் பராமரிப்புக்காக பிள்ளைகளை பாடசாலைக்கு விடாது மறிக்கின்றனர்.

சிலர் பிள்ளைகளை கவணிப்பது இல்லை. கல்வி, சுகாதாரம், நற்பழக்கவழக்கங்கள், ஏன் உணவிலும் கூட சரியாக கவனிக்கப்படாத பிள்ளைகள் இருக்கின்றனர். பாடசாலைக்குச் செல்வதற்காக தண்டிக்கின்ற தாய்கூட இருக்கின்றார். அந்த தாயை ஆசிரியை வீட்டிற்கு கிராம சேவகருடன் சென்று கதைத்தாலும் ஊர் பிரமுகர்களின் கண்காணிப்பாலும் இப்போது அந்த தாய் அரை விருப்புடன் பாடசாலைக்கு அனுப்புகின்றார்.

கட்டிடத் தொழிலாளர், மரவேலை செய்வோர் ஆகியோர் அவசர தேவைக்கு ஆண் பிள்ளைகளை ஒரு வாரத்திற்கு பாடசாலைக்கு விடாது மறிக்கின்றனர். சிலர் பிள்ளைகளை தீக்கோல் கொண்டு சுட்டும் இருக்கின்றனர். கண்ணுக்கு மிளகாய்த்தூள் போடும் பெற்றோரும் இருக்கின்றனர்.

இப்படிப்பட்டவர்களுக்கு தயாளன் தான் சரியான ஒரு வழிகாட்டி என சாந்தினி ஆசிரியையும் நினைத்தது சரிதான். பூனை, நாய் போன்ற செல்லப்பிராணிகளே அன்பையும் அரவணைப்பையும் எதிர்பார்க்கும் போது ஆறறிவுள்ள பிள்ளைகளின் நிலைமை எவ்வாறு என்று சிந்திக்க வேண்டும். தயாளனின் தந்தை போன்றவர்கள் இப்போதும் இருக்கிறார்கள்.

சில பெற்றார் தாம்பிள்ளைகளுக்கு தீமை செய்கின்றோம் என்பதை உணராமல் தீமை செய்பவர்களும் இருக்கின்றார்கள். அது எப்படியெனில் தமது நிலைமைக்கு அதிகமான பிள்ளைகளைப் பெறுவது. இதனால் பிள்ளைகளின் நலனுக்கு மிகவும் தீமை ஏற்படுகின்றது. இதற்கு மட்டும் கடவுளையும், விதியையும் தமது பக்கம் சேர்த்துக் கொள்வர். நல்ல காலம் இரண்டும் கதைக்கமாட்டாது. இவர்கள் சொல்வதற்கெல்லாம் மறுப்பு

கூறுவதுமில்லை. அவர்களின் கல்வி, வாழ்க்கைத்தரம் என்பன பாதிப்புறுகின்றன. விரிவுரையாளராக வர வேண்டிய பிள்ளை ஆசிரியராகவும், நீதிபதியபாக வரவேண்டிய பிள்ளை நீதிமன்றத்தில் எழுதுவினைஞராகவும் இருக்கின்றது. அவைகளின் உணவின் தரம் குறைகின்றது. அது மட்டும் இல்லை ஐயா! வாழ்வது ஒரு முறை மட்டுமே. சகோதரங்களுக்கு உழைத்து கொடுத்து, தான் மெழுகுவர்த்தியாக எரிந்து அழிந்த எத்தனை தவப்புதல்வர்களையும், புதல்விகளையும் இந்த சமூகம் கண்டுள்ளது. இதற்கெல்லாம் தாய், தந்தையரின் திட்டமிடாத, சிந்திக்காத தன்மை தான் காரணம்.

தயாளனின் வருகைக்காக அதிபர் பலவித ஏற்பாடுகள் செய்தார். கிராமசேவகரையும் வரும்படி விடயத்தை எடுத்துக் கூறி கேட்டுக் கொண்டார். பொலிஸ் நிலையத்திற்கு சென்று இது சம்பந்தமாக கூறி விடயத்தை விளங்கப்படுத்தி ஒரு உத்தியோகத்தரையும் சமூகம் தரும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு அவர்களும் சம்மதித்தனர்.

பெற்றோர்களும், கிராமசேவகரும், அதிபரும் சேர்ந்து அழைப்பு விட்டனர். நிவாரணத்திற்குப் பயந்து சகல வணங்கா முடிகளும் வருகை தருவார்கள் என்பது ஆசிரியர்களின் கருத்து. கிராமசேவகரும் நன்றாக ஒத்துழைத்தார்.

சிறுவர் உரிமை சம்பந்தமான கையேடு படங்களுடன் விநியோகம் செய்வதற்காக ஐந்நூறு பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. முந்நூற்று இருபது பெற்றார் அழைக்கப்பட்டனர். எல்லோருக்கும் தொண்டர் நிறுவனம் மூலம் பால்மாப் பைக்கற்றுக்கள் வழங்க ஏற்பாடாய் இருந்தது. தேநீர், சிற்றுண்டிகளும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஏழாம் திகதி சனிக்கிழமை காலை எட்டு முப்பது கடிகாரத்தில் காட்டியது. கூட்ட மண்டபம் நிறைந்திருந்தது. அதிபரும், தயாளன் அவர்களும், கிராமசேவகரும், பொலிஸ் உத்தியோகத்தரும், கட்டாயக்கல்வி, சிறுவர் உரிமை, மனித உரிமைகள் பற்றி சுருக்கமாகக் கூறி பிள்ளைகள் பாடசாலைக்கு அனுப்பப் படுவதோடு அவர்களின் நலன்களும் காக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். தயாளனின் மிகவும் சுருங்கிய உரையின் சாராம்சம் இது தான்.

"நாம் இந்த நாட்டின் சொத்து. எம்மை நாம் தற்கொலை செய்து கொள்ள முடியாது. இது நாட்டின் சட்டம். எமது பிள்ளைகளும் நாட்டின் சொத்து. அவர்களையும் நாம் எமது இஷ்டப்படி செய்ய முடியாது. நாட்டின், சமூகத்தின் சட்டதிட்டங்களுக்கு அமையவே அவர்களை வளர்க்க முடியும். உங்களுக்கு தரப்பட்ட கையேட்டை வாசித்துப் பார்த்திருப்பீர்கள். மனிதஉரிமை, சிறுவர் உரிமைகள் என்பனவற்றை ஏற்றுக் கொண்ட நமது நாட்டில் அதன் படி தான் ஒவ்வொரு பெற்றாரும் நடக்க வேண்டும்.

அவர்களுக்கு கல்வியறிவை கொடுக்க வேண்டும், அவர்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டும் அதற்காகவே நாடு அவர்களுக்கு மிகவும் செலவு செய்து அவர்களின் நலனில் அக்கறை செலுத்துகின்றது. பிள்ளைகளைப் பூப்போல் பாதுகாத்து வளர்ப்பது உங்கள் கடமை. அவர்களே இந்த நாட்டை ஆளப் போகிறவர்கள். இவர்களை அறிவூட்டி, ஆரோக்கியமாக வளர்த்து, ஆளாக்கி ஆட்சி கொடுப்போம். எமது சிறுவரே நாட்டின் மரபுரிமையாளர் என்பதை நாம் மறக்கக்கூடாது. அவர்களின் உடல், உள வளர்ச்சியில் நாம் அக்கறை காட்டி, அறிவு வழங்கி அவர்களின் உரிமைகளை வழங்குவதுடன் நாட்டின் உரிமைக்கும் அவர்களை உரித்தாக்குவோமாக.!"

பாடசாலை நிர்வாகத்தில் 5 "S" இன் பிரயோகம்
5 S" Application in School Administration)
ஜப்பானிய முகாமைத்துவ முறை (Japanese Method)

திரு.ஸ்கந்தவரதர் ரமேஸ், சிரேஸ்ர விரிவுரையாளர்
வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

அறிமுகம்

அலுவலகங்களின் நிர்வாக வெற்றிக்கு முகாமைத்துவ தத்துவங்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. **5 "S"**தத்துவமானது பாடசாலை ஒன்றின் வெற்றிக்கு எவ்வாறு தனது பங்களிப்பை வழங்கலாம் என்பது தொடர்பாகவே இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது. **5 "S"**நுட்பத்தினை அறிமுகப்படுத்திய நாடு ஜப்பான் ஆகும். **5 "S"**ஆனது ஜப்பானில் வீட்டு முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம் மற்றும் தொழிற்சாலை முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஏற்படுத்திய வெற்றியின் பின் இலங்கையில் இம் முறை பல நிர்வாகக் கட்டமைப்புகளில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. எனவே இங்கு ஜப்பானியர்களின் முகாமைத்துவப் பண்புகளை முதலில் அறிந்துகொள்ளவேண்டும்.

மொத்த நிலத்தில் 15% மானவை பயன்பாட்டுக்குரியது. இது பிரதான மூலவளங்களைக் கொண்டிராத நாடு மற்றும் இரண்டாம் உலகமகா யுத்தத்தில் மோசமாகத் தோற்கடிக்கப்பட்ட நாடு என்ற வரையறைகளிற்கு மத்தியில் இன்று ஜப்பான் உலகப் பொருளாதார உற்பத்தியில் ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவுக்கும் அடுத்த படியாக மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. ஐரோப்பாவின் பிரதான வல்லரசுகளின் பொருளாதார சாதனைகளை அண்மைக்காலங்களில் ஜப்பான் நாடு முறியடித்து விட்டது. உலக பொருளாதார உற்பத்தியில் ஜப்பானின் தற்போதைய பங்கு 8% ஆகும். எனவே ஜப்பானியர்களின் வெற்றியை விளக்கப் பின்வரும் விடயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

- ஊழியர்களின் உயர்ந்த ஊக்கம், ஈடுபாடு, தொழில் விசுவாசம்.
- ஜப்பானிய முகாமைத்துவ நுட்பங்கள்.
- 1960 களில் ஜப்பானியர்களால் பிரயோகிக்கப்பட்ட தர வட்டம் (Quality circle)
- நேர் மனப்பாங்கு (Positive Attitude)
- ஜப்பானிய நிறுவனங்கள் பொதுவாக ஊழியர்களுக்கு வேலை இலக்குகளை வழங்குவதில்லை . ஊழியர்கள் அவை பற்றித் தாமே அறிந்து கொள்ள வேண்டும். ஊழியர்கள் இவ்விடயத்தில் மேலிடத்து அறிவுறுத்தல்களை எதிர் நோக்காது தமக்குள் பேசியும் தீர்மானித்துக் கொள்ள முடியும்.
- ஜப்பானிய நிறுவனங்கள் தீர்மானங்களை மேற் கொள்ளும் போது முழு நிறுவனமும் அச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. இதனால் தீர்மானங்கள் சகல ஊழியர்களாலும் மேற் கொள்ளப்பட்டவை என்றாகி விடுகின்றது. ஒரு கம்பெனி ஒரு தீர்வை முன் வைக்கும் போது சகல ஊழியர்களும் அதற்கு ஆதரவளிக்கின்றனர்.
- குறைந்த உற்பத்திச் செலவும் குறைந்த சம்பளங்களும்
- அரசாங்கத்தின் செயற்றிறன் மிக்க கைத்தொழிற் கொள்கை நெறி
- ஏற்றுமதி அதிகரிப்பினால் பெறப்பட்ட பொருளாதார சிக்கனங்கள்
- ஜப்பானிய யென் (Jen) நாணயத்தின் குறைந்த பெறுமதி, குறைந்த வட்டி வீதங்கள், குறைந்த இலாப எதிர்பார்ப்புகள்.
- ஏற்றுமதிப் பொருட்களின் மலிவான விலை.

5 S" இன் பிரயோகம் (5 S"Application)

பாடசாலைக் கல்வியைத்(பொதுக் கல்வி) தரமாக **(Quality Education from Quality inputs)**மாணவர்களிற்கு வழங்கப்பட வேண்டும் என்பது பொதுக் கல்வி முறையியலின் அடிப்படை அம்சமாகும் . எனவே தான் இவ் இலக்கினை அடைவதற்காக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஒரு

திட்டமாக கல்வித்துறை அபிவிருத்திக் கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் (Education Sector Development Frame work and Programme - ESDFP) காணப்படுகிறது. இதன்முக்கிய நோக்கங்களாக அடிப்படைக் கல்வி (தரம் 1 – 9) மற்றும் இரண்டாந்தரக்கல்வி (1 0– 13) என்பன சமமாகக் கிடைப்பதனை மேம்படுத்துதல், அடிப்படை மற்றும் இரண்டாந்தரக் கல்விக்கான பங்கில் சமனான வாய்ப்புக்களை மேம்படுத்துதல், பொருளாதார வினைத்திறனையும் சமமான மூல வள ஒதுக்குகளையும் உயர்த்துதல் மற்றும் கல்வி ஆளுகை மற்றும் பணிவழங்கல்களைப் பலப்படுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. மேலும் தற்போதைய பாட விதான சீர்திருத்தங்கள் ஆங்கிலம் மற்றும் தகவல்தொழில் நுட்ப கல்வியை மேம்படுத்துவதனையும் வாழ்க்கைக்கான தேர்ச்சியைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குவதனையும் நோக்கங்களாகக் கொண்டிருக்கிறது. அத்துடன் இசுறு திட்டத்தினூடாக தேசிய மற்றும் நகர்ப்புற பாடசாலைகளுக்கான அனுமதிக்கான உயர்ந்த கேள்வியை தளர்த்தி தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள "இசுறு பள்ளிக்கூடங்கள்" இரண்டாந்தரக்கல்விக்கான தேசிய பாடசாலைகளின் மட்டத்திற்கு அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் கல்வி அமைச்சு 150 பள்ளிக்கூடங்களை "இசுறு பள்ளிக்கூடங்கள்" ஆக அடையாளம் கண்டிருக்கிறது. 2012 இறுதியளவில் இசுறு பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 325 இற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே தான் 5 " S " தத்துவத்தினை நாம் தெளிவாக விளங்கிக் கொள்வதன் ஊடாகத் தரமான பாடசாலைக் கல்வியை நோக்கி நகரலாம்.

அமெரிக்காவில் இதன் மொழிபெயர்ப்பு ஆங்கில எழுத்தான " S"(5-S Programme) இல் பின்வருமாறு ஆரம்பிக்கின்றது.

* Sort
* Systemize
* Shine or Sweep
* Standardize and
* Sustain
* இங்கிலாந்தில் இதன் மொழி பெயர்ப்பு ஆங்கில எழுத்தான "C "(5-C Program) இல் பின்வருமாறு ஆரம்பிக்கின்றது.
* Clear Out
* Configure
* Clean and check
* - Conformity and
* Custom

5 "S " தத்துவத்திற்குள்செல்வதற்கு முன் பின்வரும் விடயங்களில் தெளிவினை ஏற்படுத்திக் கொள்வது நன்று.

* என்ன விடயங்கள் வைத்திருக்கப்பட வேண்டும். (What should be kept)
* எங்கே இவ் விடயங்கள் வைத்திருக்கப்பட வேண்டும். (Where it should be kept)
* எப்படி இவ் விடயங்கள் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும். (How it should be Stored)

5 S" தத்துவமானது பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டது

* வினைத்திறன் மிக்க பாடசாலைச் சூழல். (Effective Workplace Organization)
* பாடசாலைச்சூழலை இலகுமயப்படுத்தல் (Simplifying the School Environment)
* நேர விரயத்தைக் குறைத்தல் (Reducing Waste & Time)
* தரம், பாதுகாப்பு, முன்னேற்றல் (Improving Quality and Safety)
* முயற்சி விரயத்தைக் குறைத்தல் (Reducing Waste ofEffort)

* பண விரயத்தைக் குறைத்தல் (Reducing Waste of Money)
* குறிப்பிட்ட நேரத்திற்குள் கடமையை செய்து முடித்தல் (Work Completed on/ Within Time)

இவ் யப்பானிய ஐந்து சொற்களும் ஆங்கில எழுத்தான "S " இல் ஆரம்பிக்கின்றது (Five Japanese words that start with the letter " S ") அவை பின்வருமாறு

1. Seiri - செய்றி
2. Seiton - செய்டோன்
3. Seiso - செய்சோ
4. Seiketsu - செய்கெட்சு
5. Shitsuke - செட்சூகி

Japanese Term யப்பானிய வடிவம்	English Term ஆங்கிலவடிவம்	Tamil Term தமிழ் வடிவம்
Seiri	Tidiness (sort)	வேறாக்குதல்
Seiton	Set (Orderliness / Systematic)	ஒழுங்கு படுத்துதல்
Seiso	Shine (Cleanliness / Sweep)	தூய்மையாக்குதல்
Seiketsu	Standardization	தூய்மை பேணல்
Shitsuke	Sustain (Self Discipline)	தொடர்ந்து பின்பற்றல் அர்ப்பணிப்பு

இவ் ஐந்து விடயங்களில் முதல் இரண்டு செயற்பாடுகளான வேறாக்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவை மிகப் பிரதானமானதாகும்.

1. தேவையற்றவற்றை நீக்குதல் - Seiri - SORT

- வேலைத்தளத்தில் உள்ள தேவையற்ற பொருட்கள், கழிவுகளை வீசுதல் (Throw a way all rubbish and unrelated materials in the work place.)
- வேலைத்தளத்தில் அலுவலகப் பயன்பாட்டுக்கு தேவையான பொருட்கள் மட்டும் இருப்பதனை உறுதிப்படுத்தல் (Ensure that every thing left in the work place is related to work.)
- தேவையானது, தேவையற்றது என்ற அடிப்படையில் வகைப்படுத்தல் (Sorting: Wanted and un-wanted)

* தற்போதைக்கும் எந்தத் தேவைக்கும் பயன்படாத பொருட்களையோ, கருவிகளையோ, கோவைகளையோ தெரிவு செய்து அவற்றின் முக்கியத்துவம், முக்கியத்துவமற்ற தன்மையறிந்து வேறாக ஒரு இடத்தில் சேர்த்து வைத்தல் அல்லது கோவைப்படுத்தல் .
* தற்போதைய நிலையில் சில பொருட்கள் அவசியமற்றதாக காணப்பட்டாலும் சில வேளைகளில் பின்னர் தேவைப்படலாம் எனக் கருதும் பொருட்களை அல்லது கோவைகளை வேறாக்கி வைத்தல்.

இனிமேலும் தேவையற்ற பொருட்களை என்ன செய்வது (What to do with items no longerneeded)

* விற்பனை செய்தல் (Sell it)
* திருப்பி அனுப்புதல் (Return it for credit)
* அன்பளிப்பாக வழங்குதல் (Give it a way)
* வீசுதல் (Throw it away)

உதாரணம் (Examples of items to sort- out)

* தேவைக்கு அதிகமாக உள்ள வழங்கல் மற்றும் இருப்புகள் (Too much of stock supplies and materials)
* இனிமேலும் தேவைப்படாத வழங்கல் மற்றும் கருவிகள் (Supplies and tools no longer needed)
* காலவதியான பொருட்கள் மற்றும் அதன் பகுதிகள் (Obsolete materials and parts)
* பழுதடைந்த கருவிகளும் அதன் பகுதிகளும் (Damaged tooling and parts)

2. ஒரு பொருளை அதற்குரிய இடத்தில் வைத்தல் Seiton - Set

(A Place for Eyerything and Everyhing in its place)

இதன் கீழ் தேவையான பொருட்களை மட்டும் தெரிவு செய்து பொருட்களை முறையாகவும் ஒழுங்காகவும் அதற்குரிய இடத்தில் வைத்துப் பயன்படுத்தும் போது பொருட்களின் களஞ்சிய முறைமைகள் மிகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் காணப்படும் (Efficient and effective storage methods) . இவ் விடயத்தின் கீழ்ப் பின்வரும் விடயங்களை எமது மனதில் கொள்ள வேண்டும் .

1) நான் என்னுடைய வேலையை நிறைவேற்றுவதற்கு என்ன தேவை? (What do I need to do my job?)
2) தேவையான இத்தகைய பொருட்களை எங்கே நான் வைக்க வேண்டும்? (Where should I Locate this item?)
3) வேலையை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு பொருட்கள் தேவை?
(How many of this item do I need)

இம் முறைமையின் ஊடாக பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

♣ இலகுவாக எடுப்பதற்கும் அதனை மீள வைப்பதற்கும் வசதியாக ஒழுங்கு படுத்தப்பட்டிருத்தல் (Set everything in proper place for quick retrieval and storage)

♣ இலகுவாகவும், விரைவாகவும் தேவையானவற்றை அணுக முடிவதுடன் உற்பத்தி திறனை கூட்டலாம்.
(If everyone has quick access to an item or materials, work flow becomes efficient and worker becomes productive. retrieval and storage.)

♣ ஒவ்வொரு தனிப்பட்ட விடயங்களும் அதற்குரிய இடத்தில் ஒதுக்கப்பட்டு இலகுவாக அடையாளம் காணத்தக்க வகையில் அவை பட்டியல் இடப்படல் வேண்டும்.
(Every Single Item must be allocated its own place for safe keeping and each locations must be labelled for easy identification.)

களஞ்சியப்படுத்தலின் அண்மித்த தன்மை (Storage Proximity)

* நாள் ஒன்றுக்கு பல தடவை பயன்படுத்தும் பொருட்களை மிக அருகாமையில் வைத்தல்
(If the item is used several times a day: store " on the equipment " if possible)

* ஆகக் குறைந்தது இரண்டு நாட்களிற்கு ஒரு தடவை பயன்படுத்தும் பொருட்களை வேலைத்தளத்தினுள் வைத்தல். (If the item is used at least once every two days : Store in to the work area)

* வாரம் ஒன்றிற்கு தேவையான பொருட்களை வேலைத் தளத்திற்கு அண்மித்துவைத்தல்
(If the item is used about once a week: Store close tothe work area)

* மாதம் ஒன்றுக்கு பயன்படுத்தும் பொருட்களை அதன் வசதிக்கேற்ப கையாளத் தக்க வகையில் அப்பால் வைத்தல் (If the item is used once a month : Store some where accessible in the facility.)

களஞ்சியத் தெரிவுகள் (Storage Options)

* நிறுவனத்தின் தளப்பரப்பு :– இதன் மேல் உருவத்தில் பெரியதும், மிகவும் சுமையானதுமான இயந்திரங்கள் கருவிகளை வைத்தல் (The floor: Large and heavy materials machines, tools or equipments)
* இறாக்கைகளும் தடுக்களும் : நிறுவனத்தின் தளப்பரப்பு வினைத்திறனாக பயன்படுத்தப்படும் (Racks and shelving: Efficient use of space)
* அலுவலக இரும்பு அலுமாரி (Cabinets)
* வண்டில்கள் (Carts)
* எடுத்துச் செல்லக்கூடிய அல்லது காவும் கருவிகள் (Portable Equipment)
* மத்திய வைப்பகம் (Central store room)
* தூக்கும் கருவிகள் (Hanging Tools)

களஞ்சிப்படுத்தலைத் தவிர்த்தல் (Avoid Storage)

* வேலை செய்யும் மேசை (Avoid use work tables as storage)
* தேவையை அதிகமான தளப்பாவனை (Don· t allocate too much of space)
* அலுவலர்களின் நேரம் மற்றும் முயற்சி வீணடிக்கப்படாத வகையில் களஞ்சியத் தெரிவு
(Don· t waste the workers time)

உ+ம் :

♠ அலுவலகத்தின் அறைகள், அலுமாரிகள் என்பனவற்றின் திறப்புக்கள் மற்றும் குப்பைத்தொட்டிகள் (Dustbins) பென்சில்கள், பேனாக்கள், அடிமட்டம், நூல்கள், நாளாந்த பாவனைக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் போன்றவற்றிற்கு தனித் தனியான இடத்தை ஒதுக்கி அவற்றை குறித்த இடங்களில் வைத்துப் பயன்படுத்தும்பொழுது கைகளும், மனமும் அதற்கேற்ப பழக்கப்

பட்டு விடும். இவ்வாறான ஒழுங்கு முறையின் ஊடாக இருட்டில் கூட குறித்த பொருளை அடையாளம் கண்டு கொள்ள முடி யும்.

- அலுமாரிகள், கபேட் போன்றவற்றின் உள்ளடக்கம் தொடர்பான ஒரு சுருக்கமான பொருள் உள்ளடக்கப் பட்டியல் ஒன்றைத் தெளிவாகத் தெரியக் கூடிய விதத்தில் வெளிப்புறமாக ஒட்டி விடுவதாலும் நேரதாமதத்தைத் தவிர்க்கலாம்.
- இலகுவில் அடையாளம் காணக்கூடிய விதத்தில் கோவைகள், பெயர்ப்பட்டியல்கள் போன்றவற்றை வெவ்வேறு நிறங்களில் தயாரித்து இலக்கமிடுதல் மற்றும் திறப்புகளிற்கும் இம் முறையைப்பயன்படுத்தலாம்.
- கேட்போர் கூடங்களில் அதிகளவில் மின்விசிறிகள், மின்குமிழ்கள், ஆழிகள் வேண்டப்படுகின்றன. இவற்றுக்கு சரியான முறையில் இலக்கமிடுவதன் ஊடாக எமக்கு ஏற்படும் குழப்ப நிலையைத் தவிர்க்கலாம்.

3. தூய்மையாக வைத்திருத்தல் Seiso - SHINE

* துப்பரவாக்கும் பணியானது ஒரு நாளாந்தச் செயற்பாடு ஆகும்.
* வேலைத்தளத்தைத் துப்பரவாக்கும் பணியில் மேல் மட்டம் கீழ் மட்டம் என்ற பேதம் இன்றி ஒவ்வொ ருவரும் ஈடுபடுதல் (Clean the work place : every one should be a janitor)
* வேலைத் தளத்தின் ஒவ்வொரு பகுதியும் குழுச் செயற்பாட்டின் ஊடாக தூய்மையாக்குதல் துப்பரவாக்கும் பணியில் அனைவரும் ஈடுபடுதல்

(Every area of the workplace may be assigned to group of persons for cleaning)

* பாடசாலையில் பயன்படுத்தும் எல்லா உபகரணங்களையும் அதன் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.(Keep things clean and polished : no trash or dirt in work place)
* எமது சூழலை நாம் ஒவ்வொருவரும் விருந்தினர் என்ற பார்வையில் பார்த்தல் (Everyone should see the workplace through the eyes of a visitor)
* எமது இடத்தைத் தூய்மைப்படுத்த, வேறொருவரினால் செய்யப்படும் வரை காத்திருக்காது, நாமே எமது சூழலையும் இருப்பிடத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
* எமது சூழலைத் தூய்மைப்படுத்துவதற்கு நாளாந்தம் குறித்த சில நிமிடங்களை ஒதுக்குவதுடன் மற்றவர்களையும் இந்த பழக்கத்திற்கு ஊக்குவித்தல் வேண்டும்.
* தூசு, குப்பை போன்றவை அறைகளுக்கு வரும் வழிகளை அடையாளம் கண்டு அவற்றைத் தடை செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதன் மூலம் சுத்தம் செய்யும் முறைகளை இலகுவாக்கலாம்.

4. தூய்மை பேணல் Seiketsu- STANDARDIZATIO

இதன கீழ்க் கழிவுகள், குப்பைகள் மற்றும் தூசுக்கள் போன்றவற்றை அகற்றி சுத்தமான பாடசாலைக்கலாச்சாரத்தை உருவாக்குதல்.

* தொடர்ச்சியாக தூய்மை பேணல் செயற்பாட்டில் ஈடுபடல் Cleanliness after cleaning
* அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தம் ஐம்புலன்களையும் பயன்படுத்தி பாடசாலைச சூழலின் சுத்தத்தைப் பாதுகாத்தல் Use five senses

வேலைச் சூழலின் தோற்றத்தினை அழகு படுத்தல்
Maintaining Workplace Apperance

* வர்ணம் தீட்டல் – வேறுபட்ட நிறங்களை பயன்படுத்துதல் Painting the work place : Different colours

* செலவு குறைந்த பொருத்தமான ஒளியூட்டல் மற்றும் இயற்கை வெளிச்சத்தைப் பயன்படுத்துதல்
  Proper lighting :Brightnees: Natural light best -windows: cost effective
* பயனுறுதியான தூசு சேகரிப்பு Efficteve dust collection
* நிலவிரிப்பு
* குப்பைகளை பயன் பெறத்தக்க வகையில் கையாளல்
* தொடர்ச்சியான பராமரிப்பு

5. அர்ப்பணிப்புடன் தொடர்ந்து பின்பற்றல் Shitssuke - SUSTAIN

* எமது வாழ்க்கையில் முதல் 4 படிமுறைகளையும் தொடர்ந்து பின்பற்றுவதற்கான அர்ப்பணிப்பு
  It denots commitment to maintain orderliness and to practice the first 4 S as a way of life
* எம்மிடம் இருக்கும் விரும்பத்தகாத பழக்க வழக்கங்களை நீக்குதல்
  Eliminition of bad habits
* அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்துடன் தொடர்ச்சியாக செய்றி, செய்டோன், செய்சோ மற்றும் செய்கெட்சு ஆகிய முறைமைகளை ஒழுங்கு முறையாக கடைப்பிடித்தல் Commitment

5 "S" இன் நன்மைகள் பின்வருமாறு (Benefits of 5 S)

* ஆயத்த வேலை நேரத்தைக் குறைத்தல் (Reduced set up times)
* செயற்பாட்டு நேரத்தை சேமித்தல் (Reduced cycle times)
* தளப்பரப்பை அதிகரித்தல் (Increased floor space)
* விபத்து வீதத்தை குறைத்தல் (Lower accident rate)
* ஆசிரியர்களின் தேவையற்ற நகர்வுகளைக் குறைத்தல் (Less wasted Teachers movements)
* தாமதமாக வரும் மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும். (Reduced late comers of the students teacher and officers)
* மன அழுத்தம், முரண்பாடு உத்தம நிலையில் பேணப்படும்.
* மாணவரின் வரவு அதிகரிக்கும்.

உசாத்துணை

1. http://ezinearticles.com/? Maximizing - Your- Success- When- Implementing- a -Basic-5-S- Program&id.html
2. http: //en.wikipedia.org/wiki.5S- (methodology)
3. http://enhancinged.wgbh.org/formats/index.html
4. http://cte.jhu.edu/techacademy/fellows/ullrich/ webquest/mkuindex.html
5. http: //www.citehr.com/9339-5-s-quality-management-system.html
6. http://www.qualitycoach.net/5s.htm
7. அனந்தராஜ்,ந , (2006), பாடசாலை முகாமைத்துவத்தில் 5 S திட்டம், உதயன் பத்திரிகை, (12.02.2006, 26.02.2006, 12.03.2006)
8. Central Bank Report - 2007, 2008, 2009

தமிழ் எழுத்துக்களும் ஒத்த ஆங்கில எழுத்துக்களும்

	அ A	ஆ A	இ I	ஈ I,E	உ U	ஊ U,OO	எ E	ஏ E	ஐ I	ஒ	ஓ O	ஔ QU
க் K	க Ka,Ga	கா Ka,Ga,Ca,Ha	கி Ki,Gi	கீ Ki,Kee,Hee	கு Ku,Gu	கூ Ku,Gu,Koo	கெ Ke,He,Ge	கே Ke,He,Ge	கை Kai,Gai	கொ Ko,Go	கோ Ko,Go	கௌ Kow,Kou
ங் N	ங Na	ஙா Na	ஙி Ni	ஙீ Ni,Nee	Nu	ஙூ Nu,Noo	ஙெ Ne	ஙே Ne	ஙை Nai	ஙொ No	ஙோ No	ஙௌ Now,Nou
ச் Ch	ச Sa,Cha	சா Sa,Cha	சி Si	சீ Si,See	சு Su	சூ Su,Soo	செ Se,Ce	சே Se	சை Sai	சொ So	சோ So	சௌ Sow,Sou
ஞ் Gn	ஞ Gna	ஞா Gna	ஞி Gni	ஞீ Gni	Gnu	Gnu	ஞெ Gne	ஞே Gne	ஞை Gnai	ஞொ Gno	ஞோ Gno	ஞௌ Gnow,Gnou
ட் D	ட Da	டா Da	டி Di	டீ Di,Dee	டு Du	டூ Du,Doo	டெ De	டே De	டை Dai	டொ Do	டோ Do	டௌ Dow,Dou
ண் N	ண Na	ணா Na	ணி Ni	ணீ Ni,Nee	ணு Nu	ணூ Nu,Noo	ணெ Ne	ணே Ne	ணை Nai	ணொ No	ணோ No	ணௌ Now,Nou
த் Th	த Tha	தா Tha	தி Thi	தீ Thi,Thee	து Thu	தூ Thu,Thoo	தெ The	தே The	தை Thai	தொ Tho	தோ Tho	தௌ Thow,Thou
ந் Nh	ந Na	நா Na	நி Ni	நீ Ni,Nee	நு Nu	நூ Nu,Noo	நெ Ne	நே Ne	நை Nai	நொ No	நோ No	நௌ Now,Nou
ப் B,P	ப Ba,Pa	பா Ba,Pa	பி Bi,Pi	பீ Bi,Pee,Bee	பு Pu,Bu	பூ Bu,Boo,Pu,Poo	பெ Be,Pe	பே Be,Pe	பை Bai,Pai	பொ Bo,Po	போ Bo,Po	பௌ Bow,Bou
ம் M	ம Ma	மா Ma	மி Mi	மீ Mi,Mee	மு Mu	மூ Moo	மெ Me	மே Me	மை Mai	மொ Mo	மோ Mo	மௌ Mow
ய் Y,J	ய Ya	யா Ya	யி Yi	யீ Yi,Yee	யு Yu	யூ Yu,Yoo	யெ Ye	யே Ye	யை Yai	யொ Yo	யோ Yo	யௌ Yow,You
ர் R,T	ர Ra,Ta	ரா Ta,Ra	ரி Ti,Ri	ரீ Ti,Ree	ரு Tu,Ru	ரூ Tu,To,Ru,Ro	ரெ Te,Re	ரே Te,Re	ரை Tai	ரொ To	ரோ To	ரௌ Tow,Tou
ல் l;	ல La	லா La	லி Li	லீ Lee	லு Lu	லூ Lu,Loo	லெ Le	லே Le	லை Lai,Ly	லொ Lo	லோ Lo	லௌ Low,Lou
வ் V,W	வ Va,wa	வா Va,Wa	வி Vi,Wi	வீ Vi,Vee,Wi,Wee	வு Vu,Wu	வூ Vu,Voo,Wu,Woo	வெ Ve,We	வே Ve,We	வை Vai	வொ Vo,Wo	வோ Vo,Wo	வௌ Vow,Vou
ழ் l;	ழ La	ழா La	ழி Li	ழீ Lii	ழு Lu	ழூ Lu,Loo	ழெ Le	ழே Le	ழை Lai	ழொ Lo	ழோ Lo	ழௌ Low,Lou
ள் l;	ள La	ளா La	ளி Li	ளீ Lii	ளு Lu	Luu	ளெ Le	ளே Le	ளை Lai	ளொ Lo	ளோ Lo	ளௌ Low,Lou
ற் T,R	ற Ra	றா Ra	றி Ri	றீ Ri,Ree	று Ru	றூ Ru,Roo	றெ Re	றே Re	றை Rai	றொ Ro	றோ Ro	றௌ Row,Rou
ன் N	ன Na	னா Na	னி Ni	னீ Ni,Nee	னு Nu	னூ Nu,Noo	னெ Ne	னே Ne	னை Nai	னொ No	னோ No	னௌ Now,Nou
ஸ் S,Sh	ஜெ Je	ஸ்ரீ Sri										

நனோ தொழினுட்பம் -Nano Technology

திருமதி தனவதி முருகையா
உப அதிபர் யா/ மயிலணி சைவ ம.வி

உலகில் மனித இனம் பல தொழினுட்ப புரட்சிகளை சந்தித்து வந்துள்ள இவ் வேளையில் ஐந்தாவது தொழில்நுட்ப புரட்சியாக நனோ தொழில்னுட்ப யுகம் உருவாகியுள்ளது. நனோ தொழில்னுட்பம் என்பது நனோ மீற்றர் பரிமாணத்தில் நடைபெறும் உற்பத்தி செயன்முறையாகும். அதாவது மிகச் சிறியளவு பொருளுடன் தொடர்பு படுத்தி செய்யப்படும் செயன்முறையாகும். இதில் 1–100 நனோத்துணிக்கைகள் பயன்படுத்தப்படும்.

நனோ என்பது கிரேக்க மொழியில் குள்ளன் என்ற கருத்தை குறிப்பதாகும். நனோ மீற்றர் என்பது ஒரு மீற்றரின் மில்லியனில் ஒரு பகுதியாகும். (10^{-9}m/0.000 000 001m) இச் செயன்முறையில் பங்கு கொள்ளும் துணிக்கைகளை நனோ துணிக்கைகள் என அழைக்கப்படும்.

நனோ தொழில்னுட்பம் பற்றிய கருத்தை முதன்முதலில் வெளியிட்டவர் நோபல் பரிசு பெற்ற பௌதீகவியல் விஞ்ஞானியான Richchard Ferman (1959) இவர் மிகச் சிறிய அளவான உயிர்க்கலம் பல சிக்கலான செயற்பாடுகளை தொடர்ச்சியாக ஆற்றுவது போல செயற்கையான முறையில் "சிறிய அளவு கொண்ட பொருளிலிருந்து வியத்தகு உற்பத்தியினை ஆக்கலாம்" என்ற கருத்தை முன்வைத்தார்.

நனோ தொழில்நுட்பம் என்ற சொல்லை முதன்முதலில் டோக்கியோ அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர் நோரியோ தனிக்குச்சி(Norio Janiguchi - 1974) அறிமுகப்படுத்தினார், எனினும் "Engine of Creation" என்ற நூலின் மூலம் நனோ தொழில்னுட்ப எண்ணக்கருவை உலகெங்கும் பிரசித்தமாக்கி நனோ தொழில்னுட்பத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் எரிக்ரெச்சர் (Eric Drexler - 1987) என்ற விஞ்ஞானியாவார்.

உயிர் அங்கிகளின் அமைப்பு ரீதியானதும் தொழிற்பாட்டு ரீதியானதுமான அடிப்படை அலகு கலம். இச் சிறிய அலகான கலத்தினுள் பல சிக்கலான உயிர்ச் செயன்முறைகள் தொடர்ச்சியாக நடைபெற்ற வண்ணம் உள்ளன. இச் செயற்பாடுகளிற்கு பிரத்தியேகமான வெவ்வேறு புன்னங்கங்கள் பொறுப்பாயிருந்து செயன்முறைகளை நடாத்துவது ஆச்சரியமானதாகும். இந்த வகையில் கலம் ஓர் இயற்கையான நனோத்தொகுதியாகக் கொள்ளலாம். இதே போன்றதொரு செயற்கையான நனோத்தொகுதி ஒன்றை எதிர்காலத்தில் நனோத் தொழினுட்ப அறிவைப் பயன்படுத்தி ஆக்கிக் கொள்ள முடியும். அது மட்டுமல்ல பயனுறுதி மிக்க பல செயன்முறைகளை உருவாக்க நனோ தொழில்நுட்பம் பற்றிய ஆழமான அறிவும், தியாக சிந்தனையும் அவசியமாகும்.

செயற்கையான நனோத் தொகுதி பற்றி கூறிய Forman கருத்தானது கடந்து வந்த காலங்களில் பொருளொன்றின் உற்பத்தியில் மேலிருந்து கீழ் நோக்கிய செயன்முறையே காணலாம். (Top- Down) ஆனால் நனோ தொழினுட்ப செயல் முறையில் கீழிருந்து மேல் நோக்கிய செயல்முறை (Bottom-up) அதாவது மிகச்சிறிய நனோ பருமன் கொண்ட துணிக்கையிலிருந்து குறைபாடற்ற உயர்தரமான பொருட்களை ஆக்கலாம். இங்கு அணுக்கள் குறித்த ஒழுங்கில் ஒழுங்கு படுத்தப்படுவதால் தரமான பொருட்களை ஆக்கலாம்.

இத் தொழினுட்ப செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் மூலகம் காபனாகும். இயற்கையில் காபனின் பிற திருப்பங்களாக காரீயம், வைரம் உள்ளது போல செயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட பிற திருப்பம் புளரீன் (Fullerien) ஆகும். இது 60 காபன் துணிக்கைகளைக் கொண்டது.

இவற்றைப் பயன்படுத்தி இத் தொழினுட்பத்தில் சில சாதன மாதிரிகள் உருவாக்கப்பட்டு ள்ளன.







* காபன் பக்கி போல்
* காபன் நனோ ஹோன்
* காபன் நனோக்குழாய்

நனோ தொழினுட்பம் பல துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, ஏற்படுத்தி வரும் ஒரு தொழினுட்பமாகும். இது மின்னியல் மருத்துவம், பொறியியல் நுகர்வுப் பொருட்கள், தொலைத்தொடர்புத்துறை, தீந்தை பூசுதல், கிறீம் வகை தயாரிப்பு போன்ற பல்வேறு துறைகளில் செல்வாக்கு செலுத்தி வருகின்றது.

மருத்துவத்துறையில் (Bandage) கட்டுத்துணி, சத்திர சிகிச்சை உபகரணங்கள், நுண்ணுயிர் கொல்லிப் பூச்சுக்கள், வடிகட்டிகள் போன்றன பயன்பாட்டில் உள்ளன. மேலும் செயற்கை என்பு தயாரிப்பு வெல்ல அளவு, கொலஸ்ரோல் அளவுகளை கணிப்பிடல் போன்றவற்றிற்கான உற்பத்திகளில் ஆர்வம் காட்டுகிறது.

தற்போது பற்றாக்குறையிலுள்ள எரிபொருள் தேவையும், எரிபொருளால் ஏற்படும் சூழல் மாசும் எதிர் காலத்தில் ஏற்படுத்தக்கூடிய விபரீதங்களை நனோ தொழினுட்பத்தினூடான உற்பத்திகள் மூலம் வினைத்திறன் மிக்க சாதனங்களை பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்வதன் மூலம் தீர்த்துக்கொள்ளலாம்.

நனோ உடைகள் தயாரிப்பில்PCM (Phase Change Meterial)கலந்து தயாரிக்கப்படுகிறது. விளையாட்டு சாதனங்கள் தயாரிப்பு, வர்ணப்பூச்சு தயாரிப்பு இவ்வாறு பல்வேறு விதமான பயன்பாட்டில் தாக்கத்தை விளைவிக்கக் கூடிய துறையாக நனோ தொழினுட்பவியல் வியாபித்துள்ளது.

இலங்கையில் காணப்படும் கனிப் பொருள் வளங்களான காரீயம், அப்பற்றைற், இல்மனைற், சேர்க்கோன், மொனோசைட், படிகம் என்பன நமது நாட்டின் எதிர்கால நனோ தொழினுட்ப விருத்திக்கு ஓர் வெளிச்சக்கூடாக அமைந்துள்ளது.

எந்த ஓர் தொழினுட்பத்திலும் நன்மைகளும், தீமைகளும் கலந்தே இருக்கும். அந்த வகையில் நனோ தொழினுட்பத்திலும் நன்மை, தீமைகள் கலந்தே உள்ளது. ஆனாலும் நனோ துணிக்கைகள் மிகச்சிறியவை என்பதால் வளி, நீர், தரையில் சேர்ந்து சுகாதார சீர்கேடு உடல், உபாதைகள் ஏற்பட வழிவகுக்கும். அத்துடன் போராயுத தயாரிப்பால் அனர்த்தங்கள், பாதிப்புக்கள் உருவாகும். இலத்திரனியல் கூறுகளின் அதீத உற்பத்திகளால் சமூகத்தில் உருவாகும் சீர்கேடுகள் போன்றன பாதிப்பை ஏற்படுத்தும். எனினும் சிந்திக்கத் தெரிந்த மனிதன் குறிப்பிட்ட பாதிப்புகள் தொழினுட்பத்தாலோ, அவற்றின் கண்டுபிடிப்புகளாலோ ஏற்படுவதில்லை என்பதனை மனதில் கொண்டு நல்லனவற்றை செய்வதில் நேர்மனப்பாங்குடன் செயற்படவேண்டும். நனோ தொழினுட்பத்தின் செயன்முறையின் விளைவுகள், பாதிப்புக்களை தவிர்ப்பதற்கென Center For Responsible Nano Technology எனப்படும் நிறுவனம் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

"விஞ்ஞான ஆய்வுகளையும், அறிவையும் பயன்படுத்தி கண்டுபிடிக்கும் செயன்முறைகளை விவேகமாக பயன்படுத்தி தரமான விளைவுகளைப் பெறுவோம்."

வழக்கறிஞர் திரு.தி.குமாரசுவாமி J.P.U.M அவர்களின் சரித்திரம்

"உலகெலாம் ஓங்குபுகழ் சுன்னை" என்று உத்தம புலவராற் புகழ் பெற்ற சுன்னாகம் நன்னகரில் மூர்த்தி தலச் சிறப்புக்கள் முறையாய் வாய்க்கப் பெற்றதும், பண்டு தொட்டுப் பழமறை தேர்ந்த அந்தணோத்த மர்களுக்கு உறைவிடமாய் விளங்கியதும், சைவ செந்நெறி கைவரப் பெற்ற வேதாரணியச் சைவக்குருமார் பரம்பரையாக வாழ்ந்த பெருமையுடையதும், சங்கரபண்டிதர், முத்துக்குமார கவிராயர், குமாரசுவாமிப் புலவர் முதலிய செந்தமிழ்ப் புலவசிகாமணிகளுக்கு இருப்பிடமாக விளங்கியதும், சித்தவைத்தியர் பலர் சிறப்போடு வாழ்ந்ததுமாகிய, பல்வகைச் சிறப்புக்கள் வாய்ந்தது மயிலணி என்னும் இடமாகும்.

இத்தகைய பெருமை வாய்ந்த இம் மயிலணியில் இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர், சிவநேயச் செல்வரும் சென்னை அரசாங்கத்தாராற் சன்மானிக்கப்பட்ட செல்வச்சீமானும், பேரும் புகழும் படைத்த பெருநிலக்கிழாருமாகிய சிதம்பரநாதர் என்னும் பழங் குடிச் சைவப் பிரபு ஒருவர் இருந்தார். அன்னாரும் அவருடைய மனைவி கதிராசி அம்மையாரும் ஆற்றிய அருந்தவத்தாற் பிறந்த தெய்வானை அம்மையாரை அவ்வூர்ப் பிரபல தனவந்தர் நிச்சிங்கர் சுப்பிரமணியர் என்பவர் திருமணம் முடித்துத் தில்லையம்பலம் என்னுந் தவப் புதல்வரைப் பெற்றனர்.

குலத்தை விளக்க வந்த குலக்கொழுந்தாய் வந்துதித்த அவர் சித்தவைத்திய சாஸ்திரத்தை ஐயந் திரிபறக் கற்று பிரபலம் படைத்த வைத்திய சிரோமணியாய் விளங்கினார். சமய பக்கியும் சைவாசார சீலமும் கைவரப் பெற்ற அவர் பஞ்சாட்சரசெபம், தவம், தியானம் ஆகியவற்றை முறையாகச் செய்து சித்துக்கள் செய்யும் வல்லமை பெற்றிருந்தமையால் அவரை எல்லோரும் "ஞானி" என்று அழைத்தனர். ஈசுரபக்தி, அடியார்பக்தி, தருமசிந்தனை ஆகிய நற்குணங்களை ஆபரணமாகப் பூண்ட அவர் சுன்னாகத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலும் முருக வழிபாட்டிற்குத் திருக்கோயில் இல்லாத குறையை நீக்க வேண்டி மயிலணியில் கந்தசுவாமி கோயில் ஒன்றைக் கட்டிப் பிரதிட்டை செய்தார். அவர் வரகவி முத்துக்குமார கவிராயரின் தம்பியாகிய சின்னத்தம்பியாரின் மகள் வள்ளியம்மையை விவாகஞ் செய்து கந்தப்பர் என்னும் மகனையும், வள்ளியம்மை இறந்த பின்னர் அவர் சகோதரியாகிய சின்னம்மையை மணம் முடித்துச் சிதம்பரநாதர் என்னும் மகனையும் பெற்றனர்.சிதம்பரநாதரின் மகனும் அளவைக் கந்தோரில் உயர் உத்தியோகத்திலிருந்தவரு மாகிய சீனியப்பா ¨ [Ãk ö[\ ï ¼ª Ã] _ c >s ç k Ý] B V] ï Vö B Vï Â (Deputy Director of Medical and Sanity Services) கடமையாற்றி வைத்திய கலாநிதி டாக்டர் இராமநாதன் ஆவார் (L.M.S., L.R.C.P., M.R.C.P.) கந்தப்பர் என்பவர் பரம்பரை வைத்தியத்தில் திறமையடைந்ததோடமையாது சங்கர பண்டிதரிடம் தமிழிலக்கண, இலக்கியம் கற்றுத் தமிழறிவு மிக்கவராய்ப் புராண படனம் செய்வதில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாராய் அக்காலத்தில் விளங்கினார். அவர் சங்கீதக் கலையிலுந் திறமை படைத்தவர் எனவுங் கூறுவர். அவர் உடுவில் வாசியாகிய புத்தூர் தாமோதரம்பிள்ளை என்பவருடைய மகளும் சிதம்பரநாதர்(சின்னத்தம்பர்) அவர்களின் சகோதரியும் ஆகிய முத்தம்மையாரைத் திருமணம் செய்து தில்லையம்பலம் என்னுந் தவப் புதல்வனைப் பெற்றார்.

தில்லையம்பலம் என்பவர் தமது தாயாரைப் போன்ற கட்டழகும் புன்முறுவல் பூத்த முகப்பொலிவும் கண்டோர் எல்லாரையும் வசீகரிக்கும் கெம்பீரமான தோற்றமும் உடையவராயத் திகழ்ந்தார். அவர் வட்டுக்கோட்டைக் கல்லூரியிற் கல்வி கற்று அரசாங்க சேவையிற் புகுந்து உத்தியோக உயர்வு பெற்று முல்லைத்தீவுக் கச்சேரியிலும், யாழ்ப்பாணக் கச்சேரியிலும் முதலியாராகக் கடமை பார்த்தனர்.அழகு, அதிகாரம், ஆண்மை, கல்வி, செல்வம், ஆகிய எல்லாச் சிறப்புகளும் ஒழுங்கமையப் பெற்ற அவர் அவ்வூர்ப் பிரபல வைத்தியராகவிருந்த பனிக்கலாவத்தையிலிருந்த கனகசபைப் பிள்ளையின் மகளும் வைத்தியர் வல்லிபுர நாத பிள்ளையினதும், சுவாமிநாத உடையார் மனைவியினதும் சகோதரியுமாகிய சின்னத்தங்கம்மாளை விவாகஞ் செய்து 1880ம் ஆண்டுக்குச் சமமான பிரமாதி வருடம் பங்குனி மாதம் 11ம் திகதி புதன்கிழமை ஓர் ஆண் மகவைப் பெற்றனர். அம்மகவுக்குக் குமாரசுவாமி என்னும் நாமத்தைச் சூட்டினர்.

அவருக்குச் செல்லமுத்தம்மையார், சிதம்பரம்மையார் என்னும் இரு சகோதரிகள் இருந்தனர். செல்லமுத்தம் மையார் தில்லையம்பல முதலியாரின் சகோதரி மகனும், சிறந்த ஆசிரியருமான மயிலணிப் பொன்னம்பலம் அவர்களை விவாகங் செய்தனர். சிதம்பரம்மையார் மலேயாப் புகையிரத உத்தியோகத்தராக விளங்கிய க. சின்னையா அவர்களை விவாகஞ் செய்தனர்.

தாய் தந்தையரால் சீராட்டி வளர்க்கப் பட்ட செல்வ மகனாகிய அவரை ஆரம்பக் கல்வி கற்பதற்கு அமெரிக்கன்மிஷன் பாடசாலைக்கு அனுப்பினர். பின்னர் ஆங்கிலக் கல்வி கற்பதற்கு மல்லாகம் ஆங்கிலப் பாட சாலைக்கும், சென்ஜோன் கல்லூரி, சென்பற்றிக் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்கும் அனுப்பினர். அவர் பதினாறு வயசு நிரம்பிய மாணவனாய் இருக்கும் போது அவருடைய தகப்பனார் தேகவியோகமாயினார். (1896). அவர் உயர்தரக் கல்விக்காக மத்திய கல்லூரி சேர்ந்து F.A பரீட்சையிற் சித்தியெய்தினார். பின்னர் கொழும்பு சென்று சட்டக்கல்லூரியிற் படித்து வழக்கறிஞர் (Proctor) பரீட்சையில் 1903ஆம் ஆண்டு சித்தியெய்தினார்.

அவர் மாணாக்கனாய் இருக்கும் பொழுதே அவரிடத்திற் சிறந்த குணங்கள் தென்பட்டன. வளரும் பயிரை முளையில் தெரியும் என்ற முதுமொழிக்கிணங்க அவர் படித்த வகுப்புக்கள் ஒவ்வொன்றிலும் சிறந்த மாணவனாய் விளங்கினார். "அவப்பொழுதிலும் தவப் பொழுதே சிறந்தது" என்னும் கருத்தை மேற்கொண்டு ஒரு கணத்தையேனும் வீண் போக்காது தமது கல்வியிற் கண்ணுங் கருத்துமாயிருந்து பரீக்ஷைகளில் விசேட சித்தியைப் பெற்றார்.

வழக்கறிஞர் பரீக்ஷையில் சித்தியடைந்த பின் 1904ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டில் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து வழக்கறிஞர் தொழிலை நடாத்திவந்தார். அக் காலத்திலிருந்த வழக்கறிஞர்களுள் அவர் வயசில் இளையவராகவும், உருவத்தில் சிறியவராகவும் காணப்பட்டமையால் அவுரை எல்லோரும் குஞ்சுப்பிறக்கிறாசியார் என அழைப்பாராயினர். அவர்தம் மதிநுட்பத்தினாலும், தர்க்கரீதியான வாதிக்கும் வன்மையினாலும் சிறந்த வழக்கறிஞர் என்னும் நன்மதிப்பைப் பெற்றுத் தமது தொழிலில் முன்னேற்றம் அடைந்தார். வழக்காளிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் இவருக்கு இணையா வாரில்லை எனலாம். இப் பெருங்குணத்தை முன்னிட்டு எல்லாரும் அவரிடத்தில் நம்பிக்கை வைத்தனர். அறிவு, வாய்மை, இன்சொல் முதலிய நற்குணங்களும் அவருக்குப் பெருமையைக் கொடுத்தன. பொய்ப்புகழ் கருதியாவது, பொருள் வருவாய் கருதியாவது நடுவுநிலை தவறித் தமது உத்தியோகத்திற்குரிய உயரிய இலட்சியத்தினின்றும் ஒரு போதும் வழுவாதவர். அவர் 1923ஆம் ஆண்டு ஆங்கில நொத்தாரிசுப் பரீசையிற் சித்தியடைந்து நொத்தாரிசு வேலையையும் பார்த்து எல்லாராலும் நன்கு மதிக்கப் பெற்றார்.

இவ்வாறு உத்தியோகச் சிறப்பும் உயர்ந்தோர் மதிப்பும் பெற்று வருங்காலத்திலே சுற்றத்தவர்கள் அவரை இல்வாழ்க்கையிற் புகுத்த உன்னி விவாகஞ் செய்து கொள்ளுமாறு வேண்டினர். அவர் அதற்கு உடன்பட்டு மயிலணி டாக்டர் நாகநாதர் அவர்களும் அவருடைய மனைவியாராகிய தெய்வானையம்மையாரும் பெற்ற அருமைத் திருமகளும், டாக்டர் சம்பந்தநாதர், விவசாய அதிகாரி சேனாதிராசா, பிரபல அப்புக்காத்து குமாரசிங்கம், சரஸ்வதி, செல்லப்பா, உருக்குமணி, மயில்வாகனம் என்போர் சகோதரியுமான தங்கம்மாள் என்னும் பெண்மணியை 1907ஆம் ஆண்டு வைகாசிமாதம் விவாகஞ்செய்து அறநெறி வழுவாத இல்லறம் நடத்தி வாழ்ந்து வந்தனர்.

விவாகஞ் செய்யும் காலத்திலே தங்கம்மாளுக்கு வயசு பன்னிரண்டாயிருந்தபோதும் பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக அமைந்து இல்லறம் என்னும் நல்லறத்தைச் சிறப்பாக நடத்தினர். மாதருக்குரிய அச்சம். மடம், நாணம், பயிர்ப்பு எனும் நான்கு குணங்களும் பொருந்தி உயர்நத ஒழுக்கமுடையவராய்த் திகழ்ந்தார். ஈசுரபக்தியும், அடியார் பக்தியும், சாந்தகுணமும், தருமசிந்தனையும் வாய்க்கப் பெற்ற அவர் எவரையும் இன்சொல்லால் பிரியப்படுத்தும் சற்குணவதியாகிக் "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்னும் வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு தமது கணவனைத் தெய்வமாகப் பூசித்து வந்தனர். ஆலய தரிசனஞ் செய்வதில் இணையிலா ஆர்வமுள்ளவராய்ப் பல கோயில்களுக்குஞ் சென்று பக்தியோடு தரிசனம் செய்தும் ந்தனர்.

அவர்கள் இருவரும் இல்லற வாழ்க்கை நடாத்திக் கமலாம்பிகை, சேதுநாயகி என்னும் இரு சற் புத்திரிகளையும், தில்லையம்பலம் என்னும் சற் புத்திரனையும் பெற்று வாழ்ந்தனர். தாய், தந்தை யரிடம் காணப்

பெற்ற உயர்ந்த குணங்களெல்லாம் வாய்க்கப் பெற்ற அப்புத்திரிகள் முறையே குமாரசுவாமிப் புலவரின் இளைய புதல்வர் அதிபர் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B.A அவர்களையும், அவரது சகோதரி மகனாகிய பொ. கனகசபை B.A அவர்களையும் மணம் முடித்து நன்மக்கட்பேறுடையோராய்ச் சீருஞ் சிறப்போடும் வாழ்ந்தனர். பேரப்பிள்ளைகளில் ஒருவர் கோப்பாய் அரசினர் பெண்கள் ஆசிரிய கல்லூரியில் விரிவுரையாளராகவும், இன்னொருவர் மயிலணிச் சைவ வித்தியாசாலையில் ஆசிரியையாகவும் கடமையாற்றி வந்தனர். பேரப்பிள்ளைகள் எல்லோரும் அவரிடத்தில் மிக்க அன்புடையவராய் அவருடைய இறுதிக் காலத்தில் அவருக்கு வேண்டிய பணிகளைச் செய்து அவர் வாழக்கையை இன்புறச் செய்தனர்.

அவர் பொதுநல சேவையில் இளம்பிராயந் தொடங்கி விருப்பமுள்ளவராயிருந்தார். தனது தகப்பனார் இறந்த காலம் தொடக்கம் அவர் மயிலணிக் கந்தசுவாமி கோயில் ஆதீன கர்த்தருள் ஒருவராக விளங்கி ஆலய சேவை செய்யும் பாக்கியத்தைப் பெற்றார். கோயிலிற் காலத்திற்கு காலம் கந்தபுராணம், பெரிய புராணம் முதலிய புராண படலம் ஒழுங்காக நடந்தேறவும் திருவிழாக்காலங்களிற் சைவப்பிரசாரகர்களை அழைத்து சைவப் பிரசங்கங்கள் நடைபெறவும், முக்கிய தினங்களில் பஜனைகள் நடைபெறவும் செய்தனர்.சமயத்தொண்டு புரிந்துவரும் காலத்தில் அவருக்குங் கல்வித் தொண்டு புரியும் வாய்ப்புங் கிடைத்தது. அவர் மயிலணிச் சைவ வித்தியாசாலையின் முகாமைக்காரராக 45 வருடகாலம் கடமையாற்றி அப் பாடசாலையைச் சிறந்து விளங்கச் செய்தார். மேலும் ஐக்கிய சங்கம், கிராமமுன்னேற்றச்சங்கம், புகைவண்டிப்பிரயாணிகள் சங்கம், விவசாயிகள் சங்கம் முதலிய பல சங்கங்களுக்குத் தலைமை தாங்கித் தொண்டு புரிந்து பெருமதிப்புப் பெற்று விளங்கினார். அரசினர் அவர் செய்த தொண்டுகளை நன்கு மதித்து அவருக்கு 1948ஆம் ஆண்டு J.P என்னும் பட்டத்தை வழங்கினார். அவர் இடையிடையே மல்லாகம் நீதித் தலத்திற் பதில் நீதவானாகவும் கடமையாற்றினார்.

அவர் தென்னிந்திய தல யாத்திரை செய்வதற்காகத் தமது தாயாரையும், மகனையும் 1930அம் ஆண்டு கூட்டிச் சென்று இராமேசுவரம், மதுரை, சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோயில் முதலிய பல தலங்களுக்குச் சென்று ஆலய தரிசனஞ் செய்து பின் தாயகம் திரும்பினார்.

1945ஆம் ஆண்டிலும் அதற்கு அடுத்த ஆண்டிலும் அவர் வாழ்க்கையில் எதிர்பாராத துக்க சம்பவங்கள் நடந்தன. அவருடைய அருமை மனைவியாராகிய தங்கம்மாள் சுவாத சன்னிநோய் காரணமாகத் தேக வியோகமாயினார். மனைவியின் மறைவு அவருக்கு ஆறாத துயரத்தை உண்டு பண்ணியது. அவருக்கு ஏற்பட்ட இத்துயரம் முற்றாக நீங்கு முன்னர் 1946ஆம் ஆண்டு அவருடைய அருமைத் தாயாரும் உயிர் நீத்தனர். இவ்விருவருடைய மறைவினால் ஏற்பட்ட துயரத்தை நீக்க விரும்பி 1947ஆம் ஆண்டு தல யாத்திரை செய்வதற்கு தென்னிந்தியாவிற்குப் போய் ஆங்கு திருச்சினாப்பள்ளி, திருவானைக்கா, சிறீரங்கம், தஞ்சாவூர், திருவையாறு, திருவாரூர், வேதாரணியம் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு தாயகம் மீண்டனர்.

இவ்வாறு வாழ்க்கையை நடாத்திவருங் காலத்தில் அவரது ஏக புத்திரனாகிய தில்லையம்பலம் என்பவர் நோய்வாய்ப்பட்டு1958ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவரின் மறைவு அவருக்குப் பெரிய கவலையை உண்டு பண்ணியது. இக்காரணத்தால் அவரது உடல் நலங்குன்றியது. அமைதியாக வாழ விரும்பி தமது வழக்கறிஞர் வேலையிலிருந்து இளைப்பாறி எஞ்சிய காலத்தை வீட்டிலேயே கழித்து வந்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் சுர நோய் காரணமாக 1964ஆம் ஆண்டு மாசிமாதம் 7ந் திகதி புதன்கிழமை பின்னேரம் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நிழலை எய்தினார்.

குமாரசுவாமியவர்கள் பழமைக்கும், புதுமைக்குமிடையில் வாழ்ந்தவர். புதுமையில் விருப்புடையவராயிருந்தும் பழமையைக் கைவிடாதவர். அவர் எவரோடும் புன்னகை பூத்த இன்முகத்தோடு அளவளாவும் இயல்புடையவர். அவர் வாய்மையும், நேர்மையும் தவறாத தூய்மை உடையவராக என்றும் விளங்கினார். மனம், வாக்குக் காயங்களினாற் பிறருக்குக் கனவிலும் தீங்கு செய்யாத சாந்த சொரூபியாகத் திகழ்ந்தவர். இறுதி வரையும் கடவுள் பக்தி மிக்கவராய்ச் சைவானுஷ்டானங்களைக் கைவிடாது ஒழுகி வந்தவர். இவ்வரிய குணங்களெல்லாம் பொருந்தப் பெற்ற அவர் இறந்தும் இறவாதவராகக் கருதப்படுவார் என்பது திண்ணம்.

தேடல், தொகுப்பு: நா.சிவநேசன்

(அதிபர்)

முக்கிய தினங்கள்

ஜனவரி	12	தேசிய இளைஞர் தினம்
பெப்ரவரி	28	தேசிய அறிவியல் தினம்
பெப்ரவரி	14	உலக காதலர் தினம்
மார்ச்	08	சர்வதேச பெண்கள் தினம்
மார்ச்	11	பொதுநலவாய தினம்
மார்ச்	13	உலக சிக்கன தினம்
மார்ச்	15	உலக ஊனமுற்றோர் தினம்
மார்ச்	21	உலக வன தினம்
மார்ச்	22	உலக நன்னீர் தினம்
ஏப்ரல்	01	உலக முட்டாள் தினம்
ஏப்ரல்	07	சர்வதேச சுகாதார தினம்
ஏப்ரல்	12	உலக விண்வெளி தினம்
ஏப்ரல்	18	உலக மரபுரிமை தினம்
ஏப்ரல்	22	உலக புவி தினம்
மே	01	உலக தொழிலாளர் தினம்
மே	03	உலக பத்திரிகை சுதந்திர தினம்
மே	08	உலக செஞ்சிலுவைச் சங்க தினம்
மே	09	உலக அன்னையர் தினம்
மே	15	சர்வதேச குடும்ப தினம்
மே	17	உலக தகவல் தொடர்பு தினம்
மே	18	உலக நூதனசாலை தினம்
மே	31	உலக புகைத்தல் எதிர்ப்பு தினம்
ஜூன்	05	உலக சூழல் பாதுகாப்பு தினம்
ஜூன்	07	உலக தொல்பொருளியலாளர் தினம்
ஜூன்	20	உலக போதைப்பொருள் தடுப்பு தினம்
ஜூன்	27	உலக நீரிழிவாளர் தினம்
யூலை	05	உலக சுற்றாடல் தினம்
யூலை	11	உலக மக்கள் தொகை தினம்
யூலை	17	உலக வறுமை ஒழிப்பு தினம்
யூலை	28	உலக அகதிகள் தினம்
ஆகஸ்ட்	06	உலக சமாதான தினம்
ஆகஸ்ட்	29	தேசிய விளையாட்டு தினம்
செப்டெம்பர்	08	உலக எழுத்தறிவு தினம்
செப்டெம்பர்	16	உலக ஓசோன் தினம்
செப்டெம்பர்	25	உலக காதுகேளாதோர் தினம்
செப்டெம்பர்	27	உலக சுற்றுலா தினம்
அக்டோபர்	01	உலக சிறுவர் தினம்
அக்டோபர்	02	உலக மதுவிலக்கு தினம்
அக்டோபர்	03	உலக குடியிருப்பு தினம்
அக்டோபர்	04	உலக விலங்குகள் தினம்
அக்டோபர்	05	உலக சிறுமியர் தினம்
அக்டோபர்	06	உலக ஆசிரியர் தினம்
அக்டோபர்	09	உலக தபால் நிலைய தினம்
அக்டோபர்	14	உலக தரநிர்ணய தினம்
அக்டோபர்	15	உலக வெள்ளைப் பிரம்பு தினம்
அக்டோபர்	16	உலக உணவு தினம்
அக்டோபர்	24	ஐக்கிய நாடுகள் தினம்
அக்டோபர்	30	சர்வதேச சேமிப்பு தினம்
நவம்பர்	14	குழந்தைகள் தினம்
டிசம்பர்	01	உலக எயிட்ஸ் தினம்
டிசம்பர்	03	உலக வலது குறைந்தோர் தினம்
டிசம்பர்	10	மனித உரிமைகள் தினம்
டிசம்பர்	23	விவசாயிகள் தினம்

ஆரம்பக் கல்வியெனும் அத்திவாரம்

திருமதி வாசுகி சச்சிதானந்தம்

ஆரம்பக் கல்வியே உயர்கல்விக்கும் உவப்பான வாழ்க்கைக்கும் எம்மை உயர்த்தும் ஏணி ஆகும். ஆரம்பக் கல்வி என்னும் பதம் குறிப்பது ஐந்து வயது பூர்த்தியடைந்த பிள்ளைகள் தரம் ஒன்று தொடக்கம் 5 வரை பெற்றுக் கொள்கின்ற கல்வியாகும். குழந்தையின் மனதில் கல்வி பற்றிய முதற்பதிவு ஆரம்பக்கல்வி வகுப்புக்களிலேயே ஊட்டப்படுகின்றது. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பதற்கிணங்க குழந்தையின் இரண்டு கண்களாக எண்ணும் எழுத்தும் உள்ளன. குழந்தையின் சூழல் நிலைமைகளும்உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, மனப்பாங்கு வளர்ச்சி என்பனவும் ஆரம்பக்கல்வி விருத்திக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும்.

ஆரம்பக்கல்வி பாடத்திட்டமொன்றில் ஆரம்பக்கல்வியின் குறிக்கோள்களும், அவற்றின் தேர்ச்சிகளும் இனங்காணப்படடுள்ளன. அத்தேர்ச்சிகளை எல்லாப் பிள்ளைகளும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனே ஆரம்பக்கல்விப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்பிக்கப்படுகின்றது.

ஆரம்பக்கல்விக் கலைத்திட்டம் தேசிய கல்விக்கொள்கைகளுக்கு அமைவாகவே தயாரிக்கப்படுகிறது. இங்கு தாய்மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்தசெயற்பாடுகள், சமயம் சார்ந்த ஒழுக்கங்கள் என்பன குறித்து ஆரம்பக்கல்விச் சிறார்கள் விசேட கவனம் செலுத்திக் கற்க வேண்டும் என்ற நோக்கில் இப்பாடத்துறைகள் உள்ளடக்கப்படுகின்றன. அத்துடன் வாய்மொழி ஆங்கிலமும், வாய்மொழிச் சிங்களமும் சிறுவர்களின் கற்றல் செயற்பாடுகளில் இடம் பெற வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தில் செறிந்துள்ள அடிப்படைத் தேர்ச்சிகள்

1) தொடர்பாடல் தேர்ச்சிகள்

இது தேர்ச்சிகள் நான்கு துணைத்தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை என்பன அதனுள் அடங்குகின்றன.

எழுத்தறிவு என்பது கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், தெளிவாகவும் உறுப்பமையவும் எழுதுதல் என்பனவற்றை அடக்குகிறது. எண்ணறிவு என்பது பொருள், இடம், காலம் என்பவற்றிற்கு எண்களைப் பயன்படுத்துதல், எண்ணல், அளத்தல் என்பவற்றை அடக்குகின்றது. சித்திர அறிவு என்பது விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்ப வற்றால் வெளிப்படுத்தலும், பதிவு செய்தலும் ஆகும். தகவல் தொழில்நுட்பத்தகைமை என்பது கணனி அறிவு கற்றலில், .தொழிலில், சுற்றாடலில் சொந்த வாழ்வில் தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்

2) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்துணிவு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினையை விடுவித்தல், நுணுக்கமான பகுப்பாய்வுச் சிந்தனை, தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும், கண்டறிதலும் முதலான திறமைகள் நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக்கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள் மன வெழுச்சிகள், நுண்ணறிவு என்பன.

3) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சமூகச்சூழல், உயிரியற்சூழல், பௌதீகச்சூழல் என்பவற்றுடன் தொடர்பானவை.

4) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வரவும், ஆற்றல்களை வளர்க்கவும், தொழில் சார் திறன்கள், பொருளாதார விருத்திக்குப் பங்களித்தலும், தொழில் விருப்புக்களையும், உளச்சார்புகளையும்,

கண்டறிதலும் அவர்களின் ஆற்றலுக்குப் பொருத்தமான வேலையை தெரிவு செய்தலும் பயனளிக்கக் கூடியதும் நிலைபேறு டையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

5) ஒழுகலாறு, சமயம், என்பன தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்யவும் ஒழுக்கநெறி, நடத்தை, அறநெறிநடத்தை, சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவற்றிற்குப் பொருத்தமான முறையில் செயற்படவும் தனியாள் விழுமியங்களை நன்கு மனதில் மதித்துக் கொள்ளுதலும் இன்றியமையாதது.

6) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தலும், விளையாட்டுத் தேர்ச்சியும்

மனித தொழிற்பாடுகளுடன் தொடர்புடையது. இவை உள, உடல் ஆரோக்கியம் உண்டாவதற்கு அவசியமானவை. உலகவாழ்க்கையிலும் தொழிலிடத்திலும் ஒத்துழைப்பு, குழு முயற்சி, ஆரோக்கியமான போட்டி என்பன இருப்பதற்கும் இவை வழிகாட்டுகின்றன. கவின்கலைகள், நுண்கலைகள், நாடகம், இலக்கிய ஆராய்ச்சி மனிதனின் ஏனைய ஆக்க முயற்சிகள் முதலானவையும் இத்தொகுதியில் அடங்கும்.

7) கற்றலுக்கான கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற சிக்கலான நெருக்கடியான உலகொன்றின் இயல்பிலிருந்து நேரடியாகவே உருவாகின்றன. ஒருவர் எதனைக் கற்றாலும் அக்கல்வி காலத்திற்கேற்ப புதுப்பிக்கப்படலும், மீளாயப்படலும் அவசியமாகும். இதற்கு ஒருவர் தம் அவதானத்தைப் பேணுவதில் விழிப்புணர்வும், நுண்ணுணர்வும், திறமையும் உடையவராய் இருப்பதோடு ஒரு குறித்த நிலைமையில் அவசியமாகின்ற விபரங்களை விடாமுயற்சியுடன் கவனிப்பதற்கு விருப்பமுடையவராகவும் இருத்தல் வேண்டும். வாழ்க்கை முழுவதும் கற்றலுக்காக கற்றல் தகைமைகளின் அடிப்படைத் தத்துவம் இதுவேயாகும்.

புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ்ச் செயல்மூலம் கற்றல் நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளமையால் ஆரம்பக்கல்வி அபிவிருத்தி செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.

எனவே பாடசாலையும் அதன் சூழலையும் அறிந்து அங்குள்ள வளங்களை உணர்ந்து கல்வி கற்றலுக்குப் பொருத்தமாக மாற்றியமைத்தலுடன் அனைத்துக் குறைபாடுகளையும் நிவிர்த்தி செய்யும் வழிவகைகளைத் தெரிந்து பெற்றோர் சமூகத்துடன் கலந்து நடவடிக்கைகளை மேற்கொண்டால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள வெற்றி பெறுவதுடன் மாணவர்களும் தமது கற்றல் தேர்ச்சிகளை பெற்றுக்கொள்வர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

"கல்வியின் விளைவு ஒழுக்கம்"

சிக்கனமாய் இரு, கஞ்சனாய் இராதே
தாராளமாய் இரு, ஊதாரியாய் இராதே
மௌனமாய் இரு, ஊமையாய் இராதே
நேர்மையாய் இரு, பிடிவாதக்காரனாய் இராதே

– கால்வின் கூலிட்ஜ் –

ஐயோ போய்விட்டாரே! என்று சவப்பெட்டி செய்கிறவன் கூட, வருத்தப்பட வேண்டும். அப்படி வாழ்வதுதான் வாழ்க்கை.

– மார்கிட் வெய்ன் –

வெள்ளைப் புடவை

பழையமாணவி செல்வி.நளாயினி சற்குணசிங்கம்
மயிலணி, சுன்னாகம்.

தேசிய கலை இலக்கியப்போட்டி! தேசிய கலை இலக்கியப் பேரவை நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற சிறுகதை

அன்று மழை சோவெனப் பொழிந்து கொண்டிருந்தது. சீதா வழமை போல் அன்றும் வேலைக்காக அலைந்து விட்டு வந்திருந்தாள். விதவை என்ற ஒரே காரணத்தால் யாரும் அவளை வேலைக்குச் சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. அன்று காலையில் அந்தப் பெரியவர் "உன் கஷ்ரம் எனக்கு விளங்குதம்மா, நான் என்ன செய்ய? பெண் ரைப்பிஸ்ற் வேணும் என்று விளம்பரம் கொடுத்தது உண்மை தான். ஆனால் ..... உன் போல் விதவைப் பெண்ணை, நாங்க எப்படி வேலைக்கு வைத்திருக்க முடியும்? பார்ப்பவர் கண்ணுக்கே லக்ஷ்மி கரமாக இருந்தாத் தான் சிறப்பாக இருக்கும்! உன்னை வைத்திருந்தா எங்க கம்பனி தான் நஷ்ரத்தில மூழ்கும்!" என்ற அவரது பேச்சு, அவளை நிலை குலைய வைத்து விட்டது. நினைத்து நினைத்து கண்ணீர் விட்டாள்.

இன்ப துன்பங்களை அறியாத அந்தப் பிஞ்சுக் குழந்தை நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தது. சீதா தலையை தடவி, முத்தமிட்டு விட்டு பக்கத்தில் கிடந்த போர்வையை எடுத்துக் குழந்தையை போர்த்தி விட்டு, தானும் பக்கத்தில் படுத்துக் கொண்டாள். "கடவுளே இன்றைய பொழுதும் எனக்கு ஏமாற்றமாகிப் போய்விட்டது. நாளைக்கென்றாலும் ஒரு வேலை கிடைக்க வேண்டும். சா...., பெண்ணென்றால் பூவோடும், பொட்டோடும் இருக்கும் போது தான் பெண்ணா? அது இல்லையென்றால் அவளை ஒரு ஜடமாக அல்லவா இந்த சமுகம் பார்க்கிறது. இது என்ன உலகம்? அது தான் அந்தக்காலத்திலே உடன்கட்டை ஏறும் சம்பிரதாயம் இருந்திச்சா?" என்று மனதிற்குள்ளே நொந்து கொண்டாள். திடீரென்று மறுபக்கம் திரும்பியவள் மேசையில் சிரித்துக் கொண்டிருந்த ராஜ் போட்டோவைப் பார்த்து மீண்டும் சோகமானாள்.

ராஜ் போட்டோவைக் கையிலெடுத்தவள் "உங்க சீதாவிற்கு வந்திருக்கும் துன்பத்தைப் பார்த்தீர்களா? உங்க பிள்ளையை எப்படிக் காப்பாற்றப் போகிறேன்? என் கண்ணிலிருந்து ஒரு துளி கண்ணீர் கூட வரக்கூடாது என்று அடிக்கடி சொல்வீர்களே! இப்ப எங்களை மட்டும் தவிக்க விட்டு ஏன் ஜமன் கிட்டப் போனீங்க? எங்களைத் தனிய விட்டிட்டுப் போக எப்படி மனசு வந்திச்சு? இந்த நிலையில்கூட எங்களைப் பார்த்து பரிதாபப்பட ஒரு ஜீவன் இல்லையே? என் மேல் நிறைய அன்பு வைத்திருந்த பெத்தவங்களும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை! புகுந்த வீட்டுக்காரங்களும் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை! உறவுகள் இருந்தும் நாங்கள் அநாதைகளாக நிற்கிறோம். இந்த நிலை வேறு எல்லோருக்கும் வரக்கூடாது! வரவே கூடாது!" என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

அடுத்த நாள் வழக்கம் போல் வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்த சீதா வாசலில் ஆட்டோ சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள். ஆட்டோவிலிருந்து இறங்கிய மீனாவைக் கண்டு சந்தோஷமும், அதிர்ச்சியும் அடைந்தாள். மீனாவும் சீதாவும் உயிர்த்தோழிகள்! ராஜ் இற்கும் சீதாவிற்கும் திருமணம் முடித்து வைத்து விட்டு வேலை விடயமாக கொழும்பு சென்றவள் இன்றுதான் நீண்ட நாட்களின் பின் வந்திருந்தாள். ராஜ் இறந்து பல மாதங்களான போதும் கூட அவளுக்கு எந்த அனுதாபங்களும் கடிதமூலமோ, தொலைபேசி மூலமோ தெரிவிக்கவில்லையென்ற கோபம் மீனா மேல் இருந்தாலும் அவளுக்கு இருக்கும் கவலையை விட கோபம் பெரிதாகத் தெரியவில்லை. மீனாவைக் கண்டவுடன் ஓடிச் சென்று ஓ வெனக் கட்டியழுதாள்.

சீதாவிற்கு தன் துன்பங்களை சொல்லியழ இன்று தான் ஒரு உறவு கிடைத்தது. மீனாவும் சீதாவிடம் "நடக்கக் கூடாதது நடந்து விட்டது . இனியும் நீ கவலைப்படக்கூடாது. இனித்தான் நீ தைரியமாக இருக்க வேண்டும்." என்று புத்திமதி கூறினாள். பின் தான் இவ்வளவு நாளும் கொழும்பிலிருந்ததால் வேலை விடயமாக அடிக்கடி வெளிநாடுகளுக்கும் சென்று வந்ததால் பிஸியாக இருந்து விட்டேன். திடீரென்று பல

நாட்களுக்குப்பின் போன வாரம் தான் கொழும்பு வந்தேன். அப்போது தான் ராஜ் இறந்த விடயத்தை அறிந்தேன். ரொம்பவும் இடிந்து போய் விட்டேன் என்றவள் இப்ப கூட உன் அப்பா, அம்மா உன்னை வந்து பார்க்கலையா? என்று கேட்டாள். இல்லையென்று தலையை ஆட்டியவள் " அவர்களுக்கு துரோகம் செய்து விட்டோனோ? என்று நினைக்கின்றேன். பெத்தவங்க பிள்ளைகளுக்கு நல்லது தான் செய்வார்கள்! சொல்வார்கள்!பிள்ளைகள் தான் அதை உணர்வதில்லை. நானும், ராஜ்யும் காதலித்து தான் திருமணம் செய்தோம். அது தப்பில்லை . பெத்தவங்க சம்மதத்தோட செய்திருக்கணும். அவர்கள் நாள் பார்த்து, சாத்திரசம்பிரதாயப்படி, பொருத்தம் பார்த்து பிள்ளைகளுக்கு திருமணம் செய்றாங்க. நாங்க எங்க கலியாணம் முடிந்தால் சரி என்று அவசரப்பட்டு நாள், கோள் பார்க்காமல் எங்கள் எண்ணப்படி நடந்ததால தான் என் ராஜ்யை இழக்க வேண்டியதாயிற்று என்று இப்ப தான் உணருகின்றேன் ஒரு வேளை ராஜ் என்னை திருமணம் செய்யாதிருந்தால் உயிரோடி ருந்திருப்பாரோ? என்னவோ?" என்று கவலைப்பட்ட சீதாவை வேதனையுடன் பார்த்த மீனா அவள் சொல்வதிலும் உண்மையிருக்கிறது என்பதை உணர்ந்து அவளை ஆறுதல்ப் படுத்தினாள்.

ஏதோ நினைவு வர அப்போ செலவுக்கு இப்போ என்ன செய்கிறாய்? என்று மீனா கேட்டாள். சீதாவும் நடந்தவற்றை ஒன்றும் விடாமல் கூறினாள். "விற்கக்கூடிய பொருட்களை விற்று ராஜ்யின் கடமைகளை செய்து முடித்தேன். ஏதோ இவ்வளவு நாளும் சமாளித்தேன்" என்றவள் தான் ஒவ்வொரு நாளும் வேலைக்காக அலைந்ததையும், விதவை என்று எவரும் வேலை தர முன் வரவில்லையென்றும் கூறியழுதாள்.

மீனாவும், சீதாவின் கைகளைப் பிடித்து " சீதா இப்படியெல்லாம் நடக்கும் என்று கனவில கூட நாம நினைக்கவில்லை. எல்லாவற்றிற்கும் ஒரு நேரம் வரும் நீ கவலைப்படாதே" என்று ஆறுதல் கூறினாள். அதே நேரம் தன் கண்ணீரை மறைக்க மறுபுறம் திரும்பினாள். அங்கு ஓரிடத்தில் விளையாடிக் கொண்டிருந்த பாபுவைத் தூக்கியவள் " அடடா நான் பிள்ளைக்கு என்னவெல்லாம் வாங்கி வந்திருக்கிறேன் தெரியுமா?" என்று கேட்டு சூட்கேஸைத் திறந்து பிள்ளைக்காக வாங்கி வந்த விளையாட்டுப் பொருட்கள், தின்பண்டங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்தாள். சீதாவிடம் வந்த மீனா " சீதா இனி நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே . இப்போதைக்கு இதைச் செலவுக்கு வைத்துக்கொள்!" என்று ஒரு கட்டுப்பணத்தை அவளிடம் நீட்டினாள். சீதா தயங்கினாள். " என்ன சீதா எனக்கெல்லாம் நீ எவ்வளவு உதவி செய்திருக்கிறாய்? பிளீஸ் வாங்கிக்கோ" என்று அவளை வற்புறுத்திக் கொடுத்தாள்.

சீதாவும் பல இடங்களில் வேலைக்காக அப்ளிக்கேசன் போட்டிருந்தாள். இதுவரை எதுவும் சரிவரவுல்லை. மீனா வந்தது சீதாவிற்கும் பாபுவிற்கும் ஆறுதலையும், சந்தோஷத்தையும் கொடுத்தது. ஆனாலும் விருந்தாளியாக வந்த மீனாவிற்கு நானும் குழந்தையும் பாரமாகி நிற்கிறோமே என்று மனம் வருந்தினாள். மீனாவிற்கு சீதாவைப் பார்க்கும் போதெல்லாம் மீண்டும் அவள் முகத்தில் சந்தோசத்தை பார்க்க மாட்டோமா? என்று மனம் ஏங்கியது. பாவம் சீதா எவ்வளவு கலகலப்பாக இருந்தவள். சிறு வயதிலிருந்து பெற்றோருக்கு செல்லப்பிள்ளையாக இருந்து பிறகு எவ்வளவு சிரமங்களின் மத்தியிலும் தனக்குப் பிடித்த ராஜ்யையே திருமணம் செய்வதற்காக பெற்றோரைப் பிரிந்து வந்தாள். ராஜ் கூட சில நாள் வாழ்ந்த போதும் எவ்வளவு சந்தோசமாக வாழ்ந்தாள். மகாலக்ஷ்மி போல பொட்டோடும், பூவோடும், வண்ண வண்ண சேலை கட்டி எவ்வளவு அழகாக இருந்தாள். யார் கண் பட்டுதோ? நல்ல ஜோடி என்று நான் எத்தனை தரம் கூறியிருப்பேன். இப்படியாகி விட்டதே! கடவுளுக்கு கொஞ்சம் கூட இரக்கமேயில்லை சீதா என்ன பாவம் செய்தாள். இப்படி சிறிய வயதில் வெள்ளைப் புடவையையே பரிசாகக் கொடுத்து விட்டாரே! என்று மனதிற் குள்ளே சலித்துக் கொண்டாள்.

நாட்கள் உருண்டோடியது. அன்று இரவு சீதாவிடம் பேசிக்கொண்டிருந்த மீனா சிறிது தயக்கத்துடன் "சீதா .... உன்னை கொஞ்சம் உன்னை மாத்திக்கிட்டா என்ன?" என்று புதிராகப் பேசினாள். சீதாவும் ஏதும் புரியாதவளாய் " என்ன மீனா சொல்கிறாய்? சொல்கிறதை புரியும்படி சொல்" என்று கேட்டாள். மீனாவும் " உனக்கு வேலை கிடைக்க வேண்டுமானால் உன் வெள்ளைப் புடவைக்கு விடுதலை கொடுக்க ணும். நீ நிறப் புடவை கட்டணும். அப்போதுதான் உன்னையும் ஒரு மனுசியாக இந்த உலகம் ஏற்றுக் கொள்ளும். சுலபமாக

வேலையும் கிடைத்து விடும்." என்று அறிவுரை கூறினாள். சீதாவும் ஆத்திரத்தோடு " இந்த உலகத்திற்காக நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ள வேண்டுமா?" என்று எதிர்க்கேள்வி கேட்டாள்.

மீனாவும் சீதாவின் கோபத்தைப் புரிந்து கொண்டவளாய் சீதா உண்மையில் நீதான் உன்னையே ஏமாற்றுகிறாய். தயவு செய்து உன் ஆத்திரத்தை விட்டு நான் சொல்வதைக் கேள். கேட்டுவிட்டு அப்புறமா உன் பதிலைச் சொல்லு. பிளீஸ் ... பெண்களாக பிறந்தவர்கள் எப்போதும் பாவப்பட்டவர்கள் இல்லை. ஒரு பெண் தன் கணவனை இழந்ததும் **வெள்ளைப்புடவை** கட்டுகிறாள். ஆபரணங்களைப் போடாது மூளியாக நிற்கிறாள். பூவையும், பொட்டையும் இழந்து மொத்தத்தில் சமூகத்திற்கே பாவப்பட்டவளாகி கண்ணீரோடு வாழ்கிறாள். ஆண்களுக்கு இப்படியொரு மாற்றமும் இல்லையே. ஒரு நல்ல கருமம் நடக்கும் போதும் கணவனை இழந்தவள் என்று பெண்களை மட்டும் ஒதுக்கி விடுகிறார்கள். மனைவியை இழந்தவன் என்று ஆண்களை யாரும் ஒதுக்குகிறார்களா? சொல்லு சீதாஇத்தனைக்கும் காரணம் பெண்கள் தான். உண்மையைச் சொன்னால் பெண்களே தங்கள் வாழ்க்கையை நாசப்படுத்தி, வேஷம் போட்டு தங்களை சிறுமைப்படுத்துகிறார்கள். பைத்தியமாக்கிக் கொள்கிறார்கள். சோக மாலையைத் தங்கள் தோளில் சூடிக் கொள்கிறார்கள் என்று கூறி தெளிவு படுத்தினாள்.

இத்தனைக்கும் மௌனமாக இருந்தாள் சீதா. மீண்டும் மீனாவே பேசினாள். வீதியால் வெள்ளைப் புடைவையோடு ஒரு பெண் போனால் அவளைக் காண்பதே குற்றம் என்று ஒதுங்கும் சமூகத்திற்கு நீயும் அடிமையாக வேண்டுமா? நீ மற்றவர் பற்றி யோசிக்காமல் எனக்காக உன் மனச்சாட்சியை மட்டும் கேட்டு வெள்ளைப் புடைவையிலிருந்து விடுதலை பெற வேண்டும். இந்தச் சிறிய வயதில் உன்னை அப்படிப் பார்க்கும் போது எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கு தெரியுமா? என்று கண் கலங்கினாள் மீனா. சீதாவும் தடுமாறியவளாய் உண்மைகளையும் விளங்கிய படி " மீனா கொஞ்சம் அவகாசம் கொடு நன்றாக யோசித்துப் பார்க்கிறேன்" என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்றாள்.

அடுத்த நாள் கடைக்கு சென்ற மீனா பாபுவிற்கு சில உடுப்புகளும் சீதாவிற்காகச் சில நிறப் புடைவை களையும் வாங்கிக் கொண்டு வந்தவள் "சீதா நான் வேலை விடயமாக சித்தப்பாவிடம் பேசியிருக்கிறேன். அவர் உன்னை நாளைக்கு வரச் சொன்னார் நிச்சயம் இந்த வேலை கிடைக்கும்"என்று கூறியவள் சீதா இதில் பாபுவிற்கும் உனக்கும் சில உடுப்புகள் இருக்கிறது . அதில் பிடித்ததாப் பார்த்து உடுத்திக்கிட்டு வா. நாம் எல்லோரும் முருகன் கோயிலுக்குப் போய் வரலாம் என்று கூறி விட்டு உள்ளே சென்றாள்.

சீதாவும் பிரித்துப் பார்த்தவள் நிறப்புடைவையைக் கண்டு கண்கலங்கி தயங்கியவள் பின் மனதைக் கல்லாக்கியவளாய் என்னில் அன்பு காட்டி ஆதரிக்கும் மீனா மனசை புண்படுத்தக்கூடாது என நினைத்து நிறப்புடைவையில் ஒன்றைக்கட்டிக் கொண்டு கண்ணீருடன் மீனாவிடம் வந்தாள். "சீதா கண் கலங்காதேம்மா நீ எனக்காக மட்டும் மாறியதற்காக நன்றியம்மா! இனி உனக்கு நல்லகாலம் தான் பார்!" என்று அவளுக்கு நம்பிக்கையூட்டி மீனாவும் சீதாவைக் கட்டியணைத்துக் கொண்டாள். சீதாவும் மீனா என்னில் இந்தளவு அன்பு காட்டும் உனக்காகவும், என் குழந்தைக்காகவும் தான்..... என்று விக்கித்து நின்றாள்.

கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்து விட்டுத் திரும்பினார்கள். வழியில் கூட சிலர், அறியாதவர்கள் கூட உன்னை நான் அப்பப்போ கண்டிருக்கிறேனம்மா! சிறிய வயதிலே இப்படியாகி விட்டதே என்று மனம் வருந்தியிருக்கிறோம். இப்ப தான் உன்னைப் பார்க்கையிலே சந்தோஷமாக இருக்கு என்று கிட்ட வந்து கதைத்து விட்டுப் போனார்கள். அப்போது தான் **வெள்ளைப்புடைவை** எவ்வாறு பிறரிடமிருந்து எம்மைத் தூரப்படுத்துகிறது என்ற உண்மையை அறிந்து **வெள்ளைப்புடவைக்கும், நிறப்புடைவைக்கும்** உள்ள வித்தியாசத்தையும் புரிந்து கொண்டாள்.

முற்றும்.
-நன்றி-

(மாவும் கதாசிரியரின் கற்பனையே)

புது மணப் பெண்

ஆசிரியை
திருமதி மே.கி. மரியதாஸ்

புது மணப் பெண்ணிவள்
காதல் திருமணமும் இல்லை
பேசி செய்ததாயும் இல்லை
எப்படியோ புதுப்பெண்ணிவள்
முந்திய மாதிரி இல்லை
முகப் பொலிவும் புறத்தோற்றமும்
ஆ.....ஹ.....
இடிந்து போயிருந்த கட்டடங்களெல்லாம்
அடுக்கு மாடிகளாயிற்று இப்போ
செல் பட்ட மின் கம்பங்களெல்லாம்
புதுக் கம்பிரத்துடன் இன்று
சப்பாத்து முள் கூட
சரியாய் மிதி படாத சுப்பிரமணிய பூங்காவில்
இன்று காதலர் கூடும் காட்சிக் கூடம்
எமை தரிசிப்பதற்காக இன்று
அல்லும் பகலும் பயணிகள் வருகை
ஆடலும் பாடலும் வாணவேடிக்கையும்
பத்தாக்குறைக்கு மாதத்துக் கொரு
கொண்டாட்டங்களும் கூட
புனரமைப்பு
வீதிகள் அகல கால் பதிக்க
இரு மருங்கிலும் வியாபார
விளம்பரங்கள் அலங்கரிக்க
விதியில்போட்ட கடைகள் போதாதென்று
வீட்டுக்கு வீடு
நடமாடும் வியாபாரம்
ஏற்ற முறையில் மின்சார உபகரணம்
இவை அனைத்தும் கனவா?
இல்லை இது கற்பனையா?
இடை சுகம் என்னை நான்
கிள்ளிக் கொள்வதும் உண்டு
நினைவுகள் எல்லாம் கனவாய்ப் போக
கனவுகள் மட்டும் நியமானதோ.....
இது மட்டும் போதும் என்று
கவி பாடும் கவிஞரும் உண்டு
இது வேண்டாம் எமக்கு இப்போ என்று
கண்ணீர் வடிக்கும் உள்ளங்களும் உண்டு
ஏற்றம் என்பதா? இறக்கம் என்பதா?
ஏமாற்றம் என்பதா?.....
இலக்குகள் தெரியாத பயணம் என்பதா?
எப்படியோ இவள் புதுமணப் பெண்
எவரோ சொன்னது போல
கடவுளே காக்கட்டும் எமை

உள்ளூராட்சியின் உன்னத சேவை

பழைய மாணவி செல்வி ஜெ.பாரதி
யா/மயிலணி சைவ ம.வி

உள்ளூராட்சி வாரம் 2008 - மத்தியபிரிவு கவிதைப்போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை

உள்ளூராட்சியின் உன்னத சேவை
உழைக்கும் கரங்களை ஊக்கிடுமே
கரங் கொண்டு அவர் செய்யும் சேவை – எம்
கனிவான வாழ்விற்கு அமைத்திடும் பூம்பாதை
தினந்தோறும் அவர் செய்யும் சேவை – எம்
திறம்பட்ட வாழ்வினை உயர்த்திடும் சேவை
கனிவோடு அவர் புகழ் பாடு – தினம்
காதாலே அவர் புகழ் கேளு

அர்ப்பண சிந்தையுடன் இருப்பவராம் – எம்
ஒப்புர வாழ்வதனைக் காப்பவராம்
வள்ளல்கள் சேவை தினம் பாரம்மா – எமக்கு
வளமான வாழ்வதனைக் கொடுப்பாரம்மா
கல்விக்கு இவர் செய்யும் சேவையம்மா –எம்
கண்ணீர் துடைக்கும் நற் சேவையம்மா
நித்தம் இவர் செய்யும் சேவையம்மா நீ
நிறைவான மனங் கொண்டு போற்றிடம்மா

வீதிகள் ஒழுங்கைகள் அமைப்பவராம் – எம்
வாழ்விலே விளக்கேற்றி வைப்பவராம்
தோல்வியைத் தினம் துரத்தி விடுபவராம் – எம்
தோழனாய்த் தோள் போட்டு நிற்பவராம்
ஏழ்மையைத் தினந்தோறும் அழிப்பவராம் – ஏற்ற
ஏணியாய் துணையாகி நிற்பவராம்
சூழல் தினம் காத்து வருபவராம் – மானிட
சூழ்ச்சியிலிருந்து சூழலைக் காப்பவராம்
உண்மை நெறியில் நின்று விடு – உள்ளூராட்சியின்
உன்னத சேவைக்கு உதவிடு

கல்வித்துறையில் கணனித் தொழினுட்பத்தின் பயன்பாடு

திரு. சோ.சபாபதிசர்மா
ஆசிரியர்
யா/மயிலணி சைவ ம.வி

இன்றைய தகவல் யுகத்தில் தகவல்களைப் பெறுதல், சேமித்தல், கையாளுதல், தொடர்பாடுதல், பிரயோகித்தல், முகாமைத்துவம் ஆகிய செயற்பாடுகளுக்கு தொழினுட்பம் அவசியமாகின்றது. இவ்வாறான அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட தொழினுட்பம் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் எனப்படுகின்றது.

தற்போது கணனி எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படும் பொதுவானதொரு உபகரணமாக மாறியுள்ளது. கணனியுடன் தொடர்பான தகவல் மற்றும் தொழினுட்பம் (Information Communication Technology) மிகவும் இன்றியமையாத அம்சமாக விளங்குகின்றது. கணனித் தொழினுட்பம் (Computer Technology) , தொடர்பாடல் தொழினுட்பம் (Communication Technology) ஆகிய இரண்டும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும். இணையம் மூலமாக பூகோளக் கிராமம் என்னும்(Global Village) எண்ணக்கரு மூலமாக நாடுகளுக்கிடையிலான தூரத்தைக் குறைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் கல்வித் துறையில் கணனித்தொழினுட்பத்தின் பயன்பாடு பற்றி நோக்குவோம்.

இன்றைய நவீன தொழினுட்ப உலகில் ஆசிரியரின் கற்றல் – கற்பித்தல் முறையிலும், மாணவரின் கற்றல் செயற்பாடுகளிலும் பெருமளவு மாற்றத்தை அவதானிக்க முடிகிறது. தகவல் தொடர்பு தொழினுட்பத்தின் பிரவேசம் கற்றல், கற்பித்தலில் பெருமளவு பங்களிப்பைச் செய்து வருகின்றது. கணனியானது கல்வித்துறையில் பயன்படுத்தபடும் முக்கிய உபகரணமாக இப்போது மாறியுள்ளது. ஆசிரியர் ஒரு போதனையாளர் என்ற நிலையில் இருந்து வழி காட்டுபவர், சாத்தியப்படுத்துபவர், கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்குபவர் போன்ற பல்வேறு வகிபங்குகளை ஏற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது.

கணனியின் உதவியுடன் கல்வி கற்றலை "கணனித் துணையுடனான கற்றல்"(CAL-Computer Assisted Learning) எனவும், கணனியைப் பயன்படுத்திக் கற்பித்தலை மேற் கொள்ளுவதனை "கணனியை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல்" (CBT-Computer Based Teaching) எனவும், இணையத்தைப் பயன்படுத்திக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் "வலைத் துணையுடனான கற்பித்தல்" (BT- Web Based Teaching) எனவும் அழைக்கப்படுகின்றது.

இப்போது ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர் கல்வி வரையான அநேக பாடங்கள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. இக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை சிரமமின்றி மீண்டும் மீண்டும் செயற்படுத்தக் கூடியதாக இருப்பதும், இந் நிகழ்ச்சித் திட்டங்கள் பல்லூடகத் தொழிநுட்பத்தைப் (Multimedia Technology) பயன்படுத்தித் தயாரிக்கப் பட்டிருப்பதும் சிறப்பம்சமாக அமைந்துள்ளது. இதே வேளை கற்றல்– கற்பித்தல் நடவடிக்கைகளைத் தவிர பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளுக்கும் கணனி பயன்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் கல்வித்துறையின் வினைத்திறனை அதிகரிக்க முடிகின்றது.

மேலும் தற்போது இலத்திரனியல் (e-Learning) கற்கை முறைமை தொடர்பாக உட்கட்டமைப்பு வசதி விருத்தி பற்றி இலங்கையில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதற்கமைய **School net** என்னும் இணையம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையானது சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுள்ள பிரஜைகளை வழங்கும் ஒரு நிறுவனமாகும். இன்றைய மாணவர்கள் நாளைய சமூக உறுப்பினர்கள். எனவே கணனி பற்றிய பயத்தைப் போக்கி, கணனி பற்றிய விழிப்புணர்வை மாணவர் மத்தியில் ஏற்படுவதன் மூலம் அது பெற்றோரையும் சென்றடையச் செய்யலாம்.மாணவர்கள் கணனியை இயக்கு வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் ஏற்ற திறனைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். கணனியின் அடிப்படை அறிவு அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும், உயர்கல்விக்கும் அத்தியாவசியமாகின்றது.

எனவே கணனியைக் கற்றல்– கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதன் மூலம் கற்றல்– கற்பித்தல் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்ய முடியும். எனவே கல்வித்துறையில் கணனியின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும்.

வலாற்று அகராதி
Words and Names of Historical Significance

அக்பர் Akbar	ஹுமாயூனின் புதல்வனான் மொகலாய மகா சக்கரவர்த்தி The great moghul emperor
அலெக்சாண்டர் Alexander	உலகம் வென்ற கிரேக்க மன்னன் The great Mocedoniaking
அல்பிரெட் Alfred	இங்கிலாந்து தேசத்தை ஆண்ட ஓர் அறிவுடைய மன்னன் A king of England
அப்றோரைட் Aphrodite	கிரேக்கருடைய காதல் தேவதை The Greek goddess of love
அப்பலோ Apollo	கிரேக்கருடைய சூரிய பகவான், கல்விக் கடவுள் The Greek god of poetry and the Sun
ஆக்கிமிடிஸ் Archimedes	கி.மு 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சிறந்த கிரேக்க விஞ்ஞானி A Greek scientis of the 3rd century B.C
அரிஸ்ரோட்டில் Aristotle	ப்ளேட்டோவின் மாணவரான ஒரு கிரேக்க தத்துவ சாஸ்திரி The great Greek philosopher
அசோகன் Asokan	ஒர் இந்திய மகா சக்கரவர்த்தி A great Indian Emperor
அதீனா Athena	கிரேக்கரது அறிவுக் கடவுள் The Greek goddess of wisdom
அற்லஸ் Atlas	உலகத்தைத் தோழில் தாங்கிய ஒரு கிரேக்க அரக்கன் The Greek giant who had to support the heavens on his shoulders
அயூறோறா Aurara	ரோமரது உதய தேவதை The Roman goddess of the down
பாபேல் Babel	பாபிலோனியாவில் ஒரு நகரம். இங்கு சுவர்க்கத்தை அடைய பெரிய கோபுரம் ஒன்றை கட்ட ஜனங்கள் ஆரம்பித்தார்கள் City in Babylonia where the people began building a tower to reach heaven
பஸ்ரில் Bastille	பிரான்சிலிருந்த ஒரு பிரபலமான சிறை A famous French prison
பிஸ்மார்க் Bismark	19ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் இருந்த புகழ்பெற்ற ஒரு ராஜதந்திரி A famous German statesman of the 19th century
கறுப்புச் சட்டையினர் Black shirt	இத்தாலியில் முஸோலினியின் கருஞ்சட்டைக் கட்சியைச் சேர்ந்தவர் A member of the Italian Fascist pary
போல்ஸ்விக் Bolshevik	ருஷ்யப் பொதுவுடைமைக் கட்சிக்காரர் A member of the Russian communist part
பொக்சர் Boxer	சீன நாட்டுத் தேசிய இரகசியக் கட்சியின் அங்கத்தினர் Member of the chinese Nationalist secret society
பறூட்டஸ் Brutus	ஜூலியஸ் ஸீஸரைக் கொன்ற ரோமானியரில் ஒருவர் One of the Romans who killed Julius caesar
புத்த பெருமான் Buddha	புத்தர், புத்த மத ஸ்தாபகர் A great religious teacher who founded thereligion 'Buddhism'
யூலியஸ், சீசர் Caesar, Julius	ஒரு பெரிய றோமானிய வீரர், ராஜதந்திரி A Roman general and statesman
கிளியோபெட்றா Cleopatra	எகிப்தின் ராணிகளில் கடைசியான வள அழகிற்கும் வசீகரத்திற்கும் பெயர் பெற்றவள் The last queen of Egypt Famous farher Charmand beauty
கொலம்பஸ் Columbus	அமெரிக்காவை 1492ல் கண்டுபித்த இத்தாலியர் An Italian who discovered America in 1492
கொன்பியூசியஸ் Confucius	சீனதேசத்து தத்துவ சாஸ்திரி A Chinese philosopher and teacher
தாந்தே Dante	ஒரு சிறந்த இத்தாலியக் கவி A great Italian poet
டெல்பி Delphi	கிரீஸிலட ஒரு நகரம் இங்கு ஒரு பெரிய அப்பொலோவின் கோவிலுக்கு செல்லும் இடமும் இருந்தன A town in Greece where there was a famous temple and araclest Apollo

இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களும் அதன் நாணயக் கொள்கை கருவிகளை அமுல் படுத்தலும்
(Objectives and Monetary Policy Instruments Implementation of Central Bank of Sri Lanka)

திருமதி நிஸந்தினி ரமேஸ்
ஆசிரியர் யா/மயிலணி சைவ ம.வி, சுன்னாகம்.

சுருக்க வரலாறு(Overview)

பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அதை மேம்படுத்துவதற்காகவும் தீவிரமான நாணயக் கொள்கைமற்றும் வலுவான நிதியியல் துறையின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதத்திலும் சுதந்திரத்திற்கு பின்பு அமைந்த அரசால் இலங்கை மத்திய வங்கி ஏற்படுத்தப்பட்டது. மத்திய வங்கி நிறுவப்படுவதற்கு முன்னர் மத்திய வங்கித் தொழில் தொடர்பான தொழிற்பாடுகள் 1884 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கடதாசிப் பணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பணச் சபை முறைமையினால் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் சுதந்திரம் பெற்ற பின்னர் அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டினதும் சுதந்திரமடைந்த தேசத்தினதும் தேவையினை எதிர்கொள்ள போதியதற்றதாகவும் பொருத்தமற்றதாகவும் பணச்சபை முறைமை கருதப்பட்டது. இதன் காரணமாக 1948 யூலையில் இலங்கை அரசாங்கம் மத்திய வங்கி ஒன்றை அமைப்பதற்கான தொழினுட்ப நிபுணத்துவத்தினை வழங்குமாறு ஐக்கிய அமெரிக்காவினைக் கேட்டுக் கொண்டது. இதன் விளைவாக ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ஒதுக்குச் சபையின் ஒரு பொருளியலாளரான திரு ஜோன் எக்ஸ்டர் என்பவர் இப்பணியினைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டார்.

நாட்டின் பணம், வங்கித் தொழில் கொடுகடன் முறைமை என்பவற்றை முழுமையாக நிர்வகித்து ஒழுங்கு படுத்த பரந்தளவு அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டது. மத்திய வங்கிக்கு நாணயத்தை வெளியிடும் முழு உரிமையும், அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதோடு நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் காவலனாகவும் மாறியுள்ளது. 1949 இன் நாணயச் சட்டவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1) உள் நாட்டு நாணயப் பெறுமதியினை உறுதிப்படுத்தல் (விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்)
(Maintenance of price stability)
2) இலங்கை ரூபாவின் நாணய மாற்று வீதத்தின் முகப்புப் பெறுமதியினை அல்லது உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல்(செலாவணி வீத உறுதிப்பாட்டை பேணுதல்)
(Maintenance of exchange rate stability)
3) இலங்கையில் உயர் மட்டத்திலான உற்பத்தி, வேலை வாய்ப்பு மற்றும் உண்மை வருமானம் என்பவற்றை மேம்படுத்தி அதனைப் பேணுதல்.
4) இலங்கையின் உற்பத்தியாக்க மூல வளங்களின் முழுமையான அபிவிருத்திக்கு ஊக்கமளித்து முன்னேற்றுதல்.

மேலுள்ள (1), (2) ஆகியன உறுதிப்பாட்டு குறுக்கோள்களென வகைப்படுத்தலாம். இதே வேளை (3), (4) ஆகியன அபிவிருத்தி குறிக்கோள்களென வகைப்படுத்தலாம். எவ்வாறாயினும் மத்தியவங்கிக்கு ஆரம்பத்தில் அளிக்கப்பட்ட உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்திக் குறிக்கோள்கள் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டுள்ளன. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட பொருளாதார நிலைகளின் கீழ் இரு வேறு திசைகளில் தொழிற்படும் இரு குறிக்கோள்களை அடைவதற்கு நாணயக்கொள்கை அளவீடுகள் அவசியமாகின்றன.அதாவது உறுதிப்பாட்டுக் குறிக்கோளினை அடைவதற்கு மத்திய வங்கி பணத்தினதும், கொடுகடனினதும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இதே வேளை அபிவிருத்தி குறிக்கோளானது பணத்தினதும், கொடுகடனினதும் வளர்ச்சியின் விரிவாக்கத்தை வேண்டி நிற்கின்றது.

பொருளாதார சூழ்நிலைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப மத்திய வங்கி அமைக்கப்பட்டதிலிருந்து அதன் பார்வையும், தொழிற்பாடுகளும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. மத்திய வங்கி தொழில், அதன் குறிக்கோள்கள் என்பனவற்றின் போக்குகளுக்கு ஏற்ப, 2002 இல் நாணயச்சட்ட விதியில் திருத்தத்தினை ஏற்படுத்தி மத்திய வங்கி ஓர் ஒழுங்கு முறைமைக்குட்பட்டுள்ளது. இது ஆரம்பத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த பல குறிக்கோள்களிலிருந்து தன்னை விடுத்து அதன் மையக் குறிக்கோள்களினை முன்னெடுத்துச் செல்ல வழியமைத்தது. மத்திய வங்கி இரு மையக் குறிக்கோள்களைக் (Objectives of the Bank)கொண்டுள்ளது. அவை:

1. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல்
2. நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுதல்

இவை இலங்கையின் உற்பத்தி வளங்களை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதனை ஊக்கப்படுத்தி தூண்டும் நோக்கத்தினைக் கொண்டுள்ளன.

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு
(The maintenance of economic and price stability)

உள் நாட்டில் என்ன பொருட்களை இது கொள்வனவு செய்யும் என்ற நியதியிலும் மற்றைய நாணயங்களின் நியதிகளிலும் நாணயத்தின் பெறுமதியை விலை உறுதிப்பாடு பாதுகாக்கின்றது. விலை உறுதிப்பாடு அல்லது நிலையான விலை என்பதன் பொருள் குறைவான பணவீக்கமாகும். பணவீக்கம் குறைந்த அளவில் இருக்கும் போது பொருளாதாரச் செயற்பாடு நன்றாக இருப்பதனை அனுபவம் காட்டுவதோடு பணவீக்கம் குறைந்த ளவில் இருப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.இத்தகைய சூழ்நிலையில் வட்டி வீதமும் குறைவாகவே இருக்கும். இத்தகைய சூழல் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளர்ச்சியினை அடைவதற்கும், உயர்ந்த அளவான வேலை வாய்ப்புக்கும் அனுமதிக்கின்றது. உயர்ந்தளவானதும், மாறுபாடுள்ளதுமான பணவீக்கத்தின் குழப்பமான பாதிப்புக்களிலிருந்து விடுபடும்போது நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்கள் மிக நம்பிக்கையுடன் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்வர். குறைந்தளவு பணவீக்கம் அல்லது விலை உறுதிப்பாடு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்பிற்கும் வழியமைக்கின்றது. மத்திய வங்கி பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு நாணயக் கொள்கை வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றது.

நிதியியல் முறைமை உறுதிப்பாடு
(The maintenance of financial system stability)

உறுதியான நிதியியல் முறைமை வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு சாதகமான ஒரு சூழலை உருவாக்குகின்றது. திறன்மிக்க நிதியியல் இடைநிலை நிறுவனங்களையும் சந்தைகளின் பயன்மிக்க தொழிற்பாட்டினையும் ஊக்குவிக்கின்றது. இதனால் முதலீடும் பொருளாதார வளர்ச்சியும் தூண்டப்படுகின்றது. நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு என்பதன் பொருள் நிதியியல் முறைமையின் பயன்மிக்க தொழிற்பாடும் (நிதியியல் நிறுவனங்களும், சந்தைகளும்) நெருக்கடியில்லாத வங்கித்தொழில், நாணயம் மற்றும் சென்மதி நிலுவை என்பனவுமாகும். வங்கி செயலிழத்தல், அளவுக்கதிகமான சொத்து, விலைகளின் தளம்பல், சந்தை திரவத்தன்மையின் வீழ்ச்சி அல்லது கொடுப்பனவு முறைமையில் இடையூறு என்பவற்றினால் நிதியியல் உறுதியற்ற தன்மை ஏற்படுகின்றது. உறுதியான பேரண்ட பொருளாதாரச் சூழல், பயன்மிக்க ஒழுங்கு படுத்தும் கட்டமைப்பு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிதியியற் சந்தைகள், சிறப்பான நிதியியல் நிறுவனங்கள், பாதுகாப்பானதும், வலுவுள்ளதுமான கொடுப்பனவு, உட்கட்டமைப்பு என்பன நிதியியல் முறையின் உறுதிப்பாட்டிற்கு தேவையானவையாகும். சந்தைகள், நிதியியல் நிறுவனங்கள்என்பவற்றின் மீதான கடுமையான மேற்பார்வை மற்றும் கொடுப்பனவு முறையில் ஏற்படக்கூடிய தவறுகள் மற்றும் நெருக்கடி தொடர்பான தீர்மானங்கள் என்பனவற்றின் மூலமாக ஒரு முழுமையான நிதியியல் முறைமையில் ஏற்படக்கூடிய ஆபத்தினைத் தடுத்தல், கண்டுபிடித்தல் மற்றும் குறைத்தல் என்பன நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணுவதன் மூலம் சாத்தியமாகின்றது.

வங்கியின் தொழிற்பாடுகள் (Functions of the Bank)

இலங்கை அரசின் பொருளாதார ஆலோசகர், வங்கியாளர் மற்றும் முகவர் என்ற தனது பொறுப்புக்களை மேற்கொள்வதோடு தனது பிரதான நோக்கங்களை அடைவதற்கு இலங்கை மத்திய வங்கி பின்வரும் தொழிற்பாடுகளை மேற் கொள்கின்றது.

மையத் தொழிற்பாடுகள்(Core Function)

- பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு
- நிதியியல் முறைமை உறுதிப்பாடு

மையத் தொழிற்பாட்டிற்கான துணைத்தொழிற்பாடுகள் (Ancillary to Core Function)

- நாணய வெளியீடும், முகாமைத்துவமும்

முகவர் தொழிற்பாடுகள்(Agency Function)

- ஊழியர் சேம நிதியத்தின் முகாமைத்துவம்
- வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்
- பொதுப்படுகடன் முகாமைத்துவம்
- பிரதேச அபிவிருத்தி

நாணயக் கொள்கைக் கருவிகளும் அதனை நடைமுறைப்படுத்தலும்
(Monetary Policy Instruments and Implementation)

நாணயக் கொள்கைக் கருவிகளாகப் பயன்படுத்துவதற்கு மத்திய வங்கியிடம் பரந்தளவான கருவிகள் உள்ளன. தற்போது பயன்படுத்தப்படும் பிரதான.நாணயக் கொள்கைக் கருவிகளாக (அ) கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் திறந்த சந்தை தொழிற்பாடுகள்மற்றும் (ஆ)வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் என்பன காணப்படுகின்றன.

(அ) கொள்கை வட்டி வீதங்களும், திறந்த சந்தை நடவடிக்கைகளும்
Policy Interest Rates and Open Market Operations (OMO)

- தற்போது மத்திய வங்கி தீவிரமான திறந்த சந்தை நடவடிக்கை முறையின் கீழ் அதன் நாணயக் கொள்கையினை நடாத்துகின்றது. இம்முறையின் முக்கிய மூலங்கள் பின்வருமாறு

(1) வங்கியினது பிரதான கொள்கை வீதங்களினால் அதாவது மீள்கொள்வனவு வீதத்தாலும், நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தினாலும் உருவாக்கப்பட்ட வட்டி வீச்சு
(2) திரவத்தன்மையினை ஒன்றில் ஈர்த்துக் கொள்வதற்கு அல்லது உட்புகுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நாளாந்த ஏலம்
(3) வட்டி வீச்சு வரையறையினுள் துணை நில் வசதி
(4) உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்

- மத்திய வங்கியின் மீள் கொள்வனவு வீதமும், நேர் மாற்று மீள் கொள்வனவு வீதமுமே ஒதுக்குப் பணஇலக்குகளை அடைவதற்கான பிரதான கருவிகளாக உள்ளன.

மேலதிக திரவத்தன்மை இருக்கும் போது மீள் கொள்வனவு நடவடிக்கைகள் மூலம் திரவத்தன்மையை ஈர்க்கும் பொருட்டு அல்லது திரவத்தன்மை பற்றாக்குறையாக இருக்கும் போது நேர்மாற்று மீள் கொள்வனவு நடவடிக்கைகள் மூலம் திரவத்தன்மை செலுத்தப்படும் பொருட்டு தினமும் ஏல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக ஒதுக்குப் பண இலக்கின் வழியுடன் இணைந்து செல்லும் விதத்தில் ஓர் இரவின் வட்டி வீதங்கள் உறுதியான மட்டத்திற்கு சமீபமான அளவில் பேணப்படுகின்றது.

நாளாந்த ஏலத்தில் தங்களது திரவத்தன்மைத் தேவையினை பெற்றுக் கொள்ள முடியாத பங்கு பற்றும் நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகள் கிடைக்கத்தக்கதாக உள்ளன. அதாவது நாளாந்த ஏலத்தின் பின்னரும் கூட பங்கு பற்றுபவரிடம் மேலதிகப் பணம் இருந்தால் துணைநில் வசதியின் கீழ் அவர் மீள் கொள்வனவு நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். இதே போன்று பங்குபற்றுபவருக்கு

பற்றாக்குறையினை நிதியிட துணைநில் வசதியின் கீழ் நேர்மாற்றுமீள் கொள்வனவு அடிப்படையில் அவர் நிதியினைக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம். இதன்படி இத்தகைய வசதிகள் வட்டி வீதங்களின் பரந்தளவான ஏற்ற இறக்கங்களை கட்டுப்படுத்துவதற்கு உதவுகின்றன.

நீண்ட கால திரவத்தன்மைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மத்திய வங்கி தனது விருப்பப்படி உடனடிக் கொடுக்கல் வாங்கல்களை மேற் கொள்கின்றது. ஒப்பீட்டளவில் பெருமளவு திரவத்தன்மை மிகையாக இருந்து அது நீண்ட காலத்திற்கு இருக்கக்கூடிய சாத்தியம் இருக்குமானால் மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் முழுமையாகவே விற்கப்பட்டு கூடுதலான திரவத்தன்மை உள்வாங்கப் படுகின்றது. மேலும் போதுமானளவு திறைசேரி உண்டியல்கள் இருப்பில் இல்லாவிட்டால் மத்தியவங்கி தனது சொந்தப் பிணையங்களை வழங்கி திரவத்தன்மையை எடுத்துக் கொள்ளும். இதே போன்று திறைசேரி உண்ணடியல்களையும், முறிகளையும் இரண்டாந்தர சந்தையில் கொள்வனவு செய்வதன் மூலமும் முதல் நிலைச் சந்தையில் திறைசேரி உண்டியல்களை வாங்குவதன் மூலமும் நீண்ட கால திரவத்தன்மைப் பற்றாக்குறை இல்லாமல் செய்யப்படுகிறது.

வங்கி வீதம் என அறியப்படும் வேறொரு கொள்கை வீதம் ஒன்றும் உள்ளது. இந்த வீதத்திலேயே மத்திய வங்கி, வர்த்தக வங்கிகளுக்கு இறுதிக்கடன்களை வழங்குகிறது. இவை பிணையிடப்பட்ட கடன்களாக இருப்பதுடன் அரச பிணையங்கள் பிணைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. வங்கி வீதம் வழமையாக தண்ட வீதமாக இருப்பதுடன் இது மற்றைய சந்தை வீதங்களை விட உயர்வாகவே இருக்கிறது. ஆகவே வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து வங்கி வீதத்திலும் பார்க்கக் குறைவான வீதமான நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தில் கடன் பெற முடியுமாகையால் தற்பொழுது இவ் வீதம் வெறும் குறிகாட்டி வீதமாகவே இருந்து வருகிறது.

(ஆ) சட்டரீதியான ஒதுக்குத் தேவைப்பாடு- Statutory Reserve Requirement (SRR)

- வர்த்தக வங்கிகள் வைப்புப் பொறுப்பில் ஒரு பகுதியாக மத்திய வங்கியில் காசாக வைப்பிலிட வேண்டிய தொகை. இது பண நிரம்பலில் செல்வாக்கு செலுத்துவதற்கு பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் சந்தை சார்ந்த நாணயக் கொள்கையினை ஊக்குவிக்கும் விதத்திலும் வர்த்தக வங்கிகள் மீது தவிர்க்க முடியாத விதத்தில் நியதி ஒதுக்கு விகித தேவைப்பாடு ஏற்படுத்தும் நிதிச் செலவுகளின் தாக்கத்தினைக் குறைப்பதற்காகவும் நாணய முகாமைத்துவ வழிமுறையாக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் மீது தங்கியிருப்பது படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. நாணயச் சட்டவிதிகளின் கீழ் வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் மத்திய வங்கியில் ஒதுக்கினைப் பேணுமாறு வேண்டப்படுகின்றன. தற்பொழுது ரூபா நியதிகளில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கேள்வி நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களும் சட்டரீதியான ஒதுக்கு விகிதத்திற்கு உட்பட்டிருப்பதுடன் எல்லா வைப்புப் பொறுப்புக்கள் மீதுமான பொருந்தத் தக்க வீதம் 10 சதவீதமாக உள்ளது.

மீள் கொள்வனவுவீதம் (Repurchase Rate)

முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலையில், முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட அரச பிணையங்களைத் திரும்பவும் கொள்வனவு செய்யும் உடன்படிக்கையுடன் இலங்கை மத்திய வங்கியால் அரச பிணையங்களை ஏலத்தில் விற்பனை செய்தல்.

நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் (Reverse Repurchase Rate)

முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலையில், முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திகதியில் அரச பிணையங்களைத் திரும்பவும் விற்கும் உடன்படிக்கையுடன் மத்திய வங்கியால் மேற் கொள்ளப்படும் அரச பிணையங்களின் கொள்வனவுகள்.

Referances

- Central Bank of Sri Lanka Web page - Tamil and English
- Central Bank Report 2008 & 2009

க.பொ.த உயர்தரக் கற்கை நெறித் தெரிவும் பல்கலைக்கழகவாய்ப்புகளும்

திரு.இ.நவகேதீஸ்வரன்
ஆசிரியர் யா/ யூனியன் கல்லூரி

"விதிகளை உருவாக்குவது நீயாக இருந்தால் எந்த விளையாட்டிலும் நீ வென்று விடலாம்" என்ற கூற்றின் தார்ப்பரியத்தை க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தி பெற்று உயர்தரக் கற்கை நெறியை தெரிவு செய்வதற்கான வழிகாட்டலாக அமைய முடியும். மாணவர்கள் 13 வருட கால பாடசாலை வாழ்க்கையின் பயனை அறுவடை செய்ய வேண்டுமெனில் அவன் முதலாவது தடைதாண்டல் பரீட்சையாக அமையும் க.பொ.த சாதாரணப் பரீட்சையின் பின் தனது உயர்தரப்பிரிவுத் தெரிவு அவனது வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகிறது.

இலங்கையைப் பொறுத்த வரையில் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்யும் மாணவர்களில் 20% மான வர்களுக்கே உள்நாட்டு, அரச பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான தொழிற் கல்விக்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. பேராசிரியர் அமர்த்தியா தென்இந்திய பல்கலைக்கழக அனுமதி வணிகமயப்படுத்தப் பட்டிருப்பதையும் உயர்கல்விக்கான போட்டி நிலைமையையும் பின்வருமாறு விபரிக்கின்றனர். "முதல் இடத்தைப்பிடிக்கும் இளைஞர்களை உருவாக்கும் தேசிய வெறி" எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிடுகின்ற போட்டி நிலைமையே இலங்கையில் காணப்படுகிறது. பாடசாலைகளும், பெற்றோர்களும் மாணவர்களை உயர்தரக் கற்கை நெறி தொடர்பாக தவறாக வழிநடத்துகிறார்கள். இதனால் மாணவர்கள் தமது ஆற்றல் களையும், திறமைகளையும் இனங்கண்டு கல்வியைத் தொடர்வதற்கான சந்தர்ப்பங்கள் மழுங்கடிக்க ப்படுகின்றது. பல்கலைக்கழக அனுமதியை நோக்கமாகக் கொண்டே மாணவர்கள் வழிநடாத்தப் படுகின்றார்கள். மாணவர்களின் எதிர்காலக் கல்விக்கான வாய்ப்புக்கள், சமகால தொழிற் சந்தையை நோக்கமாகக் கொண்டு வழிகாட்டல்கள் வழங்கப்படுவதில்லை.

திறமையான மாணவர்கள், கலை வணிக கற்கை நெறிகளில் குவியப்படுத்தப்படுவதனால் விஞ்ஞான, கணித பிரிவுகளுக்குப் போதியளவு மாணவர்கள் உள்வாங்கப்படுவதில்லை. இதனால் க.பொ.த உயர்தர பல்கலைக்கழக அனுமதியில் கலை வர்த்தக துறைக்கான அதிகளவு போட்டி நிலை காணப்படுவதால் கிராமப்புற, வசதியற்ற மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

கடந்த கால க.பொ.த சா/த பெறுபேறுகளின் தராதரங்களின் வீழ்ச்சி மாணர்களின் உயர்தர கற்கை நெறித் தெரிவில் செல்வாக்கு செலுத்துகின்றது. 2008 க.பொ.த சாதாரணதரத்தில் கணித பாடத்தில் சித்தி பெறாதோர் 49%, விஞ்ஞான பாடத்தில் சித்தி பெறாதோர் 55% மேற்படி நிலமையானது கணித, விஞ்ஞான பிரிவுகளில் மாணவர்களின் தொகை குறைவடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலைமை கணித, வர்த்தகப் பிரிவுகளில் அதிகளவான போட்டி நிலமையை தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகளாக பரீட்சை ஆணையாளர் நாயகம் வெளியிட்டிருக்கும் தகைமைகளாவன

(1) சகல மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் குறைந்தது சாதாரணசித்தி (S)
(2) பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 14 தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் நான்கு நிறுவனங்கள் பட்டப்பயில் கற்கை நெறிகளுக்கு அனுமதியளித்துள்ளது. மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குரிய போட்டியில் வெற்றி பெறுவதற்கு ஆகக்குறைந்த தகைமைகளைப் பெறுவதற்கு முயல்வதுடன் க.பொ.த சாதாரண தர ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும், பொதுச்சார்பு பரீட்சையில் குறிப்பிட்டளவான

புள்ளியைப் பெறுவதற்கு முயற்சி செய்வதன் மூலம் எக்கற்கை நெறிப்பிரிவை சார்ந்தவர்களாயினும் பல்கலைக்கழக வாய்ப்பை அதிகரித்துக் கொள்ள முடியும்.

இலங்கையில் 1964 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சைகளின் மூலம் 2001 ஆம் ஆண்டுவரை பல்கலைக்கழக அனுமதிக்கு மொத்தப்புள்ளியே அடிப்படையாக அமைந்தது. இம் மொத்தப் புள்ளி அணுகு முறையில் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

(1) பாடங்களின் கடின இலகுத்தன்மை
(2) பாடங்களுக்குரிய பரீட்சை நேரம்
(3) மதிப்பீட்டு முறையில் ஏற்படும் வேறுபாடு

இதன் காரணமாக இலகுவான பாடங்களை தெரிவு செய்து பல்கலைக்கழகத்திற்கு நுழையக்கூடிய ஓட்டை அனுமதி முறையில் காணப்பட்டது. ஆனால் 2002 முதல் பல்கலைக்கழக அனுமதியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் "Z Score" எனும் Z புள்ளி. இத்தகைய முரண்பாடுகளைத் தீர்க்க காரணமாக அமைந்துள்ளது. இதன் காரணமாக பாடத்தெரிவுகள் பல்கலைக்கழக அனுமதியில் செல்வாக்குச் செலுத்தும் நிலைமையை மாற்றியமைத்துள்ளது. மாணவர்களைப் பல்கலைக்கழகத் தெரிவுக்கான வாய்ப்பை அதிகரிப்பதற்கு அவர்கள் தமது ஆற்றல், திறமைகளுக்கேற்ப கற்கை நெறித் தெரிவை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பமளித்தலும் ஆகக்குறைந்த தகைமைகளைப் பெறுவதற்கு வழிகாட்டுவதும் அவசியமாகும். ஏனெனில் க.பொ.த உயர்தர மாணவர்கள் முதிர்ச்சி பெற்றவர்களாகவும், சுயஊக்கம் பெற்றவர்களாகவும் தமது கற்றல் பெறுபேறுகளிற்கு தாமே பொறுப்பேற்கக் கூடியவர்களாகவும் உள்ளமையால் அவர்கள் தாம் தெரிவு செய்து கொண்ட கற்கை நெறியில் ஆகக்குறைந்த தகைமை பெற முயற்சிப்பார்கள் . அதன் மூலம் பல்கலைக்கழகத் தெரிவுக்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்க முடியும். கற்கை நெறிகளும் அவற்றிற்கான பல்கலைக்கழக துறை ரீதியான பட்டங்களும் அவற்றுக்கான க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளும் பூர்த்தி செய்ய வேண்டிய விசேட தேவைகளும் அட்டவணை 1ல் காட்டப்பட்டுள்ளது.

கலைப்பிரிவு அட்டவணை 1

	கற்கைநெறி	விசேட தேவை
1	கலை	-
2	கலை (SP)	உளச்சார்பு,ஆங்கிலம் C
3	கலை (SAB)	50% கலைப்பிரிவு, 50% வணிகபிரிவு
4	தொடர்பாடல் கற்கை	தமிழ் C, ஆங்கிலம் C
5	சமாதானமும், முரண்பாடு தீர்த்தலும்	-
6	இஸ்லாமிய கற்கை	இஸ்லாம் S
7	அரபுமொழி	அரபு S
8	சங்கீதம்	சங்கீதம் C
9	நடனம்	நடனம் C
10	சித்திரமும் வடிவமைப்பும்	சித்திரம் C
11	நாடகமும் அரங்கியலும்	நாடகம் C
12	கட்புலனாகும் தொழில்நுட்பம்	-
13	சித்திரமும், சிற்பமும்	-

மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வியாண்டு 2008/ 2009

- SP கொழும்பு பல்கலைக்கழகம் (ஸ்ரீ பாளி வளாகம்)
- SAB (கலை)– சப்ரகமுவ பல்கலைக்கழகம்

வணிகவியல் பிரிவு (Commerce Stream) அட்டவணை 2

	கற்கை நெறி
1	முகாமைத்துவம்
2	பொது முகாமைத்துவம்
3	சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும்
4	வணிகவியல்
5	முகாமைத்துவக் கற்கை (TV)
6	வியாபாரத் தகவல்முறைகள்

மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வியாண்டு 2008/ 2009

உயிரியல் விஞ்ஞானப் பிரிவு (Biological Sciences Stream) அட்டவணை 3

	கற்கை நெறி
1	மருத்துவம்
2	பல் அறுவை மருத்துவம்
3	பிரயோக விஞ்ஞானம்
4	விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்
5	விவசாயம்
6	உணவு விஞ்ஞானமும், ஊட்டமும்
7	உணவு விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்
8	ஆயர்வேதம்
9	யுனானி
10	சித்தமருத்துவம்
11	உயிரியல் விஞ்ஞானம்

மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வியாண்டு 2008/ 2009

உயிரியல் விஞ்ஞானத்துறையில் மரபு ரீதியாக வழங்கப்பட்டு வந்த பட்டக்கற்கைகளுக்கு மேலதிகமாக நாட்டின் சமூக, பொருளாதார தேவைகளைக்கருத்திற் கொண்டு புதிய பட்டக்கற்கை நெறிகள் தேசிய பல்கலைக் கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் உயிரியல் விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கான பல் கலைக்கழக அனுமதிகள் பின்வரும் புதிய துறைகளில் வழங்கப்பட்டுள்ளது.

* சுகாதார விருத்தி
* தாதியியல்
* மருந்தகவியல்

* மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானம்
* ஊடு கதிர் படமெடுப்பு
* இயன்மருத்துவம்
* மூலக்கூற்று உயிரியிலும் உயர் இரசாயனவியலும்
* மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானமும்
* சூழல் பேணலும் முகாமைத்துவமும்
* விலங்கு விஞ்ஞானமும் மீள்யுத்தம்
* உணவு உற்பத்தியும் தொழிநுட்ப முகாமையும்

பௌதீக விஞ்ஞானப்பிரிவு(Physical Science Stream)

	கற்கை நெறி
1	இயந்திரவியல்
2	நிலவளங்கள் இயந்திரவியல்
3	புடைவை மற்றும் துணி தொழில்நுட்பம்
4	பௌதீக விஞ்ஞானம்
5	கணனி விஞ்ஞானம்
6	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
7	பிரயோக விஞ்ஞானம்
8	போக்குவரத்துத் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம்
9	கைத்தொழில் புள்ளி விபரவியலும் கணிதவியல் நிதியும்
10	புள்ளி விபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும்
11	கணக்கிடலும் தகவல் முறைமையும்
12	தகவல் தொழில்நுட்பம்
13	முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்
14	கணிய அளவையியல்(கட்டடப் பொருளியல்)
15	அளவையியல் விஞ்ஞானம்
16	பட்டினமும் நாடும் திட்டமிடல்
17	கட்டடச் சூழல்(கட்டடக்கலை)
18	நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்,வடிவமைப்பு(கட்டடக்கலை)

மூலம்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கல்வியாண்டு 2008/ 2009

மரபு சார்ந்த பட்டக்கற்கைகளுக்குப் புறம்பாக அண்மையில் பல புதிய பட்டக்கற்கை நெறிகள் பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் அனுமதி பெற முடியும். எனினும் அக்கற்கை நெறிகளைத் தொடர உளச்சார்பு பெறுபேறும் க.பொ.த (சா/த) சில பாடங்களின் சித்தித் தர நிலையும் அவசியமாகின்றது. அதனை அட்டவணை மூலம் காணலாம்.

	கற்கைநெறி	விசேட தேவைகள்
1	வசதிகள் முகாமைத்துவம்	கணிதம் C ஆங்கிலம் C, விஞ்ஞானம் C
2	கணக்கிடலும் முகாமையும்	கணிதம் C
3	முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பமும்	-
4	விஞ்ஞானமும் தொழிநுட்பமும	உளச்சார்பு
5	தொழில் முயற்சியும் முகாமையும்	உளச்சார்பு
6	விலங்குவிஞ்ஞானம்	உளச்சார்பு, உயிரியல் விஞ்ஞானம்
7	ஏற்றுமதி விவசாயம்	உளச்சார்பு, உயிரியல் விஞ்ஞானம்
8	தேயிலைத்தொழில்நுட்பமும், பெறுமதி சேர்ப்பும்	உளச்சார்பு
9	கைத்தொழில் தகவல் தொழில்நுட்பமும்	உளச்சார்பு, உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவிஞ்ஞானம்
10	கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்	உயிரியல் விஞ்ஞானம்
11	நீர்வளங்கள் தொழில்நுட்பம்	உளச்சார்பு
12	பனையினத்தாவரங்களும் இறப்பர்பால் தொழிநுடபம்	உளச்சார்பு
13	உடற்கல்வி	உளச்சார்பு
14	விளையாட்டு விஞ்ஞானமும் தொழல்நுட்பமும்	உளச்சார்பு

மாணவர்களுக்கான பல்கலைக்கழக வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டுமென்றால் க.பொ.த (சா/த) பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்றவர்களையும், சாதாரண பெறுபேறுகளைப் பெற்றவர்களையும் கலைப்பிரிவில் குவியப்படுத்துவதால் மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மை தரப்போவதில்லை. மாறாக அண்மைக்கால பல்கலைக்கழக கல்விப் போக்குகளையும் தொழில் வாய்ப்புக்களையும் அனுசரித்து கணித, விஞ்ஞானப்பிரிவுகளிலும் மாணவர்களின் இயலுமைகளுக்கேற்ப வழிப்படுத்தி அதிகரித்து வருகின்ற புதிய உயர்கல்வி வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்வது கல்விச் சமூகத்தின் முன்பாக உள்ள பணியாகும்.

"நாட்டில் எதனை நான் பார்க்க விரும்புகின்றேனோ
அதனை முதலில் பாடசாலைகளில் அறிமுகம் செய்வேன்"

- நெப்போலியன் -

வாழ்க்கை ஒரு வாய்ப்பு
அதை எடுத்துக்கொள்வோம்!
வாழ்க்கை ஒரு சவால்
அதை ஏற்றுக்கொள்வோம்!
வாழ்க்கை ஒரு தீரச்செயல்
அதை சாதிப்போம்!
வாழ்க்கை ஒரு போராட்டம்
அதை வெற்றி கொள்வோம்!
வாழ்க்கை ஒரு கடமை
அதை நிறைவேற்றுவோம்!

- பகவத்கீதையிலிருந்து -

நூலக விஞ்ஞானத்தில் நூலகப் பகுப்பாக்கம்

திருமதி சுபாஜினி சிவகுந்தன்
ஆசிரிய நூலகர்
யா/ மயிலணி சைவ ம.வி சுன்னாகம்

அறிவும் திறனும் இணைந்து செயற்படத்தூண்டும் ஒரு அற்புதமான துறை இதுவாகும். தனித்து ஒரு பொருட்துறைக்குள் கட்டுப்படாது அறிவுப்பிரபஞ்சம் முழுவதும் ஆர்வத்துடன் அலச உதவும் ஓர் துறையாகும். நூல்களின் சேமிப்பிடமாக, நூலகர்கள் வெறுமனே நூலுக்குப் பாதுகாவலராக மட்டுப்படுத்தப்பட்டிருந்த நூலகத்துறை இன்று ஒரு அறிவியல் துறையாகக் கருதப்படுகிறது. நூலக விஞ்ஞானத் துறையின் அறிவுசார் செயற்பாடாகக் கருதப்படும் நூலகப்பகுப்பாக்கமானது நூலகத்திலுள்ள ஆவணங்களுக்கான பொருத்தமான அமைவிடத்தைக் கண்டு பிடித்தல் என்ற செயற்பாட்டுடன் தொடர்புறும் ஒன்றாகும். இந்தச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு சிக்கல் வாய்ந்த ஒரு ஆவணத்தின் பொருட்துறையை இனங்காணுதல் கிட்டத்தட்ட புதிய பொருள் ஒன்றைக் கண்டு பிடிப்பதற்கு ஒப்பானது.

ஆவணங்களை அதற்குரிய ஒழுங்கில் அடுக்கி வைக்கவும் தேவைப்படும் போது எவ்வித நேர விரயமுமின்றி அவற்றைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் என்பதனால் நூலகப்பகுப்பாக்கமானது ஆவணங்களை ஒழுங்கு படுத்துவதற்கான மிகச்சிறந்த அடிப்படையாகக் கருதப்படுகிறது.

குறிப்பிட்ட ஆவணமொன்றை இனங்காணுவதற்கு அந்த ஆவணத்தின் தலைப்பு, உபதலைப்பு, முன்னுரைகள், பொருளடக்கம் எதுவுமின்றி முழுப்பாடமுமே உதவக்கூடும். ஆவணத்தின் தலைப்பு மட்டுமே ஆவணத்தின் பொருட்துறையை இனங்காண உதவ முடியாது. நூலின் உள்ளடக்கத்தினின்றும் வேறுபட்டதாக தலைப்பு இருக்கக் கூடும். பகுப்பாக்கப் பணியில் குறிப்பிட்ட ஆவணம் எந்தப் பொருட்துறையைச் சார்ந்தது என்பதனை இனங்கண்ட பின்னர் அப் பொருட்துறைக்கான எண்கட்டுமானத்தை வடிவமைப்பர். இங்கு பகுப்பாக்கம் என்பது ஒரு தகவலைப் பெற விரும்பும் ஒருவருக்கு மிகவும் உபயோகமான முறையில் நூல்களை அல்லது வேறு சாதனங்களை இறாக்கைகளில் முறைப்படி ஒழுங்கமைத்தலும், பட்டியல் அட்டவணைப்பதிவுகள் ஆகியவற்றை முறையாக ஒழுங்கமைத்தலுமாகும் என வரையறுக்கலாம். இதனுடைய முழு நோக்கம் வாசகர் மிகச் சுலபமாகத் தமக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதாகும்.

ஆவணங்கள் சிறந்த முறையில் பகுக்கப்படா விட்டால் ஒரு குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான நூலை நூலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள அதிக நேரம் செலவாகும். நூலகத்திலுள்ள நூல்கள் அவற்றின் அளவுகளைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தால் அது பார்ப்பதற்கு அழகாக இருக்குமே தவிரக் குறிப்பிட்ட ஒருவிடயம் பற்றிய நூலை மீளப் பெறுவது மிகக் கடினமாகும். எனவே நூல்களின் முழுப்பலனைப் பெறுவதற்கு அவற்றைப் பொருள் வாரியாகப் பகுத்தல் வேண்டும்.

பகுப்பாக்கமானது பின்வரும் வகையில் இன்றியமையாதது.

1) நூலகம் ஒன்றின் வெற்றிகரமான இயக்கத்திற்குப் பகுப்பாக்கம் இன்றியமையாதது.
2) இரவல் வழங்கப்பட்ட நூல் மீண்டும் நூலகத்தை அடைந்து அதனுடைய சரியான இடத்தை இலகுவில் அடைவதற்குப் பகுப்பாக்கம் அவசியம்.
3) புதிய நூல்ஒன்றை நூலகம் பெற்றுக் கொள்ளும் போது அதே துறையைச் சேர்ந்த ஏனைய நூல்களின் மத்தியில் அந்நூல் சரியான இருப்பிடத்தை எடுப்பதற்குப் பகுப்பாய்வு அவசியம்.
4) நூலகர் நூல்களின் இருப்பை அறிவதற்கும், இருப்பெடுப்பைத் திறம்பட செய்வதற்கும் எத்துறை பலவீனமானதோ அத் துறைக்கான புதிய நூல்களைச் சேர்க்கையில் அதிகரிப்பதற்கும் பகுப்பாக்கம் வழிவகுக்கின்றது.
5) சரியான நூலை சரியான வாசகருக்கு வழங்க உதவுகின்றது.

நவீன நூலகப் பகுப்பாக்கமானது தூயி தசமப் பகுப்புத் திட்டத்துடன் ஆரம்பிக்கின்றது. இன்று பெரும்பாலான நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருவது தூயி தசமப் பகுப்புத் திட்டமாகும். 135 ற்கும் மேற்பட்ட நாடுகளால் இது பின்பற்றப் படுவது மட்டுமன்றி 30 ற்கும் மேற்பட்ட மொழிகளில் இது மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. 1873ல் மெல்வில் தூயி (Melvil Dewey) என்பவரால் வடிவமைக்கப்பட்ட இத்திட்டம் முதன் முதல் 1876ல் நூல் வடிவில் வெளியிடப்பட்டது.

அராபிய எண்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எண் கட்டுமானம் மேற் கொள்ளப்படும் இத்திட்டத்தில் பொருட்துறைகள் பின்வரும் 10 பிரதான துறைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

பிரதான பகுப்புகள்

* பொது – 000
* மெய்யியல் – 100
* சமயம் – 200
* சமூக அறிவியல் – 300
* மொழி – 400
* அறிவியல் – 500
* தொழினுட்பம் – 600
* கலை – 700
* இலக்கியம் – 800
* புவியியலும் வரலாறும் – 900

மேற் குறிப்பட்ட பிரதான துறைகள் ஒவ்வொன்றும் மேலும் 10 பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதுடன் ஒவ்வொரு பிரிவும் மேலும் 10 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது.

பிரிவுகள்

* சமூக அறிவியல் – 300
* புள்ளி விபரவியல் – 310
* அரசியல் – 320
* பொருளியல் – 330
* சட்டவியல் – 340
* பொது நிர்வாகம் – 350
* சமூக சேவைகள் – 360
* கல்வி – 370
* வர்த்தகம் – 380
* பண்பாடும், பழக்கவழக்கமும் – 390

பகுதிகள்

* கல்வி – 370
* பாடசாலைகள் – 371
* ஆரம்பக்கல்வி – 372
* இடைநிலைக்கல்வி – 373
* வளர்ந்தோர்கல்வி – 374

* பாடத்திட்டம் – 375
* உயர்கல்வி – 378
* கல்விக் கொள்கை – 379

தூயி தசமப் பகுப்புத்திட்டத்தில் ஒவ்வொரு வகுப்பையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அராபிய எண்கள் பயன்படுத்தப்படுகின்றன. முதல் மூன்று இலக்கங்களிலும் 1வது இலக்கம் பிரதான வகுப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக 500 என்ற வகுப்பெண்ணில் 5 என்பது அறிவியல் என்ற பொருட்துறையைக் காட்டுகின்றது. இரண்டாவது இலக்கமானது பிரதான வகுப்பின் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. அறிவியல் என்ற பொதுவான பொருட் துறையின் உப பிரிவுகளாக உள்ள கணிதவியல் 510, வானியல்520, பௌதீகவியல் 530, இரசாயனவியல் 540 போன்றவற்றை எடுத்துக் காட்டுகின்றது. மூன்றாவது இலக்கமானது உபபிரிவுகளில் உள்ளடங்கும் பகுதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. அறிவியல் என்ற பொதுத்துறையின் உப பிரிவுகளில் ஒன்றான கணிதவியலின் பகுதிகளாகக் கொள்ளத் தக்க கணிதத் திறன் பொது விதிகள் 511, அட்சரகணிதம் 512, எண்கணிதம் 513, தளவிவரவியல் (TOPOLOGY) 514, பகுப்பு பாகுபாடு 515, கேத்திர கணிதம்516, ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பிட்ட ஆவணத்திற்கு முழுமையானதும் விரிவானதுமான வகுப்பெண்ணைக் கொடுக்கும் பொருட்டு மூன்றாவது இலக்கத்திற்கு அடுத்தாக தசமப் புள்ளி பயன்படுத்தப்படுகின்றது. இந்தத் தசமப்புள்ளிக்கு அடுத்ததாக வரும் இலக்கங்கள் ஒன்றில் பொருட்துறையாகவோ அல்லது தனித்து இயங்கமுடியாத தனிமக் கூறுகளாகவோ இருக்கலாம். தசமப் புள்ளிக்கு அடுத்தாக எந்தவொரு வகுப்பெண்ணும் பூச்சியத்தில் முடிவடையக் கூடாது என்பதும் ஒரு வகுப்பெண் ஆகக் குறைந்தது மூன்று இலக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதும் நியதியாகும். பொருட்துறைக்கான வகுப்பெண் பரந்த பொருட்துறையில் தொடங்கி சிறப்புத்துறை நோக்கி விரிவடைகின்றது.

உதாரணம்: 300 சமூக அறிவியல்
330 பொருளியல்
332 நிதிப்பொருளியல்
332.1 வங்கிகள்
332.15 சர்வதேச வங்கிகள்
332.153 அபிவிருத்தி வங்கிகள்
332.1532 உலகவங்கி

ஒரு நூல் இரு விடயங்களை அதாவது இரு பாடங்களைக் கொண்டதாயிருக்கும்.
உதாரணம்: கல்வி உளவியல் என்ற நூலுக்கு எண் வழங்கும் போது அதனைக் கல்விக்கு மட்டும் வழங்குவது தவறானது. காரணம் கல்வி உளவியல் என நாம் அட்டவணையைப் புரட்டிப் பார்க்க வேண்டும். கல்வி என்ற பரந்த விடயத்தின் கீழ் அதனுடன் தொடர்புபடுத்தி அதன் பகுதியான உளவியலையும் நாம் பார்க்க வேண்டும். இதில் சிலவேளை கல்வி – 370, கல்வி உளவியல் 371.5 எனக் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறு இல்லாதவிடத்து உளவியல் என்ற பதத்தின் கீழும் கல்வி எனக் குறித்த எண் வழங்கப்பட்டிருக்கும் ஒரு விடயத்திற்கு அட்டவணையில் ஓரிடம் மட்டும் ஒதுக்கப்படவில்லை.

நூற்பகுப்பாக்கத்திலும் சில வரன்முறைகள் பகுத்தல் பற்றிக் கூறப்பட்டுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்துறைகளை உடைய நூல்களைப் பகுப்பாக்கம் செய்வதெப்படி எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது பகுப்பாளர் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பொருட்துறைகளை உள்ளடக்கிய நூல்களைப் பகுப்பாக்கம் செய்யும்போது பிரதான முக்கியத்துவம் பெறும் பொருட்துறையை மனதில் கொள்ள வேண்டும். 2 அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்துறைகளைக் கொண்டு அதே சமயம் இரண்டும் ஒன்றிற்கொன்று குறிப்பிடக்கூடிய தொடர்பற்ற பொருட்துறைகளையுடைய நூல்களைப் பகுப்பாளர் பகுப்பாக்கம் செய்யும் போது சிரேஷ்ட

கணிப்பில் கூடிய பொருட்துறையை மனதில் கொள்ள வேண்டும். மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்துறைகளையுடைய நூலாயின் உதாரணமாக இந்துசமயம், யூதசமயம், இஸ்லாம் சமயம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நூலாயின்னும் அந்நூல் குறிப்பிட்ட ஒரு பரந்த பாடத்தின் கிளையாக இருப்பினும் அதற்குப் பரந்த பகுப்பெண்ணை வழங்கலாம்.

உதாரணம்:	இந்துசமயம்	294.5
	யூதசயம்	296
	இஸ்லாம்	297

எனவே இந்நூலுக்கு 290 எண்ணாக வழங்கப்படலாம். 2 பொருட்துறைகளையுடைய ஒரு நூலில் உள்ள பொருட்துறைகள் இரண்டிலும் எதற்கும் முக்கியத்துவம் வழங்கப்படாதவிடத்து அட்டவணையில் எந்தப்பாடம் முதல் இடம் பெறுகின்றதோ அதன் எண்ணை வழங்க வேண்டும்.

ஒரு பொதுவான தலைப்பின் கீழ் உதாரணமாக இயற்கை வரலாறு என்ற பொருட்துறையில் பாறைகள், கணிப்பொருட்கள் பற்றி ஆராயுமிடத்து அது கூடுதலாகத் தாவரங்கள், மிருகங்கள் பற்றிய ஆராய்ச்சியாயிருப்பின் அதனை விஞ்ஞானத்தின் கீழேயே பகுப்பாக்கம் செய்யவேண்டும்.

பகுப்பாக்கம் செய்வதற்குப் பகுப்பாக்கத் திட்டங்களில் பல வழிமுறைகள், அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைத் தீர்க்கமாகப் படித்துக் கொண்டால் பகுப்பாக்கம் இலகுவானதாய் அமையும் நாம் தேடிப்போகும் தீர்மானிக்கும் எண் சரியானதாய் அமையாதவிடத்துக் கூட இதனிலும் வேறு எண் இதற்குப் பொருத்தமானது என வழிகாட்டல்கள் இருக்கும். நூற் பகுப்பாக்கத்திற்கு நூல்களைப் பற்றிய அறிவு அதிகமாக இருக்க வேண்டும்.

எனவே தொகுத்துப் பார்க்கும் போது நூல்களை முதலில் அவை கலை சம்பந்தப்பட்டவையா, விஞ்ஞான நூல்களா, தொழில்நுட்ப நூல்களா என இனங்காணவேண்டும். அதன் பின் அவை எத்துறை சார்ந்தவை எனக்கண்டு கொண்டால் அத்துறையில் அவற்றை இட்டுக் கொள்ளவோ ஆழமாகப் பகுப்பெண்ணை வழங்கவோ முடியும்.

போன்றவாறாக நூலக விஞ்ஞானத்தில் பகுப்பாக்கம் வாசகர்களுக்கு உதவியாக இருந்து அனைவரது நேரத்தையும் மீதப்படுத்துவதுடன் அறிவுத்தேடலுக்கும் அறிவியலின் பெருக்கத்துக்கும் இடையில் நின்று பல சவால்களை எதிர்கொள்ளும் நூலகர்கள், வாசகர்கள் அனைவருக்கும் ஒரு நற்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

உசாத்துணை நூல்கள்

1) நூலகப் பகுப்பாக்கம் – நூலகர் கைநூல்
அ.ஸ்ரீகாந்தலட்சுமி

2) அறிவாலயம் – திறப்புவிழாச் சிறப்பு மலர்
அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி

3) Papers on Library Science
Dr.T.Kamalanathan

பதிவுகளில் வித்தியாலயம்

ஆதித் தமிழர் ஆட்சி நடத்தி
நீதி தழைத்த கதிர் மலைசேர்
கந்த ரோடை சுன்னை நிலத்தினில்
வந்தமர் பண்டிதர் வித்தகப் பள்ளியில்
போதம் தொடர புலமையும் உயர்ந்தது.
மயிலணிக் கந்தனின் மருங்கமை கொட்டிலில்
பயிலும் கல்விப் பள்ளியும் அமைத்தனர்
ஆயிரத்துத் தொள்ளா யிரத்துப் பத்ததில்
பாயிரம் பள்ளியாய் பரிணா மம்பெற
மாணவர் தொகையும் மளமள வெனவே
கண்டிட இன்றுள காணியில் கட்டடம்
கண்டனர் கூட்டய் கருணை உள்ளோர்
மண்டபம் எழுப்பிட மதிசேர் அரசும்
கொண்டது பதிவை பத்தொடு நான்கில்
அண்டை அயலூர் ஆர்வல மாணவர்
பெண்கள் ஆண்களென் பெருகினர் சாலையில்
மயிலணி சைவ வித்தியா லயத்தில்
பயின்ற பலபேர் பெருமை கொண்டனர்.
சிவபாத(SSC) நடத்தவும் சிறந்த பள்ளியாய்
சிபார்சுடன் திடமாய் அனுமதி கண்டதில்
தமிழாம் பள்ளியாய் தரமது கொண்டது
அமிழ்தம் பருகவே அயலூர் திரண்டது
சித்திகள் சிபாதவில் தொடர்ந்து பெருகிட
வித்தியா லயமும் வீறுடன் எழுந்தது
அறுபதில் அரசு உடமை யானதும்
பெறுநிதி பலவும் பெற்று உயர்ந்ததில்
எழுபத் துநான்கில் எடுத்தநல் பரிசுநாள்
எழுந்தது கீதமும் ஏற்புடன் பள்ளிக்கு
உபாத(HSC) உயர்தர திற்குமே அனுமதி
கிட்டிய நாள்முதல் எட்டினர் பரீட்சையில்
முட்டிய நாட்டு முறுகலால் தேக்கமே.
தொண்ணூ றுகளில் சோதனை வேதனை
கண்நூ றுபட்ட காலமாய் ஆனது
பாட்டம் பாட்டமாய் பதட்ட நேரமும்
கூட்டம் கூட்டமாய் கூடினர் பள்ளிக்கு
கொட்டில் தரையிலும் கோடுயர் நிழலிலும்
எட்டி உதைக்கும் இரைச்சலில் படித்தனர்.
படிப்பில் வளர்ச்சியும் பந்தாட் டமதிலும்
நடிப்பொடு நடனமும் நாட்டின வெற்றிகள்
சாரணர் அணியும் சாதனை படைத்தது
பூரணம் கண்டது பள்ளித் தோட்டமும்
வலய மட்ட வகையான பேறுகள்
கலையா ஒழுக்கமம் கண்டது பள்ளியும்
பாடங் களுக்கோர் படிப்பகம் ஆக்கி
கூடமே கொத்தளக் கூடமாய் மிளிர
ஆடற் கலையும் அரங்கே றுநாடகம்

பாடப்	பரப்பும்	பாடும்	இசையும்
பவனி	வந்திடப்	பார்த்தனர்	மகிழ்ந்தனர்.
தந்தது	தமிழலு	மன்றமும்	காதை
தந்தது	சமூக	மன்றமும்	படவேலை
தந்தது	விவசா	யமன்றமும்	பரிசிலை
வந்தது	மாணவர்	தரமான்	இதழுமே
புலவர்	காதையும்	புத்தகம்	தந்தனர்
தொண்ணூ	றுமுடிவில்	தொடர்மாடி	எழுந்தது
இறுதிப்	பத்தாண்	டதிலே	எத்தனை
பெறுமதி	மிக்க	பெரிய	மாடிகள்
நூல்நிலை	யமொடு	கணனிச்	சாலை
ஆல்போல்	வளருதே	அருங்கலை	பெருகுதே
நூறாண்	டுளபுகழ்	நுவலல்	அறியேன்
பேறாய்க்	கருதியே	இப்பணி	செய்தேன்
ஏறிடு	புகழெலாம்	ஏற்றுநீ	வாழி.
விட்ட	பதிவுகள்	விலாவா	ரியாகவே
பட்டியல்	போட்டுப்	பகருவர்	அதிபரும்.

கலாபூஷணம் சு.துரைசிங்கம்
ஓய்வுநிலை அதிபர்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்

நினைவிற் கொள்ள வேண்டியவை

மிகமிக நல்லநாள்	இன்று
மிகப்பெரிய வெகுமதி	மன்னிப்பு
மிகவும் வேண்டாதது	வெறுப்பு
மிகப்பெரிய தேவை	சமயோஜித புத்தி
மிகக்கொடிய நோய்	பேராசை
மிகவும் சுலபமானது	குற்றம்காணல்
கீழ்த்தரமான விஷயம்	பொறாமை
நம்பக்கூடாதது	வதந்தி
ஆபத்தை விளைவிப்பது	அதிகப்பேச்சு
செய்யக்கூடாதது	உபதேசம்
செய்ய வேண்டியது	உதவி
விலக்க வேண்டியது	விவாதம்
உயர்வுக்கு வழி	உழைப்பு
நழுவவிடக்கூடாதது	வாய்ப்பு

ඔවදනක්

திரு.ந.சுப்பிரமணியம்
அதிபர்,
யா/மல்லாகம் ம. வி.

එන්න	-	සමාජයට වැදගත් කෙනෙක් ලෙසින්
ඉඳගන්න	-	තව කෙනෙකුට අපහසුවක් නොවන අයුරින්
කන්න	-	ඔබට ප්‍රමාණවත් තරම්
බොන්න	-	ඔබේ පැවැත්මට අහිතකර නොවන යමක්
ලියන්න	-	දැනුමත්, වින්දනයත් ලබාගතහැකි නිර්මාණයක්
කරන්න	-	නමන්ටත් අනුන්ටත් ප්‍රයෝජනවත් යමක්
කථාකරන්න	-	අවශ්‍ය දෙයක් පමණක්
බලන්න	-	දෙනතට, මනසට ප්‍රිය උපදවන යමක්
ඉන්න	-	කිසිවිටක කිසිවකුට කරදරයක් නොවන විලසින්
අඳින්න	-	පිරිසිදු වාම් සංස්කෘතියට ගැලපෙන ඇඳුමක්
ඉගෙන ගන්න	-	හැම වෙලාවෙම යමක්
පිළිගන්න	-	හැම කෙනෙක්ම ගෞරවයෙන්
උන්සාහකරන්න	-	උත්සාහ කළොත් කළ නොහැකි දෙයක් නොමැති නිසා
සෝදන්න	-	අනෙක් ඒවා මෙන්ම හදවත්
ඉනිරි කරන්න	-	ටිකෙන් ටික සතෙන් සතේ අනාගතය වෙනුවෙන්
නාන්න	-	ගතත් සිතත් සිරිසිදුවන අයුරින්
නිදාගන්න	-	විරාමයක් ලබාගන්න පමණක්
නැගිටින්න	-	කොන්ද පණ ඇති කෙනෙකු විලසින්
ඇවිදින්න	-	බලන්න බොහෝ දේ ඇති නිසා
යන්න	-	සමාජයට වැඩදායි සුද්ගලයෙක්
මැරෙන්න	-	සමාජයට මෙහෙවරක් කළ සැබෑ මිනිසෙකු ලෙස සතුටින්

நற்காரியங்கள்

வாருங்கள்	-	சமூகத்தின் ஒரு முக்கிய பிரஜையாக
அமருங்கள்	-	இன்னொருவருக்கு இடையூறில்லாத தன்மையில்
உண்ணுங்கள்	-	உங்களுக்கு போதுமான அளவில்
பருகுங்கள்	-	தங்களின் வாழ்வுக்கு பங்கமேற்படாத ஒன்றை
எழுதுங்கள்	-	அறிவும், உளமகிழ்வும் பெறத்தக்கதான நிர்மாணிப்பு
செய்யுங்கள்	-	தமக்கும் பிறர்க்கும் பிரயோசனமான ஒன்றை
கதையுங்கள்	-	அவசியமானவற்றை மட்டும்
பாருங்கள்	-	மனதிற்கு பிரியமானதை தரும் எதனையும்
நில்லுங்கள்	-	எந்நேரத்திலும் யாருக்கும் இடையூறின்றி
அணியுங்கள்	-	தூய்மையானதும், கலாசாரத்திற்கு பொருந்தக்கூடியதுமான ஆடையை
படியுங்கள்	-	எந்நேரமும் எதனையாவது
ஏற்றுக்கொள்ளுங்கள்	-	சகலரையும் கௌரவத்துடன்
உற்சாகமூட்டுங்கள்	-	உற்சாகமூட்டினால் செய்யமுடியாதது எதுவுமில்லை என்பதால்
கழுவுங்கள்	-	ஏனையவை போன்று இதயத்தையும்
சேமியுங்கள்	-	சிறிது சிறிதாக, சதம் சதமாக எதிர்காலத்திற்கு
குளியுங்கள்	-	உடல், உள்ளம் தூய்மையாகுமாறு
துயிலுங்கள்	-	ஓய்வு பெறுவதற்காக மட்டும்
எழும்புங்கள்	-	உயிர்கொண்டு நிமிரும் முள்ளந்தண்டு கொண்ட மனிதனாக
உலாவுங்கள்	-	பார்வையிட ஏராளமானவை இருப்பதால்
செல்லுங்கள்	-	பேசக்கூடிய முன்னேற்றப்பாதைக்கு பயமின்றி
உருவாக்குங்கள்	-	சமூகத்திற்கு பொருந்தும் நபர்களை
இறவுங்கள்	-	இம்முறை சமூகத்திற்கு நன்மைகள் செய்தமையால் மனிதன் என்று மகிழ்வுடன்.

My School

01) My School is J/Mylany Saiva Maha Vidyalayam.
02) It is at Chunnakam.
03) It was founded in 1910.
04) It is a mixed school.
05) It has classes from grade one to grade eleven.
06) Our principal is Mr.N.Sivanesan.
07) We have many teachers in our school.
08) I love my school very much.

- K.Thuvarakan -
Grade - 1

பூக்கள்

01) பூக்கள் மிகவும் அழகானவை
02) பூக்கள் பல்வேறு நிறங்களையும், பல்வேறு வடிவங்களையும் கொண்டிருக்கும்
03) பூக்கள் மணம் வீசும்
04) பூக்களில் வண்டுகள் வந்து தேன் குடிக்கும்
05) பூக்கள் பூசைக்குப் பயன்படும்
06) பூக்களைப் பரர்க்க மனதுக்கு சந்தோஷமாக இருக்கும்

- கி.மதுஸ்ரிகா -
தரம் - 1

அம்மா

பத்துமாதம் சுமந்து உன்னை
முத்துப் போலப் பெற்றவள் அன்னை
நித்தம் சோறு ஊட்டுவாள் அன்னை
முத்தம் தந்து வளர்ப்பாள் அன்னை
உன்னை நித்திரை செய்ய வைப்பாள் அன்னை
உன்னை வளர்த்த அன்னை தன்னை
முன்னை எழுந்து வணங்கு

- ந.தனுஷ் -
தரம் - 1

வண்ண வண்ண ரோஜா

கொத்துக் கொத்தாய் ரோஜாவாம்
முத்து முத்தாய்ப் பூத்திருக்கும்
முள் நடுவே ரோஜாவாம்
அத்தனையும் பறித்திடுவோம்
சாமிக்குச் சாத்திடுவோம்

- அகல்விழி -
தரம் - 2

SriLanka

01) Sri Lanka is our country
02) It is a beautiful Island
03) It is our mother land
04) It is a small country
05) It is situated in the Indian ocean
06) A lot of tourists visit Sri Lanka every year
07) There are Sinhalese, Tamils, Muslims and Barghers in Sri Lanka
08) I love my country very much

- M.Kunalini -
Grade - 2

வெண்டிக்காய்க் கந்தசாமி

கந்தசாமிக்கு வெண்டிக்காயைக் கண்டாலே ஒரே வெறுப்பு ஒரு நாள் கந்தசாமியின் நண்பன் அவனைத் தனது வீட்டிற்குச் சாப்பிட அழைத்தான். கந்தசாமியின் அம்மா உனக்கு பிடிக்காத பொருளை ஒதுக்கிவிடாதே தட்டில் போட்ட அனைத்தையும் சாப்பிடு. இல்லை என்றால் உன் நண்பன் வீட்டில் உன்னைத் தவறாக நினைத்து விடுவார்கள் என்றாள். அன்று நண்பன் வீட்டில் வெண்டிக்காய்ப் பொரியல் செய்திருந்தார்கள். கந்தசாமிக்குப் பிடித்த அப்பளமும் பாயாசமும் இருந்தன. கந்தசாமிக்கு அம்மா கூறியது நினைவில் வந்தது. வெண்டிக்காயை முதலில் சாப்பிட்டான். நண்பனின் அம்மா அவனுக்கு வெண்டிக்காயை மிகவும் பிடிக்கும் என்று நினைத்து மீண்டும் கொஞ்சம் வைத்தார். ஒன்றும் சொல்லாமல் அதையும் சாப்பிட்டான். இப்படியே பலமுறை நடந்தது. வயிறு நிறைந்து விட்டது. பாயாசம் சாப்பிட வயிற்றில் இடம் இல்லை. வருத்தத்துடன் வீட்டிற்குக் கிளம்பினான். புறப்படும் போது உனக்கு வெண்டிக்காய் மிகவும் பிடிக்கும் என நினைக்கிறேன். வீட்டிற்கு கொஞ்சம் வெண்டிக்காய் எடுத்துச் செல் என்று வெண்டிக்காயைக் கொடுத்து நண்பனின் அம்மா வழியனுப்பினார்.

- ச.கல்சிகா -
தரம் - 2

இல்லாத செய்திகள்

01) பறவைக்கு பற்கள் இல்லை.
02) காண்டா மிருகத்தின்கொம்பில் எலும்புகள் இல்லை.
03) குயில் குளிர்காலத்தில் கூவுவது இல்லை.
04) பல்லி நீர் அருந்துவது இல்லை.
05) கங்காரு ஏனைய மிருகங்களைப் போல் நாலு காலில் நிற்பது இல்லை.
06) சுண்டெலிக்கு வியர்ப்பது இல்லை.
07) கழுகு எதையும் கொன்று தின்பது இல்லை.
08) ஒட்டகத்திற்கு பித்தப்பை இல்லை.
09) எலிகள் இல்லாத நாடே இல்லை.
10) குளிர் காலத்தில் அந்தாட்டிக்காவில் ஒரு உயிரினம் கூட வாழ்வது இல்லை.

- ச.சதுஸ்ரிகா -
தரம் - 3

நல்ல புத்தகங்கள்

* நம்மைச் சிந்திக்கச் செய்யும் புத்தகங்களே நல்ல புத்தகங்கள்.
* அவை நமது உள்ளங்களில் நல்ல எண்ணங்களை உண்டாக்கும்.
* நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்.
* நல்ல புத்தகங்கள் நமது நல்ல நண்பர்கள்.
* நல்ல புத்தகங்களை நாளும் நண்பர்களாக்கிக் கொள்வோம்.
* ஐக்கிய நாடுகள் சபை ஏப்ரல் 23ஆம் திகதியை உலக புத்தக தினமாக அறிவித்துள்ளது.

- ஜெ.சானுஜன் -

தரம் - 3

ஒலிம்பிக் வரலாறு

கிரேக்க நாட்டில் தான் முதன்முதலாக கி.மு 776ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது. நவீன ஒலிம்பிக் போட்டிகள் கி.பி 1896ஆம் ஆண்டு எதேன்சில் ஆரம்பமாகின. 1900ஆம் ஆண்டு இரண்டாவது ஒலிம்பிக் போட்டிகள் பாரிசில் நடைபெற்றன. 29வது ஒலிம்பிக் போட்டிகள் 2008ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்றன. இப்போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்படுகின்றன. சீனர்கள் 8ஆம் எண்ணை ராசியானதாகக் கருதுகிறார்கள். அதனால் சீனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி 2008ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 8ஆம் திகதி சீன நேரப்படி இரவு 8.08 மணிக்கு கோலாகலமாகத் தொடங்கின. அடுத்த ஒலிம்பிக்போட்டி 2012ஆம் ஆண்டு பிரித்தானியாவில் உள்ள லண்டனில் நடைபெற உள்ளது.

- ர.அபிதா -

தரம் - 3

வேப்பமரத்தின் அறிவுரை

ஒரு நாள் குமார் என்னும் சிறுவன் தனது வீட்டின் முன்னாலுள்ள வேப்பமரத்தின் கீழ் அமர்ந்திருந்தான். அவன் சோகமாக இருப்பதைக் கண்ட வேப்பமரம் "ஏன் தம்பி சோகமாய் இருக்கிறாய்" ? எனக்கேட்டது. அதற்கு குமார் வேப்பமரத்திடம் "என் அப்பாவும் அம்மாவும் படி படி என்று கஸ்டப்படுத்துகிறார்கள். அது மட்டுமன்றி கண்டபடி ஊர் சுற்றக்கூடாது. தொலைக்காட்சி பார்க்கக் கூடாது என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் இந்த வயதில் சந்தோஷமாக இருக்காமல் எப்பொழுது சந்தோஷமாய் இருப்பது? எனது நண்பர்கள் பலர் எவ்வளவு சுதந்திரமாக பொழுதைப் போக்குகிறார்கள். எனக்குத்தான் எந்த சுதந்திரமும் இல்லை"என்று கூறி வருந்தினான்.அவனது கண்கள் கலங்கியிருந்தன.

இதைக் கேட்ட வேப்பமரம் "ஓ இது தானா உனது பிரச்சினை? நான் ஒரு கருத்தைச் சொல்கின்றேன் கேள்" என்றது.

வேப்பமரம் குமாரிடம் "நான் ஒரு வேப்பமரம் தானே"? என்று கேட்டது. "அதிலென்ன சந்தேகம்" என்றான் குமார். "என் பாகங்கள் எப்படி இருக்கும்?" என்றது வேப்பமரம். "வேப்பமரம் கசப்பாகத்தான் இருக்கும்" என்றான் குமார். "சரி என் உறுப்புகள் கசப்பாகத்தான் இருக்கும் ஆனால் என்னை மருந்தாகப் பயனபடுத்திச் சாப்பிடுகிறார்கள் அல்லவா? அதையே தொடர்ந்து உண்டு வந்தால் நான் நோய்களைக் குணப்படுத்தி விடுவேன். நான் கசப்பாக இருந்தாலும் நன்மை தான் கிடைக்குமே தவிரதீமை எதுவும் ஏற்படாது. அது போலத்தான் பெற்றோர் உங்களுக்குச் சொல்லும் அறிவுரைகள் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கும். ஆனால் அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி வந்தால் வாழ்க்கையில் நீங்கள் முன்னேறலாம்" என்றது வேப்பமரம்.

இதைக் கேட்ட குமார் புதுத்தெம்புடன் எழுந்து போய்த் தனது பாடங்களைப் படிக்கச் சென்றான். அன்று முதல் பெற்றோரின் அறிவுரைகளைத் தவறாது அனுசரிக்கத் தொடங்கினான்.

-செல்வி பிரகாஸ் அமிர்தா-

தரம் - 4

நீரைப் பேணுவோம்

இயற்கை எமக்குத் தந்த செல்வங்களுள் சிறந்தது நீர் ஆகும். இந்த உலகில் நீர் இல்லை என்றால் எம்மால்உயிர் வாழ முடியாது. மனிதர் மட்டுமல்ல பிராணிகள், தாவரங்கள் கூட நீரின்றி வாழ முடியாது. நீரை நாம் குடிக்க, குளிக்க, சமைக்க, தோட்ட வேலைக்கு, மின்சாரம் தயாரிக்க எனப் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றோம். இவ்வாறு பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தும் நீரினைப் பேணிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

நாம் கிணறு, குளம், அருவி, ஆறு, மழைநீர் போன்ற பல வழிகளிலிருந்தும் நீரைப் பெறுகின்றோம். எமது நாட்டின் நீர் வளம் பல்வேறு வழிகளாலும் மாசடைகின்றது. இந் நிகழ்வானது மனித வாழ்க்கைக்கு மட்டுமன்றி உயிரினங்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. மாசடைந்த நீரைப் பருகுவதும், பயன்படுத்துவதும் எமது உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்து, ஆயுளைக் குறைத்து விடும்.

எனவே நாம் நீர் மாசடைவதைத் தடுத்தல் வேண்டும். அத்துடன் நீரை வீண் விரயம் செய்யாது அளவோடு பயன்படுத்துதல் வேண்டும். நாம் எப்போதும் சுத்தமான நன்னீரைப் பயன்படுத்த வேண்டும். நீரின் அருமையை நன்கு உணர்ந்து அதனை அளவோடு பயன்படுத்த வேண்டும். எமது எதிர் காலச் சந்ததியினருக்கு இப் பெருஞ் செல்வத்தைப் பாதுகாத்துக் கொடுத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவது எமது பொறுப்பு ஆகும்.

-செல்வன் நகுலேஸ்வரன் பிரசாந்தன்-

தரம் 4

அம்மா நல்ல அம்மா

அம்மா நல்ல அம்மா
ஆசை ஆசை அம்மா
அள்ளி அள்ளி அணைக்கும்
நல்ல ஆசை அம்மா

பாசம் காட்டும் அம்மா
நேசம் காட்டும் அம்மா
பாலை ஊட்டி என்னைத்
தூங்க வைக்கும் அம்மா

பதறி நானும் எழுந்தால்
பாய்ந்து வரும் அம்மா
தவறி நானும் விழுந்தால்
தாவி அணைக்கும் அம்மா
பட்டுப் போல என்னைத்
தொட்டில் இட்டு வைப்பாள்
சிட்டுப் போல என்னைச்
சிரிக்க வைக்கும் அம்மா

அம்மா நல்ல அம்மா
ஆசை ஆசை அம்மா

-செல்வன் குமரையா சசிகரன்-

தரம் - 4

விடை தெரியுமா?

1) பழம் காயாகிறது அது என்ன?

2) காய் பூவாகிறது அது என்ன?

3) முற்றினாலும் பழுத்தாலும் காய் என்றே அழைக்கப்படும் அது என்ன?

4) மரஞ்செடி கொடி இல்லாத சோலை எது?

5) தண்டின் மேல் பழம், பழத்தின் மேல் செடி அது என்ன?

6) ஒரு நெல்லைக் குற்றியதும், வீடெல்லாம் உமி அது என்ன?

7) மக்கள் வெட்டாத குளம், மழை நீர் நிரம்பாத குளம் அது என்ன?

8) பட்டம் பறப்பது எதனால்? படிப்புச் சிறப்பது எதனால்?

9) கொட்டாவி வருவது எதனால்? பிள்ளை அழுவது எதனால் ?

10) நல்ல பாம்பு தலை தூக்குவதேன்? நாம் கமரா முன் நிற்பதேன்?

11) காடு குறைவது ஏன்? கால்வாய் குறைவது ஏன்?

12) பந்து எழும்புவதேன்? பையன் அழுவதேன்?

விடைகள்

(1)	ஊறுகாய்	(2)	தேங்காய்ப்பூ	(3)	தேங்காய்	(4)	காசோலை
(5)	அன்னாசி	(6)	விளக்கு	(7)	இளநீர்	(8)	நூலால்
(9)	பசியால்	(10)	படமெடுக்க	(11)	வெட்டுவதால்	(12)	அடிப்பதால்

- செல்வி செல்வராசா வினுசா -

தரம் - 4

கல்வியைக் கருத்தில் கொள்

அன்பின் நண்பா கொஞ்சம் நில்!
நட்பாம் எந்தன் வார்த்தையைக் கேள்!!
பள்ளி செல்லும் காலத்திலே
படிப்பை மட்டும் கருத்தில் கொள்!
துள்ளித் திரியும் காலம் இதுவே
தோல்வியை நோக்கிச் செல்லாதே!!

தந்தையும் தாயும் எமக்காகக்
காணும் கனவுகள் பல கோடி!
தவிடு பொடியாய் அவற்றை நீ
ஆக்கிடவே முயலாதே!
வாழ்க்கை என்ற புத்தகத்தின்
முன்பக்கமே கல்வி தான்!
முன்பக்கத்தை இழந்து விட்டால்
வாழ்வில் எழில் இருக்குமா?

வாழ்க்கை என்பதன் அடித்தளமே
பள்ளி செல்லும் வாழ்க்கை தான்
பக்குவமாய் அதைப் புரிந்து கொண்டு
படிப்பை மட்டும் கருத்தில் கொள்!

- செல்வன் ர.தனலக்ஸ்மன்
தரம் - 5

காட்டு மரத்தைப் பாதுகாப்போம்

இயற்கை அன்னை எமக்களித்த அருங் கொடைகளுள் காடும் ஒன்றாகத் திகழ்கிறது. இக் காட்டின் மூலம் உயிரினங்கள் பெறும் பயன்கள் எண்ணில் அடங்காதவை. அப் பயன்களாவன : நீர், சுத்தமான காற்று, மூலிகைகள், தளபாடங்கள் தயாரிப்பதற்கான பெரிய மரங்கள், மழைவீழ்ச்சி இவை மட்டுமல்லாது இன்னும் பல பயன்களையும் பெற்றுக் கொள்கின்றோம். காட்டு வாழ் விலங்குகளுக்குச் சரணாலயமாகவும் காடு விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். காட்டின் மூலமே நாம் சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்தோடு சூரிய ஒளியானது தரையில் நேரடியாகப்படுவதைக் காட்டு மரங்கள் தடுத்து ஒரு ஈரலிப்பான தன்மையை ஏற்படுத் துகின்றன. மேலும் நோய்களுக்குத் தேவையான அனைத்து மூலிகைகளையும் காட்டில் நாம் மிக இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு மனிதனுக்குத் தேவையான தளபாடங்களைத் தயாரிப்பதற்கான மரங்களை இந்தக் காட்டின் மூலம் நாம் பெற்றுக் கொள்கின்றோம். இவ்வளவு பயன்களைக் கொண்டுள்ள காட்டைக் காப்பதென்பது இன்றியமையாததொன்றாகும்.

இன்று காடுகள் பல தேவைகளுக்காக அழிக்கப்பட்டு வருகின்றன. அத் தேவைகளாவன வதிவிடம் அமைத்தல், விவசாயம், போக்குவரத்து போன்ற பல தேவைகளுக்காக அழிக்கப்படுகின்றன. இதனைத் தவிர்த்து நாம் எதிர்காலச் சந்ததியினரின் நலன் கருதியாவது காட்டு வளங்களைச் சிறந்த முறையில் பாதுகாப்போமாக!.

- செல்வன்இ. சுஜன் -
தரம் -5

வாழை மரத்தின் சிறப்பு

வாழை மரமானது பிற மரங்களை விட சிறப்புத் தன்மையைக் கொண்டதாகக் கருதப்படுகின்றது. இது இந்து மக்களுக்கு மிகுந்த பயன் தருவதாகும். அந்த வகையிலே இம் மரமானது பிறருக்காகத் தன்னையே ஒப்படைக்கிறது எனலாம். வாழை இலையானது உணவு உண்பதற்கும் பிற கருமங்களுக்கும் குறிப்பாக நிறைகுடம் வைப்பதற்கும் பய்ன்படுகின்றது. வாழை மடலானது பூ மாலையை வாடாமல் பாதுகாக்கவும், வாழை நாரானது பூமாலை கட்டுவதற்கும் பயன்படுகிறது. வாழைப்பூ கறி சமைக்க உதவுகிறது.

திருமண நிகழ்வுகள், பூப்புனித நீராட்டு விழா, மரணவீடு போன்ற நிகழ்வுகளுக்கு வாழை மரங்கள் கட்டப்படுவதனைக் காணலாம். வாழைமரம் ஒரே ஒரு முறையே குலை போடுகின்றது. அதே போல நடக்கும் இந் நிகழ்வானது வாழ்வில் ஒருவனுக்கு ஒரு முறையே நடத்தல் வேண்டும் என்பதனையே உணர்த்துகின்றது. வாழை மரத்திலிருந்து வரும் சாறு மருந்துக்கும் பயன்படுகிறது. எரிகாயங்களிற்கு இதன் சாறு பிழிந்து விடப்படுவதை நாம் நடைமுறையில் காணலாம். இவ்வாறு தனக்காகவன்றி பிறருக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் வாழை மரத்தைப்போல் நாமும் வாழ்வோமாக.

- செல்வி தி. கயானி -
தரம் - 5

Birds in Sri Lanka

Sri Lanka is a tropical island where there are lot of birds living. Peacocks, parrots and pogeons are colourful birds. It is pretty to see the wood peckeres peck and make holes and make their wooden house

Many migrant birds are found in this country. Birds such as herons, storks and flamingers are some of them. These birds live near water lagoons and grasslands from October onwards. When March comes these birds fly back to their homelands.

Many tourists visirt Sri Lanka to watch birds in Kumana, a famous bird's sanctuary. Birds of Sri Lanka attract many tourists from other land.

- Srikanth Niruja -
Grade- 6

எனது பாடசாலை

* நூற்றாண்டு விழாக் காணும் மயிலணி வித்தியாலயமே நீ வாழ்க!
* பாடசாலை ஸ்தாபகராம் குமாரசுவாமி ஜயாவின் எண்ணம் போல் நீ வாழ்க!
* கற்றாய்ந்தொழுகு என்ற மகுட வாசகத்துடன் விளங்கும் நீ வாழ்க!
* திரு.நா.சிவநேசன் அதிபரின் கீழ் இயங்கிவரும் வித்தியாலயமே நீ வாழ்க!
* தரம் 1-11 வரை மாணவரின் ஆளுமையை விருத்தி செய்யும் கல்விச்சாலையே நீ வாழ்க!
* எம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம் நீ வாழ்க!
* மயிலணி எனும் சிற்றூரில் அமைந்த கல்விச்சுடரே நீ வாழ்க!
* எம் பாடசாலை இன்னும் பல ஆண்டுகள் மிளிர என் வாழ்த்துக்கள்.

- செல்வி ஜெகதீஸ்வரன் ஜெனிஸ்ரா -

தரம் - 6

எனது பொழுது போக்கு

பொழுது போக்கு என்பது எமது சிறிது நேர மகிழ்ச்சிக்காக மட்டும் ஈடுபடும் ஒரு முயற்சியாக அமைய வேண்டியதில்லை. எமது அறிவை வளர்ப்பதாகவும், எமக்குப் பயனுள்ளதாகவும் அமைந்து இருக்கலாம். ஒவ்வொரு பருவத்தினரும் அவரவர் வயதுக்கேற்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவது வழக்கம். அதே போல் செல்வந்தர்கள், ஏழைகள், முதலாளி, தொழிலாளி எனப் பலதரப்பட்டவரும் தங்கள் வசதிகளுக்கேற்ற பொழுது போக்குகளில் ஈடுபடுவர்.

எம் போன்ற பாடசாலை மாணவரிடையே விருப்பமான பொழுது போக்குகளாக முத்திரைசேகரித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், சஞ்சிகை வாசித்தல் போன்ற பல்வேறு வகையான பொழுது போக்குகள் உள்ளன. பொழுது போக்குகளில் ஈடுபடும் போது எமக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

எனது பொழுது போக்குகளாக வர்ணம் தீட்டுதல், இசைக்கருவி ஒன்றை மீட்டப் பயிற்சி பெறுதல், அலங்காரப் பொருட்கள் செய்தல், சஞ்சிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல் என்பன அமைகின்றன. இத்தகைய பொழுது போக்குகளில் ஈடுபடுவதனால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், மன அமைதியாகவும் இருக்கின்றது.

- தங்ராசா சாருஜா -

தரம் - 6

மூலிகை மகத்துவம்

1) துளசி:- ஒரு அவுன்ஸ்துளசிச்சாறும் தேனும் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நெஞ்சில் உள்ள சளி குறைந்து அற்றுப் போகும். இதயத்திற்கும், ஈரலுக்கும் நல்ல வலிமையைத் தந்து நல்ல பசியைத் தரும்.

2) வல்லாரை:- குடற்புண், குடல் நோவு, தலைநோவு, வாய்ப்புண், வாய்நாற்றம் இவைகளினால் பாதிப்படைந்தவர்கள் வல்லாரை இலையைப் பச்சையாக வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வர நோய் குணமாகும். மூளைக்கு நல்ல பலத்தைக் கொடுத்து நல்ல ஞாபக சக்தியை ஏற்படுத்துவதால் சரஸ்வதி என்ற தெய்வத்தின் பெயர் இதற்கு உண்டு.

3) மாதுளை:- பித்தரோகங்களின் போது பித்த சுரப்பை சீராக்குவதற்கு மாதுளம் பூச்சாறு கொடுப்பது நல்லது. இப் பழச்சாற்றினால் வாந்தி, கபம், தாகம் ஆகியவை தீரும். அத்துடன் வாய்நீர்ச்சுரப்பு, கசப்பு, வாந்தி, விக்கல், மாந்தம், நெஞ்செரிவு, காதடைப்பு, நீங்காத மயக்கம் ஆகியவை தீரும்.

4) வெற்றிலை:- வெற்றிலைக்கு தாம்பூலம், மண்ணில் வேந்தன் என்ற பெயர்களும் உண்டு. வெற்றிலை குரலை இனிமையாக்கும். வாய் நாற்றம் தீரும். உமிழ்நீர்ச்சுரப்பை அதிகரிக்கும். காலையில் வெற்றிலை உண்ணும் போது பாக்கு சேர்த்து உண்டால் மலம் நன்கு கழியும். மதியத்தில் வெற்றிலையுடன் சுண்ணாம்பு சேர்த்து உண்டால் பசி அதிகமாகும். வெற்றிலையுடன் கராம்பு சேர்த்து உண்டால் பற்கள் இறுகும்.

5) செவ்வரத்தை:- பூவினைச் சேகரித்து பச்சடியாகவோ, சுண்டலாகவோ செய்து சாப்பிட்டுவந்தால் கணச்சூடு, எலும்புருக்கி, இருதயத் துடிப்பு, மேககாங்கை, உடல் எரிவு, இருமல், நீர்க்கடுப்பு, ரத்தப்பிரமியம், கால், ஈரல் வீக்கம் போன்ற நோய்கள் தீரும்.

-செல்வி சி. சிந்துஜா -
தரம் - 7

இப்படியும் சில பெயர்கள்

1) இந்து சமுத்திரத்தின் முத்து	-	இலங்கை
2) ஐரோப்பாவின் நோயாளி	-	துருக்கி
3) சூரிய உதய நாடு	-	ஜப்பான்
4) நள்ளிரவு சூரிய உதய நாடு	-	நோர்வே
5) இந்தியாவின் வாசல்	-	பம்பாய்
6) சீனாவின் துயரம்	-	குவாங்கோ நதி
7) புனித நாடு	-	பாலஸ்தீனம்
8) இருண்டகண்டம்	-	ஆபிரிக்கா
9) ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்	-	சுவிற்சலாந்து
10) ஆயிரம் வாவி நாடு	-	பின்லாந்து

உலகின் மிகப்பெரியன

1) கண்டம்	-	ஆசியா
2) தீவு	-	கிறீன்லாந்து
3) தேவாலயம்	-	சென்பீற்றஸ்
4) நூலகம்	-	லெனின் தேசிய நூலகம்
5) பெரிய நதி	-	அமேசன்நதி
6) நீளமானநதி	-	மிசூரிமிசிசிப்பி
7) பெரிய மணிக்கூடு	-	கால்கேம்

- செல்வி ச.ரஜிதா -

தரம் - 7

பொதுஅறிவு

01) உலகிலே மிகப் பெரிய பெருஞ் சுவர்
சீனப்பெருஞ்சுவர்

02) ஒரே ஒரு இந்து மத நாடு
நேபாளம்

03) உலகில் அதிகளவு மக்களால் தாய் மொழியாகப் பேசப்படும் மொழி
மாண்டரின்

04) அதிகளவு நாடுகளைக் கொண்ட கண்டம்
ஆபிரிக்கா

05) செஞ்சிலுவைச் சின்னத்தைத் தனது தேசியக் கொடியில் கொண்டுள்ள நாடு
சுவிற்சலாந்து

06) ஆசியாக்கண்டத்தையும், ஆபிரிக்காக் கண்டத்தையும் பிரிக்கும் கால்வாய்
சுயெஸ் கால்வாய்

07) தன் வாழ்வில் ஒரே ஒரு தடவை பூக்கும் தாவரம்
மொனாகாப்பித், வாழை

08) தேம்ஸ் நதி மீது அமைந்துள்ள நகரம்
லண்டன்

09) உலகின் மிகச் சிறிய தேசிய கீதத்தைக் கொண்டுள்ள நாடு
யப்பான்

10) தங்க முக்கோண நாடுகள் என அழைக்கப்படும் நாடுகள்
மியான்மார், தாய்லாந்து, லாவோஸ்

11) உலகிலே மிகப் பெரிய தீவு
கிரின்லாந்து

12) இருண்ட கண்டம் என்று அழைக்கப்படும் கண்டம்
ஆபிரிக்காக் கண்டம்

13) சாய்ந்த கோபுரம் என அழைக்கப்படும் கோபுரம்
பைசா கோபுரம்

14) பாலைவனக் கப்பல் என அழைக்கப்படும் மிருகம்
ஒட்டகம்

15) ஈபிள் கோபுரம் அமைந்துள்ள நாடு
பிரான்ஸ்

16) உலகிலேயே மிகச் சிறிய நாடு
வத்திக்கான்

17) உலகிலேயே மிகப் பெரிய நகரம்
லண்டன்

18) உலகிலேயே மிகப் பெரிய நாடு
கனடா

19) உலகிலேயே மிக உயரமான மலை
இமயமலை

20) உலகிலேயே மிக ஆழமான ஆழி
மரியானா

21) உலகிலேயே மிகப் பிரபலமான விஞ்ஞான சஞ்சிகை
நேச்சர்

22) உலகிலேயே மிகப் பெரிய ஏரி
கஸ்பியன்

23) உலகிலேயே மிக உயரத்தில் உள்ள ஏரி
தித்திக்கா

24) உலகிலேயே மிகப் பெரிய நன்னீர் ஏரி
சுப்பீரியர் ஏரி

25) கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு
நெதர்லாந்து

- செல்வன் சு. ராஜ்குமார் -
தரம் - 7

சில ஆங்கிலச் சொற்களின் விரிவு

SCHOOL

S- is for Sincerity	நேர்மை
C- is for Capacity	திறமை
H- is for Honesty	உண்மை பேசும் குணம் / நேர்மை
O- is for Obedience	மரியாதை / பணிவு
O- is for Orderliness	ஒழுக்கம்
L- is for L earning	கல்வியறிவு

TEACHER

T- is for Tactful	சாமர்த்தியம்
E- is for Education	கல்வியறிவு
A- is for Ability	திறமை
C- is for Character	நன்னடத்தை
H- is for Health	ஆரோக்கியம்
E- is for Enthusiasm	ஊக்கம் / ஆர்வம்
R- is for Regularity	ஒழுக்கம் / ஒழுங்குடமை

STUDENT

S- is for Searcher	தேடுபவர்
T- is for Truthful	உண்மையானவர்
U- is for Ultra	தீவிரமானவர்
D- is for Disciple	பின்பற்றுபவர்
E- is for Efficient	ஊக்கமுடையவர்
N- is for Noble	உயர்குணசாலி
T- is for Trust worthy	நம்பகத்தன்மையர்

- செல்வி பா. தமிழினி -

தரம் - 7

ஆண்டு நிறைவு விழாக்கள்

1	வருடம்	காகித விழா
2	வருடம்	பருத்தி விழா
3	வருடம்	தோழ விழா
4	வருடம்	பூவிழா
5	வருடம்	மர விழா
6	வருடம்	கற்கண்டு விழா
7	வருடம்	செம்பு விழா
9	வருடம்	மணிக் கவசம் விழா
10	வருடம்	தகர விழா
15	வருடம்	படிக விழா
25	வருடம்	வெள்ளி விழா
30	வருடம்	முத்து விழா
40	வருடம்	மாணிக்க விழா
50	வருடம்	பொன் விழா
60	வருடம்	மணி விழா/ வைர விழா
75	வருடம்	பவள விழா
80	வருடம்	அமுத விழா
100	வருடம்	நூற்றாண்டு விழா
1000	வருடம்	மிலேனியம்

- செல்வன் ம.தினேஸ்குமார் -

தரம் - 7

My Friend

My friend's name is Ruksika. Her father is a teacher. Her mother is a house wife. She has two brothers and no sisters. She is fair in complexion and short.

She studies at Mylany Saiva Maha Vidyalayam. She goes to school on foot. Her favourite subjects are English and Tamil. Her hobbies are reading books and collecting stamps.

She likes to share her happy moments with me and I too do the same. I love her very much.

- N.Kobiniya -

Grade-8

9 இன் பெருக்கங்கள் (-)

1x9-1	=	08
21x9-1	=	188
321x9-1	=	2888
4321x9-1	=	38888
54321x9-1	=	488888
654321x9-1	=	5888888
7654321x9-1	=	688888888
87654321x9-1	=	788888888
987654321x9-1	=	8888888888

9 இன் பெருக்கங்கள் (+)

1x9+1	=	10
21x9+1	=	190
321x9+1	=	2890
4321x9+1	=	38890
54321x9+1	=	488890
654321x9+1	=	5888890
7654321x9+1	=	68888890
87654321x9+1	=	788888890
987654321x9+1	=	8888888890

9 இன் பெருக்கங்கள் (வேறு) (+)

1x9+2	=	11
12x9+3	=	111
123x9+4	=	1111
1234x9+5	=	11111
12345x9+6	=	111111
123456x9+7	=	1111111
1234567x9+8	=	11111111
12345678x9+9	=	111111111
123456789x9+10	=	1111111111

-சி.ருத்சிகா-
தரம் - 8

ஏமாற்ற முற்பட்டால் ஏமாற்றமே விளையும்

காட்டில் உள்ள மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. செண்பகம் இரு பக்கமும் சேராமல் ஒதுங்கி இருந்தது. மிருகங்கள் தம் பக்கம் சேரும் படி செண்பகத்தை அழைத்தன. நான் மிருகமும் அல்ல, பறவையும் அல்ல. பறவை போல் பறப்பவன். மிருகங்களைப் போல் நடப்பவன் எனவே நான் உங்கள் பக்கம் சேர முடியாது என சொல்லி ஒதுங்கிக் கொண்டது.

சிறிது காலத்தின் பின் காட்டிலுள்ள பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் இடையே சமாதானம் உண்டானது. இரு இனமும் ஒற்றுமையாக வாழத் தொடங்கின. அதனைக் கொண்டாடும் வகையில் சமாதான விழா ஒன்று நடைபெற்றது. அதில் பங்கு பெற செண்பகம் விரும்பியது. பறவைகளிடம் சென்று "உங்கள் கூட்டத்தில் என்னையும்

சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்று கேட்டது. பறவைகள் பதில்ஏதும் சொல்லாமல் பறந்து சென்றன. ஏமாற்றம் அடைந்த செண்பகம் மிருகங்களிடம் சென்றது. ''நான் ஒரு மிருகம் என்னை உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்''என்றது. மிருகங்கள் அதை ஒப்புக்கொள்ளாமல் செண்பகத்தை விரட்டின. பாவம் எந்தப் பக்கமும் சேரமுடியாத செண்பகம் ஏங்கித் தவித்தது. பகலில் மரங்களில் ஒளிந்து கொண்டது. இரவு வேளைகளில் மட்டும் வெளியே தலைகாட்டத் தொடங்கியது.எப்பக்கமும் சேராமல் ஏமாற்ற முற்பட்டதன் பயன் இது தான் என்பதை செண்பகம் உணர்ந்து கொண்டது.

இரண்டு பக்கங்களையும் ஏமாற்ற முற்பட்டால் இரண்டு பக்கமுமே நம்மைக் கைவிட்டு விடும்.

- செல்வி மனோகரன் கீர்த்திகா-

தரம் - 8

நூற்றாண்டு விழா

அன்றைய நாள் சொல்லமுடியாத மகிழ்ச்சி நிறைந்த நாள். அது எங்கள் பாடசாலையில் நூற்றாண்டு விழா நடைபெற்ற நாள். அன்று எமது பாடசாலையில் கலகலப்பும், சத்தமுமாக இருந்தது. எமது பாடசாலை ஆரம்பமாகி நூறு ஆண்டுகளாகின . இப்போது பாடசாலை வேறு விதமாக மாறிவிட்டது. பழையமாணவர்கள், ஆசிரியர்கள், மாணவமாணவிகள், அதிபர், பெற்றோர்கள் என எல்லோரும் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்கள் அனைவரும் அன்று பாடசாலைக்கு சமூகமளித்திருந்தனர். அனைவரும் விழா ஒழுங்குகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

ஆசிரியர்கள் மாணவரை நெறிப்படுத்திக் கொண்டிருந்தனர். பாடசாலை வாயில், அலங்கார வளைவுகளாலும், அழகிய மலர் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரு பெரிய குத்துவிளக்குகள் மங்கலம் பொங்க ஒளியேற்ற ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. நிறைகுடமும், நெல்மணியும் விழாவின் புனிதத்தை பொலியச் செய்து கொண் டிருந்தன. மாணவர்கள் ஒன்று கூடும் அரங்கத்தில் கண்ணிறைந்த அழகிய மேடையில் வெண்மலர்மாலைகள் ஒளி வீசிக்கொண்டிருந்தன. ஒளி வீசும் தீபங்கள் அரங்கத்தை எல்லைப்படுத்தி அழகு செய்தன. ஊதுபத்தியின் சுகந்தமான நறுமணம் உள்ளத்திலே அமைதியை அளித்தது. உள்ளாக அமைந்திருந்த கல்வித்தாயின் திருவுருவம் தீப ஒளியில் நனைந்து கொண்டிருந்த தோற்றமானது தேவலோகமோ என்ற நினைவைத் தோற்றுவித்தது.

நேரமும் ஆகிவிட்டது அவ் வேளையில் விழாவினை சிறப்பிக்க அழைக்கப்பட்ட பிரதம விருந்தினர் வருகை தந்தார். அதிபரும், ஆசிரியர்களும் அவரை இன்முகத்துடன் வரவேற்றனர். மங்கள நீரும், மஞ்சள் சந்தனமும் கொடுத்து உபசரித்தனர். அவர்கள் வந்து கொண்டிருக்கும் வேளையில் மாணவர்கள் பான்ட்வாத்தியம் இசைத்து எழுந்து நின்று கரகோசம் செய்து வரவேற்றனர். தொடர்ந்து மாணவிகள் தேவாரம், தமிழ்த்தாய் வாழ்த்து, பாடசாலைக்கீதம் என்பன இசைத்தனர். அமைதியான அந்தப் புனிதப் பொழுதில் எழுந்த இனிய கீதங்கள் நெஞ்சங்களில் நிறைவைத் தோற்றுவித்தன. எண்ணங்களில் அமைதியான ஆனந்த உணர்வை அரும்பச் செய்தன. தொடர்ந்து வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.

பின்பு அதிபர் உரை, சிறப்பு விருந்தினர் உரை, பிரதமவிருந்தினர் உரை என்பன நிகழ்த்தப்பட்டன. இவ்வுரைகள் எல்லாவற்றிலும் பாடசாலையின் வரலாற்றுச் சிறப்புக்கள் பற்றியே கூறப்பட்டன. பாடசாலை மாணவர்களிற்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. நாடகம், கதைகள், கவிதைகள், நடனம், வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம் என்பன மாணவர்களினால் நிகழ்த்தப்பட்டன. பின்பு நல்ல ஆக்கங்களிற்குரிய பரிசில்கள் வழங்கப்பட்டன. அடுத்ததாக நன்றியுரை நிகழ்த்தப்பட்டு பாடசாலைக் கீதத்துடன் இரவு 8 மணியளவில் விழா இனிதே நிறைவேறியது.

- கு.நிஸாந்தினி-

தரம் - 9

பரப்பளவும் சுற்றளவும்
(Areas, Perimeter)

01) செவ்வகம் Rectangle	பரப்பளவு = நீளம் × அகலம் சுற்றளவு = 2(நீளம் × அகலம்)
02) சதுரம் Square	பரப்பளவு = நீளம் × அகலம் சுற்றளவு = 4 × நீளம்
03) முக்கோணம் Triangle	பரப்பளவு = $\frac{1}{2}$ × அடி × செங்குத்துயரம் சுற்றளவு = பக்கங்கள் (a,b,c) எனின் (a+b+c)
04) இணைகரம் Parallelogram	பரப்பளவு = அடி × செங்குத்துயரம்
05) சரிவகம் Trapezilwn	பரப்பளவு = $\frac{1}{2}$(சமாந்தரப் பக்கங்களின் கூட்டுத்தொகை) × செங்குத்துயரம்
06) சாய்சதுரம் Rhombus	பரப்பளவு = $\frac{1}{2}$ × மூலைவிட்டங்களின் பெருக்குத்தொகை
07) வட்டம் Circle	பரப்பளவு = πr^2 சுற்றளவு (பரிதி) = $2\pi r$ ($\pi = \frac{22}{7}$, r = ஆரை) சுற்றளவு (பரிதி) = πd ($\pi = \frac{22}{7}$, d = விட்டம்)
08) சதுரமுகி	மேற்பரப்பளவு = 6 × (1 பக்க நீளம்)^2
09) உருளை Cylinder	மேற்பரப்பளவு = $A = 2\pi r (r+h)$ (r = ஆரை, h = உயரம்)
10) கூம்பு Cone	மேற்பரப்பளவு = $A = 2\pi r^2 + \pi r \ell$ (r = ஆரை, ℓ = சாயுயரம்)
11) கோளம் (Sphere)	பரப்பளவு = $A = 4\pi r^2$
12) ஆரைச்சிறை Rectangle	பரப்பளவு = $\frac{\theta}{360} \times \pi r^2$ சுற்றளவு = $r + r + (\frac{\theta}{360} \times 2\pi r)$

ஓயிலரின் தொடர் = உச்சிகளின் எண்ணிக்கை + முகங்களின் எண்ணிக்கை
= விளிம்புகளின் எண்ணிக்கை + 2

- சி.பிரதாபன்-
தரம் - 9

கனவளவு (Volumes)

01) கனமுகி	=	நீளம் × அகலம் × உயரம்
02) அரியம்	=	குறுக்குவெட்டுமுகப்பரப்பு × அரியத்தின் நீளம்
03) உருளை	=	$V = 4\pi r^2 h$ (r = ஆரை, h = உயரம்)
04) கூம்பு	=	$V = \frac{1}{3}\pi r^2 h$ (r = ஆரை, h = செங்குத்துயரம்)
05) கோளம்	=	$V = \frac{4}{3}\pi r^3 h$ (r = ஆரை)

எண்கணிதம்

01) இலாப சதவீதம் $= \frac{\text{இலாபம்}}{\text{கொள்விலை}} \times 100\%$

02) நட்ட சதவீதம் $= \frac{\text{நட்டம்}}{\text{கொள்விலை}} \times 100\%$

03) எளியவட்டி $= \frac{\text{முதல்} \times \text{காலம்} \times \text{வட்டிவீதம்}}{100}$

04) பங்குகளின் எண்ணிக்கை $= \frac{\text{முதலீடு}}{\text{சந்தைப்பெறுமானம்}}$

அட்சரகணிதம்

$(a+b)^2 = a^2+2ab+b^2$

$(a-b)^2 = a^2-2ab+b^2$

$a^3+b^3 = (a+b)\ (a^2-ab+b^2)$

$a^3-b^3 = (a-b)\ (a^2+ab+b^2)$

$(a+b)^3 = a^3+3a^2b+3ab^2+b^3$

$(a-b)^3 = a^3-3a^2b+3ab^2-b^3$

$(x+a)\ (x+b) = x^2+(a+b)\ x+ab$

- வானுஜன்-
தரம் - 9

பொன்மொழிகள்

மாற்றங்களை மறுதலிக்கிறவர்கள் தோற்றுப்போகிறார்கள். மாற்றங்களை எதிர்பார்த்து முன் கூட்டியே தயாராக இருப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

- இங்கர்சால்-

சில வகைப்பழக்க வழக்கங்கள் மறுபரிசீலனைக்குரியவை மாற்றப்படவேண்டியவை. ஆனால் உடனடியாக மாற்ற முடியாமல் போய்விடும். காரணம் பழக்கங்கள் பலமானவை.

-சுந்தரமூர்த்தி சுவாமிகள்-

எந்த விசயத்திலும் அக்கறை நம்மை உயர்த்தும். கவலை கண்டிப்பாகத் தாழ்த்தும்.

- மார்க்வின்-

தனக்குத் தெரிந்த விடயங்களை மட்டும் மனிதன் பேசுவானாகில் உலகில் பூரண அமைதி பிறக்கும்.

- பெர்னாட்ஷா-

பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே

- கன்பூசியஸ்-

தற்காலிகமான சிறியதொரு பாதுகாப்பை விலைக்கு வாங்குவதற்காக தங்களது அத்தியாவசியமான சுதந்திரத்தை விட்டுவிடுபவர்கள் சுதந்திரத்திற்கு தகுதியானவர்களல்லர்.

- பெஞ்சமின் பிராங்ளின்-

- செ.நிசாந்தன்-
தரம் - 9

சமாதானம்

அகம் விரும்பும் சமாதானம் ஆனந்தம் தரும் சமாதானம்
இனிமையானது சமாதானம்ஈன்றவள் உவக்கும் சமாதானம்
உண்மையாக வாழ வைக்கும் சமாதானம்
ஊனை உருக்கிடும் சமாதானம்
என்றும் வாழ்ந்திட வேண்டும் சமாதானம் ஏற்றம் தரும் சமாதானம்
ஐயமின்றி நடமாடவைக்கும் சமாதானம்
ஒருலகம் என்பதனை உணர்த்தும் சமாதானம்
ஓடம் போல் அழகுடன் அசைந்திடும் சமாதானம் ஔடதமாகும் சமாதானம்

- செல்வன் தி.புவனராஜ் -
தரம் - 9

நிறங்களும் குணங்களும்

1)	சிவப்பு	-	வெற்றி
2)	மண்ணிறம்	-	நிலைத்து நிற்றல்
3)	நீலம்	-	அன்பு
4)	இளஞ்சிவப்பு	-	பாசம்
5)	வெள்ளை	-	எண்ணங்களைக்குவித்து வைத்தல்
6)	மஞ்சள்	-	அறிவு, ஒற்றுமை
7)	கறுப்பு	-	ஈர்ப்பு
8)	பச்சை	-	வளர்ச்சி

- செல்வி நே. மதியரசி-
தரம் - 9

சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃ திலார்தோன்றலிற் தோன்றாமை நன்று"என்றார் வள்ளுவர். அந்த வகையில் புகழோடு தோன்றி, புகழோடு வாழ்ந்து அவ்வாறே விண்ணுலகை அடைந்தவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஆவார். யாழ்ப்பாணத்தின் தொன்மை மிகு செந்தமிழும், சைவமும் தளைத்தோங்கும் நகரில் சுன்னாகமும் ஒன்று. அங்கு பரம்பரை பரம்பரையாக புலமைவாய்ந்த குடும்பத்தின் வழித்தோன்றலாக பிறந்தவரே அம்பலவாணப்புலவர். இவரின் மகனாக 1854ம் ஆண்டு பிறந்தவரே குமாரசுவாமிப்புலவர் ஆவார்.

தன்னுடைய ஆரம்பக்கல்வியை தந்தையாரிடம் பெற்ற இவர், ஆங்கிலம் கற்பதற்காக மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையைத் தேர்ந்தெடுத்தார். அது மட்டுமன்றி தமிழ் இலக்கண, இலக்கியங்கள், சுருக்கம் போன்றவற்றை பன்மொழிப்புலமையாளர், பல்வேறு அறிஞர்கள் போன்றோரிடம் கற்று ஆழமான அறிவைப் பெற்றுக் கொண்டதோடு இயல்பாகவே இருந்த புலமையையும் வளர்த்துக் கொண்டார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியும், பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார். வதுளை கதிரேசன் பதிகம், நகுலேஸ்வரர் ஊஞ்சல், மாவை இரட்டை மணிமாலை, கைலாய பிள்ளையார் ஊஞ்சல், சாணக்கிய நீதி வெண்பா முதலிய பல செய்யுள் நூல்கள் புலவருடைய செய்யுள் திறனையும்,சமயப்பற்றையும், ஒழுக்க ஆர்வத்தையும் காட்டுவனவாகும்.

குமாரசுவாமிப்புலவர் ஆசிரியராகவும், உரையாசிரியராகவும், மொழிபெயர்ப்பாசிரியராகவும் விளங்கினார். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் உள்ள கோயில்களிலும், பாடசாலைகளிலும் புலவர் சமயம், கல்வி சம்பந்தமாக ஆற்றிய சொற்பொழிவுகள் பொது மக்கள் மத்தியில் சமய ஒழுக்கத்தையும், கல்வி அறிவையும் வளர்ப்பதற்கு ஏதுவாய் அமைந்தன. கண்டனம் எழுதுவதிலும் புலவர் மிகக் கெட்டிக்காரராய் விளங்கினார். முருகேச பண்டிதர், சங்கர

பண்டிதர் ஆகியோரிடம் அக்கலையினை கைவரக் கற்றார். சமய இலக்கிய, இலக்கணத் துறைகளில் போலிக் கல்விமான்களையும், போலிக்கல்விக் கொள்கைகளையும் காரசாரமாகக் கண்டித்தார்.

குமாரசுவாமிப்புலவர் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்திலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் அங்கத்தவராய் விளங்கினார். அது மட்டுமன்றி 1920ம் ஆண்டு செந்தமிழ்ப் பரிபாலன சங்கத்தின் பரிந்துரையின் விளைவாக புலவருக்கு அரசு சன்மானம் வழங்கியது.இத்தகைய மேன்மைகள் பொருந்திய இவர் ஆசிரியப் பணியில் அருந் தொண்டாற்றியும், உரைநடையில் முன்னோடியாய் விளங்கியும், மொழிபெயர்ப்புக்களை மேற் கொண்டும், அகராதி முயற்சியில் ஈடுபட்டும் முத்தமிழ்க் கல்வியை முன்னெடுத்துச் சென்றவரும் ஆவார்.

இவருடைய இலக்கிய முயற்சியான செய்யுள் இயற்றல், இலக்கிய உரை என இரண்டாகப் பிரிக்கலாம். இவர் ஏறத்தாழ பத்து நூல்கள் வரை உரை எழுதியுள்ளார். கண்ணகி கதை, தமிழ்ப்புலவர் சரித்திரம்போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். 1914ம் ஆண்டு புலவரது இலக்கிய சொல்லகராதி வெளிவந்தது. உதயதாரகை, இலங்கை நேசன், உதயபானுமுதலான ஈழத்துப் பத்திரிகைகளிலும், செந்தமிழ், தமிழ்மகவு ஆகிய தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலும் புலவர் எழுதிய 200 ற்கும் மேற்பட்ட கட்டுரைகள் பல்வேறு விடயங்களை அலசுவனவாய் அமைந்து இன்றும் அத்துறையில் ஆர்வம் உள்ளோர்க்கு சுவைப்பயனை வழங்குவனவாக அமைந்துள்ளன. இத்தகைய புலமையுள்ள புலவர் மிகவும் எளிமையான மனிதர்.

இவர் துன்பப்பட்டு கற்று, துன்பங்களோடு வாழ்ந்து பழகியவர், தன்மானம் மிக்கவர், கடன் கேட்க விரும்பாதவர். சமய இலக்கிய, இலக்கண பணிகளை எத்தகைய நெருக்கடியிலும் சாயவிடாதவர். வெறும் வாயுபசார வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காதவர். தமது கடைசி மூச்சு வரை தமிழ்ப் பணியாற்றி, தமிழ் இலக்கிய வரலாற்றிலே மிகச் சிறந்ததோர் இடத்தைப் பெற்று இறைவனடி சேர்ந்த குமாரசுவாமிப்புலவர் என்றென்றும் தமிழ் மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

- செல்வி வா. கல்யாணி-

தரம் - 10

மாணவி நான் எழுதுகின்றேன்

கட்டாயக் கல்வி அமுலில் மட்டும்
கலங்கும் மாணவர் தெருவில் எங்கும்
விடிந்தாலும் வினைகள் தொடருமென்று
விரண்டிடும் மாணவர் வீட்டில் இன்று

இரவெல்லாம் மின்சார துண்டிப்பினால்
சுயகற்றல் என்பது இங்கு இல்லை
காலையில் பாடசாலைசெல்வதற்கு
தடைப்பட்ட பேரூந்தை காத்திருந்தோம்
தாமதமாக அங்கு செல்வதனால்
அதிபரின் தண்டனைக்கு ஆளாகுவோம்.
ரீச்சர் வகுப்பினுள் நுழைந்ததும் வெளியேற்றுவார்.
வீட்டு வேலைப்பாடம் செய்யாததால்.

மெழுகு திரியில் இரவுகற்க
அலறும் சத்தம் அயல்வீட்டிலே
முகமூடி அணிந்தவர் உள்ளே என்பர்

அவ் அவலக்குரல்களே செவியில் ஒலிக்கும்
விழி அன்று மூடாது விடியும் வரை
வினை இங்கும் வரும் என்று பயந்து நிற்போம்.
வரும் என்றோ விடிவு எனவும் சொல்வோர்
காத்திருந்தால் கனவும் கலைந்து விடும்.

- செல்வி ச.கயல்விழி -

தரம் - 10

இனிமை பூத்த தமிழ் மொழி

அகிலம் போற்றும் நல்ல மொழி
அகரம் ஆதியாய்க் கொண்ட மொழி
மகிழ்ந்தே பாவலர் போற்றும் மொழி
மூவகை அழகு நிறைந்த மொழி

கல்லது தோன்றாக் கால மொழி
கவினார் சங்கம் கண்ட மொழி
பல்வகை இலக்கணம் பெற்ற மொழி
இராமாயண, பாரதம் படைத்த மொழி

குடிமக்கள் காப்பியம் சொன்ன மொழி
குமரன் முருகன் காத்த மொழி
முடி மன்னர் மூவர் வளர்த்த மொழி
வள்ளுவன் குரலில் ஒலித்த மொழி

செந்தமிழ் மக்கள் பேசும் மொழி
சிறப்புறப் பாடல்கள் கொண்ட மொழி
இந்த மண்ணில் காத்த மொழி
இனிமை பூத்த தமிழ் மொழி

- செல்வி அ. சர்மிலா -

தரம் - 10

கலங்கரை விளக்கு

விடியலின் கீதங்கள் வேலாயுதத்தை வழமை போல விழித்தெழச் செய்கின்றன. கட்டிலிற் கிடந்த பாயைச் சுருட்டியபடி "கனகா கனகா விடிஞ்சிட்டுது" வழமைபோல அந்த அழைப்பில் ஒவ்வொரு நாளையும் வரவேற்று வாழ்க்கையை ஆரம்பிப்பது கனகாவுக்கு வழக்கமாயிற்று. கூந்தலை அள்ளி முடிந்து கொண்டு மனதுக்குள் கடவுளை வேண்டியெழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு கிணற்றடியில் முகத்தைக் கழுவி அட்டாளையில் கழுவி வைக்கப்பட்ட கேற்றிலை எடுத்து அடுப்பை மூட்டிக் கொண்டே "தம்பி, தம்பி தண்ணி கொதிக்குது தேத்தண்ணி போடப்போறன்" என்ற அம்மாவின் குரல் கேட்ட மேனன் வெளி விறாந்தையில் அள்ளி வைத்த தண்ணீரில் முகத்தைக் கழுவிக் கொண்டு அப்பா சுவாமி என்று மனதில் கூறிப் படிக்கத் தொடங்கினான். எதிர்காலத்தில் ஒரு டாக்டராகி குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும். உயிர் காக்கும் உத்தமனாக வாழ வேண்டும். தனது இலட்சியப் பாதையில் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்தவனாய் விஞ்ஞானப் பிரிவில் உயர்தரப் பரீட்சைக்காக அல்லும் பகலும் ஓயாது படித்தான். வாழ்க்ககையில் வசந்தம் வீச வேண்டும் என்றால் தன்னைப் பொறுத்தவரையில் கல்வி கற்றல் தான் ஒரே வழி, வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும் என்ப

தோடு பெற்றோரைப் பேணுதல் வேண்டும். தனது குடும்பத்தை ஓட்டிச் செல்வதற்கு வயல் வேலையிலும் தந்தை க்கு உதவி செய்வான். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கிணங்க தனது காலத்தையும், நேரத்தையும் பொன்னாகப் போற்றி செயற்பட்டான்.

மேனனின் படிப்புக்காக நான்கு மணிக்கே கனகாவை எழுப்பும் வேலாயுதம், ஏழாம் வகுப்பு படிக்கும் சிந்துவை சிவன் கோயில் மணி ஐந்து மணிக்கு அடித்ததன் பின்னரே, அவள் படுக்கையருகே சென்று "அம்மா சிந்து" என்று அவள் தலையைத் தடவும் போது எழுந்திடும் சிந்து பெற்றோரின் ஆதரவிலும், அரணைப்பிலும் நிறைவு கண்டாள்.

வழமை போல வேலாயுதம் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு சுவாமி கும்பிட்டு "அம்மா கனகா வயலுக்குப் போட்டு வாறன்"என்று வெளிக்கிட , பிள்ளைகள் இருவரும் வெளிக்கிட்டு ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள சரஸ்வதி வித்தியாலயத்திற்கு சைக்கிளில் செல்வார்கள். கனகா காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பால் விற்ற காசில் அன்றைய பொழுதுக்கான சாமான்களை வாங்கி விட்டு தேத்தண்ணி, பழஞ்சோறு கொண்டு வயலுக்குச் செல்வாள்.

ஏழரை மணிக்கு ஸ்கூல் சேவிஸ் வான் கோன் அடிக்கின்ற பெரிய சத்தத்திற்கு கண்விழிக்கும் பக்கத்து வீட்டுக் காந்தன் குடும்பத்திற்கு வேலாயுதம் வீட்டுக்குடும்ப நிலைமைகள் இல்லை. ஹலோ என்றால் கிலோவில் கிடைக்கும். அவனது சகோதரங்கள் பிள்ளை குட்டிகளும், மனைவி சுசியின் சகோதரங்களும் வெளிநாடுகளில் இருக்கினம். விமலும், விஜியும் அடுத்தடுத்த வருடப் பிள்ளைகளாக பதினோராம் தரத்திலும், பத்தாம் தரத்திலும் படிக்கினம். "பான் போட்டு படுக்கிறதாலை பத்து மணி செண்டாலும் எழும்ப முடியுதில்லை" என்று சொல்லிக் கொண்டு சுசி கட்டிலில் இருந்து எழும்பினாள். சற்று முன்னர் தான் எழும்பியிருந்த காந்தன் "மணி ஏழரையாச்சு ஸ்கூல் போற நோக்கம் இல்லையோ" என்ற காந்தனின் குரலுக்கு எழும்பிய விமலும், விஜியும் பாத்ரூமில் சென்று குளித்து வெளிக்கிடு கிறார்கள்.

"எழும்பின கையோடை என்னெண்டு வேலை செய்யிறது கொஞ்ச நேரம் ரீ.வி பார்த்திட்டு சாப்பாட்டலு வலைப் பார்ப்போம்" என்ற மனைவியைப் பார்த்து பிள்ளையளுக்கு சாப்பாடு! அவை வெளிக்கிட்டு விட்டினம் என்ற காந்தனை நோக்கி "அவையளுக்கு இரண்டு பணிசை வேண்டிக் கொடுங்கோ" என்று கூறினாள் காந்தனின் மனைவி. அரைகுறையாக பணிசைச் சாப்பிட்டவிமலும், விஜியும் தங்கள் சைக்கிள்களில் பாடசாலைக்கு விரைந்தனர். "பிள்ளையள் தேத்தண்ணியும் குடிக்கேல்லை போயிட்டுதுகள்". "அதுகள் எங்கையப்பா தேத்தண்ணி விடியக் குடிக்குதுகளே பிறிச்சிலை கிடக்கிற சோடாவைத்தான் பகல் முழுக்க குடிக்குதுகள் சாப்பாடும் தேவையில்லை".

"ரீச்சர்! விஜி விழுந்திட்டாள் தலை சுத்துது என்று சொன்னவள்" என்றவாறு இடைவேளையின் போது ஆசிரியர் ஓய்வறையை நோக்கி விமலா ஓடி வந்தாள். "அந்தப்பிள்ளை நெடுக தலை சுத்தி விழுகிறது தானே" பக்கத்து வகுப்பிலிருந்த தயா ரீச்சரும் சொன்னா.

"ஐயோ அம்மா வயித்துக்கை வலிக்கிது வீட்டை போகப் போறேன்".

"என்னவாம் பிள்ளைக்கு பக்கத்தில டொக்ரரிட்டை ஒருக்கா காட்டுவோம். பிள்ளை எழும்ப முடியேல்ல எப்பிடி வீட்டை அனுப்பிறது"என்று அதிபர் கூறி விட்டு டொக்ரரிடம் அனுப்பிவிட்டார்.

"பிள்ளை சாப்பாட்டைக் கவனிக்காமல் குடற்புண்(அல்சர்) பெற்றோரிடம் கூறி கவனிக்கச் சொல்லுங்கோ சுவர் இருந்தாத்தான் சித்திரம் வரையலாம் என்று .டொக்ரர் கூறியனுப்பினார்

ललललललेलो..... "ஹலோ அக்கா எப்படி? பிள்ளைகள் எப்படி சுகமா? ஸ்கூல் போய்விட்டார்களா?" "ஓம், ஓம் சசி பிள்ளைகளை அனுப்பி விட்டு என்னால ஏலேல்ல ஒரே கைகால் எல்லாம் பிடிக்குது கொஞ்ச நேரம் ஈசிசெயரிலை இருந்து விட்டு மிச்ச வேலையைப் பார்ப்போம்". "அப்ப அத்தான் என்னவாம் வேலைக்குப் போறாரே?" "அதுதானேடி சுசி அவருக்கு ஒரே நாரிப்பிடிப்பு என்னண்டு ஒரே அந்தப் பாமசியிலை வேலை செய்யிறது. உப்பிடியெண்டால் அக்கா வேலையாலை நிப்பாட்டிப் போடுவினமே?" "அதுதானே நான் போய் முதலாளியிட்ட கதைச்சனான் அவரும் தொடர்ந்து வராட்டி வேறையாளைப் போடத்தான் வேணும் எண்டார்.

நான் என்ன செய்யிறது வந்திட்டன்.''

''உங்கை நீங்கள் ஏலாதெண்டாலும் நாலுபக்கத்தாலையும் வாறதைக் கொண்டு சீவிப்பியள். இஞ்சை நாங்கள் இயந்திரமாய் இயங்கினால் தான் சீவிக்கலாம். உங்கை உள்ளவைக்கும் அனுப்பலாம்''.

''சரி சரி ஏதோ அனுப்பிற காசிலை மருந்தை வேண்டி உடம்பைக் கவனியுங்கோ. நீங்கள் உப்பிடியென்றால் பிள்ளையளை கவனிக்கிறது யார்?''

''ஓமடி தங்கைச்சி மருந்தும் கையுமாத்தானே இருக்கிறோம்''.

சரி அக்கா பிறகு எடுக்கிறேன்.

''மெய்யப்பா சுசி என்னவாம் எங்கடை சுகங்களைக் கேட்டவள் எல்லாம் சொன்னனியே''

''ஓம்,ஓம் இந்தக்கிழமை வெளியிலயிருக்கிற எல்லோரும் போன் எடுத்தவை. உங்கட தம்பி ரூபன் மட்டும் எடுக்கேல்ல''. ''ஏனப்பா அவன்தானே போன மாதம் விமலுக்கு மோட்டச்சைக்கிளுக்கு காசு அனிப்பினவன். நாலு பிள்ளைக்காரன். அவனும் நெடுக எங்களுக்கனுப்ப என்ன செய்யிறது?''

''நீங்களும் தம்பிமாரெண்டால் நோக விடாயள். ரூபன்ரை மனுசி கலாவும் கொஞ்சம் இறுக்கம் தான்''

''சரி, சரி நேரம் பத்தரையாகுது காலமைக்கு என்ன''? ''பிளாஸ்க்கிலை தேத்தண்ணி இருக்குது. தோசைமாவும் பிறிச்சிலை கிடக்கு இரண்டைச் சுடு''.

சாப்பிடுங்கோ. மற்றது காஸ் முடிஞ்சுது. மத்தியானத்திற்கும் கறி பிறிச்சிலை கிடக்கு. சோத்தை றைஸ்குக்கரிலை போடுவம். ''மூன்றாந்திகதி விமலின்ரை பேர்த்டே இன்னும் எட்டு நாள் கிடக்கு.

அப்ப பலகாரச்சாமான்கள், கேக் சாமான்கள் வேண்டவேணும் தானே பின்னைக் கடைக்குப் போட்டு வாறன்''.

''இஞ்சேருங்கோ உதுகளையெல்லாம் மினெக்கெட்டு செய்யிறதிலும் பார்க்க முருகன் ஹோட்டல்ல ஓடருக்கு குடுத்து விட்டால் எல்லாம் ஆட்டோவில வந்து இறங்கும்''.

''சரி, சரி நீ போய் தேவையானதுகளை ஓடருக்குக் குடு.

ஏனப்பா முருகன் ஹோட்டல் போன் நம்பர் கிடக்குது தானே கதைக்கலாம்''.

ஹ ஹ ஹ ஹோ ..... ''ஆரெண்டு பாருங்கோ போன்கோல். ரூபன் கதையுங்கோ''.

''தம்பி ரூபா''

''ஓம் அண்ணை எப்படி சுகம்''?

''இருக்கிறம் எப்படி உங்கட சுகம் நானும், கலாவும் இயந்திரங்களாய் வேலை செய்யிறதால எங்கடை சீவியம் போகுது. நாலு பேருக்கும் படிப்புச் செலவு ஏராளம் எங்கயண்ணை விமலும், விஜியும்''

''ரீ.வி பார்க்கினம் இனி ரியூசனுக்குப் போவினம்''.

இஞ்சை நிக்கினம் குடுக்கிறன்

''விமல் எப்படிப் படிக்கிறியே''?

''ஓம் சித்தப்பா வருகிற 8ம் திகதி என்ரை பேர்த்டே.

அதெல்லாம் எனக்கு ஞாபகம் இந்தமுறை O/L பரீட்சைக்கு ஆயத்தம் தானே''? கொம்பியூட்டர் அனுப்புறன். தங்கச்சியும், நீயும் ஆங்கிலத்தைக் கற்பதுடன் கொம்பியூட்டரையும் படித்துக் கொள்ளுங்கோ. இன்றைய பள்ளிப் படிப்புடன் அவை பின்னிப் பிணைந்துள்ளன. ''சரி விமல் எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள். ஓகே பாய்'' ..... .

தம்பி! தம்பி! வீட்டை ஒருதரும் இல்லையோ? வள்.....வள்.....வள்.... நாயைப்பிடியுங்கோ யாரது வாருங்கோவன்.

என்ரை பிள்ளையள் உந்த சத்தத்திற்கு ஆர் கூப்பிட்டாலும் ஓம் எண்ட மாட்டுதுகள்.

நாயள் தானே இப்ப எந்த வீட்டிலையும் ஆக்களை வரவேற்க நிக்குதுகள். சரி சரி எங்கட பண்பாடு பழக்கவழக்கங்கள் எல்லாம் போச்சு.....ம்.....ம் காந்தனின் தகப்பனின் தூர உறவுகளில் ஒருவரான கந்தப்புவின் வாசகம் இது.

"அம்மா! சித்தப்பாவும், குணாளன் அண்ணாவும், றதி அன்ரியும் காசு அனுப்பினவையாம் நீங்கள் எனக்கு சொல்லேல்லை" அம்மா இந்தமுறை பேர்த்டேக்கு எல்லாம் லேட்டசாக இருக்கவேணும் எப்படியும் ஜீன்ஸ், சேர்ட், சூ, சொக்ஸ் எல்லாத்துக்கும் சேர்த்து இருபதாயிரம் எண்டாலும் வேணும் ரவுணிலை எல்லாம் எடுக்க வேணும் என்ரை பிறன்ஸ்சும் நாலைஞ்சு பேர் வருவினம். அவங்களுக்கும் சொல்லியிருக்கு தானே . எல்லாத்துக்கும் சேர்தது சாப்பாட்டை வேண்டித் தாங்கோ.

இஞ்சருங்கோ தம்பிக்கு உடுப்பு வாங்கவாம் நாலு பேர் மதிக்கக்கூடியதாய் போகத் தானே வேணும். பெடியளும் சேர்ந்து போறாங்களாம்.

"இந்தா பத்தாயிரம் குடு"

என்னப்பா உடுப்பு, பெடியளுக்கு செலவுக்கு சரியப்பா .

சரி சரி என்னவோ செய்யுங்கோ. இந்தா இதிலையும் பத்தாயிரம் கிடக்கு.

லல்லலல்லலல் லெலோ..... தம்பி உன்ரை சிநேகிதப் பெடியள்

ஓம்ஓம் சரி எல்லாரும் ரவுணிலை பஸ்ரான்டிலை நில்லுங்கோ . நான் வாறன்.

கனநேரம் பார்த்துக் கொண்டு நிக்கிறியளே வெறி சொறி பஸ்ரான்டிலை தான் பொழுது போகாதே.

சரிசரி வாங்கோடா. முதலாளி லேட்டசா வந்த ஜீன்ஸ், சேட், கோட் பாருங்கோ

இந்தாங்கோ கோட் செற் பதினெட்டாயிரம்.

பார்த்துப் போடுங்கோ . சரி சரி இனியென்ன நல்ல ஹோட்டலாப் பாருங்கோ. அட்வாண்ஸ் பார்ட்டி அந்த மாதிரி இருக்கவேணும்.

லேட்டா போச்சு மச்சான் போன் பண்ணடா இரவு ரவுணுக்க ரவி வீட்டிலை தங்கி எக்சாம் பேப்பர் கொஞ்சம் செய்து பார்த்திட்டு வாறம் எண்டு.

சரியடாப்பாமாரே அம்மா எதுக்கும் ஓம் தானே . அப்பாவையும் சமாளித்து ப் போடுவா

"கனகா கனகா தம்பி விமல் இன்னும் வரேல்ல

என்னப்பா பிரண்ஸ்சோட போனவன் ரவி வீட்டிலை எக்சாம் பேப்பர் செய்து போட்டு விடிய வாறதாய்ப் போன் பண்ணினவன்".

சரி கனகா உனக்கும் விஜிக்கும் பார்த்து நாளைக்கு உடுப்பு எடுப்பம்.

"அண்ணை இரவு ஹொட்டலில் ரூம் ஒன்று தருவியளே" என்றான் விமல்

தம்பியவை இப்ப எங்கட ஹோட்டல்ல உங்கட வயசுப் பிள்ளைகளை தங்க விடுறேல்லை. உந்தக் கான்போனுகளைக் கொண்டுவந்து இரவிரவாய் ஏதோவெல்லாம் கதைப்பியள். நித்திரையும் கொள்ளேலாது. இந்தக் கான்போன், பெடியளை எந்தளவிற்குக் கொண்டுவந்து விட்டிட்டுது.

அண்ணை நாங்கள்..... நாங்கள்..... அவங்களால கதைக்கேலாது ஹோட்டல்ல பார்ட்டியெல்லே நடத்தினவை.

ம்..ம் பிள்ளையளின்ரை நிலைப்பாடு இப்பிடியெல்லாம் போகுது.

பிறந்தநாள் கொண்டாட்டம் வெகுவிமரிசையாய் நடந்தேறியது. மேனன் வீட்டுக்காரரும் அயல் வீட்டுக்காரர் தானே அதிலை போய் வந்தினம்.

போய் வந்திட்டியளே எப்பிடிக் கொண்டாட்டங்கள், வரவேற்புகள் கொண்டாட்டத்துக்குக் குறைவில்லை. ஏதோ போனதைக் கொடுத்தோம் பெடியனை வாழ்த்தி விட்டு சுசியிட்டைப் போயிட்டு வாறம் எண்டோம். ம்.....ம் எண்டாள்

சரி கனகா வயலிலை இம் முறை விளைச்சல் பெரிசாயில்லை.

அப்பா என்ன இருந்தாலும் எனக்கொரு கான்போன் வேண்டித்தாங்கோ. வகுப்புக்கள், நேரங்கள் பற்றிக் கேட்கத்தான் பரீட்சையும் நெருங்கிவிட்டது.

தம்பி கான்போனால இப்பத்தைப் பிள்ளையளின்ரை பண்புகள், படிப்புகள் எல்லாம் கெட்டுப்போகுது.

சின்னஞ் சிறுசுகள் எல்லாம் கான்போன் வைத்திருக்குதுகள்.பிள்ளை படிப்புத்தேவைக்கு கேட்கிறான் இஞ்சேருங்கோ அந்தக் கிடாய் வித்த காசு பத்தாயிரத்தைக் குடுங்கோ வேறை தேவைக்கு வைச்சிருந்தால் அதைப்பிறகு பாப்பம்.

கான்போனில மேனன் தனது படிப்பு அலுவல்கள் மட்டும் கதைப்பான். அது அவனுக்கு நிறைய பிரஜோசனமாய் இருந்தது. A/L பரீட்சை பற்றியறிவதற்குக் கூட அந்தக் கான்போன் உதவியது. பரீட்சை முடிவுகள் மேனனை டாக்டர் படிப்பை மேற் கொள்ளப் போதியதாயிருந்தது.

"10ம் தரத்திற்கு வந்து விட்ட சிந்து வயதுக்கேற்ற செழுமையுடன் காணப்பட்டாள்". அம்மா சிந்து அண்ணா டாக்டராகி விடுவான். நீயும் நன்றாகப்படி படிப்புத்தான் எங்கள் சொத்து.நீங்களிருவரும் படித்து முன்னேறினால் அது மட்டும் எமக்குப் போதும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பதல்லவா வள்ளுவன் வாக்கு. என்ன தானிருந்தாலும் பார்த்தியே சுசி வேலாயுதத்தின்ரை பெடியன் டொக்டருக்குப் படிக்கப் போறான். எங்கடையள் ஊர் சுத்துதுகள். வெளிநாட்டிலிருந்து எங்களுக்கு வாறதுகளும் குறைஞ்சு போகுது. அதுகளும் பிள்ளைகுட்டிகளோடை அங்கை சீவிக்கிறதும் கரைச்சல் தானே என்ற காந்தனின் வார்த்தைகளுக்கு செவி கொடுத்தாள் சுசி அப்ப எங்கட பாடு பெரும் சில்லெடுப்புத்தான் ஒருமாதிரி விமலை வெளியிலை எடுத்துப் போட்டினம் என்றால் தான் எங்களுக்குக் கொஞ்சம் நிம்மதி

சரி ஏதோ பார்ப்போம் சுசி

மேனன் டாக்டர் படிப்பை முடித்துக் கொண்டு தனது ஊருக்கு வந்துவிட்டான். மேனனுக்கும் அவனது குடும்பத்தவருக்கும் இப்ப ஊரில் நல்ல மதிப்பு.

மேனனின் பட்டமளிப்பு விழா பற்றி பத்திரிகையில் போடப்படடிருந்தது. வழமையாக கஸ்டத்தின் மத்தியிலும் நாளாந்தம் **தரிசனம்** பத்திரிகை வேலாயுதத்தின் வீட்டில் செய்திகளை அறிவிக்கும் சாதனமாயிருந்தது. பட்டமளிப்பு பல்கலைக்கழகத்தில் கோலாகலமாய் நடந்தேறியது. மேனன் வீட்டிலும் தேநீர் விருந்துபசாரம் சிறிதளவில் நடைபெற்றது. விரலுக்குத்தக்க வீக்கம் தானே அந்தக் கிராமத்திலேயே முதன் முதல் டாக்டரான மேனனுக்கு கிராம முன்னேற்றச் சங்கம் கௌரவிப்பு விழாவை ஏற்பாடு செய்து நடத்தியது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவ்வூர் முருகன் கோயில் சர்வேஸ்வரக்குருக்கள் ஐயா மேனனது உயர்வுக்கு அந்தக் குடும்பத்துப் பெற்றோர்களே கலங்கரை விளக்காக விளங்கியதை எடுத்துக் கூறி, சேற்றிலே முளைத்த செந்தாமரையாக மேனன் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பெருமையைத் தேடித் தந்திருக்கிறார் எனக் கூறி தனது சிறப்புரையில் மேனனை ஆசீர்வதித்து நீடூழிகாலம் வாழ்ந்து அரிய பல சாதனைகள் நிகழ்த்த வேண்டுமென வாயார வாழ்த்தினார்.

- செல்வன் சி. சிவதர்சன் -

தரம் - 10

எண் கோலங்கள்

உருவங்களில் அல்லது சிந்தனையில் ஏதாவது ஒரு விதி முறையான ஒழுங்கு கோலம் ஆகும். விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் செய்முறைகளில் கோலத்தை அவதானித்தல் மிக முக்கியமானதாகும். கணிதம் பல பிரிவுகளைக் கொண்டது. இது சிந்தனைக் கோலத்தைக் காட்டி நிற்கின்றது. திறமையான மாணவர்கள் கணிதக் கோலங்களை இலகுவாக பகுத்தறிந்து அதில் உண்டாகும் கோலங்களை நுட்பங்களை ஆராய்கின்றனர்.

பண்டைய காலம் தொட்டு கேத்திர கணித கோலங்களை மக்கள் கட்டடக் கலையில் பயன்படுத்தி வந்துள்ளனர். எண்கோலங்களை அராபியர், இந்துக்கள், கிரேக்கர்கள் ஆராய்ந்து எண்களுக்கு ஒத்த பண்புகளை கொடுத்துள்ளனர். கணிதத்தில் கோலத்தையும், கோலங்களில் கணிதத்தையும் பகுத்தறிந்து சிந்திப்பதன் மூலம் கணிதம் கற்றலை இலகுவாக்கிக் கொள்ளலாம்.

கோலங்கள் மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ளவும் ஞாபகத்தில் வைத்திருக்கவும் உதவியாக இருக்கும். இங்கு சில எண்கோலங்களை அவதானிப்போம்.

01) 1, 2, 3, 4, 5, 6 ..... என்பன எண்ணுமெண்களாகும்.

பின்வரும் ஒழுங்குமுறையில் கூட்டற்செய்கை மேற்கொள்வோமாயின்,

1	=	1
1+2	=	3
1+2+3	=	6
1+2+3+4	=	10
1+2+3+4+5	=	15

1, 3, 6, 10, 15 ..... என்பன முக்கோண எண்களாகும்.

02) 1, 3, 6, 10, 15 ..... என்பன முக்கோண எண்களாகும் என முன்பு பார்த்தோம். அடுத்து வரும் இரு முக்கோண எண்களைக் கூட்டி வரும் கோலத்தை அவதானிக்குக.

1+3	=	4	=	2^2	
3+6	=	9	=	3^2	
6+10		=	16	=	4^2
10+15	=	25	=	5^2	

1, 4, 9, 16, 25 ..... இவை சதுர எண்களாகும்.

03) சதுர எண்கோலத்தின் வித்தியாசக் கோலத்தைஅவதானிக்க

1,4, 9,16, 25, 36.....

3.5.7.9.11 ..... என்பன ஒற்றை எண்களாகும்.

04) பின்வரும் எண்கோலத்தை அவதானிப்போம்

1 x 9 + 2	=	11
12 x 9 + 3	=	111
123 x 9 + 4	=	1111
1234 x 9 + 5	=	11111

05)

6 x 7	=	42
66 x 67	=	4422
666 x 667	=	444222
6666 x6667	=	44442222

மேற்கூறியது போன்ற கோலங்களை அவதானிப்பதன் மூலம் எமது கணித ஆற்றலை, அறிவை வளர்ப்பதுடன், பொருத்தமான கணிதச் செய்கைகளை மேற் கொண்டு புதிய கோலங்களை உருவாக்கி மாணவர்கள் கணிதம் கற்பதை இலகுவாக்கிக் கொள்வதுடன் விருப்பத்துடனும் கணிதம் கற்றலை மேற்கொள்ளலாம்.

-செல்வி ந. லவர்ஜினி -

தரம் -10

பூகோளம் வெப்பமாதல்(Global Warming)

வளிமண்டலத்தின் சிறப்பான அமைப்பில் திண்ம, திரவ கழிவுத்துணிக்கைகள் சேரும் போது மாற்றம் ஏற்படுகின்றது. இதனால் உலகளாவிய ரீதியில் பலவிதமான பிரச்சனைகள் எழுந்துள்ளது.அவற்றுள் பூகோளம் வெப்பமுறல், அமிலமழை, ஓசோன் படை சிதைவடைதல் போன்றன இன்று குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்.

இந்த வகையில் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட், கந்தகவீரொட்சைட், நைதரசனீரொக்சைட், குளோரோ புளோரோ காபன் போன்ற பச்சை வீட்டு வாயுக்களின் செறிவு அதிகரிப்பதனால் சூழலின் வெப்பநிலை அதிகரித்து பூகோளம் வெப்பமுறுகிறது.சூரியனால் கதிர்க்கப்படும் வெப்பக்கதிர்கள்பூமியை அடைந்து தெறிப்படைகின்றது. ஆனால்.காபனீரொட்சைட், மெதேன், குளோரோ புளோரோ காபன் ஆகிய பச்சை வீட்டு வாயுக்களால் இக் கதிர்கள் பூமியை நோக்கி மீளவும் தெறிப்படைகின்றது. இதுவே பூகோள வெப்பமுறல் என அழைக்கப்படும்.

இதனால் பனிக்கட்டிகள் உருக ஆரம்பித்து கடல்மட்டம் அதிகரித்து தாழ்பிரதேசங்கள், தீவுகள் கடலினுள் அமிழும் அபாயம் ஏற்படுகின்றது. இதனை விட பருவ காலங்களிலும் சடுதியான மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மழைநீரில் காபனீரொட்சைட், கந்தகவீரொட்சைட் கரையும்போது அமிலத்தன்மையைப் பெறுகின்றது.இது கைத்தொழிற்சாலைகளை அண்மித்த பிரதேசங்களில் அதிகளவில் காணப்படும். இதனால் மரம், செடி, விலங்குகள் சேதமடைந்து அழிகின்றது. தாவரங்களின் கனியுப்பு அகத்துறிஞ்சும் தொழிற்பாடு பாதிக்கப்படுகின்றது. கட்டடங்கள், உலோகத்திலான புராதனச்சின்னங்கள் அரிப்புக்குள்ளாகின்றன. நீர் நிலைகள் நச்சுத்தன்மை அடைகின்றன. இன்று இது உலகளாவிய ரீதியில் பாரிய பிரச்சனையாகக் கொள்ளப்படுகின்றன.

மாறன் மண்டலத்திற்கு புறத்தேயுள்ள படைமண்டலத்தில் சூரியனிலிருந்து வரும் பாதகமான கழியூதாக்கதிர்கள் புவிமேற்பரப்பிற்கு வருவதை ஓசோன் வாயுப்படை தடுக்கின்றது. இது ஒரு வெப்பக் காப்புப் படையாகும். இப்படைபூமிக்கு வரும் ஊதா கலந்த கதிர்களை புவி மேற்பரப்பிற்கு சென்றடையாது தடுக்கின்றது. இப்படையானது மூன்று ஒட்சிசன் அணுக்கள் சேர்ந்த ஓசோன் வாயுவால் ஆனது (O_3) இவை UV கதிர்களை உறிஞ்சி ஒட்சிசன் அணுக்களாகப் பிரிகை அடையச் செய்யும்.

வளிமண்டலத்தில் CFC சூரிய சக்தியை உறிஞ்சி பிரிகையடைந்து குளோரீன் அணுக்களைக் கொடுக்கும். இது ஓசோன் படையுடன் தாக்கமடைந்து ஒட்சிசன் மூலக் கூறுகளை உருவாக்கும். இதனால் ஓசோன் படையின் அமைப்பில் அசாதாரண மாறல்கள் ஏற்படும். இதுவே ஓசோன்படை சிதைவடைதல் எனப்படும். இவ்வாறு துவாரங்கள் ஏற்படுவதால் வளி, நீர், தரை, உயிர்க்கோளங்களில் தாக்கம் ஏற்படுத்தப்படுகின்றது.

சூரியனிலிருந்து வரும் UV கதிர்கள் X கதிர்கள், IR கதிர்கள் புவியை அடைந்து உயிரினங்களுக்கு பாதிப்பு நேர்கின்றது. மனிதன், விலங்குகளில் காணப்படும் DNA பாதிப்படைந்து தோல் புற்றுநோய், தோல்அழற்சி போன்றவை ஏற்படும். இதை விட சூழல் வெப்பநிலை அதிகரிக்கும். வரட்சி ஏற்படும். இவற்றினால் காட்டுத்தீ ஏற்படும். மழைவீழ்ச்சி குன்றும்.

இப் பாதிப்புக்களை தவிர்க்கு முகமாக CFC இன் பயன்பாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கையாக HFC பயன்பாடு பரிந்துரைக்கப்பட்டது. மேற்படி புவியில் பலவாறான பாதிப்புக்கள் ஏற்படுவதனால் புவியில் உயிரினங்கள் அழிந்து புவிக்கோளம் வெற்றுக்கோளமாக மாறும் நிலை வெகு தொலைவில் இல்லை. எனவே மனிதன் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டு தான் வாழும் பூமியைப் பாதுகாக்க வேண்டும்.

- செல்வன் பா. கபில்றாஜ் -

தரம் - 11

கணித விநோதங்கள்

1 x 8	=	8	→	8+0 = 8		
2 x 8	=	16	→	1+6 = 7		
3 x 8	=	24	→	2+4 = 6		
4 x 8	=	32	→	3+2 = 5		
5 x 8	=	40	→	4+0 = 4		
6 x 8	=	48	→	4+8 = 12	→	1+2 =3
7 x 8	=	56	→	5+6 = 11	→	1+1 =2
8 x 8	=	64	→	6+4 = 10	→	1+0 =1

ஒற்றை எண்கள், சதுர எண்கள் தொடர்பு

$$1+3=4= 2x2=2^2$$

$$1+3+5= 9= 3x3=3^2$$

$$1+3+5+7= 16= 4x4=4^4$$

$$1+3+5+7+9= 25= 5x5=5^2$$

$$1+3+5+7+9+11= 36= 6x6=6^2$$

$$1+3+5+7+9+11+13= 49= 7x7=7^2$$

$$1+3+5+7+9+11+13+15= 64= 8x8=8^2$$

$$1+3+5+7+9+11+13+15+17= 81= 9x9=9^2$$

$$1+3+5+7+9+11+13+15+17+19= 100= 10x10=10^2$$

- செல்வன் ச. சான்சன் -

தரம் - 11

இறைவா நீ..... எங்கே?

இறைவா நீ இருக்கின்றாயா?
இறந்து விட்டாயென்றல்லவா நினைத்தோம்.
என்றுனைக் கேட்டால்
உனைப் பொறுத்தவரையில் நான்
ஒரு பிணம் தான் என்பாய்
இறைவா உன்னை நான் மரத்தில் அல்லவா படைத்தேன்.
நீ மரமாய்த்தான் உள்ளாயா என்றால்
இதற்கும் ஆம் என்பாய்
இறைவா உன்னை கல்லில் வடித்தேனே
நீ கல்லாய்த் தான் இருக்கின்றாயா?
இதனது பதிலும் அதுவே தான்
இறைவா உனை முன்னோர் ஆலயத்தில் வைத்தனரே
அங்கேயா உள்ளாய்?
அங்கே தான் என்பாய்
உண்மையில் எங்கே உள்ளாய் என்றால்
உண்மையில் இருக்கின்றேன் என்பாய்
நீ இருக்குமிடந்தனை சொல்லெனக்கு
நண்பா..... (மனிதா) .....
நீ எங்கே எனை வைக்கின்றாயோ
அங்கே நான் இருப்பேன்
உன் இதயமதில் வைத்துப் பார்
உன்னிடம் அங்கே நான் இருப்பேன்
எங்கே வைப்பாய் என்பதைத்
தீர்மானிப்பவன் நீ மட்டும் தான்.

- செல்வி பு. கார்த்திகா-

தரம் - 11

எமது பாடசாலையின் நூற்றாண்டுவிழாக் கட்டடத்திற்கென நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

இல.	பெயர்	தொகை
1	திரு.இ. சுப்பிரமணியம்	25,000.00
2	திரு.சி. யோகநாதன்	25,000.00
3	இ.திருவிளங்கம்	10.000.00
4	பாக்கியவதி	10,000.00
5	குழந்தைவடிவேல்	10,000.00
6	குணசிங்கம். மதன்	10,000.00
7	திரு. துரைசிங்கம் மாலி	10,000.00
8	இ.சிவநாதன்	10,000.00
9	சிவசம்பு ஞானரத்தினம்	10,000.00
10	முத்துத்தம்பி மனோகரன்	10,000.00
11	து.மயில்வாகனம்	7,000.00
12	திரு.ம.சிற்றம்பலம்	5,000.00
13	திரு.ஆர்.பேரின்பம்	5,000.00
14	திரு.ம.சத்தியபாலன்	5,000.00
15	திரு.ஐ.கணேசமூர்த்தி	5,000.00
16	Dr. பத்மநாதன்	5,000.00
17	கோமதி	5,000.00
18	சோதிமலர் சண்முகநாதன்	5,000.00
19	தே.முகுந்தன்	5,000.00
20	கீதா	5,000.00
21	சத்தியா	5,000.00
22	கோ.கெங்காதரன்	5,000.00
23	ந.இராமதாஸ்	5,000.00
24	வை.நாகம்மா	5,000.00
25	ச.விமலகாந்தன்	5,000.00
26	அபிராமி செல்வராசா	5,000.00
27	தி.சிவகுமாரன்	4,000.00
28	பொன்னம்பலம் கனகசபை	4,000.00
29	சி.ரகுராஜன்	3,000.00
30	சிவானி	3.000.00
31	சு.வசீகரன்	3,000.00
	தெல். துர்க்காதேவி	
32	தேவஸ்தானம்	3,000.00
33	திரு.ஜெ.ஜெயரூபன்	2,500.00
34	திரு.தா.பாலசிங்கம்	2,500.00
35	கா.ஸ்ரீநிவாசன்	2,500.00
36	மா. செல்வராஜா	2,000.00
37	க.விதுசன்	2,000.00
38	செ.சிவநடராஜா	2,000.00
39	அ.பரமேஸ்வரன்	2,000.00
40	நா.அருமைக்கிளி	2,000.00
41	சு.சிவகுந்தன்	2,000.00
42	மா.சிவகுமார்	2,000.00
43	து.சிவகுமாரன்	2,000.00
44	Dr. ஜெயக்குமாரன்	2,000.00
45	த.சயந்தன்	2,000.00
46	அ.அருள்சங்கரன்	2,000.00
47	திரு.இரட்னேஸ்வரன்	2,000.00
48	சண்முகானந்தன் ஜயா	2,000.00
49	எஸ்.இராசலிங்கம்	2,000.00
50	சு.மணிமொழி	2,000.00
51	ஆ.சிவதாசன்	2,000.00
52	மு.தயானந்தம்	2,000.00
53	ச.கந்தசாமி	2,000.00
54	பி.சுரேந்திரநாதன்	2,000.00
55	வ.சற்குணசிங்கம்	2,000.00
56	சு.சத்தியசீலன்	2,000.00
57	இ.பிரகாஸ்	2,000.00
58	சி.நீரஜா	2,000.00
59	சிவரதீபா	2,000.00
60	சி.இந்திராணி	2,000.00
61	பரமேஸ்வரி.கிட்டப்பா	2,000.00
62	அ.நிதர்சன்	1,500.00
63	திரு.பொன்னம்பலம்	Rs1,000.00
64	திரு.நா.கந்தசாமி	Rs1,000.00
65	திரு.வே.ரவிகாந்தன்	Rs1,000.00
66	திரு.சி.கருணாநிதி	Rs1,000.00
67	திரு.வ.ரமணன்	Rs1,000.00
68	திரு.சி.மகாலிங்கம்	Rs1,000.00
69	திருமதி ஜெ.செல்வநாயகி	Rs1,000.00
70	திரு.க.பானுஜன்	Rs1,000.00
71	திரு.வி.சச்சிதானந்தராஜா	Rs1,000.00
72	திரு.சி.நவரத்தினம்	Rs1,000.00
73	கே.சிந்துஜா	Rs1,000.00
74	புவனேஸ்வரி	Rs1,000.00
75	எ.விநாயகமூர்த்தி	Rs1,000.00
76	கே.கணேசமூர்த்தி	Rs1,000.00
77	கிருபாகரன் அனிதா	Rs1,000.00
78	செ.கனிந்தன்	Rs1,000.00
79	க.ரத்தினம்	Rs1,000.00
80	விஜயலதா பாஸ்கரன்	Rs1,000.00
81	அ.சிவலோகநாதன்	Rs1,000.00
82	எஸ். மகேந்திரம்	Rs1,000.00
83	செ.குணசிங்கம்	Rs1,000.00
84	செல்வி.த.லதீசா	Rs1,000.00
85	இ.ராஜேஸ்வரன்	Rs1,000.00
86	சி.சிவரூபன்	Rs1,000.00
87	க.சிவனேசன்	Rs1,000.00

எமது பாடசாலையின் நூற்றாண்டுவிழாக் கட்டடத்திற்கென நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

இல.	பெயர்	தொகை	இல.	பெயர்	தொகை
88	திருமதி கமலநாதன்	Rs1,000.00	133	சபா. புஸ்பநாதன்	Rs1,000.00
89	த.விஜயகுமார்	Rs1,000.00	134	பிலிப் ஞானேஸ்வரன்	Rs1,000.00
90	நே.தமிழரசி	Rs1,000.00	135	என்.ஜெயசீலன்	Rs1,000.00
91	மா.மகாலிங்கம்	Rs1,000.00	136	இரத்தினேஸ்வரி	Rs1,000.00
92	மா.இராமலிங்கம்	Rs1,000.00	137	திரு.குலசேகரம்	Rs500.00
93	ஜ.சத்தியமூர்த்தி	Rs1,000.00	138	திரு.தே.வல்லிபுரம்	Rs500.00
94	சி.மகாலிங்கம்	Rs1,000.00	139	திரு.செல்வராசா	Rs500.00
96	கிருஸ்ணவேணி	Rs1,000.00	140	Mrs.D.பேரின்பநாயகம்	Rs500.00
97	கலைச்செல்வி	Rs1,000.00	141	திரு.அ.சுந்தரலிங்கம்	Rs500.00
98	இ.சத்தியேஸ்வரன்	Rs1,000.00	142	செ.ஜீவனா	Rs500.00
99	ஜெ.கனிதீபா	Rs1,000.00	143	சி.சண்முகானந்தன்	Rs500.00
100	வ.இரத்தினம்	Rs1,000.00	144	அ.நடராஜா	Rs500.00
101	வ.உமாசுதன் ஜயா	Rs1,000.00	145	பு.தேவராசா	Rs500.00
102	சோ.சபாபதிசர்மா	Rs1,000.00	146	சு.மனோரஞ்சிதம்	Rs500.00
103	ச.துரைசிங்கம்	Rs1,000.00	147	எஸ்.ஜெயச்சந்திரன்	Rs500.00
104	திரு.ம.மகேஸ்வரன்	Rs1,000.00	148	சு.மருதலிங்கம்	Rs500.00
105	செ.ஜெயந்தி	Rs1,000.00	149	எம்.சுதேஸ்வரன்	Rs500.00
106	என். ஜேர்மணி	Rs1,000.00	150	த.சிவகுமாரன்	Rs500.00
107	ந.கோபினியா	Rs1,000.00	151	கு.ரவீந்திரன்	Rs500.00
108	இ.கந்தசாமி	Rs1,000.00	152	வீ.சாந்தலிங்கம்	Rs500.00
109	சி.றஜினா	Rs1,000.00	153	கே.ராணிமலர்	Rs500.00
110	வே.சந்திரகுமார்	Rs1,000.00	154	சி.சண்முகநாதன்	Rs500.00
111	கௌசி	Rs1,000.00	155	வ.விக்னேஸ்வரன்	Rs500.00
112	பு.கபிலன்	Rs1,000.00	156	க.வேணுகோபால்	Rs500.00
113	ஜெ.ஜான்சன்	Rs1,000.00	157	எ.மரினோசுஜீபன்	Rs500.00
114	ம.கவிதா	Rs1,000.00	158	எஸ்.திலகரட்ணம்	Rs500.00
115	க.மகாலிங்கம்	Rs1,000.00	159	ஆ.சண்முகரட்ணம்	Rs500.00
116	சண்முகராசாஅனிதா	Rs1,000.00	160	எஸ்.காங்கேயன்	Rs500.00
117	பி. ரெஜீனா	Rs1,000.00	161	சி.வடிவேலு	Rs500.00
118	ந.மனோன்மணி	Rs1,000.00	162	சி.பீதாம்பரம்	Rs500.00
119	க.முருகுப்பிள்ளை	Rs1,000.00	163	இ.முரகதாஸ்	Rs500.00
120	பொ.விமல்நாதன்	Rs1,000.00	164	ஜெ.சுரேஸ்	Rs500.00
121	அ.அமுதலிங்கம்	Rs1,000.00	165	செ.ஜோகராசா	Rs500.00
122	செ.கஜதீபன்	Rs1,000.00	166	எஸ்.ரதீஸ்வரன்	Rs500.00
123	தேவகுமார்	Rs1,000.00	167	க.நவரத்தினம்	Rs500.00
124	பாலச்சந்திரசர்மா	Rs1,000.00	168	எம்.சுகீந்திரன்	Rs500.00
125	க.பரமசாமி	Rs1,000.00	169	ந.அன்பழகன்	Rs500.00
126	தி.மகேஸ்வரன்	Rs1,000.00	170	வே. பஞ்சலிங்கம்	Rs500.00
127	செ.உருத்திரலிங்கம்	Rs1,000.00	171	ம.வசந்தி	Rs500.00
128	சூசீந்திரா கேதீஸ்வரன்	Rs1,000.00	172	க.நகுலேஸ்வரன்	Rs500.00
129	சு.சதர்சன்	Rs1,000.00	173	எம்.பிரகாஸ்	Rs500.00
130	சி.பேரின்பநாயகம்	Rs1,000.00	174	பு.சின்னத்தம்பி	Rs500.00
131	கா.கனகசபை	Rs1,000.00	175	ம.பிரதீபன்	Rs500.00
132	சி.யோகநாதன்	Rs1,000.00	176	க.குணரத்தினம்	Rs500.00

எமது பாடசாலையின் நூற்றாண்டுவிழாக் கட்டடத்திற்கென நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

இல.	பெயர்	தொகை
177	கு.இரத்தினசிங்கம்	Rs500.00
178	சு.சந்திரபோஸ்	Rs500.00
179	பா.கபில்ராஜ்	Rs500.00
180	ரி.ஜெயக்குமார்	Rs500.00
181	ரி.துஸ்யந்தி	Rs500.00
182	செ.தயாபரன்	Rs500.00
183	மு.பாஸ்கரன்	Rs500.00
184	கெ.தீபன்	Rs500.00
185	நி.நிமலானந்தன்	Rs500.00
186	தி.குமணன்	Rs500.00
187	இராசா	Rs500.00
188	திருமதி சபாநாயகம்	Rs500.00
189	ஜ.ஜனனி	Rs500.00
190	பத்மா பாலகுமாரன்	Rs500.00
191	சி.பிரபாகரன்	Rs500.00
192	இ.ராம்குமார்	Rs500.00
193	எஸ். தர்மகுலசிங்கம்	Rs500.00
194	உ.கிருத்திகா	Rs500.00
195	மு.கணேசரஞ்சன்	Rs500.00
196	க.கிட்ணர்	Rs500.00
197	எஸ்.ராஜி	Rs500.00
198	மோ.சிந்துஜா	Rs500.00
199	இ.பார்த்தீபன்	Rs500.00
200	எஸ்.பிரசாந்	Rs500.00
201	ச.கஸ்தூரி	Rs500.00
202	யோகராணி	Rs500.00
203	ஆர். துவாரகன்	Rs500.00
204	த.கதிர்காமநாதன்	Rs500.00
205	க.சிறீதரன்	Rs500.00
206	நிசாந்தன் பத்மாவதி	Rs500.00
207	சு.இராசகுலசிங்கம்	Rs500.00
208	Dr.R.உதயகுமார்	Rs500.00
209	வே.துரைசிங்கம்	Rs500.00
210	ந.துரைசிங்கம்	Rs500.00
211	சு.அமிர்தலிங்கம்	Rs500.00
212	இ.நிலாவன்	Rs500.00
213	செ.சந்தோசராசா	Rs500.00
214	க.ஸ்ரீவாசன்	Rs500.00
215	ப.சூரியகுமார்	Rs500.00
216	மு.தேவராசா	Rs500.00
217	பே.விஜிந்தன்	Rs500.00
218	சி.சிவாகரன்	Rs500.00
219	மு.தேவராசா	Rs500.00
220	க.மகிலேஸ்வரன்	Rs500.00
221	சி.ராஜன்	Rs500.00
222	சு.சுனிதா	Rs500.00
223	செ.சிவானுஜன்	Rs500.00
224	க.சசிகரன்	Rs500.00
225	து.அகிலா	Rs500.00
226	ம.ரஜனி	Rs500.00
227	த.சரத்குமார்	Rs500.00
228	க.சிவலிங்கம்	Rs500.00
229	மு.கருணாநிதி	Rs500.00
230	ம.ஜோகேஸ்வரி	Rs500.00
231	சு.ஜெயவதனி	Rs500.00
232	சி.சதீஸ்குமார்	Rs500.00
233	க.பேபி	Rs500.00
234	ந.திருநாவுக்கரசு	Rs500.00
235	இ.ஸ்ரீஸ்கந்தராசா	Rs500.00
236	க.ஆறுமுகம்	Rs500.00
237	மு.வடிவேலு	Rs500.00
238	செ.இந்திரசேகரம்	Rs500.00
239	மு.வேலுப்பிள்ளை	Rs500.00
240	இ.கிருஸ்ணர்	Rs500.00
241	ச.பாலசரஸ்வதி	Rs500.00
242	திஜமுனேஸ்வரன்	Rs500.00
243	ச.வினோஜன்	Rs500.00
244	ம.சின்னத்துரை	Rs500.00
245	தி.ஜெகதீஸ்வரன்	Rs500.00
246	எஸ்.தங்கேஸ்வரி	Rs500.00
247	இ.கஜேந்திரன்	Rs500.00
248	அ.சுகுமார்	Rs500.00
249	வை.சூரியமூர்த்தி	Rs500.00
250	நா.சுரேஸ்குமார்	Rs500.00
251	எம்.மாசிலாமணி	Rs500.00
252	செ.தனோஜன்	Rs500.00
253	ம.கமலாதேவி	Rs500.00
254	ஞானரத்தினம் புடவையகம்	Rs500.00
255	கி.ஜெகராசன்	Rs750.00
256	சுபாஸ்கரன்	Rs250.00
257	சு.விவேகானந்தன்	Rs200.00
258	திருமதி ஆர்.ஜயாத்துரை	Rs200.00
259	த.சிவகரன்	Rs200.00
260	நி.இந்திராணி	Rs200.00
261	த.பிரசாத்	Rs200.00
262	தர்மகுலசிங்கம்	Rs200.00
263	இ.தாசன்	Rs200.00
264	கே.சத்தியரூபன்	Rs200.00

எமது பாடசாலையின் நூற்றாண்டுவிழாக் கட்டடத்திற்கென நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

இல.	பெயர்	தொகை
265	சி.தியாகராசா	Rs200.00
266	த.சுகந்தன்	Rs200.00
267	காண்டீபன்	Rs200.00
268	சி.ரேவதி	Rs200.00
269	மா.அரசலிங்கம்	Rs200.00
270	சி.சர்மிலா	Rs200.00
271	தி.சியாமா	Rs200.00
272	து.நாகேஸ்வரன்	Rs200.00
273	திரு.கணபதிப்பிள்ளை	Rs100.00
274	செல்வி	Rs100.00
275	த.செல்லத்துரை	Rs100.00
276	பத்மநாதன்	Rs100.00
277	இ.அனுசா	Rs100.00
278	த.வினிதா	Rs100.00
279	க.நித்தியானநதராசா	Rs100.00
280	கு.யசோதரன்	Rs100.00
281	கம்சிகா	Rs50.00
282	சி.சிவநேஸ்வரன்	Rs5,000.00
283	செ.கிருபாரட்ணம்	Rs5,000.00
284	ச.தர்சனன்	Rs5,000.00
285	பொ.சுப்ரமணியம்	Rs5,000.00
286	க.குமாரசாமி	Rs5,000.00
287	சு.பகீரதன்	Rs2,000.00
288	லோ.சிவலிங்கம்	Rs2,000.00
289	பா.நவீனன்	Rs1,000.00
290	வி.வித்தியா	Rs1,000.00
291	ஐ.கிருஸ்ணமூர்த்தி	Rs1,000.00
292	பிரணாதார்திகரசர்மா	Rs1,000.00
293	க.கந்தசாமி	Rs300.00
294	வை.கோபிசங்கர்	Rs300.00
295	க.சிவானந்தி	Rs300.00
296	தி.திருக்குமரன்	Rs300.00
297	சி.ஜெயதேவன்	Rs300.00
298	பா.வத்சலா	Rs2,000.00

22.09.2010 வரை கிடைத்தவை மட்டும்

இல	பெயர்	தொகை	இல	பெயர்	தொகை
299	திருமதி.சி.இந்திராணி	Rs2,000.00	312	வை.விஜித்	Rs2,000.00
300	திருமதி.ம.கமலாதேவி	Rs500.00	313	திருமதி சுதா வில்வராஜா	Rs2,500.00
301	திரு.சி.பேரின்பநாயகம்	Rs1,000.00	314	திரு.அ.கேசவன்	Rs500.00
302	திரு.கா.கனகசபை	Rs1,000.00	315	திருமதிக.ஏகாம்பரம்	Rs1,000.00
303	திரு.ச.விமலகாந்தன்	Rs5,000.00	316	திருமதி ப.வைத்தீஸ்வரன்	Rs1,000.00
304	திருமதி ராசேஸ்வரி	Rs1,000.00	317	திரு.நா.துஸ்யந்தன்	Rs1,000.00
305	திருமதி சி.லோகேஸ்வரி	Rs2,000.00	318	திருமதி லோ.விஜிதா	Rs300.00
306	திரு.ச.துரைசிங்கம்	Rs1,000.00	319	திரு.ஜெயகிருஷ்ணா(சுன்னாகம்)	Rs1,000.00
307	திரு.கரஜனிகாந்	Rs1,000.00	320	திரு.கு.விசுவலிங்கம் (புறக்டர்)	Rs500.00
308	திருமதி த.சாந்தினி	Rs1,000.00	321	திரு.க.ஆதவன்	Rs1,500.00
309	திருமதி கி.தவனேஸ்வரன்	Rs1,000.00	322	திரு.சௌந்தரநாயகம்	Rs2,000.00
310	திரு.கு.சிவகுமாரன்(ஜயா)அதிபர்	Rs500.00	323	திரு.பிலிப்ஞானேஸ்வரன்	Rs1,000.00
311	Dr. பத்மநாதன்	Rs20,000.00	324	செல்வி அபிராமி செல்வராஜா	Rs5,000.00

உயர்திரு.சி யோகநாதன் அவர்கள் லண்டனிலிருந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கென சேர்த்தனுப்பிய நிதி

Mrs S Vythilingam (Sunthari Teacher	Rs18,000.00
Mr&Mrs A.Gananandan	Rs18,000.00
Mr S Ravikumar	Rs9,000.00
Mrs S Ssthianandan	Rs9,000.00
Mr Gnanasegaram(Family)	Rs18,000.00
Mr& Mrs Susheela Robinson	Rs90,000.00
Mr R. Sithamparanathan (Family)	Rs136,000.00
Mrs L Vijeyagowri	Rs18,000.00
Mr T Gowriharan	Rs9,000.00

25.09.2010 வரை வழங்கப்பட்ட நிதி திரு.சி யோகநாதன் அவர்கள் வழங்கிய ரூபா 25.000.00 பணம் நூற்றாண்டுவிழாக் கட்டடப் பட்டியலினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவரது விருப்பத்தின்படி பரிசளிப்பு விழாவிற்கென பயன்படுத்தப்படுகின்றது

நன்றியுரை

எமது பாடசாலையின் நூறாண்டு வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்வதற்கும், சென்ற கால நினைவுகளை மனக்கண்ணிற் கண்டுகளிப்புறுவதற்கும், எதிர்கால சந்ததியினர் அறியாதவற்றை அறிந்து கொள்வதற்குமாக மலர்ந்த நூற்றாண்டு விழா மலருக்குக் கல்லூரியின் நலனில் அக்கறை கொண்டு ஆசியுரைகளையும், வாழ்த்துரைகளையும் வழங்கிய பெருந்தகைகளுக்கு முதலில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது மலர் கனகாத்திரமாக அமைவதற்கு ஏற்ற விதத்தில் கற்றோர் பலரின் சிறப்பான ஆய்வுரைகள், பழைய மாணவர்களின் ஆக்கங்களுடன் ஓய்வு நிலை அதிபர்கள், ஓய்வு நிலை ஆசிரியர்கள் என்போரின் ஆக்கங்களும், இன்றைய எமது அதிபர், ஆசிரியர்கள், மாணவச்சிறார்களின் ஆக்கங்களும் மலரை அணி செய்கின்றன. இந்த வகையில் மலருக்கு ஆக்கங்களைத் தந்துதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேவையுணர்ந்து சேவை செய்த முத்து பிறின்டேர்ஸ் நிறுவனம், சுன்னாகம் அவர்கள் இம்மலரினைக் குறுகிய காலத்தில் அழகுற, சிறப்பாக அமைத்து தந்தமைக்கும், மலரிற்கான படங்களைக் குறுகிய கால இடை வெளியில் தந்துதவிய நிக்கோன் போட்டோ உரிமையாளருக்கும், இம்மலரின் மலர்வுக்காய் கால நேரம் பாராது உழைத்த எமது அதிபர் திரு.நா.சிவநேசன் அவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

எமது பாடசாலையின் வரலாற்றினை எம் கண்முன்னே தெளிவாக நிறுத்திய எமது ஓய்வு பெற்றுச் சென்ற உபஅதிபர் திருமதி க. பரமசாமி அவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

எமது மலர்க்குழுவினர்க்கும், மலர்க்குழுவில் இடம்பெறாது ஒப்பு நோக்குதலுக்கு உதவியவர்களுக்கும், மலரின் மலர்வுக்காய் உழைத்த அனைவருக்கும் நன்றி உரித்தாகுக.

மலர் மலர்ந்து மகிழ்வுடன் மணம் பரவட்டும் .
மயிலணியின் புகழ் திக்கெட்டும் பரவட்டும்.

திரு.செ.கிருபாரத்தினம்
செயலாளர்,
நூற்றாண்டு விழாக்குழு

Muthu Printers, K.K.S Road, Chunnakam. Tel: 021-3218818